# சில துளி வானம்

மூன்று குறுநாவல்கள்



JPL
M98883

கெக்கிராவ ஸஹானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில துளி வானம்

மூன்று குறுநாவல்கள்

03 MAR 2021

LENDING
JAFFNA PUBLIC LIBRARY

கெக்கிராவ ஸஹானா

இரவல் வழங்கும் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

Public Library
Jaffna

281567

281567PL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8113

சில துளி வானம்(குறுநாவல்கள்)/ கெக்கிராவ ஸஹானா / முதற்பதிப்பு: மார்கழி 2020/ © கெக்கிராவ ஸுலைஹா/ அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன் / வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய் / பக்கம்: 188/ விலை: 500.00/ அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Sila Thuli vanam(Novelettes) /Kekirawa Shahana/ First Edition: December 2020/ ©Kekirawa Sulaiha/ Cover Designed by K.Bharaneetharan/ Published by Jeevanathy, Kalai aham, Alvai / Pages: 188 /Price: 500.00/ Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-955-0958-65-8

ஜீவநதி வெளியீடு – 173



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கெக்கிராவ ஸஹானா

இயற்பெயர் சித்தி ஜஹானறா. 1968.04.27 இல் கெக்கிறாவைக்கு அண்மையிலுள்ள மரதன்கடவல எனும் கிராமத்தில் பிறந்தார். கெக்கிறாவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், கம்பளை ஸாஹிராக் கல்லூரியில் உயர்கல்வியையும் கற்றார். 1991இல் ஆங்கிலமொழி ஆசிரியையாக நியமனம் பெற்று, பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் வெளிவாரிப் பட்டப்படிப்பையும், இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் பெற்றுக்கொண்டார். எண்பதுகளில் வானொலிக்கு எழுதத் தொடங்கி, பின்னர் தேசிய நாளிதழ்களிலும், இலக்கிய சிற்றேடுகளிலும் எழுதினார். 1997இல் இவரது முதலாவது சிறுகதைத்தொகுதி ‘ஒரு தேவதைக் கனவு’ வெளிவந்தது. அதைத் தொடர்ந்து கவிதை, ஆய்வு, குறுநாவல் உட்பட பதினொரு நூல்களை வெளியிட்டுள்ளார். 2002இல் இலங்கையில் நடந்த உலக இஸ்லாமியத் தமிழிலக்கிய ஆராய்ச்சி மாநாட்டில் ‘பாராட்டப்படும் இளங்கலைஞர்’ என்ற சான்றிதழைப் பெற்றுக் கொண்டதுடன், சிறுகதைக்கான ‘தகவம்’ பரிசு, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கவிதைக்கான பரிசு, மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருது, மற்றும் அரச சாகித்திய மண்டலத்தின் சான்றிதழ், யாழ்ப்பாண கலை இலக்கியப் பேரவையின் சான்றிதழ் என்பவற்றையும் பெற்றுள்ளார். இவரது முயற்சி காரணமாக தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தனின் சிறுகதைத் தொகுப்பு ஒன்று ‘போனிக்கா’ என்ற பெயரில் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு ‘கொடகே’ சகோதரர்கள் பதிப்பகத்தால் வெளியிடப்பபட்டுள்ளது. 2016 இறுதியில் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்த புலம் பெயர் எழுத்தாளரான அருண் விஜய ராணியின் மறைவையொட்டி ‘அக்கினிக்குஞ்சு’ இணையத்தளம் அவரது ஞாபகார்த்த மாக நடாத்திய சர்வதேசிய சிறுகதைப்போட்டியில் முதலாவது பரிசு பெற்றார். கதைத் தலைப்பு: ஜென்ம நிழல். சமீபத்தில் இவரது ‘முடிவில் தொடங்கும் கதைகள்’ எனும் சிறுகதை ஜீ.ஜீ. சரத் ஆனந்த எனும் எழுத்தாளரால் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு லங்கா (2017) சிங்களப் பத்திரிகையில் வெளியாகியுள்ளது. கணவர் ஜே.சுஹைப்தீன். வியாபாரம் செய்கிறார். நான்கு குழந்தைகள். மூத்தவர் ஆண் முஹம்மது துல்கர்னைன் 24 வயது. ஏனையவர்கள் இரட்டையர் மகள்மார், ஸகீனத், ஷப்னம். கடைசி மகள் மாரியத்துல் கிஃப்தியா பதினைந்து வயது. 2018.09.20 அன்று 49 ம் வயதில் இறையடி சேர்ந்தார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுநாவல்கள்

1. சில துளி வானம்
2. உயிர் மூச்சாய் நிறைந்திடு காற்றே...!
3. கிறுக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில வார்த்தைகள் உங்களோடு...

*2018.09.20* அன்று எங்களை விட்டுப் பிரிந்துவிட்ட என் அன்பிற்கினிய அக்கா ஜஹானறா - கெக்கிறாவ ஸஹானா எழுதி வைத்திருந்த, அல்லது ஏதேதோ காலகட்டத்தில் போட்டிகளுக்கு அனுப்பியிருந்த, அனுப்பி வைக்கத் திட்டமிட்டிருந்த மூன்று குறுநாவல்களின் கோர்ப்பு '**சில தூளி வானம்**' என்ற பெயரில் இன்று உங்கள் கைகளில் தவழ்கிறது. என் காரியச் சுமைகள் காரணமாக, இதற்கு முன்னம் அவள் எழுதி வெளியிட்டிருந்த பத்துப் புத்தகங்களில் நான் அவளுடன் ஒத்துழைத்திருந்த அளவில், இந்தப் புத்தகங்களின் மீது என்னால் சிரத்தையெடுக்க முடிந்திருக்க வில்லை என்பதால், அவளது இந்த மூன்று குறுநாவல்களையும் அவள் மரணத்தின் பின்னரான காலப்பகுதியில் தான் நான் வாசிக்கவும் நேர்ந்தது. அச்சில் காணுவதற்கு அவள் மிகப் பிரியம் கொண்டிருந்த இந்தக் கதைகளை, அவள் இறந்துபோன பின்னர் அச்சில் கொணர எத்தனிக்கிறபோது, கைகள் ஏனோ நடுங்கு கின்றன. தமிழ் இலக்கண, இலக்கிய அறிவில் அவளுடைய வீச்சின் மிகக் கடைமுனையில் நிற்கிற சிறுமியாய் என்னை நான் எண்ணிக் கொள்கிறேன். அழுகை அழுகையாய் வருகிறது.

குறுநாவல் '**சில தூளி வானம்**' பற்றி அக்கா ஸஹானா எழுதி வைத்திருந்த அறிமுகக் குறிப்பு ஒன்று இப்படி அமைகிறது.

**"யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் தற்போது பூதாகரமாகப் பெருகிவரும் சில பிரச்சினைகளை, சாதாரண கதை மாந்தர்களின் கருத்து களுடன் மோதவிட்டு அதுபற்றி ஆராய்கிறது இந்நாவல். மனிதர்களுக்கிடை யிலான நல்லெண்ணம், புரிந்துணர்வு, பன்மைத்துவத்தை ஏற்பதற்கான விசால உள்ளம் என்பவை குறித்த தேடலின் விளைவாகப் பிறந்ததே இந்நாவல்."**

இந்த படைப்பின்போது அவள் எடுத்துக்கொண்ட பிரயத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனங்களை நான் அறிந்து வைத்திருந்தேன். நல்லெண்ணம், இன நல்லுறவு என்பதில் எல்லாம் நம்பிக்கைக் கொண்டு தன் கற்றுக் கொடுக்கும் பிள்ளைகளுக்கும் அதையே போதிக்க நாடும் ஒரு ஆசிரியையாக, தான் பெற்ற பிள்ளைகள் வாழப்போகும் பூமியில் கொடூர அரக்கத்தனங்கள் நிகழுகையில் அழுகைக்குள் தன்னைத் தொலைத்திருந்த ஒரு தாயாக அவள் மனசளவில் பட்ட வலிகளும் வருத்தங்களும் பற்றி அவளை நெருங்கி நின்ற தங்கையாக நான் எப்போதும் அறிந்து வந்திருந்தேன். அவளது பயமும், பீதியும், மனக்கலக்கமும் இன்றிருக்கும் நாட்டுச்சூழலில் அவள் இருந்திருந் தால் இன்னமும் மிகைத்திருக்கக் கூடும்; கொஞ்சம் கொஞ்சமாய் அவளை சாகடித்திருக்கக்கூடும். அவள் இறையடி சேர்ந்து இரண்டரை ஆண்டுகள் கடந்துவிட்டன. அதனால், அவளது திடீர் மரணம் ஏற்படுத்திய உறுத்தல்களை, மனவலிகளை, எதிர்காலம் பற்றிய கொடுவடிவிலான அச்சங்களை எமது மத நம்பிக்கையின் பேரில் கிடைத்திருக்கும் இறைசாந்தியின் வாக்குறுதிகளால் இட்டு நிரப்புகிறேன்.

இரண்டாம் குறுநாவல் **'உயிர் மூச்சாய் நிறைந்திடு காற்றே'** கதையை நான் சரியாய்த் தொகுத்திருக்கிறேனா என்றொரு அச்சம் உள்ளுக்குள் என்னை ஆக்கிரமித்த வண்ணமேயுள்ளது. கணனியில் அவள் அதை ஒரு குழப்பகரமான வடிவில் தான் வைத்திருந்தாள். அவள் அது பற்றி பிரத்தியேகக் குறிப்புகள் எதையும் வைத்திருக்கவும் இல்லை. எப்படியோ, என்னாலியன்றளவில் தேடித்தேடி அவள் எழுத்துக்களை நான் கோர்த்திருக்கிறேன்.

தன் பருவகாலத்தின் கனவுகளைப் பதுக்கிவைத்துவிட்டு, கையில் கிடைத்த ஜீவிதத்தை மனத்திருப்தியுடன் வாழும் ஒரு கிராமத்துப் பெண்ணின் உள்ளத்துள் மோதும் உணர்வலைகளாக இந்த எழுத்துக்கள் என்னென்னவோ என்னோடு பேசித் தீர்க்கின்றன. தேய்ந்து போன பழைய ஞாபகங்களை இரை மீட்டிக்கொள்ள மீண்டும் அவள் அன்பின் வாசலில் வந்து நிற்கும் அவனை அவள் வரவேற்று உபசரித்தாலும், அமைதியைக் கெடுக்காத பாணியில் அவனது உதவிப்பணத்தை அவள் மறுக்கிற இடத்தில் எவரிடமும் கையேந்த நாடாத அவளது ஆழ்ந்த நம்பிக்கையில் நான் உறைந்து போக நேர்ந்தது. எனக்குத் தெரியவில்லை. அக்கா ஸஹானாவின் எழுத்துக்களில் எனக்கிருக்கும் பிரேமையா அன்றி, அவளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தின் பின்னர் இதை நூல் வடிவிலாக்குகிறோமே என்கிற குற்றவுணர்ச்சியா எனக்கு கண்ணீர் கொட்டிய வண்ணம் உள்ளது. ஆத்மா பரிதவிக்கிறது.

அக்காவின் மூன்றாவது குறுநாவல் **'கிறுக்கல்'** எனக்குள் ஏற்படுத்திய அதிர்வினை நான் வெறும் வார்த்தைகளில் கொண்டு வர முடியாது. அக்கா ஸஹானாவின் மூத்த மகன் முஹம்மது துல்கர்னைன் பிறந்தபோதிருந்தே மூளை வளர்ச்சியின்மை, மற்றும் வலிப்பு (Down Syndrome Disability) எனும் நோய் அரக்கர்களால் பீடிக்கப் பட்டிருந்த துயரம், அவனுக்கான சிகிச்சை நிலையங்களில் அவள் கண்ட அதுபோலவேயான குழந்தைகளின் நிலை, தாய்மையின் அலைக்கழிவு பற்றியெல்லாம் பேசுகிறது **'கிறுக்கல்'**

தன் குறுநாவல் 'கிறுக்கல்' பற்றி அக்கா ஸஹானா 2015.04.23 திகதியிட்டு எழுதி வைத்திருக்கும் குறிப்பு ஒன்று இப்படிப் பேசுகிறது.

"இறைவன் எழுதிய எழுத்துக்களில் சில கிறுக்கல்களாகி விடுவதுண்டு. அத்தகைய கிறுக்கல்களின் கதையே இது. ஓரிரண்டு இடங்கள் தவிர எந்த இடத்திலும் பாத்திரத்தின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. அது அவசியம் இல்லை என்று மனதுக்குப்பட்டது. இக்கதை ஒன்று தொடக்கம் பதினைந்து நாட்களில் எழுதப்பட்டது. இதை எழுதுகையில் ஜெயகாந்தன் ஸேரின் ஞாபகங்கள் அவர் அமரரான செய்தியை கேள்விப்பட்டிருந்த காலம். ஆதலால், அவரை நினைத்துக் கொண்டே எழுதப்பட்டது இக்கதை. பொதுமைப்படுத்தி எழுதியுள்ளேன். மீண்டும் இதனூடாக நான் வேண்டி நிற்பதெல்லாம் யாதெனில் இறைவன் படைத்த உயிர்கள் தமது வாழ்வில் ஏதாவது ஒரு பிரயோசனத்தை ஏனையவருக்கு வழங்க வேண்டும். இதில் வந்த எந்தக் கதாபாத்திரமும் பொய்யானது அல்ல; சம்பவங்களும் அப்படியே.

இதை நான் ஏன் எழுதினேன்? நான் சந்தித்த அனுபவங்களைச் சொல்ல நாடினேன். அவ்வனுபவங்கள் இரவும் பகலும் என்னைத் தொல்லைப் படுத்தின. எழுதிய பிறகே நான் அமைதியடைகிறேன்.

தாய்மை என்பது உலகினுக்குப் பொதுவானது. போலவேதான் தாய்மை தாங்குகின்ற சோகங்களும். இன, மத, மொழி பேதங்களைக் கடந்து ஒரு தாய் சந்திக்கும் துயரங்களை இங்கு நான் சொல்லியிருக்கிறேன். கெக்கிறாவ ஸஹானா"

எனக்கு எதுவும் தெரியவில்லை. அக்கா ஸஹானா இறந்து போனபோது அவளது நான்கு குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய பீதியும், எனக்குள் விரவிநின்ற வெறுமையும், இவற்றைத் தொகுப்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த குழப்பங்களும், ஒரு பள்ளிக்கூட முதல்வராய் எனக்கிருக்கும் சொல்லவொண்ணா கடமைகளும் இவற்றை நூலுருவாக்குவதில் என்னைப் பின்னிழுக்க வைத்திருந்தன. எனினும், மகன் ‘ஜீவநதி’ பரணீதரன் தந்த ஊக்கம் என்னை எழுந்து உட்கார வைத்தது.

போலவே, மேமன்கவியவர்கள் தந்த அறிவுரைகள், மற்றும் உயர்திரு. அல் அஸூமத் அவர்களது ஆலோசனைகள், என் முகநூல் வாயிலாக எனக்கு அறிமுகமான ‘அத்தாட்சிகள் - திருக்குர்ஆன் கலைக்களஞ்சியம்’ தந்த கோயமுத்தூர் எழுத்தாளர் எம்.அமீர் அல்தாஃப் அவர்கள் தந்த அறிவுரைகள் எல்லாமும் என்னை இந்தப் பணிக்குள் படுவேகமாய் இயங்குமாப்போல் கொண்டோடின.

அக்கா ஸஹானாவின் எழுத்துப்பணியானது அவள் வாழ்வின் போராட்டங்களினூடு ஊடுகடந்தவிதம் அருகிருந்து பார்த்த எனக்கு ஒரு போராட்டக்களமாகவே தெரிந்திருக்கிறது. அவளது நெருங்கிய வட்டாரமும் அதை அறியும். எனினும், வாழ்தலுக்கு நாம் யாவரும் செய்யும் பிரயத்தனங்கள் வெகு அழகுதான் எப்போதுமே.

**வீழும் கண்ணீரின் திவலைகளோடு,**
**கெக்கிராவ ஸுலைஹா**
**2020.12.20**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில துளி வானம்

### அத்தியாயம்– 01

அந்த இரண்டு மாடிக் கட்டடம் மிக வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது. பார்ப்பவர் கண்ணைக் கவரும் விதத்தில் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருந்த பசிய தோட்டம் ஒன்றின் நடுவே செப்புக் கிண்ணம்போன்று அந்த வீடு காட்சியளித்தது.

தோட்டத்தின் நிறத்தோடு இயைந்து செல்கின்ற பச்சைநிற வர்ணம் பூசிய பாரிய நுழைவாயில் கதவும், பச்சை நிற கூரைத் தகடுகளு மாகத் துலங்கிய அந்த வீட்டின் அழகுக்கு, அதற்குப் பூசப்பட்டிருந்த தூய வெள்ளை வர்ணம் சாலவும் பொருந்தும் என்று எண்ணவும் வைத்தது.

கூரைத் தகடுகளில் சூரிய ஒளி பட்டுப் பிரகாசித்து அந்த வீட்டின் எழிலையும், வெள்ளை நிறத்தின் தூய்மையையும் மேலும் அதிகரித்துக் கொண்டிருந்தது.

அந்த வீட்டின் முற்றத்தில் நின்று அதன் அழகையே ரசித்துக் கொண்டிருப்பதுபோல அவள் நின்றிருந்தாள். கொஞ்சம் ஊன்றிப் பார்த்தால் அவள் எதையும் ரசிக்கவில்லை என்றும், ஏதோ சிந்திப்பது போலவும் தோன்றும் அளவுக்கு அவளது முகத்தில் சிந்தனை ரேகைகள் ஓடிக்கொண்டிருந்தன. சிவந்த அழகான மேனியும், பரந்த முகமும் கொண்டிருந்தாலும் அவளுக்குள் பரவியிருக்கும் சிந்தனையின் ஓட்டம் அவளது கனிவான முகத்திலே லேசான முதிர்ச்சியை ஏற்படுத்தினாற் போலிருந்தது. அதற்கேற்றாற்போல் தலைமயிரும் கொஞ்சம் நரைத்துத் தான் முன் நெற்றியில் புரண்டுகொண்டிருந்தது.

அவள் பெயர் ஸைபுன்னிஸா. இந்தியாவை வெகு சிறப்பாகவும், இறைவழியிலும் ஆண்ட மொகலாய வம்சத்தைச் சேர்ந்த அவ்ரங்கசீப் மன்னருக்கு ஸைபுன்னிஸா என்று ஒரு புதல்வி இருந்தாளாம். அதனாலேயே தான் தனது மகளுக்கு அப்பெயரைச் சூட்டியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது தந்தை ஒருமுறை கூறியிருக்கிறார். அதற்கேற்ப அவளிடம் அந்த முப்பத்தைந்து வயதிற்குள் இறைவனின் அருள் கொட்டிக் கிடந்தது. மிக நீண்டகாலமாக குழந்தைப்பேறு இன்றி வாடிய அவள் சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பு ஓர் அழகிய ஆண்குழந்தையைப் பெற்றெடுத்து அந்தக் குறையையும் நிவர்த்தி செய்துகொண்டிருந்தாள். குழந்தை அவளது காலருகில் நின்று விளையாட்டுக்காரை ஓட்டிக்கொண்டு, முன்னாலுள்ள மண் வீதியில் கடகடவென்று சப்தமெழுப்பிக் கொண்டிருந்தது.

எதிர் வருகின்ற மழைக்காலத்திற்கு முன்னால் அந்தக் கட்டு மானப் பணிகள் யாவும் பூர்த்தியடைந்து, தான் நிம்மதியடைய வேண்டும் என்ற ஆவல் அவளது நெஞ்சில் மேலோங்கியிருந்தது. ஏறக்குறைய ஒரு வருஷகாலமாக தன்னந்தனி ஆளாக நின்று அவள் அந்த வீட்டைக் கட்டிக்கொண்டிருக்கிறாள். புதிதாக ஒரு வீட்டைக் கட்டுவது சுலபம். தான் குடியிருக்கும் வீட்டைத் திருத்தி வேலை செய்வது என்பது மிகவும் கடினம். அவள் குடியிருந்த வீட்டின் மேல் மாடியைத்தான் நிர்மாணித்துக் கொண்டிருக்கிறாள். தன்னந்தனியே ஓடிச் சுழன்று இயங்குவதும், வீட்டு வேலைகளையும், சமையலையும், கொடுக்கல் வாங்கல்களையும் கவனிப்பதும், குழந்தையின் பின்னால் ஓடுவதும் "சே" என்றிருக்கும் அவளுக்கு.

இரவின் கும்மிருட்டில் தலை சாய்த்து படுக்கும்போதுதான் அபுதாபியிலிருக்கும் தனது கணவனின் ஞாபகம் வரும் அவளுக்கு. அபுதாபியில் ஒரு பெரிய நிறுவனத்தில் கணக்காளராக அவன் பணி யாற்றி வந்தான். கைநிறைய சம்பளம் எடுத்தாலும் அவன் அருகே இல்லாத வாழ்க்கை பெரும் சுமையாக அழுத்த, அடிக்கடி அவனை போனில் அழைத்து இலங்கைக்குத் திரும்பிவிடும்படி வற்புறுத்துவாள். "இந்தா வந்துர்றேன்.." என்று கூறிச் சமாளித்தாலும், உடனே எதையும் செய்யமுடியாத நிலையில் அவன் திண்டாடிக் கொண்டிருந்தான். நான்கு வயதுக் குழந்தையின் சுட்டித்தனமான மழலைப் பேச்சைக் கேட்கும் போது உடனே தாய்நாடு திரும்பிவிட வேண்டும் என்று நினைத்துக் கொள்வான். ஆனால், அவன் நினைத்தபடி ஏதும் நடக்காமலே காலம் போய்க்கொண்டிருந்தது. எனினும், இன்னும் சில மாதங்களில் எப்படி யாவது நாடு திரும்பிவிட வேண்டும் என்றும், சொந்த நாட்டில் ஏதாவது செய்து வாழ்வதே போதும் என்றும் அவன் இப்பொதெல்லாம் எண்ணத் தொடங்கியிருந்தான்.

சொந்த நாட்டின் அழகும், வாத்ஸல்யமும் அற்ற வெறும் பாலை நிலத்தரையில் தனது இளமையும், வாழ்வும் கரைந்து போவதான பிரமை அடிக்கடி அவனுக்குத் தட்டுவதுண்டு. தனது நாட்டின் வனப்புக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநிலைக்கும் உலகின் வேறெந்த நாடும் இணையாகாது என்று அவன் எண்ணிக்கொள்வான். சொந்த நாட்டின் பிரச்சினைகள் வெளிநாடுகளில் பூதாகரமாகக் காட்டப்படும் போதெல்லாம் அவன் அதிர்ந்து போவ துண்டு. தனது அன்னைத் திருநாடு இந்தளவு தரம் தாழ்ந்துவிட்டதா என்று அவனுள்ளம் அங்கலாய்க்கும்.

கெகிறாவையில் சின்னக்குளம் வழியே ஓடித்திரிந்து நாவற்பழம் பொறுக்கித் தின்ற அந்த நாட்களும், மரத்திலிருந்து கீழே விழுந்து சிராய்ப்புக் காயங்களுடன் அழுது நின்றபோது தனது சிங்கள நண்பர்கள் தன்னைப் பக்கத்து வீடான தோட்டத்துக்காரி வீட்டுக்குத் தூக்கிச் சென்று அவ்வீட்டு அக்காவிடம் முதலுதவி கேட்டுப் பெற்றுக் கொண்டதும் இன்னும் அவனது ஞாபகத்தில் இருந்தது. குட்டைப் பாவாடையும் சட்டையும் அணிந்த குமாரி அக்கா தனது கால் புண் களைத் துடைத்து மருந்திட்டுக் கட்டியதையும், பின்னர் சுத்தமான மண் குடத்திலிருந்து அவள் குளிர்ந்த நீரை வார்த்துத் தந்ததையும், மணியக்கா வின் மகன் பொன்னுத்துரையும் தன்னுடன் இணைந்து விளையாடி யதையும் அவன் எண்ணிப் பார்ப்பான். இன்று இந்தத் திருநாடு இவ்வளவு பிரிவினைகளுடன் சீர்குலைந்து போனதற்குக் காரணம் என்ன என்பது குறித்து அவன் சிந்திக்கும்போதெல்லாம் நெடிய பெருமூச் சொன்று அவனது ஹ்ருதய ஆழத்தைக் கீறிப் பிளக்கும்.

எப்படியோ, வருகிற நவம்பர் மாதத்திற்குள் முடித்துவிடலாம் என்று தான் தொடங்கிய வேலை நவம்பரைத் தாண்டி டிசம்பர் வரையும் ஓடிக்கொண்டிருந்தது. இப்போது டிசம்பர் மாதம் நடந்து கொண்டிருந்த போதும் இலங்கையில் பருவமழை இன்னும் சரியாகப் பெய்யத் தொடங்கவில்லை என்ற செய்தி அவனுக்கு மிகுந்த ஆறுதலைத் தந்தது.

## அத்தியாயம்-02

கூரையின் ஒரு பகுதி பொருத்தப்பட்டிருந்தாலும் அதன் இதர வேலைகள் இன்னும் மீதமிருந்தன. கூரை வித்தியாசமான வளைவு களுடன் அமைக்கப்பட்டிருந்ததால், அதற்குரிய நுணுக்கமான வேலைப் பாடுகள் முடிய பல மணித்தியாலங்கள் எடுத்தன.

இந்த வேலை மட்டும் இப்போது முடிந்துவிட்டால் தலை தப்பி விடலாம் என்ற எண்ணத்தில் அதுபற்றியே சிந்தனை செய்தவளாக வளைய வந்துகொண்டிருந்தாள் ஸைபுன்னிஸா. இடையில் மழை வந்து இவ் வேலையைத் தடுத்து விடுமோ என்ற பயம் அவளை ஆட்கொண்டிருந்தது. அதனால், அவள் வேறு யாருடனும் பேசுவதை நிறுத்தி விட்டிருந்தாள். உள்ளம் சதாவும் இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் கீழ்ப்பகுதியில் கொங்க்ரீட் கூரையின் கீழே குடித்தனம் நடத்துவதன் கஷ்டங்களைப்பற்றி அவளிடம் கேட்டால் பெரியதொரு பட்டோலை வாசிப்பாள். வெயில் காலங்களில் கடும் வெப்பம், மழைக்காலங்களில் கடும் குளிர்... மழை விட்டாலும் தூவானம் விடாது என்பதைப்போல யன்னல் ஓரங்களிலும், கொங்க்ரீட் தளத்தின் மேலும் ஊறிக் கசிந்துவரும் தண்ணீர் சாரையும், அதன் காரணமாக கீழ்த்தளச் சுவரில் நிரந்தரமாகப் படிந்துவிட்ட கரிய நிறப் பூஞ்சணப் படிவும் அவளது வீட்டையே அருவருப்பாக்கிக் கொண்டிருந்தன. போவோர் வருவோரின் வினாக்கள் வேறு, வீடு சரியாகக் கட்டப்படவில்லை என்ற இத்யாதி விமரிசனங்களுடன். எல்லாவற்றையும்விட, கீழ்த்தளத்தில் எந்தவிதமான அலங்கார வேலையும் செய்துகொள்ள முடியவில்லை. மேல் தளத்தைக் கட்டியபிறகு இதில் கைவைப்பதே நலம் என்று எல்லோரும் அபிப்பிராயப் பட்டார்கள்.

ஒரு வருடத்திற்கு மேலாக ஒரு நல்ல கொத்தனைத் தேடி யலைந்து, கடந்த நான்கு மாதங்களாக அவன் வேறொரு வேலையைத் தவிர்க்கமுடியாமல் பொறுப்பெடுத்துவிட.... அவளது வீட்டுவேலை இவ்வாறாக ஒரு வருடத்தை நெருங்கியிருந்தது.

குணசேன... சுமார் பத்து வருட காலங்களுக்கு முன்பு இந்த வீட்டைக் கட்டி அவளிடம் ஒப்படைத்துச் சென்றவன்தான். அப்புறம் அவனை எங்குமே காணமுடியவில்லை. அவன் தேசாந்திரம் போய் விட்டதாகவும், வெளிநாட்டில் வாழ்வதாகவும் பலர் பலவிதமாகச் சொன்னார்கள். சிறிது காலம் சித்தம் கலங்கினாற் போலிருந்தான் என்று அவனது மனைவியும் ஒருமுறை கூறியிருந்தாள். அவனைக் காணாது அழுது புலம்பி ஏறக்குறைய இரண்டுவருட காலம்வரை தேடிக் கொண்டி ருந்தாளாம். ஒரு வருடத்திற்கு முன்னர் திரும்பிவந்து சிரித்துக்கொண்டே சொன்னானாம், தென் பகுதியிலுள்ள ஒரு பௌத்த விகாரையில் பிரதம பிக்குவிடம் தொடர்ந்து தர்ம உபதேசம் கேட்டு வந்ததாக. தானும் ஒரு பிக்குவாக மாறிவிடலாம் என்ற பயம் வந்தபிறகு ஓடிவந்துவிட்டதாகவும் கூறினானாம்.

அவள் நினைத்திருந்தால் அவளிடம் கொட்டிக் கிடக்கின்ற செல்வத்திற்கு நல்லதொரு கட்டட நிர்மாணக் கலை நிபுணரையும், பொறியியலாளரையும்கூட கொண்டுவந்து நிறுத்திவிட்டிருக்கக் கூடும். ஆனால்... பத்து வருடங்களுக்கு முன்பு, தான் கையில் வைத்திருந்த சொற்ப தொகைப் பணத்தில் இந்த வீட்டைக் கட்டுவதற்கு ஆரம்ப முயற்சிகளை அவள் எடுத்தபோது, மழையென்றும் வெயிலென்றும் பாராது, ஒரு ஓட்டை சைக்கிளில் வந்து அந்த வீட்டை இரவு பகலாகக் காத்து, கட்டிமுடித்து அவள் கையில் ஒப்படைத்த அவனது விசுவாசத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்குத் தான் கடமைப்பட்டிருப்பதாக அவள் உணர்ந்ததாலேயே அவனிடம் இப்போதும் அந்த வேலையைக் கையளித்திருந்தாள்.

"யா அல்லாஹ்... இன்னம் ரெண்டு நாளக்கி மழ வரக்கூடாது..." அவளது கைகள் அடிக்கடி வானை நோக்கி உயர்ந்து இறைவனிடம் உதவி தேடிக்கொண்டிருந்தன.

தனது மாமா, மைத்துனன், மருமகன் என்ற யாவரையும் தன்னோடு இணைத்துக் கொண்டு அவன் அங்கே வேலை செய்து கொண்டிருந்தான். கூரையை நிர்மாணிப்பதற்கு மேலும் உதவியாக அவளது அயல் வீட்டுக்கார தச்சனாகிய லக்மல் உட்பட மேலும் நான்கு பேரையும் அழைத்து வந்திருந்தான். கீழே இருவர் நின்று கூரைத் தகடுகளை மேலே கொடுத்து பெரிய கம்பொன்றால் தள்ள, உயரமாகக் கட்டப்பட்டிருந்த பலகைக் கம்புகளிலான ஏணிகளின்மீது நின்றிருந்த இருவர் அதை வாங்கி கூரைக்கு அப்புறமாகக் கொடுக்க, பிரதம வேலையாட்கள் இருவரும் அத்தகடுகளை கொக்கி ஆணிகளை அடித்து கூரைக் கம்புகளுடனும், மோட்டுவளையுடனும் இணைத்து, அழகிய வளைவுகளுடனான கூரையாக அத்தகடுகளை மாற்றியமைக்கின்ற நேர்த்தியை அவள் வெகு சுவாரஸ்யமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். எந்தவிதமான தலைமைத்துவப் பயிற்சியுமே எடுக்காத, கல்வியறிவிலும் குறைவான குணசேனவின் கச்சிதமான நிர்வாகத்திறனையும், குறை வாகப் பேசும் அழகையும் அவள் வெகுவாக சிலாகிப்பாள். காலையில் பத்துப் பதினைந்து பேரை வைத்து மிக சாமர்த்தியமாக வேலை வாங்கு வதையும், மாலையில் ஒருவித பிக்கல் பிடுங்கலும் இன்றி கூலியைப் பட்டு வாடா செய்து முடிப்பதையும் அவள் கண்டுகொண்டது இது முதலாவது தடவையல்ல. பத்து வருடங்களுக்கு முன்பே அவள் அவதானித்து வைத்திருந்தாள். எனவேதான் அவனைத் தலைமையாகக் கொண்டு வீட்டைக் கட்டுவிப்பதில் மிக விருப்பம் கொண்டு, அவன் மூலமே தனது சகல வீட்டுவேலைகளும், மாடியும் பூரணமாக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாள்.

"அல்லாஹ்...! யா அல்லாஹ்... ஒரு தடங்கலும் இல்லாம எங்கட வேல நடந்து முடிஞ்சிரணும்..." என்று அவள் பிரார்த்தித்துக் கொண்டிருந்தபோதே கண்ணிமைக்கும் நேரத்தில் அந்தச் சம்பவம் நடந்தது.

கூரையின்மேலே உதவியாளனாக நின்று கூரைத் தகடுகளை வாங்கிக்கொண்டிருந்த குணசேனவின் மைத்துனன் சடுதியாகக் கால் தவறித் தடுமாறி தலைகுப்புற நிலத்தில் விழுந்தான். ஏறத்தாழ இருபத் தைந்து அடி உயரத்திலிருந்து, ஒரு கிணற்றின் அடி ஆழத்தில் புதைவது போல கால்களையும், கைகளையும் அகலப் பரப்பிக் கொண்டு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுவேலையோடு குழந்தையைக் கவனிக்கும் அவசம்... சமையல்...எல்லாம் சேர்த்து அழுத்த, கொஞ்சநேரம் இதைப் பார்த்து விட்டுப் போய்விடுவோம் என்று நப்பாசை கொண்டு, அதிலேயே லயித்து நின்றுவிட்டவளின் கண்ணிரண்டையுமே பறித்தெடுத்ததைப் போன்று அந்தச் சம்பவம் அவள் கண்ணெதிரே நடந்தது.

ஒருகணம், என்ன நடந்ததென்று அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. அடுத்த கணம், நடந்தது என்ன என்பதைப் புரிந்து கொள்ளும் முன்பாகவே கால்கள் தள்ளாடி மயக்கம் வந்தது. மீண்டும் சில வினாடிகளின் பின்பே அவள் நிலைமையை உணார்ந்து கொண்டாள்.

உணர்ந்து கொண்டதுமே, தான் ஒரு பெண்... தன்னைக் கட்டுப் படுத்திக்கொள்ள வேண்டும்... பயந்து ஒதுங்கிவிட வேண்டும் என்ற எண்ணங்களெல்லாம் அவளைவிட்டு விலகிச்செல்ல, ஒடோடோடி அந்த இடத்திற்கு விரைந்து சென்றாள். தொழிலாளிகள் யாவரும் அங்கு கூடி நின்றாலும் அவளுக்கு மரியாதையாக இடம் விட்டனர்.

நிஸ்ஸங்க மூச்சுப்பேச்சற்று மயங்கிக் கிடந்தான். ஒருபக்கமாகச் சரிந்த தலையிலிருந்தும், புருவ ஓரங்களிலிருந்தும் இரத்தம் பெருகி ஓடியது. வாயோரம் உமிழ்நீருடன் இரத்தம் ஒழுகி வடிந்து கொண்டிருந்தது. வலது காலிலிருந்தும் செங்குருதி கசிந்து கொண்டிருந்தது.

## அத்தியாயம்-03

என்ன செய்வது, ஏது செய்வது....ஒன்றும் புரியாத குழப்பம் எங்கும் சூழ்ந்திருந்தது. அவனை மறுபுறம் நேராகத் திருப்பியபோது அசைவற்றிருந்த அவனது உடல் பயத்தை உண்டு பண்ணிற்று. எனினும், ஸைபுன்னிஸா மிக வேகமாக இயங்கினாள்.

உடனே தனது சாரதிக்கு அவசர அழைப்பு விடுத்து வேனை தயார் பண்ணச் சொல்லி, குணசேனவிடம் கெகிறாவ அரசாங்க மருத்துவ மனைக்குக் கொண்டுசெல்லும்படி பணித்தாள். அனைவரும் உதவி செய்து அவனைத் தூக்கி வேனில் ஏற்றினர். தான் பின்னால் வருவதாகச் சொல்லி வேனை அவசரமாக அனுப்பிவைத்தாள்.

குழந்தையைத் தூக்கி வேறு உடைமாற்றி, சமையலறையில் பாதியில் கிடந்த உணவுகளை ஒழுங்காக மூடிவைத்துவிட்டு, கறுப்புநிற அபாயாவை அணிந்துகொண்டு டவுனிலுள்ள ஒரு ஆட்டோவுக்கு அழைப்பு விடுத்தாள். அவளது வீடு கெகிறாவையின் வடக்கில் நகரத்தை விட்டு இரண்டு, மூன்று கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருந்தது.

வீட்டுக்கதவுகளை மூடிவிட்டு நுழைவாயிலருகில் வந்து நின்றுகொண்டாள். மனதுக்குள் ஏற்பட்ட பதற்றம் உடம்பெங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி செய்து கொண்டிருந்தது. எப்படி இது நடந்தது என்ற மலைப்பும், எப்படியும் இது நடப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்ற அறிவும் அவளுள் மாறிமாறி தோன்றிக் கொண்டிருந்தன. எக்குத் தப்பாக இப்படி நடந்துவிட்டாலும் நிஸ்ஸங்கவுக்கு ஆபத்தாக ஏதும் ஏற்பட்டு விடக் கூடாது என்று அவளது மனம் பதறிக்கொண்டிருந்தது.

"யா அல்லாஹ்...எந்தப் பிரச்சினையும் வராம காப்பாத்து... நிஸ்ஸங்கவுக்கு ஏதும் நடந்துவிடக் கூடாது..."

ஏற்கனவே எந்த விக்கினமும் இன்றி வீட்டுவேலை முடிந்துவிட வேண்டும் என்று தான் பிரார்த்தித்ததையும் அவள் எண்ணிப் பார்த்துக் கொண்டாள். எவ்வளவு துவா கேட்டேன்...என்ன நடந்துச்சி..? மனம் சடைந்து நம்பிக்கையற்றுத் தொங்கி விழுந்தது. ஆயினும், தன் முயற்சி யில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தனைப் போன்று அவள் மீண்டும் மீண்டும் பிரார்த்தனைகளின் பக்கமே தன்னையறியாமல் சென்று கொண்டிருந்தாள்.

கணவனின் ஞாபகம் வர கையடக்கத் தொலைபேசியைத் தட்டினாள். அவன் உடனே தொடர்பில் கிடைத்தான். விஷயத்தைச் சொன்னபோது அவனும் அதிர்ந்து போய்விட்டான். தனது புதிய வீடு கட்டப்படும்போது எதிர்பாராத விதமாகவும், அபசகுனமாகவும் நடந்து விட்ட அந்தச் சம்பவம் அவனது மனக்கண்ணில் தெரிந்தது. தனது மனைவி தனியே எல்லாவற்றையும் எப்படி சமாளிக்கப் போகிறாள் என்ற கேள்வியும், தான் தனித்துவிட்டதான அங்கலாய்ப்பும் அவனுள் ஆர்ப்பரித்து எழுந்தன.

"எவ்ளோ சல்லி செலவழிஞ்சாலும் பரவாயில்ல...அவன காப்பாத்துற வழியப் பாரு... நா வேண்டியத அனுப்பி வைக்கிறேன்..."

பதட்டத்துடன் சொன்னான். அதற்குள் ஆட்டோ வந்து நிற்கவே தொடர்பைத் துண்டித்துவிட்டு அவள் உடனே ஏறிக் கொண்டாள்.

வைத்தியசாலை அவளது வீட்டிலிருந்து சற்று தொலைவில் பிரதான வீதியில் ஒதுக்குப்புறமாக அமைந்திருநத்து. அவள் அங்கு சென்றபோது நிஸ்ஸங்கவுக்கான அவசர முதலுதவிகளும், ஆரம்ப கட்ட சிகிச்சைகளும் முடிந்துவிட்டிருந்தன. எனினும், அவனுக்கு இன்னும் பிரக்ஞை திரும்பவில்லை. அனுராதபுரம் மாவட்ட வைத்தியசாலைக்கு அவனை ஏற்றிச் செல்வதற்கு அம்புலன்ஸ் தயாராக இருந்தது.

அவள் இதை எதிர்பார்த்திருந்தாள். ஓரளவு பெரிய நகரமான கெகிறாவையில் உள்ள அந்த அரசாங்க மருத்துவமனையில் பெனடோல், சேலைன் இத்தியாதிகளைத்தவிர வேறெந்த வசதிகளும் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. ஒரு சிறுகுழந்தை வாந்தியெடுக்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்று தாய் கொண்டுவந்து அனுமதிக்க, அதற்கான சிகிச்சை அங்கே இல்லையென்று தம்புள்ளைக்கு டாக்டர்கள் அனுப்பிவைக்க, அங்கே யிருந்த வைத்தியர்கள், "இதற்குக்கூட அங்கே சிகிச்சை செய்யாமல் இங்கே அனுப்புகிறார்களே..." என்று சலித்துக்கொண்ட சம்பவத்தை அவள் கடந்த வாரம் கேள்வியுற்றிருந்தாள்.

அனைவர் முகத்திலும் சோகத்தின் ஆட்சி. ஈயாடவில்லை. என்னவாகுமோ, ஏது நடக்குமோ என்று எல்லோரது உள்ளமும் பதறிக் கொண்டிருந்தன. அதற்குள் செய்தியறிந்து அங்கு ஓடிவந்துவிட்ட நிஸ்ஸங்கவின் மனைவி "குய்யோ, முறையோ.." என்று ஓலமிட்டக் கொண்டிருந்தாள்.

ஸைபுன்னிஸா குணசேனவைப் பார்த்தாள். அவனது முகம் சிறு குழந்தை ஒன்று துயரத்தால் வருந்துவதுபோல வாட்டமுற்றிருந்தது. நோயாளியின் உதவியாளனாக அனுராதபுரம் செல்வதற்கு அவன் தயாராக இருந்தான்.

"எந்த நிலைமையும் தெரியவில்லை.." அவனது உதடுகள் முணுமுணுத்தது அவளுக்குக் கேட்டது. வண்டி தயாராக நோயாளியும், தாதிமார்களும், அவனும் ஏறிக்கொண்டார்கள்.

ஸைபுன்னிஸா நிஸ்ஸங்கவின் மனைவியின் தோளில் தட்டி ஆறுதல் கூறினாள்.

***

ஒரு வாரம் கழிந்துவிட்டது. நிஸ்ஸங்க இன்னும் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையிலேயே வைக்கப்பட்டிருந்தான். ஆரம்பத் தில் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்திருந்த பின்னர் தற்போதுதான் சாதாரண வார்டுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தான்.

தலையில் பெரிய காயங்கள் ஏதும் இல்லை என்ற செய்தி ஆறுதலளித்தபோதும் வலது முழங்கால் கடுமையாகப் பாதிக்கப் பட்டிருந்தது. சத்திர சிகிச்சை நடந்து முடிந்திருந்தது. இரண்டு மாதங் களின் பின்னர் மீண்டும் ஒன்று நடக்கவிருப்பதாக அறிவிக்கப் பட்டிருந்தது.

ஸைபுன்னிஸா தனது சாரதியுடன் இரண்டு தடவைகள் சென்று அவனைப் பார்த்து வந்ததுடன், வைத்திய செலவுக்காக இருபத்தை யாயிரம் ரூபாவை ஒரு கவரில் இட்டு அவனது இள மனைவியின் கையில் கொடுத்திருந்தாள்.

பெரும்பான்மைச் சமூகமாக இருந்தபோதிலும்கூட அந்த ஏழைக் கூலித் தொழிலாளிகள் தனக்கு வழங்குகின்ற மரியாதையையும், காட்டு கின்ற அன்பையும் எண்ணி மனம் நெகிழ்ந்தாள் ஸைபுன்னஸா. தாம் ஒருவேளை உணவு உண்ணும் வீட்டையும், தனக்கு ஒரு நாளைக்காவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலிகொடுத்த கைளையும் தெய்வமாகவே போற்றி அவர்கள் வணங்கு வதையும் கண்டு அவள் எப்போதும் வியப்பதுண்டு. சுடுவெயிலில் உழைத்தபோதும் மாலையில் கூலி பெறும்போது கூனிக்குறுகி, இருகைகளும் மடித்து அதனைப் பெற்றுத் தன்னை வணங்கிச்செல்லும் அவர்களைக் கண்டு அவள் அனுதாபமுற்றாள். இது தன்னுடைய உரிமை, இது தன்னுடைய உழைப்பு என்றுகூட எண்ணத்தெரியாது, இது தனது எஜமான் போடும் பிச்சை என்ற எண்ணத்தில் ஒருவகை அடிமைகள்போன்று அவர்கள் வாழ்ந்துவரும் வாழ்க்கைமுறை என்னதான் கஷ்டங்கள் நிறைந்திருந்தபோதிலும் மிக நிம்மதியானது, உயர்வானது என்று அவளுக்குப் பட்டது.

பெரும்பான்மை இனமாக இருப்பதன் காரணமாக எல்வோரும் ஒன்று திரண்டுவந்து தனியாளான தன்னைப் பெண் என்றும் பாராமல் மொய்த்துப் பிய்த்து எறிந்துவிடுவார்களோ என்று தன்னுள்ளே சுழன்றுகொண்டிருந்த பயம் நியாயமற்றது என்பதை அவள் உணர்ந்தாள். அந்த ஜனங்களின்மீது இயல்பாகவே வாஞ்சையும், அனுதாபமும் தன்னுள் சுரந்து வருவதையும் அவள் உணர்ந்தாள்.

## அத்தியாயம்–04

அவள் இதுவரை செய்துவந்த அத்தனை பிரார்த்தனைகளையும் முறியடித்ததைப்போல வீட்டுவேலை “அம்போ” என்று பாதியில் நின்றிருந்தது. நிஸ்ஸங்க விபத்துக்குள்ளானது முதலாக தொழிலாளிகள் மத்தியில் ஒருவகை பதட்ட நிலைமை உருவாகியிருந்தது.

நோஞ்சானான - மெல்லிய உடம்பும், கரிய நிறமும் கொண்ட - நிஸ்ஸங்க கீழே விழுந்து மீண்டும் பிழைப்பான் என்று யாரும் எண்ணி யிருக்கவில்லை. நல்லவேளையாக, இறைவன் அருளால் பிழைத்துக் கொண்டான்.

வைத்தியசாலையில் ஒருமாத காலமாக இருந்தபின்னர் அவன் வீட்டுக்கு அனுப்பப்பட்டான். அடுத்தமாத இறுதியில் மேற்கொள்ளப் படவிருக்கின்ற சத்திர சிகிச்சையின் பின்னரே எந்த முடிவும் கூறலாம் எனுமாப்போல கால்களை நீட்டி வைத்தநிலையில் படுத்த படுக்கை யாகக் கிடத்தப்பட்டிருந்தான். வலது காலை மடக்க முடியவில்லை: உசுப்பக்கூட முடியவில்லை.

அவன் வீடு திரும்பிய பின்னர் ஒருவாரத்தின் பின்பு ஸைபுன்னிஸா அவனைப் பார்த்து வருவதற்காக தனது சாரதியுடன் சென்றிருந்தாள்.

அவனும் சகோதர இனத்தைச் சேர்ந்தவன்தான். பெயர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாசிவம். காலையில் குளித்து முழுகி நெற்றியில் விபூதிக் கீற்றோடு எட்டுமணிக்கெல்லாம் டாணென்று ஆஜராகும் அவன் மாலை ஐந்து மணிக்கு அவளிடமிருந்து விடைபெறுவான். சகல விதங்களிலும் - வாகனச் சாரதியாக, வேலைக்காரனாக, தோட்டக்காரனாக, குழந்தை பராமரிப்பாளனாக- அவனது உதவி அவளுக்குக் கிடைத்து வந்தது. அதன் காரணமாக அவள் பெருநிம்மதி கொண்டாள். இரவு நேரங்களில் லேசாகத் தனிமை தட்டினாலும், கண்களை மூடித் தூங்கப் பயப்பட்டாலும்கூட உடல் அசதி, வேலைப் பளு, குழந்தையின் நடுநிசித் தேவைகள் என்பன காரணமாக அவள் தனது தனிமையையும், பயத்தையும் பெரிதுபடுத்தாது வாழவேண்டியேற்பட்டது.

காலைமுதல் மாலைவரையும் அவளுடன் சாதாரணமாகவே பழகி வந்தாலும் தனது எஜமானிக்குரிய அந்தஸ்த்தையும், மரியாதையையும் சதாசிவம் என்றும் பேணியே வந்தான். அவனுக்கென நீர், மின்சார, கழிப்பறை வசதிகளுடனான ஒரு அவுட்ஹவுஸும் வழங்கப்பட்டிருந்தது. அந்த வீட்டில் தான் ஓய்வாக இருக்கும்போது ஏதாவது பத்திரிகை படிப்பான்; குழந்தைக்கு விளையாட்டுக் காட்டு வான். இல்லாவிட்டால் ஸைபுன்னிஸாவைப்பற்றி யோசித்துக் கொண்டி ருப்பான்.

சொந்த பந்தங்கள் யாருமற்ற ஒரே பெண்குழந்தையான அவள் அவன் கண்முன்னால் பிறந்து வளர்ந்தவள். வஞ்சகம், சூது, களவு என்றால் என்னவென்றே அறியாதவள். அவளது பெற்றோரின் வண்டிச் சாரதியாக அறிமுகமாகி அந்த அவுட் ஹவுஸே அவர்களது வீடாக ஏறத்தாழ நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு இருந்த நினைவை அவன் இன்னும் மறக்கவில்லை. அவளைத் தூக்கி வளர்த்து ஆளாக்கியதில் அவளது தந்தைக்குப் போலவே அவனுக்கும் பங்கு உண்டு. அவள் படித்து முடித்ததும் மணமுடித்துக் கொடுத்த பெற்றோர் சுமார் இரண்டு வருடங்களில் ஒருவர்பின் ஒருவராக காலஞ்சென்றுவிட்டனர்.

அவளது கணவன் பாரூக்கும் அவளுக்கேற்ற ஜோடிதான். ஒரே ஒரு சகோதரியுடன் பிறந்தவன். அவனது சகோதரி தனது குடும்பத்துடன் லண்டனில் வாழ்கிறாள். மருத்துவராக வேலை செய்கிறாள். எனவே, குடும்பத்தின் உதவி இருவருக்குமே இல்லை.

பக்கத்துக் கிராமத்திலிருக்கும் தனது சிறிய வீட்டைவிட, ஸைபுன்னிஸாவால் தனக்களிக்கப்பட்ட இந்தப் பழைமையான அவுட்ஹவுஸை அவன் புனிதமான ஒரு கோயிலாகக் கருதினான்.

அவனது மனைவி கிராமத்தில் காய்கறித் தோட்டம் வைத் திருந்தாள். மகன் செங்கல் சூளை வைத்திருந்தான். இருவரும் ஏதாவது தேவைக்கென நகரத்திற்கு வரவேண்டி ஏற்பட்டால், வந்து இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுட்ஹவுஸில்தான் தங்குவார்கள். அன்றைய பொழுதில் அவனது மனைவியும், ஸைபுன்னிஸாவும் சேர்ந்து செய்த சமையலை இரு குடும்பங்களும் ருசித்துச் சாப்பிடும்.

ஸைபுன்னிஸா தன்னுடன் பக்கத்து வீட்டுக்காரியான ஹனீமாவை அழைத்து வந்திருந்தாள். இருவரும் அந்த சிறு குடிலின் வாசலில் வந்திறங்கியதும், முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த நிஸ்ஸங்கவின் குழந்தைகள் மிரண்டுபோய் வீட்டுக்குள் ஓடின.

பட்டுச் செங்கம்பளம்போன்று சுத்தமாகக் கூட்டப்பட்டிருந்த அந்த முற்றத்தின் கடினமானதும், மிருதுவானதுமான மண்ணின் ஸ்பரிஷம் ஸைபுன்னிஸாவைக் கிறங்க வைத்தது. அதைவிட, வெறும் அம்மணமாகக் காட்சியளித்து ஓடிச்சென்று உள்ளே பதுங்கிய அந்தச் சிறுமிகளின் ஓட்டம் அவளை மிகவும் கவர்ந்தது.

வீட்டுக்குப் பக்கத்தில் கறுப்பு மண்சட்டி பானைகள் அடுக்கப்பட்ட பரணும், அதற்குப் பின்னால் கிணறும் தெரிந்தன. கிணற்றுக்கப்பால் பாத்தியைக் கொத்திப் புரட்டிக் கொண்டிருந்த குணசேனவின் மாமா அவர்களைக் கண்டதும் வியர்வையைத் துடைத்துக் கொண்டு ஓடி வந்தார்.

குழந்தைகள் உள்ளே சென்று செய்தியை அறிவித்திருந்தன. நிஸ்ஸங்கவின் மனைவி தனது குட்டைக் கவுனில் கையைத் துடைத்துக் கொண்டு அவசரமாக வெளியே வந்தாள். “மாமாண்டி” என்று கூவிக் கொண்டே வெளியே வந்தவள், வாசலில் நிற்கின்ற பெண்களைக் கண்டு தலைகுனிந்து, உதடுகளைக் குவித்து அன்புடன் வரவேற்றாள்.

இருவரும் உள்ளே சென்று நிஸ்ஸங்கவைப் பார்த்தனர். வலது காலை எற்தவிதத்திலும் மடக்கவோ அசைக்கவோ முடியாதவனாக, இடுப்பில் தலையணையை முட்டுக் கொடுத்து, நீட்டி நிமிர்ந்து அவன் படுத்துக் கிடந்தான்.

## அத்தியாயம்-05

இரண்டு மாதங்களின் பின்னர் நிஸ்ஸங்கவுக்கு சத்திரசிகிச்சை நடந்தது. எனினும், எந்தப் பயனும் கிட்டவில்லை. படுத்த படுக்கையாக இருந்தவன் இப்போது சக்கர நாற்காலில் நடமாடிக் கொண்டிருந்தான். அவ்வளவுதான் ஏற்பட்ட முன்னேற்றம்.

மாரி மழை பொய்த்துப் போனாலும் பருவம் தப்பிய மழையாக மார்ச் மாத இறுதியில் உகைப்புமழை தொடங்கி ஏப்ரல் நடுப்பகுதிவரை பெய்து கொண்டிருந்தது. எப்படியோ, புதுவருடத்திற்கு முன்னர் வேலையை முடித்தாக வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைசெய்து, இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் கூரைவேலையை முடித்துக் கொடுத்திருந்தார்கள். இனிமேல் உட்புற வேலைகளை வெயிலிலும், மழையிலும்கூட செய்து முடித்துவிடலாம் என்ற சந்தோஷம் குணசேனவின் உள்ளத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்திற்று.

ஸைபுன்னிஸாவும் மிக்க மகிழ்ச்சியாக இருந்தாள். திட்டமிட்டதைவிட சிறிதுகாலம் தாமதமாகியபோதிலும் கூரைவேலை சிறப்பாக நடந்து முடிந்தமை குறித்த மகிழ்ச்சி அவளுள்ளத்திலும் நிறைந்திருந்தது.

தனது மைத்துனனான நிஸ்ஸங்க, இப்படி ஒடிந்து போனமை குறித்து குணசேனவின் உள்ளத்தில் துயரம் மிகுந்து நின்றாலும், அதைக் காட்டிக்கொள்ளாமலேயே வேலை செய்கிறான் என்பது அவனது முகத்தைப் பார்த்தாலே யாவருக்கும் புரிந்தது. நிஸ்ஸங்கவின் வாழ்க்கைச் செலவுப் பொறுப்பைத் தான் ஏற்றுக் கொண்டிருப்பதாக அவன் பேச்சு வாக்கில் கூறினான். அவள் ஆச்சரியத்துடன் வைத்தகண் வாங்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனது செய்தொழில் நேர்த்திபோலவே மனிதாபிமானத்தின் நேர்த்தியும் அவளைக் கவர்ந்தன. நிஸ்ஸங்கவின் மேலதிக வைத்தியச் செலவுகளை அவள் மனமுவந்து பொறுப்பேற்றுக் கொண்டாள்.

அவன் ஐம்பத்தைந்து வயதைக் கடந்தவன். ஆனால், தோற்றத்திலும் உற்சாகத்திலும் ஓர் இளைஞனைப்போலவே இருப்பான். வெயிலில் இருந்து தலையைக் காத்துக் கொள்வதற்காக எப்போதும் ஒரு வெள்ளைத் தொப்பி அணிந்து கொண்டிருப்பான். அந்தத் தொப்பியைக் கழற்றினால் அவனது அத்தனை தலைமயிரும் நரைத்து பழுத்துக் கிடப்பதைக் காணலாம். எனவே, அவன் அதைக் கழற்றுவதில்லை. நீளக்கை டீசேர்ட்டும், நீளக் காற்சட்டையும் அணிந்து காலையில் வெகு உற்சாகமாக வேலைக்கு வரும்போது சிலவேளைகளில் வெற்றிலை போட்டுக் கொண்டிருப்பான்.

“தெங் மம பென்சன் யன வயச நோனா...” என்று அடிக்கடி கூறிக்கொள்வான். பென்சன் செல்லவேண்டிய வயதிலும்கூட தான் இன்னும் சளைக்காமல் வேலை செய்துகொண்டிருப்பதன் காரணமாக ஏற்பட்ட பெருமிதமும், அயர்வும் அந்தப் பேச்சில் ஒருங்கே தொனிக்கும்.

அவனது பெண்பிள்ளைகள் இருவரும் மணமுடித்து புகுந்தவீடு சென்றுவிட்டனர். மூத்தவள் தாய்மைப் பேற்றை எதிர்பார்த்திருந்தாள். குடும்பத்தில் பிக்கல் பிடுங்கல் ஏதும் இல்லை.

அவன் தன்னைவிட தாழ்ந்த ஜாதிப் பெண்ணை மணமுடித்த தனால் தனது குடும்பத்திலிருந்து ஒதுக்கப்பட்டதாக பேச்சுவாக்கில் ஒரு முறை குறிப்பிட்டிருந்தான். ஒரு பெரிய தோட்டத்தில் - அது மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

281567

யுடைய காணி என்றும் சொன்ன ஞாபகம் - அவனது மனைவிக்கும், நிஸ்ஸங்கவுக்கும் சமபங்கிருந்தது. முன்புறமாக அவனும், பின்புறமாக நிஸ்ஸங்கவும் வீடு கட்டிக் கொண்டிருந்தனர். இரு குடும்பங்களும் பாவிப்பதற்காக பொதுவான பாதையும் இருந்தது.

அன்று நிஸ்ஸங்க வீடு சென்றபோது அந்தக் குடிலின் அழகும், செம்மையும் ஸைபுன்னிஸாவைக் கவர்ந்தன. அதன் உள்ளே போய் அமர்ந்து ஒரு வாய் தண்ணீர் குடித்துவிட அவள் ஆவலுற்றாள். ஆனால். அவளுடன் வந்திருந்த பக்கத்து வீட்டுக்காரி ஹனீமாவோ அந்த நிர்வாணக் குழந்தைகளைக் கண்டதுமே முகத்தைச் சுளித்தாள். ஸைபுன்னிஸாவுக்கு என்னவோ போலிருந்தது. குடிசைக்குள் சென்று நிஸ்ஸங்கவைப் பார்த்தபின்பு ஒரு நிமிடம்கூட அங்கே தாமதிக்க ஹனீமா விரும்பவில்லை. போதாததிற்கு சமையலறைப் பகுதியிலிருந்து வீசிக்கொண்டிருந்த பழைய குழம்புக்கறியின் கவிச்சி மணம் குடலைப் புரட்டுவதுபோல் இருப்பதாகவும் அவள் கிசுகிசுத்தாள். எனவே, ஸைபுன்ளிஸா ஒருவாறு அவளைச் சமாளித்து வெளியே கூட்டிவந்து, இரண்டு பிளாஸ்டிக் கதிரைகளைக் கேட்டு வாங்கி, முற்றத்தில் போட்டு உட்கார வைத்தாள். சிறிது நேரத்திற்குள்ளாகவே "போவோம், போவோம்" என்று அவள் கிளம்ப, வேறு வழியின்றி ஸைபுன்னிஸாவும் எழும்ப வேண்டியதாயிற்று.

அவளது பக்கத்து வீடு என்ற சொல்வதற்கு ஹனீமா ஒன்றும் நெருங்கியவள் இல்லை. அவளது வீடும், ஸைபுன்னிஸாவுடையதைப் போன்றே நகரத்தைவிட்டும் ஒதுக்குப்புறமாக பிரதான வீதியில்தான் அமைந்திருந்தது. என்றாலும், ஸைபுன்னிஸாவின் வீட்டுக்கப்பால் இருநூறு மீற்றர் தொலைவில் இருந்தது. ஒரு ஏக்கர் விஸ்தீரணமுள்ள பெரிய தோட்டத்தின் எல்லைக்குள் வாழும் ஸைபுன்னிஸாவுக்கு கூப்பிட்ட குரலுக்கு ஓடிவர யாருமில்லை. அவளது வீட்டுக்கப்பால் செல்லும் சிறிய வீதியைத் தாண்டி அடுத்த முனையில் ஹனீமாவின் வீடு அமைந்திருந்தது. அவளது கணவன் மரத்தளபாடங்களைச் செய்யும் மடுவம் ஒன்றைப் பக்கத்தில் நடத்திக் கொண்டிருந்தான். அவற்றை விற்பனை செய்வதற்கு சொந்தக் கடை ஒன்றும் நகரத்தில் இருந்தது. கல்யாண வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் அவளது மகன் அந்தக் கடையை நடத்திக் கொண்டிருந்தான்.

ஹனீமா ஸைபுன்னிஸாவைவிட பத்துப் பதினைந்து வயது மூத்தவள். அவளது கணவனோ தோற்றத்தில் அவளைவிட படு கிழவனாக இருந்தான். நரைத்த தலையும், மூக்கும் முழியும் அவனை முது கிழவனாக காட்டிக்கொண்டிருந்ததை அறிந்து, அதை மறைப்பதற்காக கொஞ்சம் அழகாக, கவனமாக உடைகள் அணிவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹனீமா எப்போதும் மூடி முக்காடிட்டு வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பாள். ஆனால், ஊரின் கடைசிக்கோடியில் ஒரு ஏழைக்குடிலில் நடக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகூட அவளுக்குத் தெரிந்திருக்கும். எங்கிருந்துதான் இந்தச் செய்திகள் அவள் வீட்டுக் கெமராவில் பதியப்படுகின்றனவோ என்று ஸைபுன்னிஸா பலமுறை வியந்திருக்கிறாள். ஆண்களைக் கண்டால் ஒளிந்துகொள்ளும் அவள், ஸைபுன்னிஸாவின் சகஜ சுபாவம் குறித்து அசூயை கொண்டிருந்தாள்.

## அத்தியாயம்–06

ஹனீமாவுக்குத் தன்மீது சிறியளவில் காழ்ப்புணர்ச்சி இருப்பதை ஸைபுன்னிஸா பலமுறை உணர்ந்திருக்கிறாள். எனினும், அதைக் காட்டிக்கொள்ளாமலும், பெரிதுபடுத்தாமலும் இயல்பாகப் பழகி வந்தாள். பக்கத்து வீட்டுக்காரி என்பதால் அவளுக்குரிய மரியாதையை வழங்குவதற்கு அவள் எப்போதும் தவறுவதில்லை.

வெளியிலே அவள் தன்னைப் பற்றிக் கூறுகின்ற குறைகளைப் பற்றி ஏதும் தெரியாவிட்டாலும்கூட, நேரடியாக தன்னைப்பற்றியும், தான் குழந்தை வளர்க்கும் விதம்பற்றியும் அவள் அடிக்கடி குறை கூறுவதை ஸைபுன்னிஸா பொறுமையோடு கேட்டுக்கொண்டிருப்பாள். அதில் அதிகமான கதைகள் அவள் ஆண்களோடு சகஜமாகப் பழகுவது பற்றியும், கண்ணே பொன்னே என்ற பெற்றெடுத்த குழந்தையை ஏனோதானோ என்று வளர்ப்பது பற்றியும் சுற்றிவருவதை அவள் அவதானித்திருந்தாள். தனது வாழ்க்கைமுறை அப்படியிருக்கும்போது தான் என்ன செய்ய முடியும் என்ற மனதுக்குள் எண்ணிக் கொள்வாள்.

ஹனீமாவைப்பற்றி எந்தவித அபிப்ராயமும் தனக்குள் தோன்றி வளர இடம் கொடுப்பதற்கு ஸைபுன்னிஸா உள்ளத்தின் ஓரத்தில்கூட இடம் ஒதுக்கியிருக்கவில்லை. அது பலவேளைகளில் தேவையே இல்லாத ஒரு விவகாரம் என்பதாக அவள் அலட்சியம் செய்து வந்தாள். எப்போதுமே ஒரு தூய்மையான முஸ்லிம் பெண்ணுக்குரிய தோற்றத்தை ஹனீமா பேணிவந்தாலும், அவள் பேசத் தொடங்கினாலோ...!

"இஞ்சருங்கோ ஹசன்ட உம்மா.... எங்கட முன்னுத்து வூட்டுக்காரிய கவனிச்சீங்களா? கொஞ்சநாளாவே ஒரு மாதிரி இருக்கா... இஸ்லாமத்தான பொம்புளயா இருந்தா தலய மூடி ஒழுக்கமா இரிக்க வேணாமா..?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள் ஹனீமா.

முற்றத்தில் ஓரமாகக் கொடி கட்டிக் காயப்போட்டிருந்த உடைகளை எடுத்துக் கொண்டிருந்த அவள் திரும்பிப் பார்த்தாள்.

"ஏன், என்னா..?" என்று திருப்பிக் கேட்டவளாக வாசல்படியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை வைத்தாள்.

அது நண்பகல் நேரம். சமையல் முடித்து அவள் இன்னும் சாப்பிடவில்லை. தனிமையில் சாப்பிடும்போது அது ஒரு அனுபவமாக மாறுவதற்குப் பதிலாக எப்போதுமே ஒரு சுமையாக மாறிவிடுவதாக அவள் எண்ணிக் கொள்வதுண்டு. அதுகூட அவளது நேரத்தையும், குழந்தையின் மனநிலையையும் பொறுத்த விஷயமாக அவள் கருதிக் கொண்டிருந்த ஒரு எக்கச்சக்கமான பொழுது அது. ஹனீமாவோ சாப்பிட்டு முடித்து சாவகாசமாக வந்திருப்பதாகப் பட்டது.

தலையை முக்காடிட்டு மூடிக்கொள்கின்ற ஒரு பெண், தலையை மூடாமலே திரிகின்ற இன்னொரு பெண்ணை விமர்சிப்பது எந்தவகையில் நியாயம் என்றொரு எதிர்க்கேள்வி அவளுள் எழுந்து அடங்கிப் போனது. ஹனீமாவின் மூப்பு கருதி அவள் மௌனங் காத்தாள்.

நீண்ட அந்த வாசல் படியில் அமர்ந்துகொண்ட ஹனீமா, "எனக்கும் வேல இருக்குது. சும்மா ஒரு எட்டு பாக்க வந்தேன்....போய் குளிக்கணும்.." என்று முணுமுணுத்துக் கொண்டாள்.

அந்த முன் வீட்டுக்காரியைப் பற்றி ஸைபுன்னிஸாவுக்கு ஒன்றுமே தெரியாது என்பதால் அவளால் சுவாரஸ்யமாக அந்தப் பேச்சைத் தொடர்ந்து கொண்டு செல்ல முடியவில்லை. எதிர் கொண்டால் ஒரு புன்சிரிப்போடு ஒதுங்கிப் போகின்ற ஒரு அமைதியான பெண்ணாகவே அவளைக் கண்டுகொண்டிருக்கிறாள். அதுவும் அவளது வீட்டைக் கடந்து செல்லும்போது மட்டும்தான்.

"எனக்குன்டா அவவப்பத்தி ஒண்ணுமே தெரியா தாத்தா..." என்று சொல்லி கதையை முடித்துக் கொண்டாள் ஸைபுன்னிஸா.

***

ஸைபுன்னிஸா தன்னார்வத் தொண்டர் நிறுவனமொன்றில் சிறிய வேலை பார்த்து வந்தாள். விஞ்ஞானப்பிரிவில் படித்தவள் என்பதனாலும், தாதிச்சேவை பயிற்சி பெற்றவள் என்பதனாலும் அவளைத் தேடி அவ்வாய்ப்பு வந்தபோது அவளால் மறுக்கமுடியவில்லை. 'உதவும் கரங்கள்' எனப் பெயரிடப்பட்ட அந்த நிறுவனம் பல முதியவர்களையும். அனாதைகளையும் பராமரிக்கும் பெரிய கட்டடத் தொகுதி ஒன்றைக் கொண்டிருந்தது. நகரத்தின் சந்தடிகளைவிட்டு ஒதுங்கிய ஒரு பகுதியில், அவளது வீட்டுக்குச் சற்று எதிர்ப்பக்கமாக அந்த இல்லம் அமைந் திருந்தது. தனது தனிமை, குழந்தையின் வேலைகள் என்பன காரணமாக வாரம் ஒருமுறையே அந்த இல்லத்திற்கு விஜயம் செய்வாள். சிலவேளை களில் குழந்தையைத் தூக்கிக்கொண்டும் செல்வாள். முடியாதபோது சதாசிவத்திடமோ, குணசேனவிடமோ தான் ஒப்படைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியிருக்கும்.

"புள்ளய பெத்து இப்புடி கண்டவங்க நிண்டவங்க கிட்ட எல்லாம் குடுக்க நல்லமா..?" என்று ஒருமுறை ஹனீமா விசனத்துடன் கேட்டாள். அவள் பதிலேதும் சொல்லவில்லை.

அன்றும் அப்படித்தான். ஒரு முதியவருக்கு அவசரமாக மருத்துவ உதவி தேவைப்படுவதாக அழைப்பு வர, அவள் குழந்தையை குணசேனவிடம் கொடுத்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றாள். சதாசிவம் சந்தைக்குப் போயிருந்தான்.

அவளது குழந்தை ஹசன் படுசுட்டி. ஒரு நிமிஷத்தில் நூறு வேலைகளைச் செய்யத் துடிப்பான்; துருதுருவென்று ஓடித் திரிவான். அவனைப் பார்த்துக் கொள்வதென்றால் விஷேட டொனிக் ஏதும் குடித்தாக வேண்டும் என்று சதாசிவம் அடிக்கடி கூறுவான்.

மாடியின் உட்புறமாக சீமெந்து பூசும் வேலைகள் ஆரம்பித்து விட்டிருந்தன. முன்னாலும் பின்னாலும் இரண்டு தற்காலிக பலகைக் கதவுகளைப் பொருத்தி வைத்துவிட்டு குணசேன வேலை செய்து கொண்டிருந்தான். குழந்தையைப் பக்கத்தில் கதிரையில் உட்கார வைத்திருந்தான். உதவியாளன் சமன் சீமெந்துக் கலவையைத் தாச்சியில் நிரப்பி அவனிடம் கொடுத்துக் கொண்டிருந்தான். ஏனையோர் வேலைக்கு வந்திருக்கவில்லை.

காலைத் தேநீர் வேளை. சதாசிவத்தின் அவுட் ஹவுஸிற்குள் நுழைந்தான் குணசேன. சமனிடம் குழந்தையைப் பார்க்கச் சொல்லி யிருந்தான். மின்னடுப்பில் தண்ணீரைக் கொதிக்கவைத்தான். தேநீர் தயாரித்தான். வெளிப்புறமாகவுள்ள மாடிப்படிகளில் ஏறிச் செல்லும் போது சமன் குழந்தையுடன் பேசுவது கேட்டது.

குணசேனவுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். அதுவும் சுட்டிக் குழந்தைகளை அன்புகாட்டி அடக்குவதில் படு சமர்த்தன். சுடச்சுட தேநீர் சாயத்தை சமனுக்குக் கொடுத்து, தானும் ஒரு கோப்பையை எடுத்துக் கொண்டான். கருப்பட்டியைக் கடித்துச் சுவைத்தபோது குழந்தை கைநீட்டி அதனைக் கேட்டது.

"அது வேணாம்.." என்ற மழலைத் தமிழில் பேசியவாறு கொஞ்சி அதன் கையைத் தட்டிவிட்டான். குழந்தை மீண்டும் கேட்க, ஒரு சிறுதுண்டை அதன் கையில் கொடுத்தான். அது சுவைத்து எச்சில் ஒழுகக் கடித்தது. சமன் பின்புறமாகச் சென்றான்.

குணசேன தனது மைத்துனன் நிஸ்ஸங்கவையும், அவனது இரு குழந்தைகளையும் நினைத்துக் கொண்டான். அவனது இரு பெண் மக்களும் மிக அழகானவர்கள் என்பதால் சீக்கிரமாகவே மணமுடித்துச் சென்றுவிட்டார்கள் என்றாலும், இப்போது மைத்துனனின் பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளை வளர்க்க வேண்டிய பெரும் பொறுப்பு தன்னைச் சூழ்ந்து கொண்டுள்ளதையும், தனது கிழப்பருவத்தையும் எண்ணி நெடுமூச் செறிந்தான்.

எப்படியிருப்பினும், அந்தக் குழந்தைகளுக்காக தன்னாலான எல்லா உதவிகளையும் செய்வதாக அவனது மனது மீண்டும் திடசங் கற்பம் பூண்டது. பசித்தவருக்கு உணவளிப்பது பெரிய புண்ணியம் என்றிருக்கும்போது, ஒரு குடும்பத்தை வாழவைப்பது என்பது எவ்வளவு ஈடேற்றமான செயல் என்று எண்ணி மன ஆறுதலடைந்தான்.

தேநீர்க் கோப்பை காலியாகி விட்டிருந்தது. கையிலிருந்த கருப்பட்டியை வாயிலிட்டு சூப்பியபடி எழுந்தான். எதிரே கதிரையைப் பார்த்தான். வெறுமையாக இருந்தது.

“தெய்யனே...”அவனது மனம் துணுக்குற்றது. முன்பு ஒரு முறை யும் குழந்தை இவ்வாறு காணாமல் போனது குறித்து ஸைபுன்னிஸா தன்னிடம் முறைப்பட்டதை நினைத்துக் கொண்டான். கீழே இறங்கி வரும்போது சமன் ஏதுமறியாதவனாக வந்துகொண்டிருந்தான். குணசேனவுக்கு கோபம் கோபமாக வந்தது. “ஏ கழுதையே...அவனைக் காணவில்லை. உடனே தேடு...” என்று சிங்களத்தில் இரைந்தபடி அவுட் ஹவுஸிற்குள் நுழைந்தான்.

சமன் ஓடி மேலே சென்று மாடியில் சுற்றிச் சுற்றித் தேடினான். கீழே வந்தான். குணசேன வீட்டின் சுற்றுப்புறமாகத் தேடிவிட்டுத் தெருவில் ஓடுவது தெரிந்தது. சமன் அருகிலுள்ள சிறிய வீதியில் இறங்கித் தேடினான்.

வீதியில் கண்ணுக்கெட்டிய தூரத்தில் குழந்தையை எங்கும் காணவில்லை. தொய்ந்த நடையுடன் குணசேன மீண்டபோது “எங்கு தேடியும் காணவில்லை....” என்று சமன் மெதுவாகச் சொன்னான்.

வீதியில் தூரத்தில் ஸைபுன்னிஸா வருவதைக் கண்டதும் இருவரது உள்ளங்களும் நடுங்கத் தொடங்கின. வீட்டு நுழைவாயிலை அண்மித்ததுமே அவளுக்கு விபரம் புரிந்துவிட்டது. அவர்களிருவரும் பதட்டத்துடன் நிற்பதையும், பக்கத்தில் குழந்தை தென்படவில்லை என்பதையும் கண்டு அவளுள்ளம் துணுக்குற்றது. வேகமாக வீதியைக் கடந்து நுழைவாயிலுக்கு வந்தாள். அங்கிருந்து வீட்டுக்கு வருவதற்கு சுமார் ஐம்பது மீற்றர் தூரம் நடக்கவேண்டும் என்பதால் பொறுமை யில்லாமல் ஓடோடி வந்தாள்.

அவளது பொன்னிறமுகம் மஞ்சள் வெயிலில் மினுமினுத்துப் பிரகாசித்தது. கறுப்பு அபாயாவை அணிந்திருந்தாலும் அதை மீறிய அவளது மென்னுடலின் அசைவுகள் கண்களை உறுத்தவே, குணசேன கண்களைத் தாழ்த்திக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்-07

குழந்தையைக் காணவில்லை என்ற செய்தி இடிபோன்று தாக்கினாலும், அந்த இடியினுள்ளும் ஒரு மின்னல் கீற்றாக அவளுள் நம்பிக்கை ஒளிர்ந்தது. முன்னர் ஒருமுறை காணாமல்போய் ஹசன் மீண்டும் காணப்பட்டதால் அந்த நம்பிக்கையின் சுடர் பலமாகவே வீசிற்று.

மாலைக்குள் குழந்தை வீடு திரும்பாவிட்டால் மட்டும் தன் கணவனுக்கோ பொலீஸூக்கோ அறிவிக்கலாம் என்று அவள் முடிவெடுத்திருந்தாள். எனினும், அவள் உள்ளத்தில் திகைப்பும், அச்சமும் குடிகொண்டிருந்தன.

திருமணமாகி குடித்தனம் நடத்தத் தொடங்கிய இந்தப் பதினேழு வருட காலங்களில் தான் பட்ட துயரங்களையெல்லாம் அவள் நினைத்துப் பார்த்தாள். கல்யாணமான புதிதில் நல்ல கணவனைக் கைப்பிடித்திருந்தபோதும் நல்ல தொழில் ஒன்று கிடைக்காமல் தனது குடும்பம் கஷ்டப்பட்டதையும், வேலை கிடைத்தபோது அது தனது குடும்பத்திற்கேற்ற ஊதியத்தைத் தராதிருந்ததையும், பின்னர் அவன் வெளிநாடு சென்றதையும், கடந்த ஆறு வருடங்களில் கணவனைப் பிரிந்ததுடன் தனது பெற்றோரையும் ஒருவர் பின் ஒருவராக இழந்தை யும் எண்ணிப் பார்த்தாள். பின்னர் அவன் இடையில் வந்துசென்ற ஒருபோது தான் கர்ப்பமுற்றதையும், பாதியில் நிற்கும் தனது வீட்டைக் கட்டி முடிப்பதற்காக அவன் மீண்டும் வெளிநாடு போனதையும், தான் தன்னந்தனியாக சதாசிவத்தின் மனைவியின் உதவியுடன் பிரசவத்தை எதிர்கொண்டதையும் அவள் எண்ணிப் பார்த்தபோது தான் தனியே இருந்து அனுபவித்த துயரங்களும், தூக்கமின்றித் தவித்த இரவுகளும் தான் தனது வாழ்க்கையில் அதிகம் என்பதாக அவளுக்குப் பட்டது.

இத்தகைய துன்பங்களின் போதெல்லாம் துவண்டு தளர்ந்த விடாத உள்ளத்தையளித்த இறைவனுக்கு அவள் மனம் நன்றி கூறிக்கொண்டது. எவ்வளவுதான் உறுதியாக இருந்தபோதிலும் அவளால் படபடப்பை அடக்க முடியவில்லை. காலையில் அணிந்த அபாயாவைக் கழற்றாமலே, விடிகாலையில் சமைத்து வைத்த உணவைக் கூட உண்ணாமலே, அவள் பின்புறமாகவுள்ள வாழைத் தோட்டத்தில் எங்காவது ஒளிந்துகொண்டிருக்கிறானா என்று தேடியலைந்தாள். முன்பு, அவன் வேண்டுமென்றெ ஒளிந்திருந்தது அந்தத் தோட்டத்தில் தான். நேரம் பிற்பகல் இரண்டு மணியைத் தாண்டியிருந்தது.

வீட்டைப் பூட்டி சாவியைக் கையில் எடுத்துக்கொண்டு ஹனீமா வீட்டுக்குப் புறப்பட்டாள். அவளுடன் சென்று ஒட்டிக் கொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கிறானோ என்னவோ என்றொரு நப்பாசை அவளை இயக்கியது.

வாசலில் காலடி வைத்தபோதே அங்கு குழந்தை இருப்பதற்கான ஊசாட்டம் எதுவுமில்லை என்பது புரிந்தது. பகலுணவை எப்போதும் சீக்கிரமாக முடித்துக்கொள்ளும் ஹனீமா, அன்றும் ஓய்வாக அமர்ந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தாள். "ஹசன் இங்க வந்தானா தாத்தா..?" என்ற குரல்கேட்டு திரும்பிப் பார்த்தாள்.

"வாங்க வாங்க..ஏன் ஹசன் எங்க..?" அடிக்கடி வந்து போகாத ஸைபுன்னிஸாவை உற்சாகமாக வரவேற்றாள் ஹனீமா.

"காலையிலயிருந்து அவனக் காணல்ல..."தலை குனிந்து சொன்னாள் ஸைபுன்னிஸா. அவளது கண்களுக்குள் ஊடுருவிப் பார்த்து சிந்தனை வசப்பட்டு ஹனீமா கேட்டாள்.

"ஏன் எங்க போயிட்டான்...?"

ஸைபுன்னிஸா படபடவென்று விபரித்தாள்.

"அப்புடியா..." என்று எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தபின் ஹனீமா சொன்னாள்.

"அதுக்கத்தான் புள்ளய பத்திரமா பாத்துக்கொள்ளச் சொல்றது. ஒங்களுக்கு இன்னம் ஒண்ணுமே வெளங்குதில்ல....அண்டை அசல் ஆக்களோட நெருங்கிப் பழகவும் மாட்டீங்க. மத்தவங்கள நம்புவீங்க. இப்ப எங்க போயி தேடுறது...?" சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்த நச்சரவத்தின் தோரணையில் கண்கள் மின்ன கூறினாள்.

ஸைபுன்னிஸா ஏதும் பேசாமல் நிராசையுடன் வாசலுக்கு மீண்டு வந்தபோது எதிரே சமன் நின்றுகொண்டிருந்தான்.

"ஹசன் ஹம்பவுனா.." என்றான்.

ஏமாற்றமும், ஆத்திரமும் ஆனந்தப் பெருக்காக மாற அவள் கேட்டாள். "எங்க...?"

"பாஸூன்ன உங்கள் வீட்டு டெலிபோனுக்கு முயற்சி செய்தார். நீங்கள் அங்கில்லை...உடனே வரச் சொல்லி எனக்குச் சொல்லச் சொன்னார்... குழந்தை வரமாட்டேன் என்கிறதாம்..."

"எப்படியோ கெடச்சிட்டானே அது போதும்..."என்று கூறிய படி அவனைத் தொடர்ந்து அவள் செல்ல, அழையா விருந்தாளியாக ஹனீமாவும் பின்தொடர்ந்தாள்.

சமனைத் தொடர்ந்து வேகமாக நடந்தனர். அவன் பிரதான வீதியைக் கடந்து மேற்குப் புறமாகச் சென்ற குறுக்குத் தெருவில் இறங்கி நடந்தான். அது சிங்கள ஏழைக் குடியானவர்களின் வதிவிடப் பகுதி. இதுவரை அவள் காலடி வைத்திராத ஒரு பகுதி.

தெருவில் நடந்து முனைவரை சென்று வலப்புறம் திரும்ப, அங்கே ஒரு வீட்டின் முன்னால் சிறுகூட்டம் கூடியிருப்பதைக் கண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகீரென்று மனம் நொடித்தது. ஆனால். அந்த மனிதர்களின் முகங்களில் கவலையோ, வருத்தமோ தென்படாததைக் கண்ணுற்றதும் ஆறுத லடைந்தாள். குழந்தைக்கு ஏதும் நடந்திருக்காது என்ற நம்பிக்கையுடன் அவள் ஊடுருவிப் பார்த்தபோது, அந்தக் கூட்டத்தில் ரணசிங்க நிற்பதைக் கண்டாள். அவளைக் கண்டதும் அவன் ஓடோடி வந்தான்.

"நோனா... நான் வீதியில் போய்க்கொண்டிருந்தபோது குழந்தை உங்கள் வீட்டு கேட்டருகே நின்றிருந்தது. வாகனங்கள் வேகமாக போய்க் கொண்டிருந்தன. வீட்டு முன்னால் யாரையும் காணவில்லை. அதனால் நான் தூக்கிகொண்டு வந்தேன். என்னைக் கண்டதும் கையை நீட்டி "மாமா..." என்று கூப்பிட்டான். வீட்டுக்கு வந்ததும் அக்கம் பக்கத்துப் பிள்ளைகள் எல்லாம் கூடி விளையாடவும், இங்கேயே இருக்கிறேன் என்று பிடிவாதம் பிடித்தான். உங்கள் தொலைபேசி இலக்கம் தெரியாது. குணசேன அய்யா வந்து தேடவும் இப்போதுதான் அவனுக்கு வீட்டு ஞாபகம் வந்தது. உடனே தகவல் தராததற்கு மன்னியுங்கள்..." என்று அவசரமாகக் கூறினான்.

உள்ளேயிருந்து அவனது இளமனைவி குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தாள். ஹசன் முகம் கழுவி, பவுடர் பூசி, நெற்றியில் அகலமாக கறுப்புப் பொட்டு வைத்து பளிச்சென்று இருந்தான். தாயைக் கண்டதும் கைகளை ஆட்டி தன் உற்சாகத்தைத் தெரிவித்தான். ஹனீமா, "ஹூம்..." என்று முகத்தைத் தோளில் இடித்து தன் எக்காளத்தை தெரிவித்துக் கொண்டாள்.

வீட்டின் பக்கவாட்டில் யாருடனோ கதைத்துக் கொண்டிருந்த குணசேன அப்போதுதான் முன்னால் வந்தான். அவனது முகத்தில் தனது கவனக் குறைவால் ஏற்பட்டுவிட்ட பிரச்சினைகளுக்கான வருத்தமும், குழந்தை கிடைத்துவிட்ட ஆறுதலும் ஒருங்கே தெரிந்தன.

"நோனா.. ஹசனுக்கு ரணசிங்கவை நன்றாகத் தெரியும். போனகிழமை வீட்டு மாடிப்படிக்கு கைப்பிடி அடிக்க வந்திருந்தார் அல்லவா? அப்போதே கூட்டாளியாகி விட்டான்..."என்று சற்று பயங்கலந்த சமாளிப்புத் தொனியில் கூறினான்.

"அதற்கென்ன? அவன் இங்கே இருக்கிறான் என்ற தெரிந் திருந்தால் நான் இப்படி பயந்திருக்க மாட்டேன்.." என்று தவிப்பும், சந்தோஷமுமாகச் சொன்னாள் ஸைபுன்னிஸா.

குழந்தையைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு நன்றி தெரிவித்து அனைவரும் திரும்பி நடந்தார்கள். தன்னால் ஏற்பட்டுவிட்ட இந்தப் பிரச்சினைக்கு திரும்பத் திரும்ப மனம் வருந்தி, திரும்பத் திரும்ப மன்னிப்பு கேட்டுக்கொண்ட குணசேன, பேச்சுவாக்கில் ரணசிங்கவுக்குத் திருமணமாகி மூன்று வருடங்களாகியும் இன்னும் குழந்தைப் பாக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கவில்லை என்ற தகவலையும் இடையில் சொன்னான்.

## அத்தியாயம்-08

மாலையில் வேலைகள் முடிந்து ஓய்வாக அமர்ந்திருந்தபோது அவள் தனது கணவனிடம் ஹசன் காணாமல் போய் மீண்டும் கிடைத்துவிட்ட விபரத்தை மேலோட்டமாகச் சொன்னாள். அவன் துடித்துப் பதறிப் போனான். உடனே வேலையை விட்டுவிட்டு வரப் போவதாகச் சொன்னான். குழந்தையைவிடவும் பாதுகாத்து வளர்ப்பதற்கு இவ்வுலகில் வேறென்ன முக்கியமான பொருள் இருக்கிறதென்று வினாவெழுப்பினான். வீட்டின் பெரும் பகுதி வேலைகள் முடிந்து விட்டமையால் இனி பொருள் தேடத் தேவையில்லை என்று விளக்கமும் சொன்னான்.

அவளால் மறுத்துப் பேச முடியவில்லை. அவன் பேசுவதன் நியாயத்தை அவள் நன்கு உணர்ந்திருந்தாள். மேலும், தான் இவ்வளவு காலமும் தனியே மாய்ந்தது போதும் என்றே அவளது மனமும், உடலும் அங்கலாய்த்துக் கொண்டன. தனிமையையும், கஷ்டங்களையும் தாங்கும் சக்தி இனியும் தனக்கு இல்லை என்று அவள் இப்பொதெல்லாம் எண்ணத் தொடங்கியிருந்தாள்.

குழந்தை காணாமல் போனபின்னர் அவளும்தான் ஆடிப் போயிருந்தாள். வீட்டு நுழைவாயில் வரை ஓடிய குழந்தை பிரதான வீதிக்குச் சென்றிருந்தால் என்ன நடந்திருக்கும் என்று எண்ணும்போதே அவள் கதிகலங்கிப் போனாள். உறவினர் யாருமின்றி, உதவிக்கு வரவும் ஆட்களின்றி, தன்னோடு அண்டியிருக்கும் சகோதர இனத்தவர்களுடன் இணைந்தே தான் வாழ்க்கையை எதிர்கொண்டதையும் அவள் நினைத்துப் பார்த்தாள். தனது தொழிலைப் பொறுத்தவரை தான் சௌகரியத்திற்காக பக்கத்திலிருக்கும் ‘உதவும் கரங்களை’த் தெரிவு செய்து கொண்டாலும் அத ஒரு பெரிய நிறுவனமாக வளர்ந்த பின்னர் அதன் நிர்வாகத்திலும், பொருளாதாரத்திலும் பெரும்பகுதி, பெரும்பான்மை இன சகோதரரர்களின் உதவியால் நடைபெறுவதையும், அவர்களிடமிருந்து திரட்டப்படும் நிதியிலிருந்தே தனக்கு ஊதியம் வழங்கப்படுவதையும் அவள் எண்ணிப் பார்த்தாள். இன, மத, குல வேறுபாடின்றி முதியவர்களையும், அனாதைகளையும் ஆதரிக்கும் அவ்வில்லத்திற்கு வைத்தியர்களாகவும். சுகாதார பரிசோதகர்களாகவும். முடி திருத்துபவர்களாகவும், தொழில் பயிற்றுவிப்பாளர்களாகவும், தனவந்தர்களாகவும் வந்து சேவை செய்கின்றவர்கள் சிங்கள இனத்தவர்களே. அங்கு வேலை செய்யும்போது பெரும்பாலும் எந்தக் கல்மிஷமும் இன்றி அவர்கள் பழகுவதை அவள் அனுபவித்து உணர்ந்திருக்கிறாள். அவர்களது உறவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கீகரித்துப் பலப்படும் அளவுக்குத் தனது உள்ளம் பரந்து விரிந்திருப்பதையும், அது தனக்கு பெரும் மனோபலத்தை வழங்குவதையும் எண்ணி அவள் மனம் பூரித்து அமைதியும் கொண்டாள்.

***

சொன்னதுபோலவே பத்து நாட்களுக்குள் பாரூக் வந்திருந்தான். நிறையப் பரிசுப் பொருட்களும் கையுமாக, வீட்டுக்குத் தேவையான பளிங்குக் கற்கள், பெயின்ட் உட்பட ஏனைய பொருட்களையும் எடுத்து வந்திருந்தான். எவ்வித அறிவித்தலும் கொடுக்காமலே அவன் எதிரில் வந்து நின்றது அவளுக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது.

சுவர் வேலைகள் முடிந்துவிட்டாலும் தரைவேலை பாக்கி இருந்தது. நல்லவேளை, அவன் வந்துவிட்டான் என்று ஆனந்தப் பெருமூச்சு விட்டாள் அவள். அவளது ஒவ்வொரு வேலைக்கும் சதாசிவமோ, குணசேனவோதான் ஓடியோடிச் செய்ய வேண்டும் என்ற நிலை இனி இல்லை. என்னதான் பணம் கொடுத்தாலும் அவர்களது நேரம், உழைப்பு, வாகன விரயம் என்பவை குறித்து அவளிடம் எப்போதும் கவலை இருந்தது.

கடந்த சில நாட்களாக மனைவிக்கு சுகவீனம் என்று அறிவித்து விட்டு குணசேன விடுமுறையில் நின்றிருந்தான். அவனுக்காக பேரீச்சம் பழ பெக்கட், டீசேர்ட், சென்ட் போத்தல், அவனது மனைவிக்கு ஒரு கைப்பை என்பவற்றை பொதிசெய்து எடுத்துக்கொண்டு பாரூக் காத்திருக்கப் பொறுமையின்றி வீட்டுக்குச் சென்றே கொடுத்துவிடுவது என்று எண்ணிக்கொண்டு அவளையும் அழைத்தபடி அவன் வீட்டுக்குச் சென்றான்.

மாலை மங்கி இருள் சூழ்ந்துவரும் ஒரு பொழுதில் இருவரும் வேனில் புறப்பட்டார்கள். கெகிறாவையிலிருந்து நாலைந்து கிலோ மீற்றர் தள்ளியிருக்கும் ஒரு சிறிய சிங்களக் கிராமத்தில் அவன் வாழ்ந்து வந்தான். அவர்கள் முன்வாசலை நெருங்கிச் செல்லும்போது நாய் குரைக்கத் தொடங்கவே, உள்ளேயிருந்து வந்த அவனது மனைவி வாயெல்லாம் பல்லாக "என்ட மாத்தியா. என்ட..." என்று அவனை வரவேற்றாள். அவளது குரல் கேட்டு அவன் உள்ளிருந்து வந்தான். நடையில் ஒரு தள்ளாட்டம். அவர்களைக் கண்டு அவன் முகமலர்ந்து கைகூப்பி குனிந்து வணங்கினான். அந்தக் குனிவில் ஒரு போதையும் தெரிந்தது. கூடவே மணமும் வீசியது.

குணசேனவின் தோற்றம் பயத்தை ஏற்படுத்திற்று. அவள் அப்படி ஒரு நிலையை எதிர்பார்த்திருக்கவில்லை. இரவில் நேரகாலத்துடன் சாப்பிட்டுவிட்டுத் தான் தூங்கிவிடுவதாக அவன் சொல்லியிருந்தது ஞாபகம் வந்தது. இப்படி குடிபோதையில் இரவைக் கழிப்பது பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குச் சிறிதும் தெரியாதே என்று அவள் ஆச்சரியப்பட்டாள். கடுமையாகப் போராடி உழைத்த பணத்தில் ஒவ்வாரு இரவும் இப்படிக் கழியுமானால் எவ்வளவு அநியாயம் என்று யோசிக்கத் தொடங்கிற்று அவளது உள்ளம். பகலெல்லாம் அவளுடன் மரியாதையாகப் பழகும் அவன் தான் சற்றும் எதிர்பாராத ஒரு கோலத்தில் நிற்பதைக் கண்டு அவள் திகைத்தாள். அவன் காலையில் கண்விழித்து எப்படி வேலைக்கு உற்சாகமாக வரமுடியும் என்றும் அவள் எண்ணினாள். அவளது கணவனும் சிறிது சங்கடப்பட்டாலும், பிறகு எந்தப் பிரச்சினையும் இன்றி அவனது மனைவியுடன் அவசரமாக முகமன் தெரிவித்துக் கொண்டிருந்தான். அப்பெண்ணோ தனது கணவனின் தற்போதைய நிலை கண்டு வெட்கத்துடன் கூனிக்குறுகி நின்று ஒரு புன்னகையை வீசி சமாளித்துக் கொண்டிருந்தாள்.

அடுத்த கணம். பாரூக் மனைவியை கடைக்கண்ணால் பார்த்தான். அவள் புரிந்துகொண்டாள். பரிசுப் பொருட்களைக் கொடுத்துவிட்டு உடனே இருவரும் அங்கிருந்து விடைபெற்றனர்.

அவ்வீட்டின் பின்புறத்திலுள்ள நிஸ்ஸங்கவின் குடிசைக்கு இருவரும் சென்றனர். நாய் குரைப்பதையும், வாசலில் வேன் நிற்பதையும் கண்டு அவர்களது வருகையை ஊகித்து அறிந்துகொண்ட நிஸ்ஸங்கவின் மனைவி வாசலில் நின்று அவர்களை வரவேற்றாள். குட்டைக் கவுனின் மீது சாயம் வெளுத்த துணி ஒன்றைக் கட்டிக் கொண்டிருந்தாள். அவளது கசங்கிய புன்னகை ஸைபுன்னிஸாவின் உள்ளத்தைத் தைத்தது.

காலொடிந்து கிடக்கும் நிஸ்ஸங்கவைக் கண்ட பாரூக் பெரிதும் அதிர்ச்சியுற்றான்.

## அத்தியாயம்–09

"ஒங்களுக்கு ஒரு செய்தி சொல்லவா? முன்னூட்டுக்காரிக்கி பைத்தியம் புடிச்சிருச்சாமே...தெரியுமா? அவ தலமுடிய எல்லாம் வெட்டிகிட்டு கோலம் போட்டுகிட்டு திரியிறாவாமே...அவட புருஷன்காரன் குடிச்சிட்டு வந்து அவளப் போட்டு மொத அடிப்பான் இல்லியா? அவன் இப்ப கப்சிப்னு இரிக்கானாம்..." பாரூக்கை நலம் விசாரிக்கும் சாக்கில் வந்து சமையலறைக்குள் நுழைந்த ஹனீமா இடையில் சொன்ன கதைதான் இது.

இவ்வளவு காலமும் கணவனிடம் அடிவாங்கித் துன்புற்ற ஒரு பெண் இனி தன்னால் நிம்மதியாக வாழ்வதற்கென்று இப்படியொரு வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாளோ என்று ஸைபுன்னிஸா நினைத்துக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண் நாளாந்தம் எத்தனையோ பேய்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. தன்னைச் சூழவுள்ள பேய்களைக் கண்டு பயந்து போனவர்கள் சிலர். பேய்களுடனே வாழ்ந்து தானும் பேயாகவே ஆகிப்போனவர்கள் பலர். அப்படியொரு புதிய வேஷமாக இதை அவள் ஏற்றுக்கொண்டாளோ என்னவோ என்று அவளுக்குத் தோன்றிற்று.

"இப்ப அவ எப்புடி இரிக்கா? போய் சுகம் விசாரிச்சிட்டு வருவமா...?" உண்மையான அக்கறையுடனே ஸைபுன்னிஸா கேட்டாள்.

"ஐயையோ வேணாம்...நா வரமாட்டேன்..." என்று அவள் நொடித்த நொடி பாரூக்குக்கூட சிரிப்பை ஊட்டியது.

"ஏன் பயமா?" அவன் சிரித்துக்கொண்டே கேட்டான்.

அவன் மாலை நேரத் தேநீருக்காகக் காத்திருந்த வேளையிலேயே அவள் அங்கு வந்திருந்தாள். தேநீரை இரண்டு பெரிய பாத்திரங்களில் கலந்து சற்று உயர்த்தி ஊற்றிக்கொண்டிருந்த ஸைபுன்னிஸாவும் சிரித்து விட்டாள். அப்படி எந்த வித்தியாசமும் அந்தப் பெண்ணைப் பார்த்தால் அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. இது பொய்க்கதையாக இருக்கலாம் என்றும் பட்டது.

"சிரிக்காதீங்க.. உண்மையத்தான் சொல்றேன்... ஏன் உங்களுக்கு ஒண்ணுமே தெரியாதா? ஒங்கட ட்ரைவர் சதா அண்ணன்தான் அவங்கள கூட்டிக்கொண்டு கட்டாடிக்கிட்ட திரியிறாராமே...." என்று மீண்டுமொரு புதுக்கதை சொன்னாள் ஹனீமா.

இருவருமே அவளை நிமிர்ந்து பார்த்தார்கள். தேநீர்க் கோப்பை களில் ஒன்றை அவளுக்கு நீட்டியபடியே ஸைபுன்னிஸா "என்னது...?" என்று வியப்புடன் கேட்டாள்.

"சதா அண்ணன்ட ஊர்ல ஒரு அண்ணாவி இருக்கிறாராம். அவருகிட்ட கூட்டிகிட்டு போய் கேப்போம்ன்ட்டு சொல்லி சதா அண்ணன் கூட்டிகிட்டு போயிருக்காராம்.." என்று அவள் சொன்னது பொய்யில்லை என்ற ஸைபுன்னிஸாவுக்குத் தெரிந்தது. நிஸ்ஸங்க விழுந்தபோதுகூட, "அவனது ஒடிந்த காலை நிமிர்த்தி நடக்க வைக்கக்கூடிய அளவிற்கு சக்தி நிறைந்த வைத்தியர் ஒருவர் எங்கள் ஊரில் இருக்கிறார். போவோம். வாருங்கள்..." என்று அவன் தன்னை ஓரிருமுறை அழைத்ததை அவள் ஞாபகப்படுத்திப் பார்த்தபோது அதற்கு மறுப்பு தெரிவிக்க அவளால் முடியவில்லை.

***

மே தினம். தொழிலாளர் உரிமைகளை வென்றெடுத்த நாள். நாளெல்லாம் வேலை செய்த அடிமைத் தொழிலாளிகள் ஒன்றுகூடிப் போராடி, ஒரு நாளைக்கு எட்டு மணிநேர வேலை என்ற உரிமையை வென்றெடுத்த தினம். பல வர்ணக் கொடிகள் வீதிகளில் தொங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

281567

கொண்டிருந்தன.

யுத்தம் முடிவடைந்துவிட்ட இந்த சில வருடங்களில் இம்முறை யாழ்ப்பாணத்திலும் பிரபல அரசியல் கட்சிகள் ஊர்வலம் நடத்துவதை தொலைக்காட்சி ஒளிபரப்பிக் கொண்டிருந்தது.

ஸைபுன்னிஸாவின் உள்ளம் வாடி வதங்கிப்போய் இருந்தது. தொழிலாளர்களுக்காக உலகமே கூடி விழா எடுக்கின்ற இந்நன்னாளில் ஒரே ஒரு தொழிலாளி மட்டும் காலொடிந்து நொடித்துப் போய் அமர்ந் திருப்பதை மனக்கண்ணில் நிறுத்திப் பார்த்தாள் அவள். தனக்காக வேலை செய்ய வந்தவன், தனக்காக வேலை செய்து கொண்டிருக்கும் போது விழுந்து காலை உடைத்துக் கொண்டவன் என்று எண்ணும் போது தன்னாலேயே அவனது வாழ்க்கை முடங்கிப் போயிற்றோ என்ற வருத்தம் தோய்ந்த கேள்வி அவள் முன்னால் எழுந்தது.

தனது வீட்டு வேலைகள் தற்போது பூரணமாக முடிந்துவிட்ட போதிலும், சிற்சில வேலைகளே பாக்கியிருந்தபோதும் அவ்வுறவைக் கத்தரித்துவிட அவள் நினைத்திருக்கவில்லை. தனது 'உதவும் கரங்கள்' நிறுவனத்திற்கூடாக ஒரு சக்கர நாற்காலியைப் பெற்று அவனுக்குக் கொடுத்திருந்த போதிலும், அதனோடு ஒடிந்து போன அவனது வாழ்க்கை அவள் கண்முன்னால் முள்ளாக சிக்கிக் கொண்டிருந்தது. வாயே பேசாத ஒரு ஜீவன். தனக்கு ஏற்பட்ட விபத்து குறித்து இதுவரை எந்த முறைப்பாடும் கூறாத ஒரு ஜீவன். அவனுக்காக தான் எதாவது செய்தாக வேண்டும் என்று தோன்றிற்று அவளுக்கு.

இரவு உணவின் பின்னர் தொலைக்காட்சி முன்னால் அமர்ந்து ஆங்கிலச் செய்தியறிக்கையை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த பாரூக்கின் அருகிலே போய் மிக நெருக்கமாகக் கதிரையை இழுத்துப் போட்டு அமர்ந்துகொண்டாள் ஸைபுன்னிஸா. கைகளை நீட்டி அவனது தலையை வருடியபடி அவனது தலையைத் தன்பக்கம் திருப்பினாள்.

ஏதோ பெரியதொரு பீடிகையுடன் அவள் வந்திருக்கிறாள் என்பதை ஊகித்தறிந்து கொண்டு, அவன் தொலைக்காட்சியிலிருந்து கண்களைத் திருப்பாமலே "என்ன?" என்றான்.

"நிஸ்ஸங்கவைப் பத்தி என்ன நெனக்கிறீங்க..."

அவன் கண்களைத் திருப்பாமலேயே "பாவம். இப்புடி நடந்திருக்கக் கூடாது..." என்றான்.

கணநேர மௌனத்திற்குப் பிறகு அவள் சொன்னாள். "அது எங்களால நடந்த மாதிரி எனக்குப் படுது.."

"உண்மதான். அவனுக்கு ட்ரீட்மென்ட் செலவு ஏதோ குடுத்ததா சொன்னியே..."

"குடுத்தேன்..." என்று இழுத்தாள் அவள். மீண்டும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவெளிக்குப் பின்னர், “அவன் வாழ்றதுக்கு நாங்க ஏதாவது ஒதவி செய்யத்தானே வேணும்...” என்றாள்.

அவன் திரும்பி அவள் முகத்தைப் பார்த்தான். அவனுள்ளும் அந்த சிந்தனை ஓடிக்கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டவளாக, அவள் தொலைக்காட்சியின் தொனியைக் குறைத்துவிட்டுச் சொன்னாள்.

“பின்னுக்கு ஒரு காலத்துல இது ஒரு பெரிய குறையா மாறக் கூடிய நெலமையும் வருமே... வந்தா என்ன செய்றது? அவனுக்கு நிரந்தர வருமானம் ஏதாவது வாற மாதிரி நாங்க வழி செய்யணும். அவன் பெத்த புள்ளகள் ரோட்டுல நிக்கக் கூடாது. அப்புடி எதும் நடந்தா அந்தப் பாவம் எங்களுக்குத்தான்..”

“அவன் இப்ப என்ன செய்யிறான்..?” பாரூக் வினவினான்.

“ஒண்ணுமேயில்ல.. பாஸ்ஊன்னதான் பாத்து ஏதோ குடுத்துட்டு வாறாரு. அவருக்கும் இப்ப நல்லா வயசு போயிருச்சே... ஒருத்தர்ட சம்பளத்துல எத்தன பேரு வாழுறது..?”

“நிஸ்ஸங்க ஒனக்கிட்ட எதாவது கேட்டானா...?” அவன் யோசனையுடன் கேட்டான்.

“இல்ல..இல்ல...அவங்க யாருமே வாய் தொறக்கல்ல... எங்கட ஜனமா இருந்தா இன்டைக்கு நெலமை எப்புடியிருக்கும்? நெனச்சிப் பாருங்களே... பிச்சித் தின்னப் பாக்கும்....”

“நாங்க ஏதாவுது செஞ்சாலும் அத யோசிச்சிப் பாத்துதான் செய்யணும்... சும்மா குடுத்துகிட்டே இருக்கவும் முடியாது...அவன் சோம்பேறியாப் போவான். இல்லாட்டி குடிச்சி முடிச்சிருவான்...உதவி எடுக்கத் தகுதியானவனுக்குத்தான் உதவி தேவைப்படும். அது சுரண்டலாவும் மாறக்கூடாது...மத்தது, அவங்கட ஜனம் இத தவறா எடுத்துக் கொள்ளாமயும் இருக்கணும்..” அவன் நிறுத்தி நிறுத்திக் கூறி முடித்தான்.

அவன் கூறுவது சரி என்று அவளுக்கும் பட்டது. “அப்ப என்ன செய்யிறது..?” என்றாள்.

“பாப்போம்...அரசாங்கத்துல இதுக்கு ஏதாவது ஏற்பாடு இருக்கான்டு கேப்போம். அவங்களோட சேந்து செஞ்சா எங்களுக்கும் நல்லது... நா சமுர்த்தியில விசாரிக்கிறேன்..” என்று முடித்தான்.

***

நாடு முழுவதும் யுத்தத்திலிருந்து மீண்ட வெற்றியை நினைவு கூர்ந்து கொண்டாடிக் கொண்டிருந்தது. இராணுவ வீரர்கள் கௌரவிக்கப் பட்டார்கள். இறந்த வீரர்களின் நினைவாக கட்டப்பட்ட சின்னங்கள் திறந்து வைக்கப்பட்டன.

ஒரு நாட்டின் எல்லைக்குள் நிகழ்ந்த இந்த யுத்தம் தமது சொந்தச் சகோதர இனத்தின்மீது கொண்ட வெற்றியாகக் கருதப்படுவது எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சிலர் கேள்வி எழுப்பினர்.

வட பகுதி மக்களோ முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளைக் கவலை யுடன் நினைவு கூர்ந்தனர். யுத்தத்தின் பின்னர் ஏற்பட்டது சமாதானம் என்ற பிரமையே என்று மக்கள் உணர்வதாகத் தெரிந்தது. துக்கதினம் கொண்டாடப்படுவதற்கான ஏற்பாடுகள் அங்கு மேற்கொள்ளப்பட்டன. அநியாயமாக உயிரிழந்தவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், இன்னும் சிறையில் வாடுபவர்கள் என்ற பல சொந்தங்களை அங்கு வாழும் மக்கள் கண்ணீருடன் நினைவு கூர்ந்தனர்.

அரசியல்வாதிகளோ சூயிங்கம் மெல்லுவதுபோல சின்னப் பிரச்சினைகளைப் பூதாகரமாக்கி அவற்றை ஊடகங்களுக்கு வழங்கிக்கொண்டிருந்தனர். ஊடகங்களும் அவர்களது விவஸ்தையற்ற பேச்சுகளை போட்டி போட்டுக்கொண்டு ஒளிபரப்பிக் கொண்டிருந்தன.

சதாசிவத்தின் தம்பியின் மகன் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தான். அந்த மாணவர்கள் அனைவரும் முள்ளிவாய்க்காலில் ஒன்றுகூடி நினைவுக்கொடி நட்டு அந்நிகழ்வுகளை நினைவு கூர்ந்தனர்.

தொலைக்காட்சியில் இக்காட்சியைக் கண்ணுற்ற சதாசிவம் கிடுகலங்கிப் போனான். இங்கிருந்து போன பிள்ளைகள் இம்மாதிரியான நிகழ்ச்சியொன்றில் கலந்து கொள்வதால் ஏற்படும் விபரீதங்களை அவன் அறிவான். ஆயினும், அவனால் எதையுமே செய்ய முடியவில்லை. உடனேயே தொலைபேசியைச் சுழற்றி கண்ணாவிடம் பேசினான். "நா ஒண்ணும் பெருசா செஞ்சிடலை பெரியப்பா.." என்ற கூறி அவன் முடித்துக் கொண்டான்.

இதுபற்றி யாராவது கேட்டுவிடுவார்களோ என்று உள்ளுக் குள்ளேயே பயந்து கொண்டிருந்தவனது வயிற்றில் புளியைக் கரைப்பது போல மறுநாளே ஸைபுன்னிஸா அவனிடம் விசாரித்தாள். அவனை அவளுக்கு நன்றாகத் தெரியும். "டீவியில பாத்தனே.." என்று அவள் விசாரித்தபோது அவன் கதிகலங்கிப் போனான்.

"பாருங்கம்மா... சொன்னாக் கேக்குறான் இல்ல...நானும் நேத்து பாத்துட்டு நல்லா ஏசிப்போட்டேன்.." என்றான் தயக்கத்துடன். அப்போது உள்ளே வந்த பாரூக் ஒரு புன்னகையுடன் சொன்னான்.. "அதெல்லாம் ஒண்ணும் இப்ப செய்யேலாது மாமா...எல்லாரும் சேந்து வாழுற இடத்துல சேந்துதான் போகணும்...நாங்க எப்புடியும் தனிச்சிப்போக விரும்ப மாட்டமே.."

"அதில்ல தம்பி...இப்புடி டீவியில வந்து பேசிட்டுப் போனா தூக்கிருவானுகளே.."

"அதெல்லாம் பழைய காலம் மாமா.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸைபுன்னிஸா குறுக்கிட்டுக் கூறினாள். “இப்ப சின்னப் புள்ளகூட சுதந்திரமாத்தான் யோசிக்குது... பெரியவங்கட தவற எடுத்துச் சொல்லுது...”

அவர்களது ஆறுதல்மொழி அவனுக்கு நிம்மதியளித்தது. “அதில்லம்மா.. படிப்பு கெட்டுப் போகுமே..”

“இப்ப ஹ்யூமன் ரைட்ஸும் முக்கியம்தான்...புள்ளகள் நெனச் சால் கெம்பஸ மூடலாம்.. தொறக்கலாம்...கிட்டத்துல தென் கிழக்குலயும் ஒரு பிரகடனம் செஞ்சாங்களே...”

“இன்டைக்கி மக்கள் எதிர்பார்த்து நிக்குற நீதி எல்லாருக்கும் கிடைக்கத்தானே வேணும்...தவறு செய்றவன் தண்டனை அனுபவிக்க வும் வேணும்..அதுக்கு சட்டம் இருக்கவும் வேணும்.”

சதாசிவம் வாய்மூடி மௌனமாக நின்றிருந்தான், அவர்களது பேச்சை நம்ப முடியாதவனாக.

“ஒருத்தர் இதப்பத்தி பேசாம இருந்தா அவர் மனசுக்குள்ள இத யோசிக்கிறார்னுதானே அர்த்தம்..? பேசாம இருந்துட்டா அது அநீதிக்கு சப்போர்ட்டா ஆகிடுமா..? பேசினா அது நீதிக்கு எதிர்ப்பா ஆகுமா? எல்லாத்துக்கும் உள்ள ஒரு ரீசன் இருக்கு..” பாரூக் அழுத்தமாகச் சொன்னான்.

அந்த வாத்தைகளால் தெளிந்த சதாசிவம் அவர்களிடமிருந்து விடை பெற்றான்.

***

மறுநாள் காலை பாரூக்கும் ஸைபுன்னிஸாவும் கெகிறாவ பிரதேச செயலகத்திற்குச் சென்றனர். பிரதேச செயலாளர் ஏற்கனவே பாரூக்குக்கு அறிமுகமானவர் என்பது அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

பாரூக் தான் வந்த காரியத்தின் விபரம் பற்றிக் கூறினான். அவர் புன்னகைத்தார்.

“அவர் உண்மையாவே காலொடிந்து கிடக்கிறார்; வேலை செய்யும்போதுதான் விழுந்தார் என்று வைத்திய அறிக்கை சொல்லு மானால், அவர் சமுர்த்தி அலுவலகத்தில் தன்னைப் பதிவு செய்தும் கொண்டிருந்தால், அவருக்கு சில உதவிகள் செய்யலாம். காப்புறுதி செய்திருந்தால் மிகவும் நல்லது. அப்படி இல்லாவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது. அதுவும் இல்லாவிடில், அவர் ஏதாவது ஒரு தொகையை முதலீடு செய்திருந்தால், அதாவது சேமிப்புக் கணக்கில் போட்டிருந்தால், அதற்கு கணிசமான அளவு வட்டி கொடுப்போம். அல்லது அவர் விரும்பினால் அந்த சேமிப்பின் பெரும் பகுதியை அவருக்குத் திருப்பிக் கொடுக்கவும் முடியும். இப்படி ஒன்றுமே செய்திருக்காவிட்டாலும்கூட சமூக சேவைகள் பிரிவு மூலம் உதவிகள் செய்வோம்...”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி எதுவுமே இதுவரை நிஸ்ஸங்க செய்துகொள்ளவில்லை என்றும், வெறும் பதிவு மட்டுமே உள்ளதென்றும் ஸைபுன்னிஸா கூறினாள்.

"ஆனாலும்கூட அவர் மனைவி எங்களுக்கு விண்ணப்பித்து உதவி பெறலாம்...." அவர் திட்டங்களை விபரித்தார்.

பாரூக் சிறிது யோசனையின் பின்னர் சொன்னான்.

அவர் அப்படி எந்த சேமிப்புமே இதுவரைக்கும் வைத்துக் கொண்டதில்லை. வேலை செய்யும்போது விபத்துக்குள்ளான ஒரு தொழிலாளி... அவருடைய முதலாளி நான் என்ற உரிமையில் நான் ஏதாவது சேமிப்பைத் தொடங்கலாமா? அதைப்பற்றி உங்களது நடைமுறைகள் என்ன சொல்லுதுன்டு நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.." நீண்ட நாட்களுக்குப் பிறகு சிங்களம் பேசுவதில் அவனுக்கு சிறிது இடறல் இருந்தது.

செயலாளர் சிறிது யோசித்தார்.

"இதற்கு முன்னர் நீங்கள் சொல்வதுபோல எந்த ஒரு திட்டமும் இருக்கவில்லை. அரசாங்கமே இதை முழுக்க முழுக்க பொறுப்பேற்று செய்கிறது. நீங்கள் முதன்முதலாக ஒரு திட்டத்தோடு வந்திருக்கிறீர்கள். நிரம்ப சந்தோஷம். இதை கிராமசேவகரும் நிரூபிச்சி ஒரு கடிதம் தந்தால் இதுபற்றி நான் எங்கள் உதவி ஆணையாளரோடு பேசிப் பார்க்கலாம்..." நீளமாகப் புன்னகைத்து சொல்லி முடித்தார்.

"இது சம்பந்தமாக நீங்கள் யோசித்துப் பார்த்து உங்கள் சார்பாகவே ஒரு மனு கொடுத்தால் நன்றாயிருக்கும். நான் உங்களுக்கு எழுதுற கடிதத்தையும் எட்டாச் பண்ணி அனுப்புங்கள்.." பாரூக் சொன்னான்.

பேச்சின் இடையில் சமுர்த்தி வங்கி முகாமையாளருக்கும், சமூக சேவைகள் பிரிவு அதிகாரிக்கும் அவனை அறிமுகப்படுத்தினார்.

"முதலாளி முதலாளியாவே பொறக்குறதில்லை. நான்கூட வெளி நாட்டில் தொழிலாளியா இருந்தவன்தான். அந்தப் பாலைவனத்தில் வேலை செய்யும்போது எங்களுக்காகப் பேசுவதற்கு யாருமே இருக்க மாட்டார்களா என்று நாங்கள் ஏங்கியிருக்கிறோம். படிப்படியாக முன்னேறி நல்ல நிலைமைக்கு வந்துவிட்டாலும் பழைய நிலையை மறக்க முடியாது.." என்று அவன் சொன்னதை வங்கி முகாமையாளர் ஏற்றுக் கொண்டார்.

"தொழிலாளி முதலாளிய வெறுக்கக்கூடிய பல இடங்கள் இருக்கு. என்றாலும், சட்டங்கள் எப்பவுமே தொழிலாளிக்கு சார்பாத் தான் இருக்கு... ரெண்டு பகுதிக்குமே உரிமைகளும் கடமைகளும் இருக்கு. ரெண்டு பேரும் சேர்ந்து இயங்கினால் பெரிய முன்னேற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று காணலாம்...” என்று சமூக சேவைகள் பிரிவு அதிகாரி கூறினார்.

“முதலாளி ஒருவர் காலொடிஞ்சி கிடக்கும்போதும், தொழிலாளி ஒருவர் காலொடிஞ்சி கிடக்கும்போதும் வருத்தம் ஒன்று தான். ஆனால், அவருக்குள் முதலாளி என்ற நினைப்பு ஓடிக் கொண்டிருப்பதால் அவர் தனனைப் பெரிதாக எண்ணிக் கொள்கிறார். மற்றபடி, தொழிலாளியைவிட அனுதாபத்திற்குரியவர் முதலாளிதான்..” என்றார் வங்கி முகாமையாளர் பதிலாக.

## அத்தியாயம்-10

பாரூக்கின் ஆலோசனை பற்றித் தனக்குத் தெரிந்த பல வழக்கறிஞர்களுடனும், அனுராதபுரத்திலுள்ள மனித உரிமைகள் ஆணையகத்தின் பிரதிநிதிகளுடனும் கலந்தாலோசித்து தனது புதிய மனுவை மேலிடத்திற்கு அனுப்புவதற்கான காரியங்களை பிரதேச செயலாளர் மேற்கொண்டிருந்தார்.

அதை மட்டும் எதிர்பாராத ஸைபுன்னிஸா நிஸ்ஸங்கவின் மனைவியைக் கூட்டிக் கொண்டு பலமுறை சமுர்த்தி வங்கிப் படிகளில் ஏறி, சுயதொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கான கடனுதவியைப் பெற்றுக் கொடுத்தாள். ‘உதவும் கரங்களு’க்கூடாகவும் ஒரு சிறிய உதவித் தொகைளைப் பெற்றுக் கொண்டாள். பாரூக் தனது வெளிநாட்டு எஜமானனுக்கு எழுதி ஒருதொகைப் பணத்தை நன்கொடையாகப் பெற்றுக் கொடுத்தான்.

நிஸ்ஸங்க விபத்துக்குள்ளாகி இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. அவனது மனைவியின் உதவியுடன், கிடைத்த முழுத்தொகையையும் கொண்டு கிராமிய கைத்தொழிற் பொருட்களும், மரச் சிற்ப வேலைகளும் செய்யத் தொடங்கியிருந்தான் நிஸ்ஸங்க.

கண்கவர் ஓலைத் தோரணங்கள், தென்னோலை விரிப்புகள், அகப்பை, கத்தி, கரண்டி முதலியன கொழுவும் தாங்கிகள், கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் யானைகள், மான்கள், அழகிய பாதணிகள் என்று பலவிதமான பொருட்களையும் உற்பத்தி செய்து வீட்டு முன்னால் சிறிய மேசைகளில் பரப்பி விற்பனை செய்கிறான். அவனது மனைவி, குழந்தைகள், தகப்பனார் எல்லோரும் அவனுக்கு உதவுகிறார்கள். தேவை யான சில மூலப்பொருட்களை குணசேன கொண்டுவந்து கொடுக் கிறான். சிலவேளைகளில் சதாசிவத்துடன் வேனில் சென்று அவற்றைத் தேடிப் பெற்றுக் கொள்கிறான்.

நிஸ்ஸங்கவின் தயாரிப்புகள் மாவட்ட- மாகாண உற்பத்திப் பொருட்களுக்கான போட்டிகளில் பரிசுகளும், சான்றிதழ்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொள்கின்றன. அவன் வீட்டின் முன்புற வீதியில்கூட அவனது புகைப்படத்துடன் ஒரு விளம்பரப் பலகை நிற்கிறது. தான் அங்கவீன மாக இருக்கிறதான எந்த உணர்வும் அவனிடம் இப்போது இல்லை.

அவனது அலங்காரப்பொருட்களை வாங்குவதற்காக அனுராதபுரம் நோக்கிச் செல்கின்ற உல்லாசப் பிரயாணிகள் வாகனங்களை நிறுத்தி விட்டு வந்திறங்கி கூடி நிற்கிறார்கள். கூடுதலான பணம் கொடுத்து நினைவுச் சின்னங்களை வாங்கிச் செல்கிறார்கள். ஸைபுன்னிஸாவும் குழந்தையைக் கூட்டிக்கொண்டு அவ்வப்போது அங்கே செல்கிறாள்.

***

காலை இளவெயில் இன்னும் சுடத் தொடங்கவில்லை. ஸைபுன்னிஸா வீட்டு முற்றத்தைக் கூட்டிக்கொண்டு நின்றிருந்தாள். “நோனா..” என்று அன்பொழுக அழைத்தபடி குணசேன எதிரில் வந்து நின்றான். மாலை ஆறு மணிவரை வேலைசெய்தாலும் அதே ஆடையை ஒரு இரவிற்குள் எப்படி இவ்வளவு அழகாகத் துவைத்து காயப்போட்டு அணிந்து வருகிறான் என்று அவள் எப்பொழுதும் வியப்பதுண்டு. அப்பொழுதும் அதே தூய்மையோடு அவளெதிரில் வந்து நின்றான்.

“நோனா...நீங்கள் செய்த உதவியால் நிஸ்ஸங்க இப்போது தலைநிமிர்ந்து வாழ்கிறான்....”சிரித்துக்கொண்டே கூறினான்.

“அப்படி ஏதுமில்லை பாஸ்'ன்ன. இது உதவியில்லை. கடமை. ஒரு முதலாளி தொழிலாளிக்குச் செய்யவேண்டிய கடமை..” அவளும் சிரித்துக்கொண்டே கூறினாள். பின்னும் தொடர்ந்தாள்.

“முதலாளியும், தொழிலாளியும் இருவேறு உலகங்களில்லை. ஒரே உலகம்தான். தொழிலாளிக்கு முதலாளிமீது உரிமை உண்டு. அதைக் கடமையாக எண்ணிச் செய்ய பல முதலாளிமார் தவறிவிடுகிறார்கள். இதனால்தான் நிறைய பிரச்சினை வருகிறது. போராட்டம் வருகிறது... ஆனால், முதலாளி இல்லாம தொழிலாளியோ, தொழிலாளி இல்லாம முதலாளியோ இல்லை. ரெண்டு பேருமே பிரிக்க முடியாதவர்கள்....”

அவள் பேசிக்கொண்டிருக்கும்போது இடையில் தபால்காரன் வந்தான். குணசேன ஓடிச்சென்று அதனைப் பெற்று வந்து அவள் கைகளில் பணிவாக அக்கடிதத்தைக் கொடுத்துவிட்டு பவ்வியமாக ஒதுங்கி நின்றான்.

அதைப் படித்த ஸைபுன்னிஸா மலர்ச்சியுடன் சிரித்தாள். தாம் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அதைப் புதிய சட்டமூலமாக பாராளுமன்றத்தில் கொண்டுவரப் போவதாக சமூக சேவைகள் அமைச்சரால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு எழுதப்பட்ட கடிதத்தின் ஒரு பிரதி அதில் இருந்தது. பிரதம செயலாளர் பாரூக்குக்கு அப்பிரதியை அனுப்பி வைத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளிரண்டையும் மார்புக்குக் குறுக்காகக் கட்டி பணிந்து நின்றிருந்த குணசேன அப்போதுதான் ஞாபகம் வந்தவனாக விடை பெற்றான். செல்லும் வழியில் குழந்தையைப் பார்த்துப்போக வந்ததாகவும், புதிய வேலை ஒன்று நகரத்தில் தொடங்கவிருப்பதாகவும் கூறினான்.

வெளிநாட்டிலிருந்து பாரூக்கின் சகோதரி அனுப்பியுள்ள ஒரு தொகைப் பணத்தை இதுகாலவரை பாதுகாத்து வருகின்ற தன் கணவன் இனிமேல் அதைக்கொண்டு ஏதோ பிரயோசனமான ஒரு காரியத்தை தொடங்கவிருக்கிறான் என்ற மகிழ்வுடன் அவள் கடிதத்தை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

பாரூக் நகரத்திற்குச் சென்றிருந்தான். ஹசன் முன்பள்ளிக்கு சென்றுவிட்டான். வாசலில் யாரோ வந்து நிற்பது தெரிந்தது. ஹனீமா வின் கணவர்!

டவுனில் பாரூக் ஏதோ கறி வாங்கிக் கொடுத்தாகக் கூறி ஒரு பையை நீட்டினார். அவரது பார்வையில் எதோ வித்தியாசம் படர்ந்திருப்பதை அவதானித்தும் அதைப்பற்றி யோசிக்காமல், “என்ன நானா...?” என்று விசாரித்தபடி கையை நீட்டினாள் ஸைபுன்னிஸா.

“தொறந்துதான் பாருங்களே...” என்று விஷமமாகக் கூறி, ஒரு அடி முன்னால் வைத்து, எட்டி அவளது கையைப் பற்றினார் ஹனீமாவின் புருஷன்.

***

ஸைபுன்னிஸா தாங்கவொண்ணாத வேதனையில் தவித்துக் கொண்டிருந்தாள். ஹனீமாவின் அன்புக்கும், பெருமைக்கும் பாத்திர மான கணவர் தாஜுதீன் நகரத்தில் பிரபலமான ஒரு வியாபாரி; முதலாளி. எல்லாவற்றுக்கும் மேலாக கல்யாண வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு இளைஞனின் தந்தை.

அவரது கண்களில் தெரிந்த அருவருக்கத்தக்க வித்தியாசம் வரையறையற்ற காமம்தான் என்பதை உணர்ந்துகொள்ளாமலே அவரருகில் போய் தான் நின்ற மக்குத்தனத்தை அவள் மிகவும் நொந்து கொண்டாள். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ என்ற அஞ்சி நடுங்கிக் கொண்டிருப்பதா ஒரு பெண்ணின் வாழ்வு என்று அவளது உள்ளம் வினா எழுப்பிக் கொண்டேயிருந்தது.

எத்தனையோ அந்நிய ஆடவர்களுடன் சகஜமாகப் பழகிய போதும் அவர்களது நடத்தைகள், பார்வைகளில் தெரியாத ஒரு கௌரவக் குறைவு தன் அயலானிடம் காணப்பட்டதற்குக் காரணம் தன்னைப் பற்றி அவர் கொண்ட கீழான எண்ணமா, அல்லது அது தற்செயலாக நடந்ததா என்று பெரிதும் யோசித்துக் குழம்பினாள் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தபோதும், சற்று முன்னர் எதிர்பாராமல் நடந்த அந்தச் சம்பவம்-அதன் தாக்கம்- அவளது முகத்தில் தெரிந்தது. தன் கையைப் பற்றி இறுக்கிப் பிடித்து, மறுகையால் தனது கன்னத்தில் தட்டி அவர் பல்லிளித்ததையும், தான் செய்வதறியாது திகைத்து நின்றதையும், சில வினாடிகளின் பின்பு ஹசன் பள்ளிக் கூடத்திலிருந்த வரவே, அவர் சட்டென திரும்பிச் சென்றதையும் அவள் மீண்டும் மீண்டும் நினைத்து மருகினாள். இதை யாரிடம் சொல்வது? சொன்னால் தனக்கே அசிங்கமாக இருக்குமே என்று அவள் உள்ளம் கலங்கியது. வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளில் எல்லாம் மிகச் சிக்கலானது மனித உறவுகளில் ஏற்படும் இடறல்களே என்று அவள் எண்ணிக்கொண்டாள். இதை வெளியில் சொன்னால் பல பிரச்சினைகள் ஏற்படும் என்ற அவள் உள்ளம் எச்சரித்தது.

அன்று அடிக்கடி அவளுள்ளம் குழப்பத்தில் ஆழ்ந்தது. எதிலுமே மனது ஒட்டாமல் தவித்து அலை பாய்ந்தது. தான் இவ்வளவு கேவல மாகக் கருதப்பட்டுவிட்டோமா அல்லது தன்னை இவ்வளவு கீழ்த்தர மாக எண்ணுமளவிற்கு அவன் கேவலமானவனா என்று அவளுள்ளம் குழம்பிக் கொதித்துக் கொண்டிருந்தது. வெறுமனே டீவியை ஓட விட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதில் லயித்திருப்பதுபோல அவளது உள்ளம் வேறு எதையெதையோ எல்லாம் சிந்தித்துக் கொண்டிருந்தது.

தொலைக்காட்சியில் மிகக் குறைந்தளவு ஆடைகளுடன் வந்து அமர்ந்திருந்த நான்கு பெண்கள் வட்டமாக ஒரு மேஜை முன்னால் அமர்ந்து பெண் விடுதலைபற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

பெண்ணுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளில் எல்லாம் தலையாயது அவளது பாதுகாப்பு பற்றிய பிரச்சினையே. அதனால்தான் அவள் பிறந்த நாள்முதலே பெற்றோர் அவளை எண்ணி எண்ணி பயப்படுகின்றனர். அவளைச் சுற்றிச் சுற்றி வருகின்றனர். வயது வருவ தற்கு முன்பே தமது குழந்தைகளை விவாக பந்தத்துக்குள் இணைத்துப் போட்டனர் ஆரம்பகாலப் பெற்றோர். ஆனால், இப்போது உள்ள பெற்றோர் வயது வந்தவுடன் அவளுக்கு முடிச்சுப் போட்டு கணவனுடன் கட்டி விடுகின்றனர். ஆனாலும், பெண்ணுக்கு உரிய பாதுகாப்பு கிடைத்து விட்டதா என்ன?

அதன் பிறகு ஏராளமான பிரச்சினைகள்; கணவன், குழந்தை, அவனது குடும்பம் என்று பெண் சுற்றிச் சுழல வேண்டியிருக்கிறது. எந்நேரமும் ஓடியோடித் திரியும் அவளுக்கு உண்மையான ஓய்வையும், அதனுடன் இணைந்த விடுதலையையும் யார் தருவது? விடுதலை, விடுதலை என்று இந்தப் பெண்கள் கூப்பாடு போடுவதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு பொய்? யாருக்கும் எதைவிட்டும் விடுதலை கிடையாது.

இப்போது இந்தப் பெண்கள்கூட அதை நிரூபித்த வண்ணமே அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆடைக்குறைப்பு என்றொரு வலையைத் தம்மை மூடிப் போட்டுக்கொண்டு தாம் முன்பு இருந்ததை விட பெரிய சிறையில் போய் தெரிந்துகொண்டே விழப் போகிறார்கள் என்று எண்ணிக்கொண்டாள் அவள்.

தான் எங்கோ போகின்ற ஒரு போக்கிரியால் அவமானப் பட்டதைவிட ரொம்பவும் மரியாதையாக நினைத்த ஒருவரால் இப்படிக் கேவலப்படுத்தப்பட்டது மிகுந்த ஆத்திரத்தை ஊட்டிற்று.

எப்படியிருந்தாலும், இந்த விஷயத்தை இத்துடன் விட்டு விடுவதே தனக்கும், தனது குடும்பத்திற்கும் நலமானது என்று இறுதியாக முடிவெடுத்தாள் அவள்.

சில நாட்களுக்குப் பிறகு ஒரு திருமண வீட்டில் அவள் மீண்டும் தாஜூதீனை எதிர்கொள்ள நேர்ந்தது. கல்யாண மண்டபத்தின் முன்புற மாக கதிரையில் அமர்ந்து யாரோ ஒரு முதலாளியுடன் பேசிக் கொண்டிருந்தவன் கணவனும், குழந்தையுமாக மண்டப வாசலை அடைந்ததைக் கண்டதும் பேயறைந்ததைப்போல வெளிறிப் போனான். தீயில் அமர்ந்து விட்டவனைப்போல அவன் நெளிந்து வளைய, அவனை ஏறெடுத்தும் பாராமல் அவள் உள்ளே சென்றாள்.

உள்ளே கல்யாண வீடு களைகட்டியிருந்தது. ஹனீமா வழக்கம் போல அதிகாரத்துடனும், அமர்க்களத்துடனும் எல்லோருடனும் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தாள்.

“இதென்ன இது...? பொண்ண இப்புடியா சோடிக்கிற? எங்கட ஊர்ல எப்பவுமே பொண்ணுகள் கூட அபாயாவைக் கழட்டுற தில்லயே... இப்ப யாரு சீல உடுக்குறது...?”

“இதென்னா மரதோண்டி இப்புடி போட்டிருக்கீங்க..? கூலிக்கு ஒரு ஆளப் புடிச்சி இன்னம் டிசைனா போட்டிருந்தா பசுந்தா ஈக்குமே...” என்று விதம் விதமான கருத்துகள் அவள் வாயிலிருந்து உதிர்ந்து கொண்டிருந்தன.

ஒரு பெண்ணின் அதிகாரமும், அகங்காரமும் சுருண்டு விழுகின்ற-அவளது அன்புக்குரியவன் சம்பந்தப்பட்ட- அந்த இடத்தை மனதுக்குள் நினைத்து நொந்து கொண்டாள் ஸைபுன்னிஸா.

***

யுத்தத்திற்குப் பின்னர் இந்த மணித்தீவில் சமாதான அலைகளே நாற்புறமும் வந்து தழுவும் என்று எதிர்பார்த்திருந்த அனைவரது கனவும் பொய்த்துப் போனது. நாட்டில் பரவலாக தீவிரவாத அலைகள் மேலெழும்பத் தொடங்கின. அவை இந்த ரத்தின மணித் துவீபத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் முஸ்லிம்களைக் குறிவைத்து அச்சொட்டாக சுழன்றடித்தன.

யாரும் எதிர்பாராத இந்த அதிர்ச்சியில் நாடு உறைந்து கிடந்தது. பாரிய மக்கள் தொகையைப் பலிகொடுத்து மீட்டெடுத்த இந்த மாத்ரு பூமியை மீண்டும் இரத்தக் காடாக மாற்ற மக்கள் தலைவர்கள் உண்மையிலேயே மனம் ஒப்பவில்லை.

எனினும், யாரோ ஒரு ரகசியப் போஷகரால் ஊக்குவிக்கப்பட்ட அந்த இயக்கம் மிகப் பரவலாக நாட்டில் தன் செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருந்தது. ஆங்காங்கே பொதுக் கூட்டங்கள், எச்சரிக்கைக் கடிதங்கள், பகிஷ்கரிப்புகள், தாக்குதல்கள் என்ற நாடு திசை தடுமாறி சென்றுகொண்டிருந்தது.

அன்று கெகிறாவையில் அவ்வியக்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முஸ்லிம்களும், சிங்களவர்களும் கலந்து வாழ்கின்ற நகரத்தின் மையப்பகுதியில் இருந்த பொது மைதானத்தில் அந்தத் துறவியின் உரை இடம்பெற்றது.

ஒவ்வொரு நூற்றாண்டுக்கொருமுறை இலங்கையில் சிங்கள-முஸ்லிம் இனக்கலவரம் ஒன்று நடந்திருப்பதை வரலாற்றிலிருந்து ஆதாரம் காட்டி, இந்த ஆண்டிலும் அத்தகையதொரு பெரும் இனக் கலவரம் ஏற்படலாம் என்று முஸ்லிம் பத்திரிகை ஒன்று எழுதியிருந்ததை ஸைபுன்னிஸா படித்திருந்தாள்.

கூட்டத்தில் பெரும்பாலான சிங்களவர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் மிகக் குறைவான எண்ணிக்கையினரே வந்திருந்தார்கள். முஸ்லிம் கடைகள் மூடப் பட்டிருந்தன. முஸ்லிம்கள் அச்சம் காரணமாக வெளியே தலைகாட்ட அஞ்சி வீடுகளிலும், மூடிய கடைகளிலும், வாகனங்களிலும் முடங்கிய படி அவரது உரையைச் செவிமடுத்தனர். கிராமப்புறங்களிலிருந்தும் இளைஞர்கள் வந்து ஆங்காங்கே மறைந்து கேட்டுக்கொண்டிருந்தனர். இனத் துவேஷத்திற்குப் பேர்போன அந்தத் துறவியின் உரைபற்றி பலரும் கேள்விப்பட்டிருந்தாலும் அதை நேரடியாகக் கேட்டுவிட வேண்டும் என்று முஸ்லிம்கள் பலரும் விரும்பினர்.

பஞ்சசீலக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற இந்தத் திருநாட்டில் காவியுடை தரித்த துறவியின் வாயிலிருந்து வந்து விழுந்த சொற்கள் அந்த மக்கள் வாழ்க்கையில் இதற்குமுன் என்றுமே கண்டிராத வெறுப்பையும், காழ்ப்புணர்வையும் கொட்டின; முஸ்லிம்களின் மதரீதியான, கலாசார ரீதியான தனித்துவத்தைக் கேலிசெய்து, தாமே இந்நாட்டின் காவலர்கள் என்று பறைசாற்றின. முஸ்லிம் அடிப்படை வாதம் என்ற ஒன்றுபற்றிய கற்பனாவஸ்தை அவரை ஆட்டிப் படைப்பது அப்பட்டமாகத் தெரிந்தது. முஸ்லிம் தீவிரவாதிகளின் பிடியிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டைக் காக்க, தம் பின்னால் ஒன்று திரளும்படி சிங்கள மகாஜனங்களை அவர் அறைகூவி அழைப்பு விடுத்தார்.

## அத்தியாயம்–12

பெரும்பான்மை மகாஜனங்கள் அவ்வுரை குறித்து அலட்டிக் கொள்ளவில்லை. ஊடகங்கள் அவரது உரையை முற்றுமுழுதாக இருட்டடிப்புச் செய்தன. அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறுபான்மை இன மக்களான முஸ்லிம்களினதும், கிறிஸ்தவர்களினதும் வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்படும் செய்திகள் வந்துகொண்டிருந்தன. முஸ்லிம் மக்களும். கிறிஸ்தவர்களும் அச்சத்தில் உறைந்து போயிருந்தனர். எல்லோரும் ஊகம் தெரிவித்ததற்கிணங்க சிங்கள-முஸ்லிம் இனக் கலவரம் ஒன்று தற்போது வெடிக்குமானால் அதன் பின்விளைவுகள் எவ்வாறிருக்கும் என்பதை அனைவரும் இன, மத பேதமின்றி உணரத் தலைப்பட்டனர். சிங்கள புத்திஜீவிகளும், கற்றறிந்தோர் வட்டமும் இன்னொரு யுத்தத்தை இந்நாடு தாங்காது என்று கருத்துத் தெரிவித்திருந்தனர்.

நாட்டின் சகஜநிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தது. முஸ்லிம்கள் கண்ணீர் மல்கி, அழுதரற்றி பிரார்த்தனை செய்து தாம் பாதுகாப்பாக வாழ இறைவனைப் பிரார்த்தித்து நின்றனர்.

ஸைபுன்னிஸா மனந்தளர்ந்து போயிருந்தாள். அப்படி எதுவும் நடந்துவிடாது என்றும் எண்ணினாள். இன்று உலகம் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கிற போக்கில் மத அடிப்படைவாதம், பயங்கரவாதம், தீவிரவாதம் என்பவற்றைத் தூக்கிப்பிடித்து சிந்தித்துக் கொண்டிருக்க யாருக்குமே நேரம் இல்லை என்று அவள் நினைத்தாள். தவிரவும், இந்த இருபத்தியோராம் நூற்றாண்டு முன்னெப்போதும் இல்லாத பரந்த மனப்பான்மையை அனைத்து மக்களுக்கும் வழங்கிக் கொண்டிருக்கின்றது என்று அவளுள் ஏற்கனவே ஒரு கருத்து இருந்து வந்தது. மேலும், வெளிநாடு சென்ற திரும்புகின்ற பெரும்பான்மையின மக்கள் பெரும்பாலும் முஸ்லிம்கள் பற்றிய பூரண புரிந்துணர்வுடனும், நன்றியுணர்ச்சியுடனும் திரும்பி வருவதாக அவள் நம்பினாள்.

தொழிலாளி ஒருவனுக்கு இன, மத, குல பேதமின்றி ஒருவர் உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறார் என்ற நிலைப்பாட்டில் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்ற பாரூக்-ஸைபுன்னிஸா தம்பதியினருக்கு சிங்கள மக்கள் மத்தியில் நல்ல மரியாதை இருந்து வந்தது. "ஹரி கருணா வந்தய்..."என்று அவர்கள் பேசிக்கொண்டனர். சிங்கள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தொழிலாளிகள் தாம் கைநீட்டி சம்பளம் வாங்குகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் முதலாளிமாருடன் நன்றி விசுவாசத்துடன் நடந்து கொண்டனர். "பிஸ்ஸு(பைத்தியம்)" என்ற ஒரே வார்த்தையில் தமக்கும், முஸ்லிம்களுக்குமிடையில் உருவாக்கப்படவிருந்த பகைமை யுணர்ச்சியை முற்றாக நிராகரித்தனர்.

லண்டனில் வாழும் பாரூக்கின் சகோதரி பயத்துடன் பாரூக்கை அழைத்து, "கெகிறாவையில் கொழப்பமாமே..?" என்று விசாரித்தாள். அப்படி எதுவும் இல்லையென்றும், அப்படி ஏதும் நடக்காது என்றும் உறுதியாகக் கூறி, அவளுக்கு தைரியமளித்து தொலைபேசியை வைத்தான் பாரூக்.

இப்போதெல்லாம் அடிக்கடி குணசேனவைக் காணமுடிய வில்லை. எப்போதும் படு பிஸியாக இருந்தான். பிரதான வீதி அபிவிருத் திக்காக வீதியோரமாகவுள்ள கட்டடங்கள் அனைத்தும் இடித்துத் தகர்க் கப்பட்டு, போதிய இடைவெளி விட்டு மீண்டும் திருத்தப்பட்டுக் கொண்டிருந்தன. அநேக முதலாளிமார் அவனது நேரத்தை ஒதுக்கி வேலை செய்யும்படி வேண்டிக் கொண்டிருந்தபடியால் அவன் இரவு பத்து, பதினொரு மணிவரை வேலை செய்து கொண்டிருந்தான். அவனது நேர்மை, கடின உழைப்பு, விசுவாசம் முதலிய நற்குணங்கள் காரணமாக பஜாரில் மிகவும் பிரபல்யமான ஒரு மேசனாக அவன் திகழ்ந்தான்.

அன்று காலை மணி பத்திருக்கும். ஸைபுன்னிஸா வீட்டுக்கு வந்திருந்தான். கையில் ஒரு பையை மிக மரியாதையுடன் அவளுக்கு வழங்கினான். பளிச்சென்று உடையணிந்திருந்தாலும் அவனது முகம் வாடிக் கறுத்திருந்தது.

"என்ன பாஸுன்ன... சுகமில்லையா...?" பரிவுடன் கேட்டாள்.

"இல்லை நோனா...ராத்திரி முழுக்க பைசர் முதலாளியுடைய கடையில் வேலை. தூக்கம் போகுதில்லை. எல்லாப் பக்கத்தாலும் டெலிபோன் வருகிறது. தொலைபேசியை நிறுத்தி வைத்துள்ளேன்..."

"ஓ...!" என்று கூறி அவள் அவனை அமரும்படி வேண்டினாள்.

பாரூக் உள்ளிருந்து வந்து "ஆயுபோவன்" என்று வணக்கம் கூறி வரவேற்றான்.

"எனது மகளுக்கு குழந்தை கிடைத்திருக்கிறது. தெரியுமல்லவா? அவளுக்கு கிரி தான கொடுத்தோம்.... அதுதான் உங்களுக்கும் எடுத்து வந்தேன்..."

"அதென்ன கிரி தான...?"

"குழந்தை பிறந்து பால் குடிக்கத் தொடங்கியதும், குழந்தையின் தாயிடம் நன்றாகப் பால் ஊறி வரவேண்டும் என்பதற்காக நாங்கள் ஒரு தானம் கொடுப்போம். பாலூட்டும் தாய்மார் பத்துப் பேரை அழைத்து அவர்களுக்கு பலகாரம், வாழைப்பழம், தொதல் கொடுத்து அனுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினோம். இன்று வேலைக்குப் போகாமல் அதைத்தான் செய்து முடித்தேன். உங்கள் ஞாபகம் வரவே உங்களுக்கும் ஒரு பார்சல் எடுத்து வந்தேன்....”

“ஸைபுன்னிஸாதான் குழந்தைக்குப் பால் கொடுப்பதில்லையே...!” பாரூக் அவளைச் சீண்டுவதற்காக குணசேனவிடம் சொன்னான்.

“அதனாலென்ன? நோனாவும்கூட ஒரு தாய்தானே...?“

அவள் மனது இளகிக் கரைந்தது. மனித மனங்கள் உண்மையிலேயே பாசத்தையும், நேசத்தையும் கொண்டு இறுகப் பிணைந்தவை. அந்த நல்ல மனங்களைப் பிரித்து வைக்கின்ற இனவாதிகள், முன்னொரு காலத்தில் காவியுடை தரித்து அட்டூழியங்கள் புரிந்த கபாலன்களை ஒத்தவர்கள் என்று திடுமென ஒரு எண்ணம் அவளுள் ஓடிற்று.

அவன் பேசிக்கொண்டிருந்துவிட்டு விடைபெற்றான். பேச்சுவாக்கில் முதல்நாள் மாலை ரணசிங்க வீட்டுப் பக்கமாக ஹசனைக் கண்டதாகவும் கூறினான்.

## அத்தியாயம்–13

குணசேனவின் செல்வாக்கு பௌத்த விகாரைகளிலும் பரவியிருந்தது. ஏற்கனவே அவன் பௌத்த பிக்குவாக மாறுவதற்கு எண்ணம் கொண்டிருந்தவன் என்ற உண்மை பல மடாதிபதிகளுக்கும் தெரிந்திருந்தது. கெகிறாவையிலிருந்து கிழக்குப் பக்கமாக சுமார் மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ள மெத்தாராம விகாரைக்கு அன்று அவன் சென்றிருந்தான். அவ்விகாரையின் பிரதம பிக்குவை சந்தித்து கடந்த வாரம் கெகிறாவையில் நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் கூறப்பட்ட விடயங்களுக்கு ஒரு மாற்றுக் கருத்தை முன்வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அப்படிக் கேட்பது அவனுக்கொன்றும் சிரமமாக இல்லை. அவனது அக்கா மகன் ஒரு இளந்துறவி. தமிழைக் கற்று அவ்விகாரையின் பிரிவேனா மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்து வருகிறான்.

அவனது கருத்தை ஏற்றுக்கொண்ட அவர், பக்கத்து விகாரைகளோடும் கலந்துபேசி அங்குள்ள பிக்குமார்களின் கருத்துகளைப் பெற்று விரைவிலேயே ஒரு பொதுக்கூட்டத்தை நடாத்துவதற்கு ஒப்புக் கொண்டார்.

அவன் திரும்பி வீடு செல்லும்போது பாரூக் தொலைபேசியில் அழைத்தான். புதிய சேமிப்புத் திட்டம் பற்றி கலந்து பேசுவதற்குத் தன்னை வரச்சொல்லி சமூக சேவைகள் அமைச்சர் கடிதம் அனுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கிறார் என்றும், தன்னோடு துணையாகச் செல்வதற்கு வருமாறும் அவன் விடுத்த அழைப்பை குணசேன ஏற்றுக்கொண்டான்.

***

அவன் விகாராதிபதியுடன் பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்த அதே தினத்தில் வடமத்திய மாகாணத்திற்கு வருகை தந்திருந்த சமூகசேவைகள் அமைச்சரும் கூட்டத்திற்கு வருகை தருவதற்கு ஒப்புக்கொண்டார்.

அதே பொது மைதானம். ஆனால், இன்று பெரிய வித்தியாசம். அரசியல்வாதிகளும், அரசாங்கப் பிரமுகர்களும், பொதுமக்களும் கூடி யிருந்தனர். ஏழைத் தொழிலாளிகள் எங்கும் நிரம்பி வழிய பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

ஏலவே திட்டமிட்டிருந்தபடி மாலை மூன்று மணிக்குக் கூட்டம் ஆரம்பமாயிற்று. ஸைபுன்னிஸா மைதானத்தின் வெளிப்புறத்தில், பிரதான வீதியோரத்தில் தனது வேனில் அமர்ந்தபடி நிகழ்ச்சிகளை அவதானித்துக் கொண்டிருந்தாள். குழந்தை ஹசன் வெளியே விட்டால் ஓடித் திரிவான் என்று கருதியே அவள் வேனிற்குள் அமர்ந்திருந்தாள். எல்லாப் பிரதானிகளோடும் பாரூக் மேடையில் அமர்ந்திருந்தான்.

வரவேற்புரை, தலைமையுரை எல்லாம் முடிவுற்ற பின்னர் விகாராதிபதி பேசுவதற்கு எழுந்தார். சபையின் அனுமதியையும், மக்களின் மரியாதையையும் பெற்றுக்கொண்டு பேசத்தொடங்கினார். கூட்டம் அமைதியாகச் செவிமடுத்தது.

“பௌத்த மகாஜனங்களே, சிங்களத் தீவின் வீரர்களே, தாய்மார் களே, தாய்த்திருநாட்டை நேசிக்கும் அனைத்து அவதானிகளே, உங்களுக்கு மும்மணிகளின் ஆசி கிட்டுவதாக!

இந்த நாடு நம் பெருமைக்குரிய முன்னோர்கள் போற்றிவந்த பண்பாடுகளின் கேந்திர நிலையமாகவும், நாம் பரம்பரையாகப் பெற்று வந்த நற்பண்புகளும், மனிதாபிமானமும் பௌத்த மதத்தின் வருகை யினால் மேலும் மெருகுபெற்று நிலைபெற்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

“எமது பௌத்த தர்மம் போதிக்கின்ற கொள்கைகளில் தலை யாயது அயலாரோடு சுமுக உறவைப் பேணுதல் என்பதாகும். உதாரணமாக, புத்த பெருமானின் காலத்தில் சம்பா நகரில் நடந்த சம்பவத்தை நீங்கள் அறிவீர்கள். அங்கு புத்த பெருமானைப் பற்றிய தவறான கருத்துகள் பரப்பப்பட்டிருந்தன. அதைக் கேட்ட ஒரு பிராமண முனிவர் அதை மறுத்துப் பேசினார். புத்த பெருமான் மக்களுடன் கடினமாகப் பேசுபவரல்ல என்றும், விருந்தாளியாக வந்த யாரையும் இன, மத, குல பேதமின்றி வரவேற்று உபசரித்து, மனம் நோகாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுகின்ற நல்லவர் என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார். அதற்குக் காரணம் என்ன? எம் பெருமானின் சிறந்த நடத்தைகள்தான்.

"ஒரு சத்திரத்தில் தங்கும்போதுகூட நாகரித்தையும். ஒழுக்கத்தையும் கடைப்பிடித்தவர் எமது புத்த பகவான். ஒரு சத்திரத்தில் தங்கும் போது சத்திரத்தின் உரிமையாளனிடம் அனுமதி பெற்றுக் கொண்டது மட்டுமல்ல, சத்திரத்தில் தங்கியிருந்தவரிடம்கூட அனுமதி பெற்றுக் கொண்டவர் அவர். இந்த முழு உலகமுமே எமக்கு சத்திரம் போன்றது. இதில் கொஞ்சநாள் தங்கிப் போவதற்காக வந்தவர்கள் நாங்கள். முற்றும் துறந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டே சத்திரத்திற்காகச் சண்டை பிடிக்கலாமா?

"ஒரு தோட்டக்காரன் தோட்டத்திற்கு வெளியே நிற்கும்படி உத்தரவிட்டபோது அதற்குப் பணிந்து அந்த இடத்திலேயே நின்றவர் எம்பெருமான். ஒரு கிராமத்துக் குடியானவனுடன் ஒரே ஆசனத்தில் அமர்ந்தவர் எம்பெருமான். ஜைன மதப் பெரியாரான உபாலி புத்த தர்மத்தை ஏற்பதற்கு விருப்பம் தெரிவித்தபோது, அவரை நிதானப் படுத்தி ஒன்றுக்கு மூன்று, நாலு தடவைகள் தீர யோசித்தபின் ஏற்கும்படி ஒவ்வொரு முறையும் திருப்பி அனுப்பியவர். உனது மதம் உனக்குப் புனிதமானது ஆதலால், எனது கொள்கைகளை நீ ஏற்க வேண்டுமென்று வற்புறுத்த மாட்டேன் என்ற கூறிய மகான் எம் பெருமான். பொது மக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்துமளவிற்கு நீண்ட நேரமாக தர்ம உபதேசம்கூட செய்ய வேண்டாமென்று தன் சீடர்களுக்குப் போதித்த அந்த உத்தமரின் பெயரைப் போற்றுகின்ற நாங்கள் பொதுமக்களின் மனம் நோகும்படி உபதேசம் செய்வது புத்த தர்மத்திற்கு ஏற்புடையதல்ல.

"முழு ஆசியாவுக்குமே ஜோதியைக் கொண்டுவந்த எம் பெருமானின் பஞ்ச சீலக் கொள்கைகள் இன்று முழு உலகிலும் வேகமாகப் பரவி வருகின்றன. அவரது பெயரால் நாங்கள் ஒன்றுபட வேண்டுமே தவிர, இந்த நாட்டில் மீண்டும் ஒரு ரத்தக்களரி ஏற்படுவதற்குக் காரணமாக இருந்துவிடக் கூடாது. யாரும் போராடி இந்த நாட்டைக் காக்கவேண்டிய எந்த அவசியமும் இல்லை. பௌத்த தர்மம் நிலையானது. அதற்கு அழிவில்லை. விஜய மன்னன் இலங்கைக்கு வந்து மன்னனாகி இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்கள் கடந்து விட்டன. எனவே, சிங்கள மொழியின் வரலாறு இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்கள் பழமையானது. அதற்குப் பின்னர் தோன்றிய பௌத்த தர்மமோ இரண்டாயிரத்து முந்நூறு வருடங்கள் புராதனமானது. இந்த வரலாறை யாரும் அழித்துவிட முடியுமா? எனவே, இந்த பௌத்த நாட்டுக்கும் என்றும் அழிவே வரப்போவதில்லை..." என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிமுடித்த அவர் விமலரத்ன குமாரகமவின் பாடல் ஒன்றையும் விளக்கினார்.

அவரைத் தொடர்ந்து மேலும் பல பௌத்த பிக்குகள் இன ஒற்றுமையை வலியுறுத்தி உரையாற்றினர். இறுதியில் சமூக சேவைகள் அமைச்சர் பேசுவதற்கு எழுந்தார்.

நிஸ்ஸங்கவின் விடயமாக பாரூக் ஓடித்திரிந்தபோது அவனோடு அறிமுகமாகி நெருங்கிப் பழகியவர் அந்த அமைச்சர். அவரது இனிய குணங்களும். சுபாவமும். நேர்மையும், உண்மை எனக் கண்டதைப் பகிரங்கமாக எடுத்துரைக்கும் தைரியமும் பாரூக்கை வெகுவாக ஆகர்ஷித்தன. விரைவிலேயே அவனுடைய மிக நெருங்கிய நண்பராக அவர் மாறிவிட்டார். "நீயும் நானும் அடுத்த பிறவியில் சகோதரர்களாகப் பிறப்போம்.." என்று கூறிக் கொள்ளுமளவிற்கு, தனது வீட்டு வைபவங் களுக்கு அவனை அழைத்து உபசரிக்கும் அளவிற்கு, அவரும் அவனுடைய நெருங்கிய நண்பராக மாறியிருந்தார். அவர் சுருக்கமாக உரையாற்றினார்.

"தனது தொழிலாளி ஒருவன் விபத்துக்குள்ளானபோது உரிய மருத்துவ செலவுகளை வழங்கிய பின்னரும்கூட, அவரது வாழ்வா தாரத்தைப்பற்றி யோசித்த ஒருவரை உங்களுக்கு நான் இப்போது அறிமுகப்படுத்தப் போகிறேன். அவர் தனிப்பட்ட முறையில் எனது நண்பரும்கூட. இலங்கையில் பௌத்த தர்மத்தின் நிலைப்பாடு பற்றி எனக்கு முன்னால் பல பெரியவர்கள் பேசிச் சென்றார்கள். அதைப் போலவே இன்னொரு உண்மைதான் மிகத் தொன்மையான இஸ்லாமிய மதம் இலங்கையில் நிலைபெற்று ஆயிரம் வருடங்களைக் கடந்து விட்டன என்பதும், அந்தக் காலமுதலே நாம் இரு இனங்களும், மன்னர் களும், மக்களும் உயிரைக் கொடுத்து பழகியிருக்கிறோம். அவரது நல்ல மனமும், பிறருக்கு உதவும் எண்ணமும் எல்லோருக்கும் இருக்குமானால் ஏழைகள் என்று இந்த நாட்டில் யாருமே இருக்க மாட்டார்கள்.

"ஜாதி, மத, பேதம் எதுவுமின்றி தன் தொழிலாளி ஒருவன் காலொடிந்து கிடக்கிறான் என்று அறிந்ததும், உள்ளம் வாடிப்போன அவர், தனது நன்கொடையாக இரண்டு லட்ச ரூபாவை அந்தத் தொழிலாளியின் பெயரில் சமுர்த்தி வங்கியில் வைப்புச் செய்துள்ளார். அதன் வட்டியையும், போனஸையும் தொழிலாளி பெறுவார். மிக அவசரமான தேவைகளுக்கு அந்தப் பணத்தை அவர் எடுக்கலாம்.

"இப்படி ஒரு திட்டத்தை ஆரம்பித்து எமக்கு அறிமுகப்படுத்திய முஸ்லிம் நண்பரின் பெயர் பாரூக். இவரது இந்தத் திட்டத்திற்கு "நவசக்தி" என்று பெயரிட்டு இன்று முதல் நடைமுறைப்படுத்துகிறோம். இந்தத் திட்டத்தின்படி ஒரு முதலாளிக்காக வேலை செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும்போது ஒரு தொழிலாளி விபத்துக்குள்ளானால் அவரது மருத்துவ செலவுகளை அவர் ஏற்றுக் கொண்டாலும், இல்லா விட்டாலும் தொழிலாளியின் சேமிப்புக் கணக்கில் முதலாளி, ரூபா ஐம்பதாயிரத்தை-குறைந்த பட்சம்- வைப்புச் செய்ய வேண்டும்.

"இப்படியொரு திட்டத்தை அறிமுகப்படுத்திய இந்த முஸ்லிம் நண்பர் பாரூக்கின் முன்மாதிரியைப் பின்பற்றி அனைத்து முதலாளி மார்களும் நடப்பார்களானால், நாட்டில் பொறாமையும், வஞ்சகமும் அறவே இருக்காது. நன்றியும், அன்புமே எங்கும் தழைத் தோங்கும்..."

தனது உரையை முடித்த பின்னர் அமைச்சர் அந்த ஜன சமுத்திரம் கண்டுகொள்வதற்காக பாரூக்கை மேடையில் எழுந்து நிற்கச் சொல்லி, தோளில் தட்டி, கைக்குலுக்கிப் பாராட்டினார்.

பௌத்த பிக்குகளின் நடுவில் தென்பட்ட பாரூக்கின் முகத்தை பல கெமராக்கள் 'க்ளிக்' செய்துகொண்டன.

## அத்தியாயம்-14

நாளை இன்னொரு புதுவருடம் பிறக்கவிருக்கிறது. ஊரில் எல்லாக் கடைகளிலும் பரபரப்பான வியாபாரம் நடந்து கொண்டி ருந்தது. ஜவுளிக் கடைகள் நிரம்பி வழிந்தன. பஸ்கள் பிதுங்கி நிறைமாதக் கர்ப்பிணிகள் போன்று ஊர்ந்து நகர்ந்தன. ஒவ்வொரு வீடும் தமது துன்ப துயரங்களை மறந்து நாளைய கொண்டாட்டங்களுக்கான ஆயத்தங் களைச் செய்துகொண்டிருந்தது. அநேக வீடுகள் வர்ணப் பூச்சில் மிளிர்ந்துகொண்டிருந்தன.

கடந்தவாரம் நடைபெற்ற இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியினர் உலகக் கோப்பையை வெற்றி கொண்டமை இனிய புத்தாண்டுப் பரிசாக அனைவரையும் மகிழ்விக்க, முழு இலங்கையுமே அவ்வெற்றியைக் கொண்டாடித் திளைத்திருந்தது.

வடக்கிலும் சித்திரைப் புத்தாண்டின் ஜய வருடப் பிறப்பு உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது. சொல்லொணா வதைகளுக்கும், இழப்புகளுக்கும் உள்ளாகியிருந்த தமிழினம் வழக்கம்போல மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் தமது புத்தாண்டை எதிர்கொள்ளத் தயாராகிக் கொண்டிருந்தது.

குணசேன மாலைவரை வேலை செய்துவிட்டு அப்போதுதான் வந்திருந்தான். மனைவி வெளியே கட்டப்பட்டிருந்த தற்காலிகக் கொட்டிலில் அடுப்பு மூட்டி பலகாரம் சுட்டுக் கொண்டிருந்தாள். கொக்கிஸ், பயற்றம் பலகாரம், ஆஸ்மி என்று பல வகைகளை அவள் கடந்த ஓரிரு நாட்களாகத் தனியே செய்து முடித்திருந்தாள். இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியாக பலகார வேலை நடந்துகொண்டிருந்தது. இரவில் 'தொதல்' செய்து தருவதாக அவன் கூறியிருந்தான். இந்த வேலை முடிந்தபிறகு அவள் தேங்காய் துருவும் வேலையைத் தொடங்க வேண்டும். அவன் பக்கத்து ஆலையிலிருந்து ஒரு கிலோ பச்சசையரிசி அரைத்து எடுத்து வந்திருந்தான்.

அவள் வேலையை முடித்து வரும்வரை அவன் விளக்குமாறை எடுத்து முற்றத்தைக் கூட்டத் தொடங்கினான். உள்ளே பேரனின் அழுகுரல் கேட்டது. மகள் அவனுடன் கொஞ்சிப் பேசும் சப்தமும் கேட்டது. பிள்ளைப் பேற்றிற்காக தாய்வீடு வந்தவள் இன்னமும் வீடு போய் சேரவில்லை. அவனுக்கு குழந்தையை உடனே போய்ப் பார்க்க வேண்டும் போலிருந்தது. குளித்த பிறகு உள்ளே போகலாம் என்று தன்னை அடக்கிக் கொண்டான்.

அவன் மனைவி "உஸ்" என சப்தமெழுப்பியபடி வியர்வையைத் துடைத்துக்கொண்டு அவனருகே வந்தாள். அவன் கூட்டுவதை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். வியர்வை தீர்ந்தவுடன் தேங்காய் துருவ ஆயத்தமானாள்.

இரவு 'தொதல்' வேலை முடிந்து குளித்துவிட்டு உள்ளே வரும்போது ஒன்பது மணி ஆகியிருந்தது. சட்டியில் வாட்டி வைக்கப்பட்டடிருந்த சோற்றையும். கறியையும் ஒரு பீங்கானில் போட்டு எடுத்துக் கொண்டு, ஹோலுக்குச் சென்று கையில் ஏந்தி சாப்பிட்டான். மகள் குழந்தையைத் தூங்கவைப்பதற்காக அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தாள். மருமகன் ஏலவே உறங்கிப் போயிருந்தான்.

விடிகாலையில் விழித்துக்கொண்ட அவனது மனைவி முதல் வேலையாக அடுப்பை மெழுகி முடித்தாள். பாற்சோறு சமைப்பதற்கான வேலைகளை மகள் செய்துகொண்டிருந்தாள். குழந்தை அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது.

அனைவரும் குளித்து முழுகி புத்தாடை அணிந்தனர். மகளும், மருமகனும் பெற்றோரின் காலில் விழுந்து வணங்கி ஆசிபெற்றுக் கொண்டனர். குழந்தையையும் கையில் எடுத்துக் கொண்டு விகாரைக் குப் புறப்பட்டனர்.

மனைவி வீடு திரும்பியதும் சுப நேரத்தில் அடுப்பு மூட்டி கிரிபத் சமைக்கத் தொடங்கினாள். அவ்வேலை முடிந்ததும் அவளை அழைத்துக் கொண்டு பக்கத்துத் தெருவில் இருக்கும் மனைவியின் சிற்றப்பா வீட்டுக்குச் சென்று, வெற்றிலை கொடுத்து வணங்கி, ஆசிபெற்றான். வீடு திரும்பியதும் சுபநேரத்திற்காக ஊரெங்கும் பட்டாசு வெடிக்கவே அனைவரும் உணவுண்டனர்.

மதிய உணவுக்குப் பின்னர் அவன் மனைவியிடம் சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகாரங்களை ஒரு பொதியாகக் கட்டி கையில் எடுத்துக்கொண்டான். ஸைபுன்னிஸாவுக்கு மிகவும் பிடிக்குமே என்ற நினைப்பில் ஒரு பிடி வெற்றிலை பாக்கும் எடுத்துக் கொண்டான்.

ஸைபுன்னிஸா வீட்டுக்குச் சென்றபோது அவளும், பாரூக்கும் பாய் விரித்து கீழே அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். குழந்தை ஹசன் விளையாடிக் கொண்டிருந்தான். பக்கத்தில் பெரிய தூக்குசட்டியில் முக்கால்வாசிக்கு நெய் கலந்த மஞ்சள் சோறு. சின்னக் கிண்ணங்களில் மரக்கறிகள். அவனைக் கண்டதும் "என்ட பாஸூன்ன. பத் கமு" என்று அவனை வரவேற்றாள் அவள். "சுப அலுத் அவுருத்தக் வேவா...!" என்று பாரூக் முகமன் கூறி வாழ்த்தினான்.

வழக்கமாக ஸைபுன்னிஸா வேளைக்கு சாப்பிடுபவள் அல்ல. ஏதாவது ஒரு வேலையை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்து கொண்டிருந்துவிட்டு பிற்பகல் மூன்று மணிக்கு மதிய உணவு சாப்பிடுவதைக் கண்டு அவன் பலமுறை கடிந்து கொண்டிருக்கிறான். அவன் ஆச்சரியமாகப் பார்ப்பதைக் கண்ட அவள், "சதாசிவம் மாமா கொண்டு வந்தார்..." என்றாள். "காலையில் போன் பண்ணிச் சொல்லி விட்டு இப்போது எடுத்து வந்தார்..." என்று தொடர்ந்து சொன்னாள். அவன் தன்னருகே ஓடிவந்த ஹசனைத் தூக்கிகொண்டு அப்பால் சென்றான்.

அவர்கள் சாப்பிட்டு முடியும்வரை காத்திருந்து, புத்தாண்டுப் பலகாரங்களையும், வெற்றிலை பாக்கையும் கையளித்தான். இரண்டு நாட்களில் எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு, முதன்முதலாக வேலைக்குச் செல்லும்போது அவளிடமே கைவிஷேடம் வாங்க விருப்பதாகவும் தெரிவித்து விடைபெற்றான்.

***

ஏறத்தாழ மூன்று வருடங்கள் காத்திருந்த பின்னர் ரணசிங்கவின் மனைவி வயிற்றில் ஒரு ஜீவன் தரித்தது. அவனது முழுக்குடும்பத்திலும் மகிழ்ச்சியும், பயமும் ஒருங்கே குடிகொண்டிருந்தன.

ரணசிங்க கெகிறாவையில் இரும்பு உற்பத்திப் பொருட்களுக்கு மிகப் பிரசித்தி பெற்றவன். கெகிறாவை பிரதான நகரத்திலிருந்து உள்ளே செல்கின்ற பல வீதிகளில், மேற்கு நோக்கிச் செல்கின்ற ஒரு வீதியின் திருப்பத்தில் அவனது சிறிய இரும்புப் பட்டறை அமைந்திருந்தது. கடை சிறிதாயினும் பலபேர் அதில் எப்போதும் வேலை செய்வார்கள். கடையைத் தாண்டி வீதியோரங்களிலும், பக்கத்து வீடுகளின் முன்பாகவும்கூட அவனது இரும்பு உற்பத்திப் பொருட்கள் இடம் பிடித்திருக்கும்.

அவனது கடையில் வேலை செய்பவர்கள் ஒரு மாதம் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மாதங்களின் பின்னர் காணாமல் போய் விடுவார்கள். காரணம், இளைஞர் சேவை மன்றத்தின் பயிற்சிப் பட்டறையாகவும் அவனது கடை விளங்கியமையாகும். தமது மன்றத்தில் இரும்பு உற்பத்தி வேலை களைப் பயில்வதற்காகச் சேரும் இளைஞர்களை அம்மன்றம் பயிற்சிக் காக அவனிடம் அனுப்புவதும், அவர்கள் பயிற்சி முடிந்தபின்னர் சான்றிதழ் பெற்றுச் சென்றவிடுவதும் வழக்கமாகும். பின்னர் புதியவர்கள் வருவார்கள். இது தொடர்கதை.

அவனது உடை எப்போதும் கறுப்பு நிறத்தில் இருக்கும். அநேகமான நேரங்களில் அழுக்காகவே காணப்படுவான். ஆனால், அந்த அழுக்கையும் வென்று குமிழியிடும் புன்னகை அவனுக்கு மட்டுமே சொந்தமானது. முப்பது வயது இளைஞனுக்குரிய வலிமையும், பிரகாச மான முகமும் அவனது உடைமைகள். அதற்கும் மேலாக, நாணயஸ்தன், நல்லவன், திறமைசாலி, மரியாதை பேணுபவன் என்ற அடைமொழிகள் அவன் தனது பிறப்பரிமையாகவும், பரம்பரை வழியாகவும் பெற்றவை.

காதலித்துத் திருமணம் செய்துகொண்டவன் என்றாலும், மனைவியின் நிலைமை உள்ளத்தில் கவலையளித்தது. அதுவும் இப்போது தீர்ந்து போனதாயினும், அவள் கர்ப்பமுற்ற நாளிலிருந்தே ஒரு போதி பூஜை நடத்திவிட வேண்டுமென்று அவனது தாய் நச்சரித்துக் கொண்டிருந்ததால் அன்று அவனது குடும்பம் கெகிறாவை நகர மத்தியி லுள்ள பௌத்த விகாரைக்குச் சென்றிருந்தது. பிரதம பிக்குவை வணங்கி ஆசிபெற்ற பின்னர் அவர்கள் தமது எண்ணத்தைத் தெரிவித்தனர். பின்னர் அதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினர்.

போதிமரத்தைச் சுற்றியுள்ள நிலத்தைக் கூட்டியபின், கை கால்களைக் கழுவி சுத்தம் செய்துகொண்டு, பக்கத்திலிருந்த பூஞ்செடி களுக்கு நீர் விட்டனர். மஞ்சளும். சிவப்பு நிறமும் கலந்த சிறிய முக் கோண, செவ்வக வடிவக் கொடிகளை மரத்தின் இரு கிளைகளுக் கிடையில் கயிறால் கட்டினர். அம்மா அகல்விளக்குத் திரி திரித்து எண்ணெய் விட்டாள். தந்தை ஊதுபத்திகளைக் கொளுத்தி தூண்களின் இடுக்குகளில் குத்தி நட்டு வைத்தார். பின்னர் அனைவரும் அரசமரத்தை மும்முறை வலம் வந்து அதற்கு நீரூற்றினர்.

வேலைகள் முடிந்த பின்னர் கீழே பாய்விரித்து பூஜைக்கென கொண்டுவந்த பொருட்களை பரப்பி வைத்து, புத்தர் சிலையை வணங்கி, கீழே அமர்ந்து பிரார்த்திக்கத் தொடங்கினர். பெரிய பிக்கு வந்து மந்திர ஸ்தோத்திரம் சொல்லி, தர்ம உபதேசம் செய்த பின்னர் ரணசிங்கவின் தாயார் தானத்திற்கென கொண்டுவந்த பொருட்களை அவரிடம் பணி வாகக் கையளித்தாள். அவர் அதை ஏற்றுக்கொண்டு தனது விடுதியில் கொண்டுபோய் வைக்கும்படி கூறவே, அனைவரும் அவரை மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கி விடைபெற்றனர்.

அப்போது நாலைந்து முஸ்லிம் பெண்கள் முக்காடிட்டபடி பன்சலயின் பின்வாசல் வழியாக வந்துகொண்டிருந்தனர். அவர்கள் தண்ணீர்க் குடங்களைச் சுமந்து கொண்டிருந்தனர். ஊரிலேயே மிக நல்ல, தூய தண்ணீர் அங்குள்ள கிணற்றிலேயே கிடைக்கின்றது என்பது அவர்களது அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்தது. எனவே, ஒரு நாளில் ஒரு தடவையாவது அவர்கள் வந்து போவார்கள். வந்து அந்தக் கிணற்றின் அயலைக் கூட்டித் துப்புரவு செய்து, அங்குள்ள பூஞ் செடிகளுக்கு நீரும் வார்த்துவிட்டுச் செல்வார்கள். அவர்களைக் கண்டதும் பிக்கு சிறிது தாமதித்தார். ஒரு புன்னகையுடன் எதிர்கொண்டு நலம் விசாரிப்பதும் கேட்டது. அப்பெண்களும் மிக மரியாதையாக "சாது..சாது" என்று அவரை விளித்து பேசத் தொடங்கினர்.

"பஜார்ல ஏதோ பெரிய கூட்டம் சாது...பெரிய கொழப்பம் வரப்போவுதாம்.." வயதில் மூத்தவள் ஒருத்தி சொன்னாள். பிக்கு அதே பாஷையில் "என்ன பிரச்சினை.." என்று திருப்பிக் கேட்டார்.

"ஏதோ பர்மா ஆக்களாம்...இங்க வரப்போறாங்களாம்.. அவங்கள அடிக்க ஜனம் கூடியிருக்காம்.."

உடனே பிக்கு கைத்தொலைபேசியைத் தட்டி யாருடனோ பேசி நடப்பு விவகாரம் என்ன என்று விசாரிக்கத் தொடங்கினார். அவுஸ்திரேலியாவிற்குச் செல்வதற்காகப் படகுகளில் பயணம் செய்த அகதிகள் சிலர் வழிமாறி வடபகுதி கடற்கரையில் ஒதுங்க, அவர்களைப் பாதுகாப்பாகக் கொண்டுவந்து தமது அலுவலகத்தில் ஒப்படைக்கும்படி கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகம் வேண்டிக் கொண்டதற்கிணங்க, அவர்கள் ஒரு ஜீப் வண்டியில் பொலிஸ் பாதுகாப்புடன் சென்று கொண்டிருக்கும் வழியில், எங்கிருந்தோ பரவிய வதந்திகள் சிலரை உசுப்பிவிட, அந்தத் தீவிரவாதிகளை அடித்து நொறுக்குவோம் என்று ஒரு கூட்டம் ஆட்களைச் சேர்த்துக்கொண்டு நகரத்தின் மத்தியை விட்டும் சிறிது தள்ளிய தூரத்தில் கூடிநிற்பதாக அவருக்கு நம்பகமாகத் தகவல் கிடைத்தது.

அவர் உடனே பொலிஸ் நிலையத்திற்குத் தொடர்பு கொண்டார். பொலிஸ் பொறுப்பதிகாரி அவருக்கு மிகவும் அடங்கி நடப்பவர் என்றும், அவரைக் கண்டால் எழுந்து கைகட்டி நிற்பவர் என்றும் அறிந்திருந்த அப்பெண்கள் ஆறுதல் பெருமூச்சுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"நீங்கள் பயப்படாமல் வீட்டுக்குப் போங்கள்.." என்று தூய தமிழில் அவர்களுக்கு சமாதானம் கூறி அனுப்பிவைத்தார் பிக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாசிவத்தைக் கொஞ்ச நாட்களாகக் காணமுடியவில்லை. பாரூக் வந்துவிட்டதால் தனக்கு அதிகம் வேலை இல்லை என்று எண்ணி தனது தோட்ட வேலைகளில் அல்லது வயல் வேலைகளில் ஈடுபட்டிருப்பான் என்று அவள் நினைத்திருந்தாள். ஆனால், இப்போது அவளது மனதில் வேறுவிதமான எண்ணங்கள் தோன்றிக் கொண்டிருந்தன.

அவனது மனைவியிடம் கேட்டபோது அவன் இப்போதெல்லாம் எந்த வேலையிலுமே சிரத்தை கொள்ளாமல் மனம்போன போக்கில் ஊரில் சுற்றித் திரிவதாகக் கூறினாள்.

அவனது விவகாரம் என்ன என்ற அறிந்து வருவதற்காக பாரூக்கை அனுப்பலாம் என்று பட்டது. அவனும் அதே எண்ணங் கொண்டிருந்ததால் உடன் புறப்பட்டுவிட்டான். அவனது மனதிலும் பலவிதமான சிந்தனைகள். சதாசிவத்தின் மனைவியிடம் விசாரித்துவிட்டுப் புறப்பட்டான்.

அது சிறியதொரு கிராமம் ஆனபடியால் எந்த மூலை முடுக்கிலாவது அகப்படுவான் என்ற நம்பிக்கை அவனிடம் இருந்தது.

ஊரைத் தாண்டிச் செல்லும்போது ஓரத்தில் நிரம்பித் ததும்பும் குளம், தாமரை விரிந்த மலர்களும், இலைகளுமாக அவனைப் பார்த்துச் சிரித்தது. வீதியோரத்தின் எல்லைக் கற்களைத் தாண்டி இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நின்றிருந்தன. அவற்றை இரு இளைஞர்கள் கழுவித் துடைத்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரம் வேனை நிறுத்தி விட்டு அவனும் சாய்ந்து உட்கார்ந்தான். பின்னர் குளக்கரையோரமாகச் சென்று பார்க்கலாம் என்று எண்ணிப் புறப்பட்டான்.

அப்பால் சிறிது தூரம் சென்றபோது தூரத்தில் ஒரு சிறு குடிசை தெரிந்தது. அதன் முன்னால் ஓரிருவர் நின்று கொண்டிருந்தனர்.

அவன் அருகே சென்றபோது குடிசையின் உள்ளே சதாசிவம் உட்கார்ந்திருப்பது பளிச்சென்று தெரிந்தது. கண்மூடி மோனத் தவத்தில் ஆழ்ந்திருப்பதுபோன்ற தோற்றம். உதடுகள் மெதுவாக அசைந்த வண்ணமிருந்தன. ஏதோ மனம் ஒன்றிய பிரார்த்தனைபோல இருந்தது. எதிரே பூக்களும். பூஜைப் பொருட்களும், தெய்வங்களின் சிலைகளுக்கும் உருவப் படங்களுக்கும் முன்னால் பூமாலை மணக்க, சந்தனம் கமழக் காட்சியளித்தன. அவனுக்கு முன்னாலும் பின்னாலும் ஆண்களும், பெண்களும் அமர்ந்திருந்தனர். அவர்களும் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதைப்போலவே தோன்றினர்.

அவர்கள் முன்னால் அமர்ந்து உபதேசம் செய்து கொண்டிருந்தவன் காவியுடையும், உருத்திராட்ச மாலையும், நீண்ட சடாமுடியும், தாடியுமாகக் காட்சியளித்தான். அவனை எங்கோ பார்த்ததைப்போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது.

வெளியில் உள்ள மனிதர்கள் தமது முறைக்காகக் காத்திருப்ப தாகத் தோன்றிற்று. அவர்களுக்கு அருகில் சென்றான். அவர்களிடம் விசாரித்தபோது, இந்த மடத்தில் புதிதாக ஒரு சாமியார் வந்து குடியிருப்பதாகவும், அவர் மிகவும் சக்தி வாய்ந்தவர் என்றும் புகழ்ந்து கூறினார்கள்.

அவனுக்குத் திகைப்பாக இருந்தது. சதாசிவம் எப்படி இவ்வாறு சீக்கிரம் மாறிப்போனான் என்று யோசிக்கும்போது அவனிடம் இருந்த பயந்த சுபாவமே இதற்கு காரணமாக இருக்குமோ என்று பட்டது.

இன்னும் சிறிது தூரத்திற்குச் சென்றால் ஏதாவது ஒரு தடயம் கிடைக்கலாம் என்று எண்ணி வேனை ஆரம்பம் செய்தான். தூரத்தில் ஒன்றிரண்டு வீடுகள் தெரிந்தன. அவற்றின் முன்பாக நண்டும் சிண்டுமாக சிறுவர் சிறுமியர் விளையாடிக் கொண்டிருந்தனர்.

புதிய வாகனம் ஒன்று வந்து நிற்பதைக் கண்டதும் அவை முதலில் மிரண்டு நின்றன. பின்னர் ஆவலுடன் அருகில் வந்து மெல்லத் தொட்டுத் தடவிப் பார்த்தன. அவன் அவர்களிடம் அன்பாகப் பேசி அவர்களது வீட்டிலிருந்து ஒரு பெரியவரை அழைக்குமாறு வேண்டிக் கொண்டான்.

வயது முதிர்ந்த ஒரு கிழவரை அந்தச் சிறுவர்கள் அழைத்து வந்தனர். அவர் பார்வையில் கேள்விக்குறியுடன் அவர்களது அருகில் வந்து நின்று அவனையும், அவர்களையும் மாறி மாறிப் பார்த்தார். அவரது பார்வை இவர்தானா என்னை அழைத்தவர் என்று கேட்பதுபோலிருந்தது. அவன் அவரருகில் சென்று மரியாதையுடன் பவ்வியமாக நின்று அந்தக் குடிசையைச் சுட்டிக்காட்டி கேட்கத் தொடங்கு முன்னமே அவர் புரிந்துகொண்டு கடகடவென்று சிரித்தார். அது ஒருவகை ஏளனம் போலிருந்தது.

“ஓ! அதுவா? அது பெரிய கதை தம்பி...இந்தக் கட்டாடி பக்கத்து ஊரைச் சேர்ந்தவன். சின்ன வயதிலிருந்தே எனக்கு இவனைத் தெரியும். அடிக்கடி பூஜை, புனஸ்காரம் என்று பொழுதைக் கழிப்பான். தன்னிடம் தெய்வங்கள் வந்து பேசுவதாகக் கூறுவான். பெண்களைக் கண்டால் அவர்களது பின்னால் சுற்றித் திரியாமலே ஒரே பார்வைதான் பார்ப்பான். அப்புறம் அவர்கள் அவன் பின்னால் ஓடுவார்கள்... இன்னும் பல கட்டுக் கதைகளைச் சொல்லிக்கொண்டே தனக்குப் பின்னால் ஒரு கூட்டத்தைக் கூட்டித் திரிவான். படிக்கவேண்டிய வயதில் படிக்க வில்லை. வேலை எதுவும் செய்யவில்லை. அம்மா ஒரு வயதுபோன கிழவி. அவள் இவனை வீட்டைவிட்டு விரட்டிவிட்டாள். அவன் தனது கூட்டாளிமாருடன் சேர்ந்து இந்தக் குடிசையையும், நிலத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துக்கொண்டு இதில் ஏதோ செய்து மக்களை ஏமாற்றித் திரிகிறான்..."

இந்தக் கதையைக் கேட்டதும் பாரூக்கிற்கு சப்த நாடியும் ஒடுங்கினாற் போலிருந்தது. இந்த வலையில் சதாசிவம் எப்படி விழுந்திருப்பான் என்று யோசிக்கத் தொடங்கினான்.

"ஒண்ணும் தெரியாத அப்பாவி ஜனங்கள் வந்த இவன்கிட்ட பிரச்சினைகளச் சொன்னால் உடனே அதிசயங்களைச் செய்துகாட்டி அவங்க நம்பிக்கையை கைப்பத்திடுவான்...அவங்க வந்து போய்கிட்டு இருப்பாங்க...அவங்களுக்குத் தெரிஞ்ச ஆக்கள கூட்டிட்டு வருவாங்க.." அவர் மேலும் தொடர்ந்து சொன்னார்.

"இங்கே வந்துபோவது எந்த ஊர் ஜனங்கள்?" அவன் விசாரித்தான்.

"வெளியூர் ஆக்கள்தான் நிறைய வருகிறார்கள்..."

"அவர்களுக்கு இவனைத் தெரியாதா? எப்படி நம்புகிறார்கள்?"

"தெரிந்தாலும் என்ன செய்ய? அவன் அற்புதங்கள் செய்து காட்டி நம்ப வைத்திடுவான்.."

அவன் தகவல் தெரிவித்தற்கு அவருக்கு நன்றி கூறிவிட்டு அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டான். மேலும் சிலரை விசாரித்தபோது அவனைத் தெரிந்தவர்கள் இந்தக் கதையையே சொன்னார்கள். அவன் குழப்பத்துடன் வீடு நோக்கித் திரும்பினான்.

## அத்தியாயம்–16

"மனப் பிறழ்வுக்குள்ளான மணமகளைக் குணமாக்க அவளது வாயில் எலுமிச்சைப் பழத்தைத் திணித்து பாக்குவெட்டியால் தள்ளிய கட்டாடி!

மணப்பெண் மரணம்! கட்டாடி கைது!"

முன்பக்கப் பத்திரிகைச் செய்தியைப் படித்த பாரூக் திடுக்கிட்டு "ஸைபுன்..." என்று அவளை உரக்க அழைத்தான். உள்ளிருந்து குரல் கொடுத்த ஸைபுன்னிஸா என்னவோ ஏதோவென்று பதறி ஓடிவந்தாள்.

தனது கையிலுள்ள பத்திரிகையை அவளிடம் நீட்டினான் அவன். ஏதும் பேசாமல் அவளது முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அதைப் படித்துவிட்டு நிமிர்ந்த அவனது கண்களைப் பார்த்த அவள் அவன் ஏதோ ஒரு சந்தேகத்திலும், பயத்திலும் உறைந் திருப்பதை உணர்ந்துகொண்டாள். சட்டென்று, "இது பக்கத்து ஊர்க் கதையில்லயே... அந்தப் பொம்புளயும் கொஞ்சம் இப்ப தேறிட்டாவே... ஹொஸ்பிடல்ல மருந்து எடுக்கிறதா சொன்னாங்க ஹனீமா தாத்தா..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அவனை ஆறுதல் படுத்தினாள்.

அவன் அதுவரை அந்தப் பத்திரிகைச் செய்தியை வாசிக்கத் தோன்றாமலே உட்காந்திருந்தவன், இப்போது ஆசுவாசப் பெருமூச்சு விட்டவனாக சாய்ந்து அமர்ந்து கண்களை மூடிக்கொண்டான்.

"ஐயோ... பாவம்...அந்தப் பொம்பள..." என்ற பரிதாபப் பட்டவளாக ஸைபுன்னிஸாவும் உள்ளே சென்றாள்.

அப்போது அங்கு வந்த சேர்ந்த சதாசிவத்தின் மனைவியைக் காண அவனுக்கு வியப்பாக இருந்தது. "என்ன இந்தப் பக்கமா...?" என்ற இழுத்தான்.

"பாருங்க தம்பி இந்த அநியாயத்த.. இந்த மனுஷன் இப்ப வீட்டுக்கு வாறதே இல்ல... நேத்து நானும் மகனும் பாத்துட்டுவரப் போனோம்..மிச்ச நேரமா அவரு கண்முழிக்கவே இல்ல. பிறகு தொறந்து பாத்து "நீயாருன்டு கேட்டாரு பாருங்க...நா என்னத்த சொல்றது..? என்னயும் எம் புள்ளயயும்கூட அவருக்குத் தெரியுதில்லையே..."என்று அங்கலாய்க்கத் தொடங்கினாள்.

அவனுக்கு மீண்டும் வியப்பாக இருந்தது. "இப்பதான் சதா அண்ணாவப்பத்தி பேசிக்கிட்டிருந்தோம்...."என்று கூறி பத்திரிகையை அவளிடம் நீட்டினான். அதைப் படித்துப் பார்த்துவிட்டு அவள் கிடு கலங்கி நின்றாள்.

உள்ளிருந்து எட்டிப்பார்த்த ஸைபுன்னிஸாவைக் கண்டதும், "பாருங்க தங்கச்சி... இப்புடி நடந்துட்டுதே.. அந்த மனுஷனுக்கு புத்தி கித்தி பெசகிப் போச்சுதோ என்னவோ தெரியலயே.." என்று மீண்டும் அங்கலாய்க்கத் தொடங்கினாள்.

ஸைபுன்னிஸா பரிதாபத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணுக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்று அவளுக்குத் தெரியவில்லை.

"என்ன செஞ்சாவுது அவர அங்கயிருந்த கூட்டிட்டு வந்துறணும்." என்று முணுமுணுத்துக் கொண்டாள்.

"அதுதான் தங்கச்சி நல்ல யோசனை.. அதப்பத்திதான் உங்க கிட்ட கேக்க வந்தேன்..."என்று அவள் கூறவே, யோசனையுடன் பாரூக்கைப் பார்த்தாள் ஸைபுன்னிஸா.

அவனது கண்கள் சிவந்திருந்தன. எதையோ ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கிறான் என்று தோன்றுமளவிற்கு அவனது கண்கள் அப்புறமும், இப்புறமும் அசைந்து கொண்டிருந்தன.

அவனாலும் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியவில்லை. சமீபத்தில் ஒருநாள் தான் அவனைப் பார்க்கச் சென்றபோது அவன் விழியே திறக்காமல் தியானம் செய்துகொண்டிருந்த தோற்றம் கண்ணுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. அவன் தற்போது கொஞ்சமாவது மாறியிருக்கலாம் என்று எண்ணியே அவன் பேசாதிருந்தான். இப்படியொரு தவத்தில், சித்தம் கலங்கிய நிலையில் உள்ளவனை என்ன செய்து மீட்பது என்ற சிந்தனையினூடே அவனது முகமும் வெளிறிப் போயிருந்தது.

எப்படிப் பார்த்தாலும் மீண்டும் ஒருமுறை அவனை நேரில் சென்று அழைத்து வராமல் எதுவும் நடக்காது என்று தோன்றிற்று. "நா இன்னக்கி அவரப் பாக்கப் போறேன்..."யாராவது தன்னுடன் வரலாம் என்று தோன்றவே அவன் உரக்கக் கேட்டான்.

ஸைபுன்னிஸா உடனே சம்மதம் தெரிவித்தாள். இருவரும் சதா சிவத்தின் மனைவியையும் ஏற்றிக்கொண்டு செல்வதென்று முடிவெடுத்தனர்.

அன்று மாலை அவனும், அவளும், சதாசிவத்தின் மனைவியும் வேனில் புறப்பட்டனர். ஹசனுக்கு வேன் பயணம் என்றால் கொள்ளைப் பிரியம் ஆதலால் அவனையும் எடுத்துக் கொள்ள அவள் தவறவில்லை. அன்று மாலைவரை சதாசிவத்தின் மனைவி அவர்களுடனேயே தங்கி யிருந்தாள். முற்றத்துப் பூஞ்செடிகளுக்கு நீர் வார்த்துக்கொண்டும், அவனது அவுட் ஹவுஸைக் கூட்டித் துப்பரவு செய்துகொண்டும், குழந்தைக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டும் அவள் பொழுதைக் கழித்தாள்.

ஆயினும் அவளது உள்ளம் சதாவும் ஓலமிட்டுக் கொண்டி ருந்தது. அவன் எப்படியாவது திரும்பி வந்துவிட வேண்டும் என்று அவளுள்ளம் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தது.

அவர்கள் குடிசைக்கு முன்னால் பெரியதொரு கூட்டம் கூடி யிருக்கக் கண்டு திகைப்புடன் நெருங்கிச் சென்றனர். தூரத்திலிருந்து பார்க்கும்போது எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. அருகே சென்ற போதுதான் குடிசையின் முன்னால் பொலிஸ் ஜீப் ஒன்று நிற்பதும், அருகே இரு பொலிஸ்காரர்கள் நின்றிருப்பதும் தெரிந்தது. தவிரவும், வழக்கத்தைவிடக் கூட்டம் அதிகமாகக் கூடிநின்றது.

அவனது மனைவி நெஞ்சைப் பிளக்கும் விம்மலுடன் முன்னால் அவசர அவசரமாகப் பாய்ந்து சென்றாள். கூட்டம் அவளைக்கண்டு பயந்து ஒதுங்கி வழிவிட்டது. ஆவேசம் வந்தவள்போன்று உள்ளே நுழைந்தவள் ஒருகணம் திகைத்து நின்றாள். அவளுக்குப் பின்னால் சென்ற ஸைபுன்னிஸாவும், பாரூக்கும் செய்வதறியாது திகைத்து நின்றனர். அவன் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு அவள் பின்னால் போய் நின்று எட்டிப் பார்த்தான்.

உள்ளே....!

முன்பு சாமியார் பீடத்தில் இருந்தவன் பொலிஸ் விலங்குடன் நின்றிருந்தான். அவன் நின்றிருந்த கோலம் அவன் அதுவரை மந்திரம் ஜெபித்துக் கொண்டிருந்த நிலையிலிருந்தது போலவும், திடீரென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் அங்கு உட்புகுந்து அவனைக் கைது செய்தது போலவும் இருந்தது. அவனது விழிகள் இப்போதும் பாதி மூடியபடியே இடையிடையில் அலங்க மலங்க விழித்தன. கைகளில் மணிமாலைகளை அப்போதும் உருட்டிக் கொண்டிருந்தான்.

தன்னைச் சுற்றி என்ன நடக்கின்றது என்ற அறியாதவைனைப் போலவே அவன் பொலிஸ் வண்டிக்குள் ஏறினான். முகத்தில் எந்தவிதமான சலனமும் தென்படவில்லை.

"என்னை எதற்காக அழைத்துச் செல்கிறீர்கள்..?" திடீரென்று தூய தமிழில் அவன் பேசினான். கூட்டம் ஒருகணம் அந்தக் குரலைக் கேட்டுச் சிலிர்த்தது.

"உன்மீது குற்றச்சாட்டுகள் பல பதிவாகியுள்ளன. பெண்கள் துஷ் பிரயோகம், படுகொலை, ஏமாற்று வித்தை... இப்படி...பல செய்திகள்" பொலிஸ்காரன் முடிக்குமுன்னமே அவன் சீறினான். "அதற்கு ஆதாரம் உண்டா...?"

"இதோ..." என்று பொலிஸ்காரன் எதையோ நீட்டிக் காட்டினான். அதைப் படித்துப் பார்த்துவிட்டு அவன் மௌனமாகச் சிரித்துக்கொண்டே வண்டியில் ஏறிக்கொண்டான்.

கூட்டம் குசுகுசுவென்று எதையோ பேசிக்கொண்டது. பாரூக் அவர்களுக்கருகில் சென்று காதுகளைத் தீட்டிக்கொண்டு கேட்டான்.

கடந்த வாரத்தில் ஒரு சம்பவம் நடந்திருந்தது. ஒரு பெண்ணைச் சுகவீனமென்றுகூறி அவளது கணவன் அழைத்து வந்தானாம். அவள் முன்னால் புகைமண்டலத்தை எழுப்பச் செய்து அவளை மூச்சுத் திணற வைத்துவிட்டாராம் சாமியார். அவள் கணவனிடம் ஓடிச்சென்று தனக்கு நெஞ்சு அடைக்கிறதென்று சொன்னாளாம். கணவன் அதைக் காதில் வாங்காமலே சாமியிடம் ஒப்படைக்க அவன் மேலும் மேலும் புகையைப் போட்டு மூட்டி... அவள் மயங்கி விழுந்து விட்டாளாம். அப்புறமாக அனைவரும் அவளை எடுத்துக் கொண்டுபோய் வைத்தியசாலையில் சேர்க்கவே, நேற்றுவரை அவள் கண்விழித்துப் பார்க்கவேயில்லையாம். அவளது மூச்சுக் காற்றில் தீய விஷவாயு ஒன்று கலந்து வருவதை அவதானித்த டாக்டர்கள் பொலீஸில் தகவல் கொடுத்தனராம். பொலிஸ் அவளது மரணத்தை இப்போது ஊர்ஜிதம் செய்துகொண்டு வந்திருக்கிறதாம்.

கேட்டுக்கொண்டிருந்த பாரூக்கிற்கு வியப்பு தாங்க முடிய வில்லை. இப்படியும் பைத்தியக்காரர்கள் உலகில் இருக்கக்கூடுமா என்ற கேள்வி பெரிதாக எழுந்து நின்றது. இப்படி எத்தனை அப்பாவிகளை இந்தப் பாவி மனிதன் கொன்று போட்டானோ என்று அவனது உள்ளம் பிரலாபித்துக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸைபுன்னிஸாவைத் திரும்பிப் பார்த்தான். அவளும் எதையோ சிந்தித்துக் கொண்டிருப்பது போலத் தெரிந்தது. குழந்தை உறங்கிப் போயிருந்ததால் அதனை வேன் இருக்கையில் கிடத்திவிட்டு அவள் இறங்கி வெளியே நின்றிருந்தாள். சில பெண்கள் அவளருகில் வந்து சில பழைய சம்பவங்களை மீட்டத் தொடங்கினர். ஒரு நோயாளிக்கு வைத்தியம் செய்கிறேன் என்றுகூறி அவர் அதுவரை குடித்துக் கொண்டிருந்த மருந்தை அறவே நிறுத்திவிட்டு சாமியார் ஏதோ மருந்து கொடுத்தாராம். அதைக் குடித்துடன் அதிகம் தண்ணீர் பாவிக்காமல் இருக்கவும் சொன்னாராம். அந்த மனிதர் 'தண்ணீர் தண்ணீர்' என்று கேட்டும் அவருக்குக் குடும்பத்தினர் கொடுக்காமலே இருந்து விட்டன ராம். கடைசியில் ஒரு சொட்டுத் தண்ணீர் வாயில் படாமலே அம்மனிதர் இறந்து விட்டாராம். அது வீட்டில் நடந்த சம்பவம் என்பதால் இயற்கை மரணம் என்பதாகப் பேர் பண்ணி மூடிமறைத்து விட்டார்களாம்.

இன்னமும் பல கதைகள். பெண்களை நிலை மறக்கும்படியாக மயங்கச் செய்து அவர்களது கழுத்தில் இருந்த மாலையை அபேஸ் பண்ணல், பெண்களுக்குத் தெரியாமலே அவர்களை இணங்கவைத்து துஷ்பிரயோகம் செய்தல், கணவன்மாரை பொய்க் காரணங்கள்கூறி வரவிடாமல் தடுத்தல்... இப்படிப் பல திருகு தாளங்களாம்.

இத்தனையும் தெரிந்துகொண்டும் பக்தர்கள் எப்படி அவனை மீண்டும் மீண்டும் நாடி வருகிறார்கள் என்று அவள் யோசிக்கத் தொடங்கினாள். எதுவும் புரிவதாகயில்லை.

சதாசிவத்தின் மனைவி எங்கே என்ற யோசனை அவளுள் எழுந்தது. உள்ளே சென்று தேடிப் பார்க்கலாம் என்று எண்ணியவளாக வேன் கதவை ஓசைப்படாமலே சாத்திவிட்டு குடிசை முன்பாகச் சென்றாள். பாரூக்கும் அவ்விடத்தில் நின்றுகொண்டிருந்தான்.

குடிசையின் உள்ளே பக்தர் கூட்டம் ஆணும், பெண்ணும் கலந்ததாகத் தியானத்தில் ஆழ்ந்து நின்றது. யாருக்கும் தம்மைச் சுற்றி நடப்பது தெரியாததுபோல் இருந்தது. அங்கே ஒரு மூலையில் சதாசிவமும் அமர்ந்திருந்தான்.

அவனது மனைவி அவனருகே அமர்ந்து அவனிடம் எதையோ உரத்த குரலில் கேட்டுக் கொண்டிருந்தாள். மந்திரங்களின் ஓசையில் அக்குரல் வெளியில் அவர்களது காதுகளுக்கு எட்டவில்லை. அவளது முகபவத்திலிருந்து அவனை அவள் கெஞ்சி அழைப்பதாகப் பட்டது. அவன் இடையிடையே விழிகளைத் திறந்து பார்த்துவிட்டு மீண்டும் கண்களை மூடிக்கொண்டான். சிலவேளைகளில் அவளை யாரையோ பார்ப்பதுபோல விழித்துப் பார்த்தான்.

தனது முயற்சி பலனளிக்காதவளாக அவள் எழுந்து வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸைபுன்னிஸாவிடம் முறையிட்டாள். அவளுக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. பாரூக்கின் முகத்தைப் பார்த்தாள்.

"நான் போய் கூப்பிட்டுப் பாக்கிறேன்..." அவன் ஆறுதல் கூறியவனாக சதாசிவத்தை நோக்கிச் சென்று அவனருகில் அமர்ந்து கொண்டான். அவனது தோளைத் தட்டி எழுப்பினான்.

கண்களைத் திறந்து பார்த்த சதாசிவம், "நீங்கள் யார்...?" என்ற கேள்வியையே திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தின்பின்னர் திடீரென்று எழுந்து நின்ற சதாசிவம் கூட்டத்தைப் பார்த்து உரக்கப் பேசினான்.

"இதுவரை எங்கள் குருவாக இவ்விடத்தில் அமர்ந்து பூஜைகளை நடத்திய எமது தலைவர் மீண்டும் திரும்பி வருவார். அவர் மீதான குற்றங்கள் யாவும் பொய்யானவை என்று விரைவில் நிரூபிக்கப்படும். அதுவரை இந்த வேலைகளைப் பொறுப்பாக நின்று கவனிப்பவர் யார்?"

கூட்டம் அமைதியாக இருந்தது. யாரிடமும் இருந்து எந்தப் பேச்சும் மூச்சும் எழவில்லை.

"அப்படியானால் இதைத் தொடர்ந்து கொண்டு செல்வதா அல்லது விட்டு விடுவதா..?" சதாசிவம் கணீரென்ற குரலில் மீண்டும் பேசினான். "தொடர்வோம்...தொடர்வோம்.." என்று கூட்டம் அமைதி யான குரலில் பதில் அளித்தது.

"ஆயின், நான் அடியவனாகிய இந்தச் சீடன், உங்கள் முன்னால் அமர்ந்திருந்திருந்து பூஜைகளைத் தொடர்ந்து செய்வதில் உங்களுக்கு ஆட்சேபணையுண்டா? எங்களது குரு எங்கிருந்தாலும் எங்களை ஆசீர்வ தித்துக் கொண்டிருப்பார் என்று நாம் நம்புவோம்..." அவனது குரல் எந்தப் பிசகும் இன்றித் தெளிவாக ஒலித்தது. அப்படிக் கூறிக்கொண்டே அங்கு அமர்ந்திருந்த ஜனத்திரளின் முன்னால் போய் நின்று அவர்களை வணங்கினான். குருவின் பீடத்தை வணங்கி அதில் அமர்ந்து கொண்டான்.

சதாசிவத்தை இனி மீட்கவே முடியாது என்று தோன்றவே, பாரூக் எழுந்து வெளியேறினான்.

## அத்தியாயம்–17

அன்று பொசன் முழு நோன்மதி தினம். இலங்கை முழுவதுமே பக்தி உணர்வில் மூழ்கித் திளைத்துக் கிடந்தது. இந்த சிங்கள நாட்டிற்கு பௌத்த மதம் வந்து சேர்ந்த நாளை நினைவுறுத்தி, புனித வெள்ளரச மரக்கிளை காணப்படுகின்ற அனுராதபுர புண்ணிய நகரத்தை நோக்கி இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே வாகனங்கள் சாரிசாரியாக ஊர்வலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத் தொடங்கியிருந்தன.

அசோக மன்னனிடமிருந்து கிடைக்கப்பெற்ற அந்தத் தூதைச் சுமந்து வந்த மகிந்த தேரர் மன்னன் தீசனை சந்தித்த மலைத்தொடர் அமைந்துள்ள மிஹிந்தலை நகரத்தை நோக்கியும் வாகனங்கள் ஊர்ந்துகொண்டிருந்தன.

அவற்றைக் கவனமாக ஆராய்ந்துகொண்டிருந்த ஹசன் அடிக்கடி நிலத்தில் துள்ளி குதூகலித்துச் சிரித்தான். அப்போது அங்கு வந்த குணசேன அவனைத் தூக்கி வைத்தபடி சிறிது நேரம் வேடிக்கை காட்டினான்.

சென்ற வெசாக் தினத்தன்று அவன் வேலைக்கு வரமாட்டான் என்று எண்ணி மிகச் சாவகாசமாகத் தூங்கி எழுந்தபோது, சற்று தாமதித்து வேலைக்கு வந்த அவன், அவள் "இன்று பன்சல போக வில்லையா?" என்று விசாரித்தபோது "மொன வெசாக்த நோனா...?" என்று பதில் கேள்வி கேட்டபடியே கடமையில் ஈடுபட்டதை அவள் எண்ணிப் பார்த்தாள். அதுபோலவே இப்போதும் வேலைக்கு வரக்கூடும் என்று அவள் ஊகித்தாள்.

அவனோ தனது விடுமுறையை சொல்லிக்கொண்டு சிறிது பணம் வாங்கிப்போக வந்திருந்தான். அவள் பணத்தைக் கொடுத்துவிட்டு ஹசனை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டாள்.

"இரவு தோரணம் பார்க்கக் கூட்டிச் செல்லுங்கள்..." என்று அவன் ஞாபகப்படுத்தியபடி நுழைவாயிலைக் கடந்து வெளியே சென்றான்.

ஸைபுன்னிஸாவும், பாரூக்கும் பக்கத்து ஊருக்கு ஏதோ தேவைக்குப் போக வேண்டியிருந்தது. வேலைகள் முடிந்தபின்னர் அவன் அவளையும், குழந்தையையும் வேனில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டான்.

கெகிறாவ பிரதான வீதியில் அடி மேல் அடிவைத்தே வாகனங் கள் செல்ல வேண்டியிருந்தது. உட்புற வீதிகளிலோ அதைவிட மேலாக, அங்குலம் அங்குலமாக நகரவேண்டிய நிலைமை காணப்பட்டது. நிலைமையைச் சமாளித்து சிறுவனைக் கூட்டிக்கொண்டு சென்ற இருவரும் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமை காத்தனர்.

ஜனங்கள் தூய வெண்ணிற ஆடைகளில் இரவு முழுவதும் "சில்" அனுஷ்டித்து பாவனா பண்ணிய புண்ணிய உணர்வோடு வீதியோரமாக வும், வாகனங்களிலும் சென்று கொண்டிருந்தனர். சிற்சில இடங்களில் பன்சலயின் முன்னால் அமர்ந்திருந்த கூட்டத்தின் முன்வரிசையில் பிக்குவாக மாறப் போகும் இளம் சிறார்களுக்கான சமய நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அவர்களுடன் கூடிநின்று அவர்களை சமயத்திற்கு ஒப்புக்கொடுக்கும் தாய்மார்களின் கூட்டம் கண்ணீர் மல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைச் சூழ்ந்து கொண்டிருந்தது. நடுவில் ஒரு பிக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார். தாம் பிக்குகளாக மாறிவிட்டாலும் தாய் தந்தையருக்குள்ள கடமைகளைத் தொடரவேண்டும் என்றும், தமது பெற்றோர் நோயுற்றபோது புத்த பெருமான் ஓடிச்சென்று அவர்களைப் பார்த்து வணங்கி வந்ததையும் எடுத்துக் கூறிக்கொண்டிருந்தார். அதைச் சிறிது நேரம் கவனித்துவிட்டு அவர்கள் அப்பால் சென்றார்கள். வழிநெடுகிலும் தான நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதையும், சிறுவர்கள் வரிசையில் காத்திருப்பதையும் கவனித்து ஹசன் மிக்க மகிழ்ச்சியடைந்தான்.

சோறும், கறியும், வாழைப்பழம், கோப்பி, குளிர்பானம் என்று விதம் விதமான தான சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. இளைஞர்கள் பலர் எல்லாவற்றுக்கும் பொறுப்பாக நின்று தேவையானவற்றை வழங்கிக் கொண்டிருந்தனர்.

ஓரிடத்தில் சிறுவர்கள் யாவரும் ஒன்று கூடி கைளை நீட்டி எதையோ வாங்கிச் சாப்பிடுவதை உன்னிப்பாகக் கவனித்து ஹசன் அது தனக்கும் வேண்டும் என்று அடம்பிடிக்கவே அவர்கள் சற்று நிறுத்தினார்கள். அது ஐஸ்க்ரீம் தன்சல...! பெரியவர்களும், சிறியவர்களும் வரிசையாக நின்று ஐஸ்பழம் வாங்கிச் சாப்பிடுவதை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்துவிட்டே ஹசன் அவ்வாறு கேட்டான்.

என்ன செய்வதென்ற குழப்பத்தில் சுற்றுமுற்றும் பார்த்தபோது அங்கு ரணசிங்க தென்பட்டான். அவன் அவர்களைக் கண்டவுடன் ஓடோடி வந்து ஹசனிடம் ஒரு பழத்தை வாங்கி நீட்டினான். மிகுந்த நன்றியணர்வுடன் அவனைப் பர்த்த ஹசன் சப்புக் கொட்டிக்கொண்டு சாப்பிடத் தொடங்கினான். அவர்களுடனேயே சிறிது தூரம் நடந்து வந்தான் ரணசிங்க.

எதிர்ப்புறமாக ரொட்டி தன்சல நடந்து கொண்டிருந்தது. ஹசன் வேறேதும் குழப்பம் பண்ணாமல் ஐஸ் பழத்தை சுவைத்துக் கொண்டிருந்தான்.

“உங்களுக்கு என்ன வாங்கித் தர...?” அவன் கேட்டான். ஒரு புன் சிரிப்புடன் அதை மறுத்த பாரூக், மனைவியைப் பார்த்து கண்சிமிட்டிய படியே, “ஒனக்கு....?” என்று அவளைச் சீண்டினான்.

“எனக்கு இப்போ சோளம் வேணும்... நீங்க பட இருங்கு தன்சல போட மாட்டீங்களா...?” என்று கேட்டு அவளும் சிரித்தாள்.

“பொப் கோர்ன் தன்சல ஒன்றும் இல்லையா..?“ என்று அவளை அவன் மீண்டும் சீண்டத் தொடங்கவே, ரணசிங்கவும் வாய்விட்டுச் சிரித்துவிட்டான். அப்புறம் அவர்களிடம் விடைபெற்று அப்பால் கூட்டத்தில் கலந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா இடங்களிலும் உள்ளதைவிட நீண்ட வரிசை சோறு தன்சலயில் காணப்பட்டது. அது மத்தியானம் சாய்ந்து வரும் பொழுதாயினும் கூட மக்கள் வயிற்றுப் பசியோடு காத்திருப்பதைக் காண கவலையாக இருந்தது.

அப்பால் செல்லும்போது மனிதக் கும்பல் குறைவான இடத்தில் இன்னொரு பத்தடி தூரத்தில் சோறு தன்சலயில் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. இதைவிட்டு அதில் ஏன் முண்டியடிக்கிறார்கள் என்று எண்ணியபடி வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தாள் ஸைபுன்னிஸா.

இரவும் ஹசன் நிலத்தில் காலை உதைத்து அழத் தொடங்கினான். அவனைக் கூட்டிக்கொண்டு இருவரும் பொசன் தோரணம் பார்க்கச் சென்றனர். ஒவ்வொரு தோரணமும் கலையழகுடன் செய்யப் பட்டு, பல வடிவங்களில் வண்ண விளக்குகள் ஒளிவீசிக் கொண்டிருந்தன. மின்னி மறையும் கலர் கலரான விளக்குளைக் கண்டு மகிழ்ந்து அனை வரும் கூட்டமாக நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். எங்கும் அமைதி யாக பக்தி கீதங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. தோரணங்களின் மைய மாக மகிந்த தேரரின் வருகையும், அவர் தீசன் மன்னனுக்கு வழங்கும் உபதேசமும் காட்சிகளாக வரையப்பட்டிருந்தன. அதைச் சூழவும் பல விதமான ஜாதகக் கதைகள் சித்திரங்களாக வரையப்பட்டு காணப் பட்டன.

அவன் கேட்ட விளையாட்டுப் பொருட்களை பக்கத்திலே வரிசையாகக் கட்டப்பட்டிருந்த சிறிய பெட்டிக் கடைகளில் வாங்கிக் கொடுத்தனர். அவற்றைக் கையில் எடுத்தவுடன் அவன் வீட்டுக்குப் போகவேண்டும் என்று நச்சரிக்கத் தொடங்கினான். அவர்கள் சிறிது இருந்துவிட்டு எட்டரை மணியளவில் வீடு திரும்பினர்.

## அத்தியாயம்–18

அடுத்தடுத்த இரண்டு மூன்று நாட்களும் நாட்டில் இன்னும் பல விஷேட பக்தி வைபவங்களும். ஊர்வலங்களும், பெரஹராக்களும் போய்க்கொண்டே இருந்தன. நுழைவாயில் அருகில் நின்று அவ் வினோத நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில் ஹசனுக்குக் கொள்ளைப் பிரியம். அவனும், அவளும் மாறி மாறி அவனுடன் நின்ற பொழுதைப் போக்கினர்.

பெரஹராவில் செல்லும் வர்ண உடையணிந்த சிறுவர்களைக் கண்டும், “விசுக் விசுக்” எனும் சவுக்கடிப்பாளர்களைக் கண்டும் அவன் கைகாட்டி தன்னிடம் அழைத்தான். யானைகளின் கம்பீர பவனி கண்டு கைகொட்டிச் சிரித்தான். நடனமிட்டுச் செல்வோரிடம் தலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டிக் காட்டினான். அன்னையும் தந்தையும் அவனது விளை யாட்டைக் கண்டு மெய்ம்மறந்து நின்றனர்.

அடுத்தநாள் அமைச்சரிடமிருந்து தனிப்பட்ட முறையில் பாரூக்குக்கு அழைப்பு வந்தது. அனுராதபுரத்திற்கு அண்மையிலுள்ள ஒரு விகாரையில் ஏதோ தரமுயார்த்தும் வைபவம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. பிறமதத் தலைவர்களில் ஓரிருவர் அழைக்கப்பட்டி ருப்பதாகவும், தனது நண்பன் என்ற வகையில் அந்த வைபவத்தில் வந்து கலந்து கொள்ளும்படியும் அவர் அழைப்பு விடுத்திருந்தார். அவனுக்கு அப்படியொரு நிகழ்ச்சியில் தான் கலந்துகொள்வது குறித்து சங்கடமாக இருந்தது. எனினும், அவரது அழைப்பிற்கிணங்கி புறப்பட்டான். மதப் பிரார்த்தனைகள், உரைகள் என்பன இடம்பெற்றன. இவ்வளவு காலமும் யுத்தத்தினால் சீரழிந்து கிடந்த தாய் நாட்டில் இனித்தான் பௌத்த மதக் கல்வியின் விருத்திக்கு அதிக நிதி ஒதுக்கப்படப் போகிறதென்று அமைச்சர் கூறினார். இனி வரும் காலத்தில் இத்தகைய யுத்தம் பற்றிய எண்ணமேயின்றி மக்கள் தமது நாட்டின் கலாசார, பண்பாட்டு விருத்திக்கு பௌத்த மதத்தின் ஆன்மீக வழியில் சிந்திப்பதன் மூலமாகப் பணியாற்றலாம் என்றும், அதற்கான வழிவகைகள் பிறந்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். அவன் முன் வரிசையிலிருந்து அவதானித்துக் கொண்டிருந்தான். ஸைபுன்னிஸா குழந்தையுடன் வெளியில் அமர்ந்திருந்தாள்.

இரவு அவர்களைத் தமது வீட்டு விருந்துக்கு அழைத்தார் அமைச்சர். இன்று அவரது பிறந்தநாள் என்றும், அதை அவனது குடும்பத் துடன் கொண்டாடவிருப்பதாகவும் கூறியபோது இருவராலும் மறுக்க முடியவில்லை. மாலைப்பொழுதை சிறிது நேரம் நகரப் பூங்காவிலும், திசாவெவ குளத்திற்கருகிலும் கழித்துவிட்டு முன் அந்தியில் அவனது வீட்டுக்குச் சென்றார்கள்.

வீடு எளிமையாக இருந்தது. முன்பகுதி மக்களைச் சந்திப்பதற் கான ஒரு அலுவலக அறையைக் கொண்டிருந்தது. அதில் அமர்ந்து கொண்டார்கள். அப்போது அங்கே கெகிறாவ பிரதேச செயலாளரும் தனது குடும்பத்துடன் வந்து சேர்ந்தார். அவரையும் அமைச்சர் அழைத்திருந்ததாகத் தெரிந்தது.

சிறிது நேரம் அனைவரும் பேசிக் கொண்டிருந்தபோது குளிர்பானம் வந்தது. அதை அருந்திவிட்டு ஸைபுன்னிஸா முற்றத்தில் சென்று குழந்தையுடன் அமர்ந்து விளையாட்டுக் காட்டத் தொடங் கினாள். அவனை ஓரிடத்தில் வைத்திருப்பது மிகச் சிரமமாகப் பட்டது. எனவே, அவனுடன் தனித்திருந்து அவனது போக்குகளிற்கு இசைந்து கொடுப்பதே சரியானது என்று அவள் எண்ணினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்ந்த காற்று எங்கும் வீசிக் கொண்டிருந்தது. முற்றத்தில் வரிசையாக பூஞ்செடிகள் பூத்துக் கிடந்தன. நிலத்திலும் ஓரத்தில் செங்கல் அலங்காரமிட்டு உள்ளே பல பாத்திகளில் ரோஜாக்கள் நடப்பட்டிருந்தன. அவற்றில் மஞ்சள் ரோஜா இருளிலும் தெளிவாக மலர்ந்து கிடந்தது. நிலவு ஊமையாய் ஆனால், ஓரளவு தெளிவுடன் ஊர்ந்து கொண்டிருந்தது. இருண்ட வாழைமரங்களின் இடைவெளியில் நிலவின் கிரணங்கள் விழுந்து வெளிச்சமிட்டுக் காட்டின. ஓரமாக ஒன்றிரண்டு நட்சத்திரங்கள் மின்னத் தொடங்கின. சில்வண்டுகளின் ரீங்காரம் தூரத்தில் கேட்பது போலிருந்தது.

அமைச்சர் நடுத்தர வயதானவர். ஆரம்பத்தில் ஒரு சாதாரண ஆசிரியராக தனது தொழிலைத் தொடங்கி, பின்னர் அரசியல் மோகத் தால் அத்தொழிலை விட்டதாக அவனிடம் கூறியிருக்கிறார். அவரது மனைவி ஆசிரியையாகக் கடமைபுரிந்து வருகிறார். ஒரே ஆண் குழந்தை. அது சாதாரண தரத்தில் கற்றுக் கொண்டிருந்தது. அப் பையன் தனது அறையில் சில நண்பர்களுடன் அமர்ந்து புத்தகங்களில் எதையோ கவனமாக ஆராய்ந்து கொண்டிருந்தான்.

அமைச்சர் உள்ளே சென்று பின்னர் திரும்பி வந்தார். சமையல் ஏறக்குறைய முடிந்து விடப் போவதாக அறிவித்தார். தனது பிறந்த நாளாயினும்கூட அன்று வழமைக்கு மாறாக சைவ உணவு மட்டுமே சமைக்கப்படுவதாகவும் கூறினார். பிரதேச செயலாளரின் மனைவி அடுத்த ஹோலில் அமர்ந்து தனது பெண்ணுடன் ரிமோட் கொண்ட் ரோலை அழுத்தி அழுத்தி தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந் தார். அவர்கள் தொலைக்காட்சி நாடகத்தில் மூழ்கியிருப்பதாகப் பட்டது.

ஆண்கள் மூவரும் முன்ஹாலில் அமர்ந்து கொண்டனர். அமைச்சர் புன்முறுவல் பூத்த முகத்தோடு பாரூக்கைப் பார்த்துத் தனது அழைப்பை ஏற்று தம்பதி சமேதராக வந்ததற்கு அவனுக்கு நன்றி தெரிவித்தார்.

"அதற்கென்ன? இன்றைய நாள் வித்தியாசமான அனுபவங் களுடன் கழிந்தது..." பாரூக் கூறினான்.

"அனுராதபுரம் புனித நகரத்திற்கு ஒரு பொசன் தினத்தன்று நாங்கள் வருவதும், உங்கள் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொள்வதும் இதுதான் முதல் தடவை..." சிரித்துக்கொண்டே சொன்னான்.

"இன்று அனுராதபுரம் கண்கொள்ளா அழகுடன் திரும்பிய திசையெல்லாம் புனித தூபிகளோடு, மின்னலங்காரம் கொழிக்கக் காட்சி தருகின்றது...."

"ஆமாம். நாடு முழுவதும் பொசனுக்காக பல பிரிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தப்பட்டு அனுராதபுரம் எனக்குக் கீழ் தரப்பட்டது. அதுவே இன்றைய முக்கிய வலயம்..." அமைச்சர் கூறினார்.

"பௌத்தத்தின் சிறப்புகள் பலவற்றை இன்று நான் தெளிவாக அறிந்து கொண்டேன்."

"உண்மைதான். வரலாறு எங்கிலும் பௌத்தத்திற்காக சேவை செய்த மன்னர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் யாவரும் ஒரே வழி யிலேயே போயிருந்தால் நாடு இன்னும் பண்பட்டு விளங்கியிருக்கும். அதற்கு வழியில்லாமல் போய்விட்டது...."

"அடிக்கடி ஏற்பட்ட படையெடுப்புகள், ஆக்கிரமிப்புகள் மன்னர்களை அதிகம் சேவை செய்ய விடவில்லை. எனினும், அதற்கான சான்றுகளை இன்னும் அதிகமாக அந்தக் காலத்தில்தான் விட்டுச் சென்றும் இருக்கிறார்கள்.." பிரதேச செயலாளர் குறுக்கிட்டுக் கூறினார்.

"அப்படி வைத்துக் கொள்ளலாம். ஆனால், எங்களிடம் கறைபடிந்த வரலாறுகளே அதிகம் காணப்படுகின்றன. தந்தையைக் கொன்ற தனயன்கள் மலிந்திருக்கின்றனர். சகோதரர்களுக்கிடையே சண்டை, காட்டிக்கொடுத்தல், அந்நியருக்கு விலைபோதல் போன்ற கீழ்த்தரமான பண்புகளும் எமது வரலாறு நெடுகிலும் காணப்படு கின்றன..." அமைச்சர் கூறினார்.

"அதற்காக அந்தக் காலத்தின் சிறப்புகளை மறுக்க முடியுமா? குருமார்களின் வழிப்படி மன்னன் பல இடங்களில் நடந்திருக்கிறான். அவர்களுக்கான சிறப்பு ஏற்பாடுகள், பிறநாட்டுத் துறவிகளை அழைத்து மத வைபவங்களை நடத்துதல் என்று...அப்பப்பா.." பிரதேச செயலர் சிலாகித்துக் கூறினார். அவரது கண்கள் உட்செருகி அந்த வரலாறை புரட்டிப் பார்ப்பதுபோல ஒரு உணர்வில் திளைத்திருந்தன.

"மனித குலத்திலே ஏற்றத் தாழ்வுகள் கிடையாது. எல்லோரும் சமமானவர்கள் என்ற கருத்தை எடுத்து இயம்புவதாலும், வர்ணாசிரம தர்மத்தை ஒழித்ததாலும், எளிமையான வாழ்க்கை முறையை அறிமுகப் படுத்தி வலியுறுத்தியதாலும் அந்தக் காலமுதலாக பௌத்தம் நிலை பெற்று வளர்ந்தும் வருகின்றது.." இவ்வளவு நேரமும் அமைதியாக இருந்த பாரூக் கூறினான்.

"அதனால்தான் சொல்கிறேன். அத்தகைய சிறப்பு பெற்ற பௌத்தம் இங்கு சரியாக வளர்ந்திருக்குமானால் இத்தனை பெரிய அழிவுகள் ஏற்பட்டிருக்குமா? அசோகச் சக்கரவர்த்தி போர்க்களத்திலே ஞானம் பெற்ற மாதிரித்தான் நாமும் ஒரு பெரிய விலையை யுத்தத்திற்குக் கொடுத்திருக்கிறோம். அதன் காரணமாகவே இனி யுத்தம் வேண்டாம். எல்லாம் பேசி முடிக்கலாம் என்ற எண்ணமும் வளர்ந்து வருகின்றது..."

"இருக்கின்ற சுமைகளை எல்லாம் துறக்கச் சொல்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தம். மேலும், மேலும் அள்ளிப் போட்டுக் கொள்ளச் சொல்வது ஆசை. இரண்டுக்கும் இடையிலான போராட்டமே ஒரு சிங்களவனின் கடமையாக, வாழ்வாக இருக்கின்றது. இதில் ஆங்காங்கே ஏற்பட்ட தவறுகளே அதிகம் கண்ணை உறுத்துகின்றன. அதற்காக எதுவுமே நடக்கவில்லை என்று கொள்ளலாமா?" பிரதேச செயலாளர் சற்று கோபம் கலந்த தொனியில் கேட்டார்.

அப்போது உள்ளிருந்து மனைவி அழைக்கவே அமைச்சர் எழுந்து சென்றார். அவன் அவரைப் பார்த்து மெல்லிய புன்னகையுடன் சொன்னான்.

"எப்படியோ, இனி வளரும் குழந்தைகளுக்காக நாங்கள் எல்லோருமே ஏதாவது ஒரு நல்லதைச் செய்தாக வேண்டும். அது மத சம்பந்தமுடையதாக, அல்லது சூழல் சம்பந்தமுடையதாக, அல்லது மனிதாபிமான அளவுகோல் கொண்டதாக இருக்கலாம். நாங்கள் யாபேருமே ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டவர்கள்தான். அந்த வடுக்கள் நம்முடன் போகட்டும். நம் குழந்தைகள் நன்றாக வாழட்டும்..."

"அந்த எண்ணம் எல்லோரிடமும் இருக்கின்றது. ஆனால். அதேமாதிரி புல்லுருவிகளின் தொல்லையும் தொடர்கின்றது...அதற்கு சந்தர்ப்பம் கிடைக்காதா என்று காத்துக் கொண்டும் இருக்கிறார்கள்..."

"அதை எதிர்த்துத் தான் நாம் ஒன்று சேர வேண்டியிருக்கின்றது. முன்னைய ஒரு காலத்தைப்போல....! சிங்கள மன்னர்கள் முஸ்லிம் பெண் களை மணந்து கொண்டுமிருக்கிறார்கள். இளவரசர்கள் முஸ்லிம்களாய் இருந்திருக்கிறார்கள். சிங்கள மன்னர்களின் ராஜ்ய சபையில் முஸ்லிம்களும், தமிழர்களும், கலந்து பணியாற்றிதைப்போல ஒரு காலம் மீண்டும் வர வேண்டியிருக்கின்றது.."

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே அமைச்சர் முன்னால் வந்து அனைவரையும் சாப்பிட அழைக்கவே அவர்கள் எழுந்து உள்ளே சென்றனர்.

## அத்தியாயம்-19

அனைவரும் பிரார்த்தித்தபடியே ரணசிங்கவின் மனைவி எந்த விக்கினமும் இன்றி ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். பிறந்த நேரம், லக்னம் பார்த்து அக்குழந்தைக்கு பெரியோர் நிர்மலா என்று பெயரிட்டனர். குழந்தையை விகாரைக்குக் கூட்டிச் சென்று வழி பட்டனர்.

தமது மத சடங்குகளைப் பூரணமாகப் பின்பற்றி அக் குழந்தையை வளர்த்தெடுத்தனர் பெற்றோர். குழந்தை பால் குடிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு, தாய்ப் பாலைப் பிழிந்து அதில் தங்கமோதிரம் ஒன்றை சிறிது நேரம் போட்டுவைத்த பின்னர் அப்பாலை குழந்தைக்குப் பருக்கினர். அவ்வாறே சுபதினம் பார்த்து சுபநேரத்தில் அக்குழந்தைக்கு முதல் உணவு ஊட்டினர். தலைமயிரை முதன்முதலாகக் கத்தரித்தபோது, அதைச் சேகரித்து எடுத்துக்கொண்டு கெகிறாவையிலிருந்து எட்டு கிலோமீற்றர் களுக்கு அப்பால் ஓடுகின்ற மகாவலி கங்கையின் கிளையாற்றில் போட்டு வந்தனர்.

குழந்தைக்கு உணவூட்டும் வைபவம் மிகச் சிறிதாகவும், எளிமையாகவும் நடைபெற்றபோதும், அவன் ஸைபுன்னிஸாவை அதற்கு அழைத்திருந்தான். குழந்தையைக் குளிப்பாட்டி, அழகான ஆடை உடுத்து கீழே பாயில் வெள்ளைத்துணி விரித்து அதை உட்கார வைத்தனர். அந்தப் பாயின் நடுவில் பலவிதமான இனிப்புப் பலகாரங் களும், பழவகைகளும், தங்க ஆபரணங்களும் பரப்பிவைக்கப் பட்டிருந்தன. நடுவில் தர்ம போதனை நூலும் வைக்கப்பட்டது. பணமும் பக்கத்தில் இருந்தது. குழந்தை தவழ்ந்து சென்று எதை எடுக்கின்றதோ, அது சம்பந்தமான ஒரு துறையைத் தேர்தெடுத்து எதிர்காலத்தில் தனது வாழ்க்கையைக் கொண்டு போகும் என்பது அவர்களது நம்பிக்கை.

என்ன ஆச்சரியம்! குழந்தை தவழ்ந்து சென்று முதலில் தொட்டது தர்ம உபதேச நூலைத்தான். அனைவர் உள்ளமும் மகிழ்ச்சியில் பொங்க, அந்தச் சடங்குகளைக் கண்டு ஹசன் ஆனந்தக் கூத்தாடி கைகொட்டி மகிழ்ந்தான். ஸைபுன்னிஸாவுக்குள்ளும் புதுமை யும், வினோதமும் கலந்த ஒருவகைக் கலவை உணர்ச்சி பிரவகித்துக் கொண்டிருந்தது. அத்தனை குடும்ப உறுப்பினர்களோடும் அவன் தன்னை மட்டுமே - பிறமதப் பெண் ஒருத்தியை- அழைத்திருந்தமையை அவள் ஒரு கௌரவமாகவே கருதினாள்.

ஹசன் ரணசிங்கவை விட்டுப் பிரியாமல் ஒட்டிக் கொண்டான். “உங்கள் வீட்டைத் தேடியே அவன் ஓடோடி வருகிறான். உங்களை அடிக் கடி பார்க்கணுமாம்...” என்றுகூறி ஸைபுன்னிஸா சிரித்தாள். அவன் தனது சட்டைப்பையிலிருந்த ஒரு புகைப்படத்தை சட்டென எடுத்து ஹசனின் கையில் கொடுத்தான். “இது மாமாவின் போட்டோ. மாமாவைப் பார்க்கணும் என்றால் இதைப் பார்த்துக்கோ...” என்று கூறிச் சிரித்தான்.

***

இரண்டு மூன்று வருடங்களில் நிலைமை தலைகீழாக மாறி விட்டிருந்தது. ஊடகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வரையறையற்ற சுதந்திரம், தொடர்பாடல் சுதந்திரம் என்பன பெருகியதையடுத்து இனங்களின் மத்தியில் துவேஷத்துடன் கூடிய பல நச்சுக் கருத்துகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பிவிடப்பட்டிருந்தன. இந்தச் சிறு தீவுக்குள்ளே நாலாபக்கமும் மக்கள் குட்டித் தீவுகளாகப் பிரிவுண்டு, சிதறிக் கிடந்தார்கள்.

தமது மனதுக்குள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் காட்டிக் கொள்ளாமலேயே மக்கள் நடமாடித் திரிந்தார்கள். எங்கு வேண்டு மானாலும் சென்று வரலாம் என்ற நிலைமை எதையும் எப்படியும் பரப்பிவிடலாம் என்ற நிலைமைக்கு மாறியது. எல்லா இடத்திலும் அரசியல் புகுந்து தந்திரமாடத் தொடங்கியது. அதாவது, நல்ல நிலைமை நாட்டில் நீடிப்பதை எப்படியாவது முறியடித்துவிட நேரம் பார்த்து நின்றது.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு வெள்ளையருக்குச் சிம்ம சொப்பனம்போல விளங்கிய மலையகம் எவ்வாறு மன்னன்மீது மக்கள் கொண்ட வெறுப்பால், மன்னன் மந்திரி பிரதானிகளோடு கொண்ட கருத்து மோதல்களால், பிரதானிகளுக்குள்ளே ஏற்பட்ட அதிகார போதையால் அந்நியருக்கு வசமாகி, அதன் காரணமாகவே மக்களுக்குத் தீராத துன்பத்தைத் தந்ததோ அதேபோல ஒரு நிலைமை எதிர்பாராத விதமாகத் தோன்றியது.

கண்டியில் கலவரங்கள் வெடிக்கத் தொடங்கின. மிகுந்த பாதுகாப்பு உணர்வுடனும், நமக்கு எதுவுமே நடக்காது என்ற நம்பிக்கை யுடனும் அங்கு வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் அடித்து நொறுக்கப் பட்டனர்; அவர்களது கடைகளும், வீடுகளும், வாகனங்களும் தீக்கிரை யாக்கப்பட்டன. பெண்கள் காடுகளுக்குள்ளே ஓடிச் சென்று ஒளிந் திருந்து அபயக் குரல் கொடுத்தனர். அதைச் செவிமடுக்க யாருமே இருக்க வில்லை. அவசர பொலிஸ் பாதுகாப்புப் பிரிவுக்கான தொலைபேசி இலக்கம் செயலிழந்து கிடந்தது. பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் தொலைபேசி இலக்கங்கள் இரண்டு நாட்களாக ஓய்வில் இருந்தன. எதிர்த் தாக்குதல்களும் ஓரோரிடங்களில் நடைபெற்று முடிந்தன.

சுமார் ஒருவார காலத்தின் பின்னர் சகஜநிலை திரும்பிற்று. அதுவும் கடும் பிரயத்தனத்தின் பின்னரே சாத்தியமானது.

ஆயினும், மக்களது பார்வைகள் வித்தியாசமாக இருந்தன. இனி யாரையுமே நம்ப முடியாது என்ற அவநம்பிக்கை வீறுகொண்டு எழுந்தது. தாம் எழுப்பிய அவலக்குரல்களுக்கு பக்கத்து வீட்டிலிருந்துகொண்டே யாரும், எந்த பதிலும் தரவில்லை என்ற உண்மை பலரைச் சுட்டது.

ஆயினும், பாதிக்கப்பட்ட முகங்களைக் காணும்போது சில கண்கள் வெட்கமும், அவமானமும் கொண்டு தாழ்ந்து கொண்டன. பொது இடங்களில் எதையுமே பேசுவதற்கு மக்கள் முன்வராதது போலவும் இருந்தது. தம்மால் உதவ முடியாமல் போனதையிட்டு மனம் வருந்தி, பல நன்மனங்கள் எதையும் பேசுவதைத் தவிர்த்தன. ஆயினும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்வாதிகளும், ஊடகங்களும் அலறிக்கொண்டிருந்தன. அது நாட்டை இன்னொரு பிளவுக்கு உள்ளாக்கிவிடுமோ என்ற அச்சத்தைக் கூட ஏற்படுத்திற்று.

அடுத்த கட்டமாக, முஸ்லிம்களின் கடைகள் செறிவாகவுள்ள கெகிறாவ நகரம் தாக்கப்படலாம் என்ற தகவல் வெளியாகியிருந்தது. பாடசாலைகள் இழுத்து மூடப்பட்டன. பிரத்தியேக வகுப்புகளில் கற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் திருப்பி அனுப்பப்பட்டார்கள். துட்டகெமுனு மன்னன் எல்லாளனை வெற்றிகொண்ட விஜித்தபுர கிராமம் சலசலத்துக்கொண்டிருந்தது.

மக்கள் தமது உடைமைகளைச் சுருட்டிக்கொண்டு புகலிடம் செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். எதை விடுவது, எதை எடுப்பது என்பது புரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தனர். இதற்கு முன்னர் இப்படியொரு நிலைமை ஏற்படுமென எண்ணியிராதவர்கள் என்பதால் எங்கு ஓடுவது என்றும் அவர்களுக்குத் தெரியவில்லை. சிறுவர்கள் தமது வீடுகளைவிட்டும் புறப்பட முடியாது என்று அடம் பிடித்துக் கொண்டிருந்தனர்.

இவை யாவற்றையும் கேள்வியுற்ற பிரதம பிக்கு அயர்ந்து நின்றார். இப்படியொரு நிலைமை கெகிறாவையில் ஏற்பட்டுவிடக் கூடாது என்றுதானே இத்தனை பாடுபட்டோம் என்று மனம் நொந்து கொண்டார். உடனடியாக முஸ்லிம், சிங்கள வர்த்தகர் சங்கத் தலைவர் களைத் தொடர்பு கொண்டதுடன், பொலிஸ் இன்ஸ்பெக்டரையும் அழைத்துக் கலந்துரையாடினார்.

முடிவில், விகாரையைப் பாதுகாக்கவும், பள்ளிவாசலைப் பாதுகாக்கவும் முஸ்லிம், சிங்கள வர்த்தகர் தலைவர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

அதன்படி, பௌத்த விகாரையைச் சூழ முஸ்லிம் வர்த்தகர்கள் நின்றிருக்க, அங்குள்ள பள்ளிவாசல்களைச் சூழவும் சிங்கள வர்த்தகர்கள் சூழ்ந்து நின்றனர். இரு பகுதியிலும் பொலிஸ் உதவியும் வழங்கப் பட்டது. ஆண், பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையிலீடு பட்டனர்.

ஸைபுன்னிஸா மிகுந்த பதட்டத்துடன் காணப்பட்டாலும், தனது நம்பிக்கையை இழக்கவில்லை. தனது வேலைகளை வழக்கம் போல நிதானமாகச் செய்து கொண்டிருந்தாள். உள்ளத்தின் ஒரு மூலை யில் ஏதோ ஒரு வேதனை படர்ந்து கொண்டிருந்தது. அது முழு உலகையுமே ஆக்கிரமித்து விடுமோ என்று அவளுக்குத் தோன்றிக் கொண்டேயிருந்தது.

குணசேன வந்து ஆறுதல் கூறிச் சென்றான். எதுவும் நடந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்துவிடலாம் என்றொரு அவநம்பிக்கை அவளுள் திடீரென உண்டானது.

எப்படியோ, வதந்தி வதந்தியாகவே ஆக்கப்பட்டது. கெகிறாவ தப்பிப் பிழைத்தது.

### பின்கதை

ஹசன் நிர்மலாவைக் காண வந்திருந்தான். நேற்று அவனுள்ளத்தில் தோன்றிய பல குழப்பங்கள் இன்று தீர்ந்தாற் போலிருந்தன. எனவேதான் அவளைப் பார்ப்பதற்காக வந்திருந்தான்.

கடந்த ஒரு வாரகாலமாகவே அவன் அவளைப் பார்ப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று முயன்று அதில் வெற்றியும் பெற்றிருந்தான். இல்லையெனில் ஏதாவது ஒரு சாக்கைச் சொல்லி அவளை அவன் சந்தித்து வந்தான். அல்லது அவள் ஏதாவது உதவிகேட்டு வரும் சாட்டைச் சொல்லிக்கொண்டு அவன் வீட்டுக்கு வந்து போவாள்.

பொருந்தாத எதிர்கால முடிவுகளைத் தெரிந்துகொண்டே எடுப்பதால் ஏற்படும் சிக்கல்களை விளக்கி நேற்றிரவு நீண்ட நேரமாக அவனது தந்தை அவனுடன் பேசிக்கொண்டிருந்தார். தாயும் அவனது கைகளைத் தனது கைகளுக்குள் எடுத்து வைத்துக்கொண்டு, அவனது தலையைத் தடவி கோதிவிட்டபின் சொன்னாள்.

"கல்யாணம்ன்ட்றது எடுத்த எடுப்பல செய்யிற வேலயில்ல மகன். அது ஒரு ராஜதந்திர மந்திர ஆலோசனை மாதிரி. அது எங்கட மனுஷர்கள்ட, எங்கட சூழல்ல நடக்கிறதுதான் எல்லாருக்கும் நல்லது. ஆரம்பமே மனசுக்குக் கஷ்டமா, கேள்விக்குறியா ஆயிட்டா, அது நல்லா இருக்காது. இப்ப நீ அவளைக் கல்யாணம் பண்றதுக்கு நாங்க அனுமதி தந்துறலாம். ஆனா, அது இல்ல பெருசு. நீ இப்ப சந்தோஷமா வாழ்க்கையத் துவங்கினாலும், போகப் போக, வாழ்க்கையில கஷ்டங்கள் வர வர, மனுஷர்களோட பழகப்பழக நீ எடுத்த முடிவு பிழைன்னுதான் படும். புள்ள குட்டி பொறந்துட்டா இன்னம் நெலம மோசமாயிடும். அதுகள் வளர்றதுக்கு கண்டிப்பான ஒரு சூழல நாங்க குடுக்க முடியாமப் போயிரும். கலவனா வாழ்ற குடும்பங்களப் பாரு...அங்க கலாசாரம்ன்னு ஒண்ணுமே இல்ல...அந்தப் புள்ளய இஸ்லாத்துக்கு எடுத்து கட்டு செட்டா வெச்சிட்டா எல்லாம் சரின்டு நீ நெனக்கலாம். அது எனக்கு இல்ல. அதோட, இப்ப நாடு போய்க் கொண்டிருக்கிற பயங்கரமான சூழல்ல சிங்களப் புள்ளைகள இஸ்லாத்துக்கு எடுத்து கல்யாணம் பண்ணிக்கொள்றதும்கூட சிக்கலாத்தான் இருக்கு. முஸ்லிம்களுக்கு எதிரா முன்வைக்கப்படுகிற பல குற்றச்சாட்டுகள்ல அதுவம் ஒன்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புடியொரு குற்றவாளியாவும் நீ ஆயிடக் கூடாது..."

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு அவர்கள் முற்றத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். மாலையில் பெய்த மழை காரணமாக ஆங்காங்கே பள்ளங்களில் நீர் நிறைந்திருந்தது. அந்நீரில் மெர்க்குரி விளக்கின் ஒளிபட்டு மின்ன அதுவும் இன்னொரு விளக்குப்போல ஒளி வீசிற்று. வானத்தில் நிலவு ஊமையாய்த் தொங்கிக் கொண்டிருந்தது. சுற்றிலும் மலர்ந்திருந்த பூக்களின் நறுமணம் கமழ்ந்து வந்தது. பக்க வாட்டில் வளர்ந்திருந்த இளநீர் மரங்கள் காய்த்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. தென்னங்கீற்றுகளினூடே நிலவின் மந்தமான அழகும் மிகையாகத் தெரிந்தது.

இதுவரை அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ஹசன் கண்கலங்கி அவளது மடியில் தலையைச் சாய்த்துக் கொண்டான். பிறகு அவளை நிமிர்ந்து பார்த்து " அப்ப நா என்னம்மா செய்ய...?" என்றான்.

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு பாரூக் பேசினான்.

"அதுல ஒண்டும் பிரச்சின இல்ல. நாங்கள்ளாம் பழகுறமாதிரியே நீயும் ஃப்ரென்ட்லியாப் பழகலாம். அந்தப் புள்ளய ஒன் ஃப்ரென்டா நெனச்சிக்கோ.. வூட்டுக்குப் போறதையும் நிப்பாட்டத் தேவையில்ல... ஆனா, யோசிச்சிப் பாத்து நடந்துக்கோ..." அவன் குரலில் என்றுமில்லாத மென்மை தொனித்தது.

"அது எப்படி வாப்பா...?" எதுவுமே புரியாமலும், அல்லது இவர்கள் எல்லாம் புரிந்துகொண்டே இப்படிச் சொல்கிறார்களா என்ற குழப்பத்துடனும் அவன் திருப்பிக் கேட்டான்.

"எல்லாம் நடக்கும் மகன்... ஒன்ட உம்மாவே அதுக்கு ஒரு உதாரணமா வாழ்ந்து காட்டி இருக்கிறா... இங்க பாரு... எங்கள சுத்தியிருக்கிறதெல்லாம் யாரு? எல்லாமே சிங்கள ஆக்கள்தான். அவங்களுக்கு மத்தியிலதான் நான் அவள வுட்டுட்டுப் போயி பல வருஷங்கள் வெளிநாட்டுல தொழில் செஞ்சேன். அவங்கதான் சொந்தத்துக்கு சொந்தமா, உதவிக்கு உதவியா, அன்புக்கு அன்பா இருந்திரிக்காங்க... எங்கயும், எதுலயும் ஒரு தவறுமே நடக்கல்ல... அத மாதிரி இருந்துட்டா போகுது... நீ அவங்களுக்குள்ள போயி சொருகத் தேவயில்ல.. அவங்களும் எங்களால சமூகத்துக்கு முன்னால தல குனிஞ்சி நிக்கத் தேவயில்ல.. அவங்கட ஒரே புள்ளய அவங்க பறிகுடுக்க விரும்புவாங்களா...?" என்று அவன் திருப்பிக் கேட்டதற்கு ஹசன் சிறிது அமைதி காத்தபின் கேட்டான்.

"ஏன்ட மனசுக்குப் புடிச்ச ஒரு புள்ளயா, என்னய நல்லா வெளங்கிக் கொண்ட ஒரு புள்ளயா நா தேடுறது பிழையா வாப்பா? அதுல நிர்மலாதான் எனக்கு மேலானவளா தெரியிறா... அவவோடதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு சந்தோஷமான வாழ்க்கை அமையும்ன்ட்டு ஏன்ட மனசு சொல்லுது.”

இப்போது ஸைபுன்னிஸா பேசினாள். அவனது தலையை அவளது கைகள் வருடிக்கொண்டும், அவனது முதுகில் தட்டிக் கொண்டுமிருந்தன.

“அப்படி நீ நெனச்சிக் கொள்ற.. இதுல வேற ஒண்டுமே இல்ல.. நீங்க ரெண்டு பேருமே இவ்ளோ நாளா பட்டும் படாமலும்தான் பழகினீங்க.. நீ சொல்லும் வரைக்குமே நாங்க ஒங்க ரெண்டு பேரையும் பத்தி அப்புடி ஒண்டுமே தப்பா நெனக்கல்ல.. அவ்ளோ கவனமா இருந்தீங்க. அவகிட்ட நீ மனச இழந்துட்டேன்டு எல்லாம் பொய் சொல்லாத. மனச பொருத்தமில்லாத ஒரு இடத்துல இழந்துறக் கூடாது என்கிறதுதான் அறிவுள்ளவங்கட முடிவு. அதில்லாட்டி அதுக்குப் பின்னால நீ ஓடவேண்டி வரும்...”

“அதுமட்டுமில்ல.. நா பழகுற பெரிய மனுஷர்கள் எல்லாம், ஏன் மினிஸ்டர்கூட இப்படியொரு கல்யாணம் நடந்தா நாங்க எல்லாமே ப்ளான் பண்ணித்தான் செஞ்சிருக்கோம்ன்ட்டு நெனப்பாங்க... அப்புடி நெனக்கிறதுக்கு காரணமும் இருக்கு.. இன்டைக்கு சூழ்நில அப்படி இருக்கு.. வாழ்க்கையில எதுவுமே முடிஞ்ச முடிவா ஆகிடுறது இல்ல. அப்புடி நாங்க எதையுமே நெனச்சிக் கொள்ளக் கூடாது. கொஞ்சம் ஆறப்போட்டு ஒரு விஷயத்த யோசிச்சிப்பாரு.. நாங்க உடனடியா எடுக்கிற ஒவ்வொரு தீர்மானமும் அது எங்கள மட்டுமே மையமா வெச்சி எடுக்கும்போது பிழையாவே ஆயிடும். நாங்க ஆற அமர யோசிக்காம முடிவெடுத்துட்டோமேன்டு நீ கவலப்படுவ...”

ஹசன் அதன்பிறகு எதுவும் பேசவில்லை. தலைகுனிந்து அமர்ந்திருந்தவன் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தான். அவனது பெற்றோர் எடுத்துக் கூறுகின்ற நியாயங்களை அவன் உணராமல் இல்லை. கடந்த பல மாதங்களாக அவன் நாட்டு நிலைமைகளை வெகு உன்னிப்பாக அவதானித்து வந்தான். அதன்பிறகே தான் கடந்த ஒரு வாரகாலமாகத் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு ரணசிங்க வீட்டுப் பக்கமாகப் போவதைத் தன்னால் நிறுத்த முடியுமா என்ற முயன்று பார்த்திருந்தான்.

நிர்மலா முதல் நாளிரவு அவனைத் தொலைபேசியில் அழைத்து, தனது தாய் மிக ஆர்வமாகத் தனக்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொன்ன செய்தியை அடுத்து அவன் தனது காதலைப்பற்றி பெற்றோரிடம் தெரிவித்திருந்தான்.

***

நிர்மலா சிரித்தபடி வரவேற்றாலும் அவளது கண்களில் கவலை மிதந்து கொண்டிருந்தது. அவள் இதுவரை ஒரு நல்ல பெண்ணாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவே நடந்துகொண்டிருந்தாள். தனது காதல் விவகாரம் வீட்டாருக்குத் தெரிந்துவிடக்கூடாது என்பதிலும் கவனமாக இருந்தாள். எல்லோர் முன்னிலையிலும் நிர்மலாவும் ஹசனும் மிக இயல்பாகவே பழகினார்கள். எனவே, அதுவரை யாருமே அவர்களை வித்தியாசமாக நோக்கவில்லை.

ஹசன் அவளிடம் ஒரு கவரைக் கொடுத்தான். அதை அவள் வாங்கி ஒரு புத்தகத்துக்குள் மறைத்து வைத்துக்கொண்டாள். "என்ன..?" என்பதுபோல அவனைப் பார்த்தாள்.

அப்போது அவனது தாய் அங்கு வந்தாள். "அம்மா, நிர்மலாவுக்கு கல்யாணம் பேசுறீங்களாமே...?" என்று மிக இயல்பாக அவன் விசாரித்தான்.

"ஆமாம்.. தம்பி.. நல்ல மாப்பிள்ளயா இருந்தா நீயும் பாத்துச் சொல்லு..." என்று அப்பாவித்தனமாகச் சொன்ன அந்தத் தாயின் நம்பிக்கை அவனுள் இரக்கத்தைப் பெருகச் செய்தது.

"நிச்சயமா நானும் தேடுறேன்மா.." என்று அவன் உரக்கவே சொன்னான். சிறிது நேரம் இருவருடனும் பேசிக்கொண்டிருந்துவிட்டு எழுந்த வெளியே போனான்.

நிர்மலா உள்ளே சென்று அறைக்கதவை மூடித் தாழிட்டுக் கொண்டு அந்தப் புத்தகத்தைத் திறந்தாள்.

ஹசன் மேம்போக்கான பூச்சுகளில் ஊறித்திளைத்த, வட்டமிட்டு சுற்றிவருகின்ற மின்மினி அல்லன் என்பதை அவள் அறிவாள். அவனுக்கும், தனக்கும் மிகப் பொருத்தமான ஒரு முடிவை எடுக்கும் நேரம் வெகுவிரைவில் வரவேண்டும் என்றும், அது தனது தாயின் மனதை நோகடிக்காமலே நிகழவேண்டும் என்றும் அவள் தினமும் வீட்டின் முன்மாடத்திலுள்ள புத்த பகவானின் சிறிய சிலைக்கு பூவைத்து, விளக்கேற்றி வழிபட்டு வந்தாள்.

இந்த ஒரு வாரகாலமாகவே அவளும் பலவிதங்களிலும் தனது மனதைச் சமாதானப்படுத்த முயன்று வந்தாள். தங்களது நல்வாழ்வை விட மேலானது, தமது இரு குடும்பங்களினதும் பாரம்பரியமான நட்பு என்பதில் அவளும் திடமான உறுதி கொண்டிருந்தாள். அவர்களது தொடர்பு ஏதோ எதிர்பாராது ஏற்பட்ட உறவல்ல. தம்மிரு குடும்பங் களுக்கும் இடையிலான இணக்கமான தொடர்புகளே தம்மையும் அந்நிலைமைக்கு உயர்த்தியிருக்கின்றன என்பதை உணர்ந்து, நாட்டு நடப்புகளையும் யோசித்தவளாக அவளும் குழம்பிக்கொண்டுதான் இருந்தாள்.

கைகள் படபடக்க கவரைப் பிரித்தாள்.

அதில் ஒரு வாழ்த்து மடல் காணப்பட்டது. கம்ப்யூட்டரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமைத்து ஹசனே பிரதியெடுத்திருந்தான். my ever darling Nirmala என்று தலைப்பிட்டிருந்தான். மடலின் ஓரம் எங்கணும் பலவர்ண ரோஜா மலர்கள். வலது பக்கக் கீழ் மூலையில் ஒரு இதயமும், அதைத் துளைத்த அம்பும்... அதிலிருந்து வழியும் சொட்டு சொட்டான இரத்தத் துளிகள்...!

கண்ணீர் மல்க மறுபக்கத்தைத் திருப்பினாள். அதில் ஒரு கவிதை அச்சிடப்பட்டு பிரதியெடுத்து ஒட்டப்பட்டிருந்தது.

இன்றைய சந்திப்பு
கொல்லைப்புற செம்மண் பாதையில்
எதிர்பாராமல் நிகழ்ந்தது...

கண்ணீர் மழையும்
உணர்ச்சித் தழலும் மட்டுமல்ல,
நமக்கிடையே
சூறாவளி மையங்களாய்
நம் தாய்மார்களும்...

இரண்டு ரயில்கள்
எதிரெதிரே சென்றதுபோல
ஒரு பேரோசை
நம் மௌனத்தில் கரைந்து போனது.

கவலையுறாதே.
காதல் சோகங்கள்
நம்மவர்களுக்கு
ரசிக்கக் கூடியவைதான்;
தீர்க்கக் கூடியவை அல்ல.

அருகருகே இருந்தாலும்
நம்மிரு குடும்பங்களின் இடைத்தூரம்
இஸ்லாத்துக்கும்
பல தெய்வ கொள்கைக்குமிடையில்போல்.
உனக்கும் எனக்கும்
இடையிலுள்ள தூரம்
தாகித்த வழிப்போக்கனுக்கும்,
பொங்கிய சமுத்திரத்துக்கும்
இடையில்போல்...

-ஹசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீருடன் மீண்டும் மீண்டும் வாசித்தாள். அது தனக்குள் எவ்விதமான கோபத்தையும் உண்டாக்கவில்லை என்பதையும் அவள் உணர்ந்தாள்.

தனது வாழ்க்கையும், தனது பாடப்புத்தகங்களும், தனது கல்வியும் தனது மதிப்பிற்குரிய ஒசரி சேலையும், தான் பணிவுடன் சென்று வணங்கும் புத்த பகவானும், விகாரைகளும், தூபிகளும், தாதுகோபங்களும், தான் போற்றிப் பாதுகாக்கும் தர்ம பதமும் எவ்வளவு புனிதமானவையோ, அவ்வளவு முக்கியமானவை தம்மிரு குடும்பங் களுக்கும் இடையிலான பாரம்பரிய உறவுகள் என்பதைப் புரிந்து கொண்ட அவள் பல நாட்களாக இதுபற்றி சிந்தித்து வந்திருந்தாள்.

ஆரம்ப முதலாகத் தான் ஹசனுடன் கொண்டிருந்த மானசீகமான, ஆத்மார்த்தமான பிணைப்பை, தான் அவதானத்துடன் பேணி வந்ததைப்போலவே அடியும் நுனியும் இன்றி அழித்து விட்டால்தான் இனி எதையும் செய்ய முடியும் என்று பட்டது.

நிச்சயமாகத் தனக்கு ஒரு நல்வாழ்வு அமையும் என்று நம்பிக்கை கொண்டிருந்தது போலவே, அவனுக்கும் ஒரு சிறப்பான வாழ்க்கை அமையவேண்டும் என்று மனமுருகி நீண்டநேரம் பிரார்த்தித்தாள்.

தனது பெற்றோரின் எதிர்பார்ப்புகளை மீறுவதற்குத் தயக்கம் கொண்டது போலவே, சமயம் வரும்போது தன்னை அவர்களுக்கேற்ற விதமாக மாற்றிக் கொள்ளும் உறுதியும் அவளிடம் நிலைத்திருந்தது.

அவளது இதயம் புதிய அனுபவத்தை எதிர்கொள்ளத் தயாராக இருந்தது.

**-நிறைவு-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03 MAR 2021

# உயிர் மூச்சாய் நிறைந்திடு காற்றே...!

*1*

மாலை சிறிது சிறிதாக இதழ் விரித்துப் புலர்ந்து மெல்லிய ஊமை வெயிலாக நிறம் மாறியபோது விமானம் இலங்கையில் தரையிறங்கியது. தாய்த் திருநாட்டின் இதமான வெப்பநிலையை மனது உணர்ந்து கொண்டது. என்றாலும், பத்து வருடங்களாகப் பழக்கப்பட்டுவிட்ட தேகமோ சற்று அடம்பிடித்து தோலை சுருக்கிக் கொண்டு முணு முணுத்தது. “அப்பா...சூடு அதிகமாயிருக்கே...”

குழந்தைகளின் குதூகலம் சட்டென்று வடிந்தாற் போலிருக்க திரும்பிப் பார்த்தார்கள். அவன் தான் கொண்டு வந்திருந்த பெரிய பெரிய பெட்டிகளைத் தள்ளுவண்டியில் ஏற்றிக்கொண்டிருந்தான். தாயோ சிறியவளை இடுப்பில் இறுக்கியபடி ஒரு கையால் இன்னொரு சுமை வண்டியைத் தள்ளிக்கொண்டு பின்னே வந்து கொண்டிருந்தாள். முன்னால் ஓடிச்சென்ற குழந்தைகள் இருவரும் நின்று பெற்றோர் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். தாய் அருகில் வந்ததும் மகள் அவளது கையைப் பற்றிச் சுரண்டினாள்.

“என்னம்மா, சூடு இப்படியிருக்கிறதே...” ஆங்கிலம் சற்று காரமாகவே வந்தது.

“அதெல்லாம் அப்படித்தான் இருக்கும். சமாளிக்க வேண்டியது தான். பத்து நாள்தானே இங்கே நிற்கப் போகிறோம்...”

“ஏய்..அங்கே பார்...பச்சை நிறக் காரொன்று...சா... எனக்குப் பிடித்த நிறம்..” மகன் அவளது கோபத்தைக் கலைத்தான். வாகனத்தை வேடிக்கை பார்க்குமாறு அவளது முகத்தைத் திருப்பினான்.

“போடா போ.. உனக்கு எல்லாக் காரும் ஆசைதான்.”

“இல்ல ரஷ்மி குட்டீ.. நீ போட்டிருக்கிற பெரிய பாரமான கவுனை கழற்றிவிட்டால் சரியாகிவிடும். வேனில் போய் அதைச் செய்து கொள்வோம். இப்போ திடீர் என்று வந்து இறங்கினால் அப்படித்தான் இருக்கும்...”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் சற்று நிதானமாக, அன்பு கலந்து கூறினாள். அவளையும் தாய்நாட்டைப் பிரிந்திருந்த வேட்கையும், மூன்று குழந்தைகளையும் தாயின் அரவணைப்பின்றியே பெற்றெடுத்த ஆதங்கமும் கடந்த சில வருடங்களாகவே வாட்டிக் கொண்டிருந்தன. எனவே, தம்மை வரவேற்க வந்து காத்திருக்கின்ற பெற்றோரை உடனே ஆரத் தழுவிக்கொண்டு கொஞ்சிப் பேச அவள் துடித்துக் கொண்டிருந்தாள். தவிரவும், மேற்கு உலகிலே பிறந்த தம் குழந்தைகள் தனது பெற்றோரின் உள்ளத்தைத் தவறியாவது ஏதும் வார்த்தைகளால் புண்படுத்திவிடக் கூடாது என்ற எச்சரிக்கையுணர்வும் அவளுக்கிருந்தது.

ஸ்கைப்பில் தனது பாட்டனையும், பாட்டியையும் கண்டு உறவாடி உள்ளங் கலந்திருந்த குழந்தைகள் இரண்டும் சற்று அப்பால் காத்திருந்த தம் மூதாதையர்களை உடனே இனங்கண்டு தாவிச் சென்றன. அவள் தன் தாய்க்கருகே சென்றதும், “பிடிங்கம்மா..” என்று உரிமை யோடு கைக்குழந்தையைக் கொடுத்துவிட்டு பெற்றோர் இருவரையும் ஒருசேர கட்டியணைத்துக் கொண்டாள். அருகே வந்து நின்ற அவனைக் கைலாகு கொடுத்து மாமனார் வரவேற்றார்.

“எப்பிடி பயணமெல்லாம்..?”

அவர் விசாரிக்கவே அவன் சற்று முகத்தைச் சுளித்துக்கொண்டு கூறினான்.

“ஐயோ... இந்தப் புள்ளைகளோட போதும்ன்டு ஆயிருச்சி...”

“ஸ்...அப்பிடிச் சொல்லாதீங்க மருமகன்...புள்ளைகள ஏச வேணாம்...” மாமியார் வாஞ்சையுடன் பேரக் குழந்தைகளை அணைத்துக் கொண்டாள்.

அதற்குள் கைக்குழந்தை வீறிட்டு அழவே அவர்கள் அவசரமாக வேனை நோக்கிச் சென்றார்கள்.

வழி நெடுக எல்லோரும் பேசிச் சிரித்துக்கொண்டே பயணித் தார்கள். தம் தாய்த் திருநாட்டின் அழகையெல்லாம் உள்ளக் களிப்புடன் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தவாறே கணவனும் மனைவியும் அமர்ந்திருந் தார்கள். என்றபோதிலும், அவர்களையறியாமலேயே இடையிடையே இந்த நாட்டையும், மக்கள் வாழக்கையைப் பற்றியும் இழிவான கருத்துகளும் திடீர் திடீரென்று வந்து விழுந்து கொண்டிருந்தன.

“ இங்கயெல்லாம் உள்ள மாதிரி அங்க யாரும் ஊத்தை புடிச்சி அசிங்கமா முட்டிக்கிட்டு நிற்க மாட்டாங்க...அங்க எதுக்காகவும் காத்திருக்கத் தேவையில்ல.. எல்லாம் டைமுக்கு நடந்துரும்...”

வாகனச் சிக்கலில் மாட்டிக்கொண்டபோதும், வியர்வை அதிகமாக வெளியேறிக் கசகசத்தபோதும் சொல்லிக் கொண்டார்கள். அவ்விமரிசனங்களினூடே தாயார் கொணர்ந்திருந்த சுவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்சணங்களைப் புசிக்கும்போது அதன் தனித்துவமும், சுவையும் அங்கே கிடைக்காது என்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். இரவிலே வீடு மணக்க மணக்க வயிறார உண்ணப்போகும் விருந்தை யெண்ணி அனைவரும் வாய் ஊறவும் செய்தார்கள்.

## 2

அவர்கள் அங்கு வந்து சேர்ந்து இரண்டு நாட்கள் கழிந்து விட்டன. பயணக் களைப்பு தீர நன்றாகக் குளித்து சாப்பிட்டு படுத் துறங்கியபின்னர் இந்த சில நாட்களுக்குள் செய்து முடிக்கவேண்டிய வேலைகள்பற்றி தனித்தனியே யோசிக்கத் தொடங்கினார்கள்.

குழந்தைகளைப் பொறுத்தவரை கைநிறைய மண்ணள்ளிக் குவிப்பதிலும், சிறு கற்களைப் பொறுக்கிக் கடைவைத்து விளையாடு வதிலும், இலைகளைப் பறித்து காசாக எண்ணிப் பரிமாறி விளையாடு வதிலும் அவர்களது நேரம் கழிந்துகொண்டிருந்தது. இரவு நேரங்களில் அவர்களது நச்சரிப்பு தாளாமல் அவர்கள் விரும்பும் விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொடுப்பதற்காக அழைத்துச் சென்றார்கள்.

அவளுக்கோ தாய்நாட்டிலிருந்து அள்ளிச்செல்ல வேண்டிய பொருட்கள் நீண்ட பட்டியலில் காத்திருந்தன. இஞ்சி, மிளகு, நற்சீரகம் முதலாகத் தான் தயாரித்திருந்த பட்டியலைச் சரிபார்த்து சேகரித்துக் கொண்டிருந்தாள். ஒதுக்குப் புறமான அறையொன்றில் பெரிய பெட்டியொன்று எப்போதும் வாய்திறந்து அவர்கள் சேகரித்துத் தரும் பொருட்களையெல்லாம் ஏப்பமிட்டுக் கொண்டிருந்தது. வெளியூரில் விலைவாசி அதிகம் என்பதாலும், சில சில்லறைப் பொருட்களை வாங்கிக் கேட்கும்போது கணவன் எரிந்து விழுவதாலும் அவள் தேவையான ஆடைகளையும், குழந்தைப் பொருட்களையும்கூட அள்ளிக் குவித்துக் கொண்டிருந்தாள். இடையிடையே தான் பொருட்களை கூரியரில் அனுப்பும்போது ஏகப்பட்ட செலவு ஏற்படுவதாகத் தாய் புலம்புவதை யும் அவள் கவனத்திற் கொண்டிருந்தாள். அவர்களது வீடு சதா நேரமும் சந்தைக் கடைபோல இரைந்து கொண்டிருந்தது.

தான் சந்திக்கவேண்டிய நண்பர்கள் ஓரிருவரை அவன் சென்று பார்த்து வந்திருந்தான். தவிரவும், ஏராளமான உறவினர்கள் கூட்டங் கூட்டமாக வந்து அவர்களை நலம் விசாரித்துச் சென்று கொண்டிருந் தார்கள். மேற்கு நாடொன்றில் ஒரு பொறுப்பான பதவியிலிருக்கும் அவனது தொழில் அனுபவங்கள், சமய சுதந்திரம், ஹலால் உணவு என்பவை பற்றியெல்லாம் அவர்கள் வாய் மூடாது கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவன் சளைக்காமல் பதில் கூறியபோதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையிடையே அயர்வாக மாறி, தன்னையறியாமலேயே தூக்கத்தில் ஆழ்ந்தான். அவர்கள் அவனது நிலையுணர்ந்து விலகிச் சென்றார்கள்.

நாளையே தன் கிராமத்துக்குச் சென்றுவரவேண்டும் என்று அவன் உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. கிராமத்தின் கால் புதையும் மணல்வெளியில் வெறும் காலுடன் நடந்து, வாய்க்கால் வரையில் தவழ்ந்துவரும் காற்றை அனுபவிக்க வேண்டும்; நீர்க் காகங்களும், நாரைகளும் எச்சமிட்டதால் நிறம் மாறியிருக்கும் மலைக்குன்றைத் தூரத்திலிருந்து கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்; வானளாவ உயர்ந்து வளர்ந்திருக்கும் ஆலமரத்தின் வேர்களில் அமர்ந்து தன் காதல் கிளியின் நினைவுகளில் மூழ்க வேண்டும்....இப்படி எத்தனையோ?

எப்போதும் வந்து அவனைச் சீண்டிவிட்டுப் போகும் அவளது நினைவுகள் மீண்டும் அலைகள்போல எழுந்து அவனை அலைக்கழிக்கத் தொடங்கின. அவ்வலைகளின்மேலே மிதந்து செல்கின்ற ஒரு துரும்பாக அவன் தன்னையுணர்ந்தான். அந்தக் களங்கமற்ற பேதையின் முகத்தைக் கண்ணாரக் கண்டு தன் இதயத்தில் நிறைத்துக் கொள்ளவேண்டும் என்று அவன் ஏங்கிக் கொண்டிருந்தான். ஏறத்தாழ இளம் பருவத்தின் துடிப்பு களையெல்லாம் கடந்துவிட்டுத் தற்போது ஒரு அன்பான மனைவிக்குக் கணவனாக, மூன்று குழந்தைகளின் தந்தையாக வாழ்ந்து வருகின்ற தனது வாழ்க்கையின் பெரும்பாலான பகுதி தனிமையின் இருள்கவிந்து கழிந்ததையும், மீதிப்பகுதியைக் கொஞ்சம் ஒளியூட்டிக் கொள்வதற்காக வேனும் தான் அவளைச் சென்று பார்த்து வரவேண்டும் என்றும் அவன் எண்ணினான். சீக்காளிக் கணவனுடன் அவள் மல்லாடிக் கொண்டிருக் கிறாள் என்ற தகவலும் இடையில் அவனை வந்தடைந்திருந்தது. தனது நெருங்கிய உறவுக்காரப் பெண் என்றவகையிலும் அவளையும், அவள் குடும்பத்தையும் பார்த்து நிலவரங்களை அறிந்து வரவேண்டும் என்றும், முடிந்தால் ஏதாவது உதவி செய்யவேண்டும் என்றும் அவன் எண்ணிக் கொண்டான்.

## 3

மனைவி தன் தோழி வீட்டுக்குச் சென்று வருவதாகக் கூறிய போது அவளையும் குழந்தைகளையும் வேனில் அனுப்பிவிட்டு, காரை எடுத்துக்கொண்டு தனியாகப் புறப்பட்டான். சில மணித்தியாலங்களில் கிராமத்தை வந்தடைந்தான்.

கிராமம் வழக்கம்போலவே அவனைச் சுண்டியிழுத்தது. இயற்கையாக பெரிய அழகோ, வளமோ இல்லாத போதிலும்கூட தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்து வளர்ந்து விளையாடித் திரிந்த ஊர் என்ற விதத்தில் அந்த மண்ணோடு அவனிதயம் கலந்தே கிடந்தது. திரும்பிய திசையில் இருந்தவையெல்லாம் அவனது உறவுக்காரர் வீடுகளாகவும், நண்பர்கள் வீடுகளாகவும் இருந்தபோதிலும் அவனுள்ளத்தில் அவர்கள் குறித்து ஆழமான ஒரு பாசப்பிணைப்பு இருக்கவில்லை. அவ்வூரைவிட்டும் சிறுவயதிலேயே வெளியூருக்குக் கல்வி கற்பதற்காகச் சென்றுவிட்டதும், அதன்பிறகு அவனது வாழ்க்கை வெளியுலகத்தோடு கழிந்துபோனதும் அதற்குக் காரணங்களாக இருக்கலாம். ஆனால், அவர்கள் பற்றிய செய்திகளை அவன் அறிந்துகொண்டிருந்தான். அதிலும் அவளைப் பற்றிய செய்திகள் எந்த இசகுபிசகும் இன்றி நண்பர்கள் மூலமாக அவனுக்குக் கிடைத்துக் கொண்டே வந்தன.

தனது சொந்த மதினி என்ற கோதாவில் அவளை அவன் இளம் பிராயம்தொட்டே அறிவான். அவனது திருமணத்திற்குப் பிறகு அவளும் சீரும் சிறப்புமாகத்தான் மணவாழ்வில் புகுந்தாள். கணவனும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருந்தான். ஆனால், விதி வசத்தால் விபத்தொன்றில் சிக்கி, மூளை பலமாகத் தாக்கப்பட்டதன் காரணமாக உடம்பின் பெரும்பகுதி இயக்கமின்றி சக்கர நாற்காலியில் காலங்கழித்து வருவதையும், அவனது நிலபுலன்கள் எல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக வைத்தியச் செலவுக்கே கரைந்து செல்வதையும்பற்றி அவன் கேள்விப்பட்டிருந்தான். அவனது வயல் நிலங்களைக் குத்தகைக்குவிட்டு அவளே கவனித்து வருவதாகவும், அந்த வருமானத்தாலும், கணவனது குடும்பத்தாரின் உதவியாலும் வாழ்ந்து வருவதாகவும் அவன் அறிந்திருந்தான். அவளது தம்பி தங்கைகள் தூர ஊர்களில் வாழ்ந்து வருவதையும் அவன் விசாரித்துத் தெரிந்து கொண்டிருந்தான்.

அவன் அவ்வீட்டுக்குச் சென்றபோது அவனது வாகனத்தின் ஒலிகேட்டு முன்னால் விரைந்து வந்த அவளது பதின்மூன்று வயது பருவமகள் அவனைக் கண்டதும் எதிர்பாராத மகிழ்ச்சியினால் முகம் மலரச் சிரித்து, அவனை வரவேற்கக்கூடத் தோன்றாமல் தாயிடம் சொல்வதற்காக உள்ளே ஓடினாள். அவன் இலங்கை வந்திருப்பதாக அவர்களும் அறிந்திருந்தார்கள். எனினும், இவ்வளவு சீக்கிரமாக அவன் அவர்களைப் பார்க்க வருவான் என்பதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

"உம்மா...ஜாபிர் மாமா வந்திருக்காரு..." அவள் கூவிக் கொண்டே உள்ளே ஓடினாள்.

ஓரிரு நிமிடங்களில் அவள் உள்ளேயிருந்து வந்தாள். கையில் மளமளத்த எண்ணையை ஒரு சிறு அழுக்குத் துணியால் துடைத்துக் கொண்டே சிரித்த முகத்துடன் அவனை வரவேற்றாள்.

"வாங்க...வாங்க..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கூறுமுன்பாகவே அவன் உள்ளே வந்து நைலோன் வயர் பின்னிய மரக்கதிரையில் சாய்ந்து அமர்ந்து கொண்டான். அவனது ஆஜானுபாகுவான நெடிய உருவம் அவள் கண்களுக்குள் சட்டென நிறைந்து போனது. அந்தத் தோற்றத்தை உள்ளே பதிய வைக்க மறுத்தவளைப் போன்று அவள் உடனே தலையைக் குலுக்கிக் கொண்டாள்.

"இருங்க.." அவள் உள்ளே திரும்ப, அவன் கேட்டான். "அவர் எங்க...?"

"இருக்காரு..இப்பதான் எண்ண பூசிக்கொண்டிருந்தேன்..."

"இப்ப எப்படி இருக்கு...?" கேட்டுக்கொண்டே அவளது அனுமதியையும் எதிர்பாராது அவன் உள்ளே நுழைந்தான். அவள் அப்போதுதான் நினைவு வந்தவளாக "உள்ளுக்கு வாங்க.." என்று அவனை அழைத்துச் சென்றாள்.

சமையல் கட்டை ஒட்டிய ஒரு கட்டிலில் அவர் மல்லாந்து கிடந்தார். உடம்பெல்லாம் எண்ணெய் பூசப்பட்டு பளபளத்துக் கொண்டிருந்தது. கை கால்கள் சற்றே சூம்பினாற் போலிருந்தன. அவை அப்படியே படிப்படியாக செயலிழந்துவிடும் என்ற உண்மை பார்த்த மாத்திரத்தில் அவனுக்கு உறைத்தது. கண்கள் மூடியிருந்தன. அவரது அடர்ந்து கிடந்த தலைமயிரைக் கோதிவிட்டபடி அந்தக் கரிய முகத்தருகே குனிந்தான்.

அவர் விழி மலர்ந்து பார்த்தார். சந்தோஷமாகப் பேசுவதற்காக வாயைத் திறக்க, உதடுகள் சிறிது கோணின. சிரமப்பட்டு பேசினார்.

"அஸ்ஸலாமு அலைக்கும்.."

அவனும் பதில் கூறிப் புன்னகைத்தான். "இரிங்க... எப்ப வந்தீங்க...?" என்று சிரமத்துடன் விசாரித்தார்.

அவன் அருகேயிருந்த கதிரையில் அமர்ந்து கொண்டான். அவள் அங்குமிங்குமாகச் சுழன்று அவனுக்கான பணிவிடைகளை விரைவு படுத்திய பின்னர் அவனுக்குத் தேநீர் தயாரிப்பதற்காக அடுப்பின் அருகே சென்றாள்.

கனன்று கொண்டிருக்கும் நெருப்பின் ஜ்வாலையில் அவளது முகம் விகசிப்பதுடன், அவள் தனக்குள்ளே புன்னகைத்துக் கொள்வதை யும் அவன் அவதானித்தான். அவளைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருப் பதைத் தவிர்த்து பார்வையைத் திருப்பினான்.

பேசிக்கொண்டே விரைவாகத் தேநீர் தயாரித்துத் தந்தாள். ஏதேதோ பலகாரங்களை ஒரு தட்டில் இட்டு ஒரு சிறிய ஸ்டூலில் வைத்து அதனை அவன்முன்னே நகர்த்தினாள். தண்ணீரும் கொண்டுவந்து வைத்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென்னு அவளது கணவர் கண் விழித்துப் பார்த்து பிறகு சொன்னார். “அநியாயம் தம்பி... நீங்க இவவையே கல்யாணம் முடிச்சியிருந்தாக்கூட பரவாயில்ல... இவட வாழ்க்கையே என்னால நாசமாயிருச்சி..”

எதிர்பாராது வந்த அந்த வார்த்தைகளைக் கேட்டு அவர்கள் தலைகுனிந்தார்கள். அவள் தன் கையால் அவரது வாயைப் பொத்திச் சொன்னாள். “அப்படிச் சொல்லாதீங்க..”

அவனும் அவசரமாக அந்தக் கூற்றை மறுத்துரைத்தான். “சீ... அப்படியெல்லாம் ஒண்ணும் இல்ல.. விதிப்படிதான் எல்லாம்...”

அவர்கள் மிகவும் வேண்டிக்கொண்டதற்கிணங்க, அங்கு மிக விஷேடமாகவும், உடனடியாகவும் தயாரிக்கப்பட்ட பகலுணவை உண்டு விட்டுக் கிளம்பினான். கணவனைக் கதிரையில் அமரவைத்து அவள் உணவூட்டினாள்.

அவன் எல்லோரிடமும் விடைபெற்று வரும்போது அவளும் மகளும் கூடவே நடந்து வந்தார்கள். முன்னால் சென்ற அவன் சட்டெனத் திரும்பினான். பின்னால் வந்து கொண்டிருக்கும் அவளைப் பார்த்துப் புன்னகைத்தவாறு தனது கையிலிருந்த சாவிக் கொத்தை அவளுக்குத் தெரியும்படியாகக் காட்டினான். தங்கநிறத்தில் இதய வடிவில் அமைந்த அந்த கீ டெக்கின் நடுவில் ‘எம்’ எனும் எழுத்து பதிக்கப்பட்டிருந்தது. அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள். அந்த எழுத்து தனது பெயரைக் குறிக்கிறது என்பதை அவள் உணர்ந்து கொண்டாளோ இல்லையோ, அவளுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த மகள் புரிந்துகொண்டாள். அவளும் சிரித்தாள்.

காலக் கருக்கலில் தேய்ந்துபோன பழைய ஞாபகங்கள் அவன் நெஞ்சில் சுழலத் தொடங்கின. அவனும் அவளும் பக்கத்து பக்கத்து வீடுகளில் கொண்டு கொடுத்து வாழ்ந்ததும், சேர்ந்து திரிந்து உறவாடி மகிழ்ந்ததும், வீதி வீதியாகத் திரிந்து விளாம்பழமும் நாவல் பழமும் பொறுக்கித் திரிந்ததும் அவன் நினைவில் நிழலாடின. கள்ளமில்லா வெள்ளை உள்ளத்தோடு குளத்திற்குச் சென்று, தமது தாய்மார் தம்மை நீராட்டும்வரை மணற் கும்பங்களுக்குள் கைகளைப் புதைத்து விளையாடியதையும், மணல் பிட்டுகள் செய்து வரிசையாக நிறைத்து வைத்ததையும், சிலவேளைகளில் சண்டை பிடித்துக்கொண்டு அவற்றை உதைத்துக் கலைத்ததையும் அவன் ஆழ உள்ளத்தில் மறக்காத ஞாபகங் களாகப் புதைத்து வைத்திருந்தான். இருவரும் பாடசாலை செல்லும் போது கைகோர்த்தபடி சென்று அவ்வண்ணமே திரும்பியும் வருவார்கள். ஒன்றாகவே பாடம் படித்தார்கள். இருவரும் பருவம் எய்தியபோது பெற்றோர்கள் அவர்களுடைய காதலுக்கு எந்தத் தடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தவில்லை. அவர்களால் கொல்லைப்புறத்தில் நீரூற்றி வளர்க்கப் பட்ட கருவேல மரத்தைப் போலவே அவர்களது காதலும் வளர்ந்து வந்தது.

அவன் விரைவாகப் படித்து முன்னேறிய அளவுக்கு அவளால் முன்னேசெல்ல முடியவில்லை. தந்தை திடீரென்று காலமானார். அவளது படிப்பு நின்றுபோக, தனது தம்பி தங்கைகளைப் பார்த்து வளர்க்கும் பொறுப்பு அவளைச் சேர்ந்தது. அவள் படித்த படிப்பைக் கொண்டு பக்கத்துக் கடைகளில் கணக்கு வழக்குகள் பார்க்கும் தொழிலைச் செய்து வந்தாள். அதனால் கிடைக்கும் வருவாயைக் கொண்டும், வேறு சின்னச் சின்ன வியாபாரங்கள் மூலமும் அவள் குடும்ப விவகாரங்களைக் கவனித்துக் கொண்டாள். தாய் வீட்டு வேலைகளில் மூழ்கியிருந்தபோதும், மகள் திருமணத்திற்குத் தயாராகி நிற்பதை மறந்து விடவில்லை. அந்த நேரத்தில் அவளது இன்னொரு தூரத்து உறவுக் காரர்-அவரும் மைத்துனர் உறவு முறைதான், அவளைப் பெண் கேட்டு வர, தாய் சட்டென சம்மதித்து விட்டாள். அவர் சொந்தக்காரராக இருந்ததால் குடும்பப் பாரத்தை அவருமாகச் சேர்ந்து தாங்குவார் என்பது அவளது கணிப்பாக இருந்தது.

அப்போது அவன் வெளியூரில் படித்துக் கொண்டிருந்தான். படிப்பு முடிந்து தொழில் கிடைத்து மணம்பேசி முடிப்பதற்கு எவ்வளவு காலமாகுமோ என்று அவளது தாய் கவலைப்படலானாள். அவனது தாயும் இடையிடையே குத்தல் கதைகளால் அவளது உள்ளத்தைப் புண் படுத்தி வந்தாள். தனது மகனை வெளியூர்ப் பெண்கள் மணப்பதற்குப் போட்டி போட்டு நிற்கின்றனர் என்று கதையளந்தாள். அவள் நினைத்தது போலவே, நல்ல சம்பந்தங்கள் தேடிவர சீக்கிரமே அவனது திருமணத்தை முடித்து பெண்ணின் ஊரோடு அனுப்பி வைத்து விட்டாள்.

அவர்கள் இருவரதும் மனக்குமுறல்களும், ஆதங்கங்களும் யார் காதுக்கும் எட்டவில்லை. தாயின் வார்த்தைகளுக்கிணங்கி திருமணத்தில் இணைந்துகொண்டாலும்கூட பல நாட்களாக அவளை மறக்கமுடியாது போராடினான்.

அவனுக்கு மணம்பேசி முடிவாகிவிட்டது என்பதையும், கொழுத்த சீதனத்துடன் நல்ல இடத்திலே சம்பந்தம் வாய்ந்திருக்கின்றது என்பதையும் அறிந்தவுடன் அவள் ஓடிச்சென்று அவன் முன்னால் நின்றாள். தாயும் எங்கோ சென்றுவிட்டிருந்ததால் அவன் அவளைக் கண்டதும் ஓடிவந்து, தன் முன்னால் தலைகுனிந்து நின்ற அவளது முகத்தை நிமிர்த்தினான். அவளது கலங்கிய கண்ணில் ஆயிரம் சேதிகள் மின்னிக் கொண்டிருந்தன. அப்போதும் அவள் புன்னகைக்க முயன்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுப்போய் அழுகையின் விளிம்பில் நின்றிருந்தாள்.

"எல்லாம் உண்மையா?"

"ஐயோ என்ன செய்றதுண்டே எனக்கு வெளங்கல்லடி. அவங்க மேல்படிப்புக்கும் உதவிசெய்து, என்னை வெளிநாட்டுக்கும் அனுப்புறதா சொல்றாங்க..."

"நல்லம்தான். படிச்சி முடிச்சி பெரிய ஆளா திரும்பி வாங்க."

"அப்ப நீ...?"

"நா என்ன செய்றது? கேட்டு வந்தவங்களுக்கு கழுத்த நீட்ட வேண்டியது தான்..."

அந்த வார்த்தைகளைக் கேட்டதுமே அவன் குமுறிக் குமுறி அழத்தொடங்கினான். மிக மென்மையான அவனால் அதற்குமேல் எதுவும் பேசமுடியவில்லை. அவள் தொடர்ந்து சொன்னாள். "வாறதை ஒத்துக் கொள்வோம். உம்மாமார் பட்ற கஷ்டங்களும் கொறையணுமே"

"உன்னை மறக்கேலாது...." அவன் மீண்டும் தலை குனிந்து அழுதான். "உம்மா வந்ததும் ஒருக்கா சொல்லிப்பாக்கிறேன்" என்றான்.

தாய் வீட்டிற்குள் கனைத்துக் கொண்டே வந்தாள். கூடவே தங்கையும். அவள் சட்டென சுயநினைவு வந்தவளாக அனைவரையும் நிமிர்ந்து பார்த்தாள். அவளது கண்களில் வழிந்தோடும் கண்ணீர் கல்லையும் கரைக்கக்கூடியது என்று தாய் எண்ணிக் கொண்டாள். இவ்வளவு காலமும் தன் அருகிலிருந்து தனது மனதை எல்லாவற்றிலும் குளிர்வித்த அவளைத் துறப்பது குறித்து அவளுக்கும் பயம் இருந்தது. கெஞ்சலாகக் கேட்டாள்.

"அவனுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையட்டும்டுதான் இந்த முடிவ எடுத்தேம்மா... நாங்க எல்லாருமே ஓட்டாண்டியா ஆகிட்டா எப்புடி? அவனாவது மேல வர வேணாமா?"

அவளது கன்னத்தைத் தனது சேலைத் தலைப்பால் துடைத்து விட்டு, தலையைத் தடவி விட்டாள். வெளியே மேய்ந்துகொண்டிருந்த கோழிகளின்மீது அவள் பார்வை வெறுமனே பதிந்திருந்தது. பின்னர் அவளை நோக்கித் திரும்பிச் சொன்னாள். "நீங்க சொல்றது சரி மாமி..."

அவன் முந்திக்கொண்டு கேட்டான். "ஏம்மா...இப்ப இதுக் கெல்லாம் என்ன அவசரம்...?"

"வேற என்னடா செய்ய? பின்னால கவலப்படக்கூடாது இல்லையா? வாற நல்ல சம்பந்தத்த வுட்டுட்டா அநியாயம் இல்லையா?"

அப்புறம் யாரும் எதுவும் பேசவில்லை. நீண்ட நேரமாக அங்கு நிலவிய அசங்கியமான மௌனத்தைக் கலைத்துவிட்டு, "நா போறேன் மாமி.." என்று அவள் துள்ளி ஓடினாள். இருவரும் பார்த்துக்கொண்டே நின்றிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3

மீண்டும் மீண்டும் நினைவுகள் அலைக்கழிக்க தனது விடுதிக்குத் திரும்பினான். இடையிடையே அவளது கடிதங்கள் வந்து போயின. படித்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என்பதே ஒரே உபதேசமா யிருந்தது. இடையில் ஒருமுறை வீட்டுக்கு வந்தான். அவள் எந்த விகற்பமும் இன்றி அவனை வரவேற்று உபசரித்தாள்.

விரைவாகவே வேலையும் கிடைத்தது. கிடைத்த மாத்திரத்தில் அவனது திருமண நிச்சயதார்த்தமும் நடந்தது. அதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளுக்கும் அவள் அவனது வீட்டுக்குச் சென்று உதவினாள். தனது தாயின் விசித்திரப் பார்வையைப் புறந்தள்ளிவிட்டு, "எல்லாம் நல்லபடியா நடக்கும்மா....."என்று ஆறுதல் சொன்னாள்.

என்னதான் அவள் காட்டிக்கொள்ளாதிருந்தபோதிலும் அவளது நெஞ்சத்தின் ஒரு மூலையில் விம்மலும் அழுகையும் கலந்து வெளிப் பட்டன. யாரையுமே இனி நம்பமுடியாதோ எனுமாப்போல ஒரு விரக்தி நிலைக்கு அவள் ஆளானாள். அவனது திருமணம் நடந்து மணப்பெண் வீட்டுக்கு அவன் புறப்பட்டபோது அன்றைய இரவு முழுக்க முழுக்கத் தூங்கா விழிகள் படுக்கையை நனைத்தன. நெஞ்சப் பரப்பில் ஆழமான பிறாண்டலாகக் கீறிச்சென்ற காயத்தின் வலி தீராததாக அவளைத் துன்புறுத்திக் கொண்டிருந்தது. நடுக்கடலில் தனியே விடப்பட்ட ஓடம்போல தன்னைக் கற்பனை செய்துகொண்டாள். பொங்கிவந்த கண்ணீர் அவளை மூழ்கடித்தது. அவ்வாறே, மேற்கு நாடொன்றில், ஒரு மூலையில் கையை மீறிய சம்பளம் பெற்று அவன் குடியேறியபோதும் அவன் நினைவுகள் அவளை வாட்டின. தான் சிறகிழந்த பறவையாகத் தொலை நாடொன்றில் கஷ்டப்படுவதாக அவனும் எண்ணிக் கொண்டான். அவனது மனைவியோ எந்த வஞ்சகமும் இல்லாத உள்ளத்தோடு அவனைச் சுற்றியே வளையவரத் தொடங்கினாள். அந்த அன்பில் சிலபோது அவன் மனது கவலைகளை மறக்கவும் செய்தது.

தனது திருமணத்தன்று அவனது தாயின் உதவியுடன் அவனுடன் தொலைபேசியில் பேசினாள். அவனும் தம்பதி சமேதராக அவளை வாழ்த்தினான். விழிகளில் நிறைந்த நீரை அவன் கட்டுப்படுத்திக் கொண்டதை அவள் அறியாமலே போனைத் துண்டித்தாள். அவனது நெஞ்சமும் ஆறாத ரணமாகப் புண்பட்டுப் போயிருந்தது. இரவிரவாக தூக்கம் விழிக்கலானான். நண்பர்களிடம் விசாரித்தான்.

அவளது வாழ்க்கை சீராக சென்று கொண்டிருந்தது. ஒரே மகள் படுசுட்டியாக இருந்தாள். வகுப்பிலும் படுகெட்டிக்காரியாக இருந் தாள். பக்கத்து வீட்டில் தனது மைத்துனனின் தங்கை மணமுடித்து சிறிது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் வாழ்ந்த பின்னர் வீட்டை மூடி சாவியைக் கையில் எடுத்துக் கொண்டு தனது கணவனின் வீட்டுக்கே சென்று குடியேறி விட்டாள் அவள். செல்லும் வரை குழந்தையில்லாத அவளுக்கு இவளும் துணை யாக இருந்தாள். அப்போது ஒரு நாள் அவள், "உங்க உம்மாவதான் எங்க அண்ணா மொத காலத்துல விரும்பியிருந்தாரு..." என்று சொல்லி வைத்திருந்தாள். அது பற்றிய கதைகளையெல்லாம் கொஞ்சங் கொஞ்ச மாகக் கேட்டு அறிந்து கொண்ட அவள், தனது தாயின் வாழ்க்கையில் ஏற்பட்ட சோகத்தை எண்ணிக் கவலைப்பட்டாள். தனது தாய் தனது தந்தையைக் கரம்பிடித்த நாள்முதலாக படும் பாடுகளையும் பச்சாதா பத்தோடு அவதானித்து வந்தாள்.

"நீ எங்கட சொந்தம்தான். உங்க உம்மாவ எங்க நானா கல்யாணம் முடிச்சிருந்தா இன்னம் சொந்தமாயிருப்ப..." ஒருநாள் அவள் கன்னத்தில் முத்தமிட்டு அவள் சொன்னபோது, தனக்கு இரண்டு தாய்மார் கிடைத்திருந்தால் எப்படியிருக்கும் என்ற கற்பனையில் ஆழ்ந்தாள் அவள். அந்தளவுக்கு அவள் இவள்மீது அன்பைச் சொரிந்து வந்தாள். ஒருநாள் வானொலியில் ஒலித்துக்கொண்டிருந்த ஒரு பாடலைச் சத்தமாக ஒலிக்கவிட்டு அந்தச் சின்னப் பெண்ணின் காதில் கூறினாள்.

"இதுதான் உங்க உம்மாவுக்கும் நானாவுக்கும் புடிச்ச பாட்டு..." என்றாள். அந்தப் பாடலைக் கூர்மையாகக் கேட்டு மனனஞ்செய்து கொண்ட அவள் வீட்டை நோக்கி ஓடினாள்.

"காதல் கிளிகள்
பறந்த காலம்
கண்ணில் தெரியும்
நெஞ்சம் உருகும்....."

அவள் தொடர்ந்து இந்தப் பாடலடிகளைச் சிறிது தப்பும் தவறுமாகப் பாடிக் கொண்டிருந்தபோது தாய் அவளை விசித்திரமாக நோக்கினாள்.

"உம்மா எனக்குத் தெரியும் இதுதானே உங்கட...?"

அவள் வெட்கத்துடன் சிரிப்பதற்கோ, அவளை அதட்டு வதற்கோ தயாரானாலும், அந்தப் பாடல் வரிகள் தூண்டிய பழைய ஞாபகங்களின் கீற்று அவளை சில கணங்கள் மெய்ம்மறக்கச் செய்தது. பின்னால் ஒளிந்து நின்று கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த அவன் தங்கை அந்தக் காட்சியைத் தன் கண்களால் அப்படியே சிறைப்படித்துக் கொண்டாள். அடுத்த நாளே அண்ணனின் காதில் அந்த செய்தி வந்து விழுந்து அவன் நெஞ்சில் இறுகியிருந்த பனிக்கட்டிகளை மீண்டும் உருக்கிக் கொட்டிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஞாபகங்களில் இருவரும் மூழ்கி முக்குளித்து எழுந்து மச்சான் - மதினி என்ற உறவு முறையில் ஏதோ பேச முயன்றாலும் இப்போது ஏதோ ஒன்று தடுத்தது. பக்கத்தில் வாலைக் குமரியாய் நின்ற மகள் மீது ஒரு கணம் பார்வை பதிந்து மீண்டது. சட்டென நின்று அவளது தலையைத் தடவி அவன் கேட்டான்.

"உம்மாவின் கதையெல்லாம் உனக்குத் தெரியுமா?"

அவள் எதிர்பாராத அந்தக் கேள்வியில் சிறிது தடுமாறினாலும் சிரித்தாள். பின்னர் பெருமிதத்துடன் தலையாட்டினாள்.

"அதைச் சொல்றதுக்கு வார்த்தை இல்லை"... அவன் கண்ணீர் துளிர்க்க முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

அங்கிருந்து கிளம்புவதற்கு முன் அவனது காரை வாசலில் கண்டு விட்ட பல உறவுகள் முண்டியடித்துக் கொண்டு அங்கே வந்து சேர்ந்தன. அவர்களை விலக்கிக் கொண்டு அவன் காரில் சென்று ஏறுவதற்கிடையில் போதும் போதுமென்றாகி விட்டது. எல்லோரும் தத்தமது வீடுகளுக்கு அவனை அழைத்தனர்.

"இன்னும் சில நாள்ல நா ஃபெமிலிய கூட்டிட்டு வாறேன். இப்ப வீட்டுல சொல்லாம வந்துட்டேன்" என்று நாகரிகமாகக் கூறி அவன் புறப்பட்டான்.

காரில் ஏறுமுன் பழைய காலத்தில் சேர்த்தே கட்டப்பட்ட அந்த எனெக்ஸ் போன்ற வீட்டின் அடுத்த பக்கத்தை ஏக்கத்துடன் பார்த்தான். அவன் ஓடிப்பிடித்து, சீறிச் சினந்து விளையாடிய அவ்வீடு மூடிக் கிடந்தது.

அவனது மனதில் மீண்டும் மீண்டும் அவளதும், அவளது குடும்பத்தைப் பற்றியுமான எண்ணங்கள் தோன்றி மறைந்தன. எப்படி யாவது, ஏதாவது ஒரு விதத்தில் அவளுக்கு உதவ வேண்டும். அது அவள் ஏற்றுக் கொள்ளும் விதமாகவும் இருக்க வேண்டும் என்று அவன் முடிவெடுத்துக் கொண்டான்.

தனது நண்பனான சிறந்த வைத்தியன் ஒருவனிடம் விசாரித்துப் பார்த்தபோது இத்தகைய முடக்கு வாதம் மருந்தால் சரி செய்ய முடியாதது என்றும், எண்ணெய் பூசுவதே சிறந்தது என்றும் கூறி அவன் கையை விரித்தான்.

## 4

மரியம் பீபி வயலுக்குச் சென்றுகொண்டிருந்தாள். மகளையும் கூட்டிக்கொண்டு ஆட்டுக்குப் புல் வெட்டி வரலாம் என்று எண்ணி யிருந்தாள். "இதென்ன காய்மா? தின்னேலுமா?" சில இடங்களில் மகள் நின்று ஏதேதோ பொறுக்கிக் கொண்டு வந்து காட்டினாள். "சீ... நஞ்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய். தின்னாத.." அவள் பறித்து வீச அது எங்கோ சென்று விழுந்தது.

வயல் வரம்புகளிடையே கவனமாக நடந்து செல்வதில் அவளுக்குப் பழக்கம் இருந்தது. அது மட்டுமா? முற்றத்தில் பெரிய அடுப்பு கூட்டி, பெரிய பெரிய அண்டாக்களில் நெல்லைக் கொட்டி அவிப்பதும், அரிசியைக் குத்தி எடுப்பதும்கூட அவளுக்கு இப்போது அத்துபடியாகியிருந்தது.

முன்னர் வறுமையில் வாடினாலும்கூட வேளாவேளைக்குச் சாப்பிட முடிந்தது. இப்போதோ சாப்பிடுவது மட்டுமல்ல, இருக்கின்ற எல்லாவற்றையும் கையை விட்டுப் போக விடாமல் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற வைராக்கியமும், மகளுடைய எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையும், அதனாலேயே தனக்கு விமோசனம் கிடைக்கும், கிடைக்க வேண்டும் என்ற பிடிவாதமும் அவளுள் சேர்ந்து கொண்டிருந்தன.

மகள் சமநிலைக்காக கைகளை விரித்து அவள் பின்னால் ஓடியோடி வந்துகொண்டிருந்தாள். தூரத்தே பறந்த நாரைக் கூட்டத்தை நோக்கி இடையிடையே சிறு கற்களை வீசிக்கொண்டிருந்தாள். தாய் தடுப்பது எதுவும் அவள் காதில் விழவில்லை.

வயல்கள் அறுவடைக்குப் பின்னே காய்ந்து மஞ்சளாகக் கிடந்தன. தூரத்து வயல்வெளியில் கொஞ்சம் பச்சையாகத் தெரிந்த ஒரு துண்டு நிலப்பகுதியில் காலையில் அவள் தனது மாட்டைக் கொண்டு கட்டி வைத்திருந்தாள். அதை அவிழ்த்து வரவே இப்போது சென்று கொண்டிருந்தாள். மகளும் ஏதேதோ காரணங்காட்டி அவளுடன் கிளம்பியிருந்தாள். வயலுக்கு சற்று அப்பால் சிங்களப் பாடசாலை தெரிந்தது.

"எங்கடீ போற? இங்கிட்டு வா.." மகளை நேர்வழியில் நடத்தி கூட்டிப்போய்க் கொண்டிருந்தாள். ஆயினும் வரம்புகள் நடுவே வரிசை யாக நின்ற தென்னை மரங்களையும், இடையிடையே அணிவகுத்து நின்ற வாழை மரங்களையும் தொட்டுப் பார்த்து ஏதேதோ கதை பேசிக்கொண்டு மகள் வந்து கொண்டிருந்தாள்.

"என்ன மரியம்பீ இந்த நேரத்துல எங்க...?" வயலின் அடுத்த கரையிலிருந்து குரல் கேட்டது. வயலுக்கு சற்று ஒட்டினாற்போலிருந்த சேனையில், மரமொன்றின்மீது அமைக்கப்பட்டிருந்த பரணின் மீதிருந்து, கால்களைத் தொங்கபோட்டபடி அமர்ந்திருந்த முஸ்தபா அவளைக் கண்டு கீழே இறங்கி வந்தான். சேனையில் இன்னும் சில மாதங்களில் அறுவடைக்குத் தயாராகவிருந்த எள்ளுச் செடியின் பூக்கள் காற்றில் ஆடிப் பொலிந்து கொண்டிருந்தன.

"மாடு கொண்டுவரப் போறியா...? இரு...இரு...நா எடுத்துட்டு வாறேன்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது உதவியை அவசரமாக மறுத்தாள். "இல்ல மாமா. நா போறேன். எனக்கு ஏலும்தானே...?"

"ஓ.... ஒனக்கு ஏலும்தான். நா இல்லண்டு சொல்லல்ல...ஒரு ஒதவிதானே...? வெத்தல தரவா?"

அவள் ஒரு பிடி வாங்கி வாயில் போட்டுக்கொண்டாள். அடுத்த கரையிலிருந்து அவனது மனைவியும் வந்து சேர்ந்தாள்.

"எங்க போற மரியம்பீ..?" இரக்கம் தொனிக்கக் கேட்டாள்.

"மேயக் கட்டின மாட எடுத்துட்டு வரப் போறேன். நீங்க இங்க நில்லுங்க. நானும் திரும்பி வாறேன்.."

அவள் மாட்டைத் திரும்ப எடுத்துக்கொண்டு வரும்போது மகள் ஓடிச்சென்று நாலைந்து புல் கட்டுகளைக் கட்டி எடுத்துக்கொண்டு தூக்கி வந்து காட்டினாள்.

"உம்மா...இதெல்லாம் நா சேத்தது..."

"அடே...நல்ல புள்ள!...நா மறந்துட்டேன்... கெட்டிக் காரிடி..."

மகளை வாழ்த்திவிட்டு இன்னும் சில கட்டுகளைப் பொறுக்கிச் சேர்த்து வந்து அவற்றை ஒரு கட்டாக ஒன்றுசேர்த்து ஒரு நாரால் கட்டி அவள் கையில் கொடுத்தாள். அவள் அதனை இடுப்பிலும், இடுப்பு வலிக்கும்போது தலையிலும் வைத்து மாறி மாறி சுமந்து வந்தாள். சும்மாடாகக் கொண்டுவந்திருந்த துணி எப்போது இடுப்பைவிட்டு நழுவியது என்று அவளுக்குத் தெரியவில்லை. மகள் சின்னக் கத்தியைப் புற்கட்டுக்கு உள்ளேயே செருகிக்கொண்டாள். சுற்றுமுற்றும் பார்த்து விட்டு இருவரும் திரும்பினார்கள். தூரத்தில் வாடியருகில் நின்றிருந்த சுலைஹாவும் அவள் அருகே வரக் கண்டதும் மெல்ல நடைபயின்று வந்து அவளோடு சேர்ந்து நடக்கத் தொடங்கினாள். இருவரும் பேசிக்கொண்டே நடந்தனர். திடீரென்று மரியம்பீபி கேட்டாள்.

"செலயாத்தா...நா ஒரு விஷயம் கேள்விப்பட்டனே...உம்மயா? அவளது அகல விரிந்த கண்களில் எதையோ கண்டுகொண்ட சுலைஹா "என்னடீ...?" என்று அவளைக் கூர்மையாகப் பார்த்துக் கேட்டாள். தான் பத்து வயது மூத்தவளானாலும் அவளைத் தனது ஸ்நேகிதியாகப் பாவிப்பது சுலைஹாவின் வழக்கம்.

"மகளுக்கு நல்ல எடத்துல மாப்புள்ள பாத்து ரகசியமா முடிவாக்கிட்டியாமே... மாப்புள்ளயும் அடிக்கடி வந்து போறாராமே... ஊரெல்லாம் நொய்யுன்டு இருக்கே... "

இதென்னடி புதுக் கத...?" அவள் கன்னத்தில் கையை வைத்து அயர்ந்து நின்றாள்.

"அவ என்னன்டா அவனோட சேந்துகிட்டு காலயிலயும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலயிலயும் காடு மேடெல்லாம் சுத்தி வாறா...இந்த வள்ளல்ல கல்யாணமாவுது... மண்ணாவுது..?" ஏனைய வார்த்தைகள் வாய்க் குள்ளேயே அழுந்தின. புருவத்தை நெரித்துக் கொண்டாள். பிறகு சொன்னாள். அதில் சிறிது உற்சாகம் கலந்திருந்தது.

"அன்னக்கி கொழும்புலயிருந்து ஆக்கள் வந்திறங்கினாங்களே... அதக் கண்டு யாராவுது கத வுட்டிருப்பா... அது எங்கட மகன்ட கூட்டாளிமார். யாழ்ப்பாணத்துக்கு ட்ரிப் போற வழியில ஆம்புள பொம்புளயெல்லாம் வூட்டுக்கு வந்து எறங்கிட்டுப் போனாங்க.." அவள் விளக்கமாகச் சென்னாள்.

"அப்ப என்ன செய்யப்போற ஒன்ட மகள...?" உண்மையான கவலையுடன் மரியம்பீ கேட்டாள்.

"வேற என்னத்த செய்றது..? இந்த எள்ளு சீசன் முடிஞ்ச ஒடனே முடிச்சிற வேண்டியதுதான்...நீ கெழவன கட்டிகிட்டு அழுவுற மாதிரி அவவும் அவன கட்டிட்டு அழட்டும்..." வெறுப்புடன் கூறினாள் சுலைஹா.

"பாரு...எவ்வளவோ சொல்லிட்டேன்.. அவ கேக்குற மாதிரி இல்ல. அவன வுடமாட்டேன்னு நிக்கிறா...பாவி எங்க இருந்தோ வந்து இங்க வுழுந்துட்டான்... ரெண்டு புள்ளட வாப்பா.. மனுஷிய தலாக் சொல்லிட்டு இவளோட திரியிறான்.. பாரு.. காலம் எப்புடி போவுது..?"

சிறிது நேரம் இருவரும் மௌனமாக நடந்தனர். மகள் முன்னால் சென்றுகொண்டிருந்தாள். தான் அநியாயமாக இந்தப் பேச்சை இழுத்தாக மரியம் பீபிக்குத் தோன்றிற்று. வரம்புகளில் இடையிடையே விழுந்து கிடந்த இலுப்பங் கொட்டைகளையும், வேப்பங் கொட்டை களையும் தனித்தனி பைகளில் பொறுக்கிப் போட்டபடியே சுலைஹா நடந்தாள். அவள் ஒரு பேச்சைத் தொடங்கினால் விடமாட்டாள் என்பதும், தனது வேலையில் கவனமாக இருப்பாள் எனினும் பேசுவாள் என்பதும் மரியம்பீவிக்குத் தெரியும். அவள் வாயை மூடிக்கொண்டாள். சுலைஹா மீண்டும் பேசினாள்.

"அவன் மொத மனுஷிய வெளிநாட்டுக்கு அனுப்பிட்டான்டும், அவன் பெத்து வெச்சிருக்கிற ரெண்டு ஷைத்தான்கள மத்ரஸாவுல சேத்துட்டான்டும் ஒரு கத அடிபடுது. அவ வந்ததும் இவவ வெளி நாட்டுக்கு அனுப்பி வைப்பானாக்கும்.... ஷோக்கா திரிஞ்சி பழகிட்டானே..." அவள் கவலையின் உச்சத்தில் புலம்பிக்கொண்டு வந்தாள். மரியம்பீயும் உண்மையான கவலையுடன் கேட்டாள்.

"ஏன் செலயாத்தா...கொஞ்ச நாளக்கி அவவ எங்கயாவுது அனுப்பி மறக்கடிச்சா என்னா..?"

"ஐயே...அதயேன் கேக்குற...? செய்யாத செய்வினயெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சி பாத்துட்டேன்...அந்த தறுதல எதையும் கேக்குற தில்லடி... அதெல்லாம் ஒரு காலம்...குடும்பத்துக்காக வந்தவனுக்கு கழுத்த நீட்டினது..." சிறிய இடைவெளிக்குப் பிறகு மீண்டும் கூறினாள். "எல்லா பொம்புளைகளும் ஒன்ன மாதிரி இருப்பாங்களாடி...? இப்ப காலம் கெட்டுப் போச்சி...எல்லாருமா சேந்து ஒன்ட வாழ்க்கய கெடுத்தாங் களே... அத மாதிரி இப்ப இல்ல..." அவள் பேசப்பேச மரியம்பீபி மேலும் மௌனமானாள்.

"நாகூட எவ்ளோ சொன்னேன்...அவன் நல்லவன்தான் என்டா லும் வயசுகூட...அவன கட்டிட்டு என்ன வாழப் போறான்டு...ஒன் உம்மா கேக்கவே இல்லடி..."

மரியம்பீபி வரம்பைப் பார்த்து தலைகுனிந்து நடந்து வந்தாள். மகள் முன்னால் ஓடிப்போய் நின்று கால்கள் வலிப்பதாகக் கூறி அமர்ந்து கொள்ளவே அவர்களும் அவள் காதுக்குக் கேட்காத தூரத்தில் அமர்ந்து கொண்டார்கள்.

"எல்லாம் நடந்து முடிஞ்சி போச்சி செலயாத்தா..." மரியம்பீபி பழைய ஞாபகங்களில் மூழ்கினாள்.

5

கல்யாணம், காட்சி எல்லாம் சிறப்பாகத்தான் நடந்தது. உம்மா வும் ஜாபிர் கொண்டுவந்த மணமகளைப் போலவே செல்வாக்குள்ள, வயல்களுக்கும் உழவு இயந்திரங்களுக்கும் சொந்தக்காரனான மருமகன் வாய்த்ததில் மிக மகிழ்ந்து போயிருந்தாள். எனவே, தன்னைவிட பதினைந்து வயது மூத்தவனான தாஸீமை மணமுடித்து மரியம்பீபி புகுந்த வீடு சென்றாள்.

அவர்களிடம் செல்வம் அதிகம் இருந்தது என்றபோதிலும் அம்மனிதர்கள் இடையிடையே காட்டுகின்ற சில கீழ்த்தரமான பண்பு களைக் கண்டு அவள் பெரும் அதிர்ச்சியடைந்தாள். அவளது மதினி அன்றிரவே அவளை ரகசியமாக அழைத்து, "இவன் கொஞ்சம் கோவக் காரன்தான். சமாளிச்சி நடந்துக்கோ..." என்று அறிவுரை கூறியபின்னர் திடீரென்று சொன்னாள். "நீ ஜாபிர விரும்பினது...பழகினது எல்லாமே அவனுக்குத் தெரியும்..." என்று ஒரு அதிரடித் தாக்குதலைத் தொடுத்து விட்டு நடையைக் கட்டியவள்தான் அப்புறம் யாருமே எட்டிப் பார்க்கவில்லை.

தாஸீமும் மரியம்பீபியின் அழகால் கவரப்பட்டு அவளை மணமுடித்திருந்தானேயொழிய அவள்மீது உண்மையான அன்பைச் செலுத்த மனமில்லாதவனாக இருந்தான். கோபம் வரும்போது அறைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவுகளை இறுக மூடிக்கொண்டு வார் பட்டியினால் அவளை அடித்துத் துன்புறுத்தினான். பின்னர் கதவைத் திறந்துகொண்டு எதுவுமே நடவாதமாதிரி வெளியே செல்வான். அவளும் அடிவாங்கி மரத்துப் போயிருந்ததால் கண்ணீரை மறைத்துக் கொண்டு வெளியே வருவாள்.

ஒருநாள் அவளது தம்பி எதேச்சையாக அவள் வீட்டுக்கு வந்திருந்தபோது இந்தக் காட்சியைக் கண்டுவிட்டு மனங்கொதித்து அவளிடம் கேட்டான்.

“ஏன் தாத்தா இப்புடிக் கெடந்து சாகுற...? ஒனக்கென்ன புள்ளயா... குட்டியா...? என்னோட வா...”

அவள் அதை மறுத்து அவனைச் சமாளித்து அனுப்பி வைத்தாள். அவளைப் பொறுத்தவரை ஜாபிரின் திருமணத்திற்குப் பிறகு பட்ட மரம் சிறிது துளிர்த்தாற்போல ஒரு நம்பிக்கை ஏற்பட்டு பின்னர் அதுவும் கருகிப் போனது. இனி யாரையும், எதற்கும் குறை சொல்லவும் கூடாது; நம்பவும் கூடாது என்று அவள் முடிவுகொண்டிருந்தாள். எல்லாம் விதிப் படியே நடந்து முடிந்து விட்டது; தன் கையில் எதுவும் இல்லை எனுமாப்போல ஒரு சடத்துவ உணர்வு அவளை ஆட்கொண்டிருந்தது. அவள் தனது தாயைப் பற்றி அதிகமாக யோசித்தாள். அவளது மனதை நோகடிக்கக் கூடாதென்றும், அவளுக்குத் தான் ஒரு சுமையாக ஆகிவிடக் கூடாதென்றும் அவள் பாடுபட்டாள்.

ஒரு தடவை அவளது மற்ற தம்பி வந்து அவளைக் கட்டிக் கொண்டு அழுதான். “நீ ஏன் தாத்தா நெல் அவிச்சிம், அரிசி குத்தியும் கஷ்டப் பட்ற? ஏலான்டு சொல்லலாம்தானே...?” அப்போது அவளது மகள் கைக்குழந்தையாக இருந்தாள். தனது மகளின் வாழ்வே அவளது இலட்சியமாக ஆகிவிட்டிருந்த நேரம் அது. அவளை உருவாக்குவதே தனது கடமை என்று அவள் எண்ணி வந்தாள்.

“எல்லாம் சரியாப் போகும்...நீ பாரேன்...” என்று தம்பிக்கு ஆறுதல் சொல்லி அனுப்பி வைத்தாள். வீட்டுக்குள்ளே கள்வனைப்போல ஒளிந்து ஒளிந்து வருகின்ற, தனது சட்டைப் பையில் கட்டுப் பணத்தை வைத்துவிட்டு, அதை மனைவி திருடுகிறாளா என்று வேவு பார்க்கின்ற தனது கணவனைப் பற்றி அவள் யாரிடம், என்ன சொல்லி அழ முடியும்? தன் மனதுக்குள்ளேயே எல்லாவற்றையும் பூட்டி வைத்தாள்.

ஒருநாள் வயலுக்குச் சென்று வருகிறேன் என்று சென்றவர், உழவு இயந்திரத்தால் தூக்கி வீசப்பட்டு நிலத்திலே விழுந்தபோது அருகே இருந்த கல்லில் தலை பலமாக அடிபட்டு சுயநினைவற்ற நிலையில் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டார். தன்னை அடித்துத் துன்புறுத்திய கைகள் இப்போது வலுவிழந்து போனதும் அவள் செய்வதறியாது திகைத்தாள். செய்தி கேட்டு அவரது தம்பிமார் ஓடிவந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது உதவியோடு அவள் எல்லா மூலை முடுக்கு களுக்கும் அவரைத் தூக்கிச் சென்றபோதும் குணப்படுத்த முடிய வில்லை.

எப்போதாவது தான் செய்த தவறுகளைத் திருத்தி, மனம் மாறுவார் என்று காத்திருந்தவளைத் திருப்திப்படுத்தவோ என்னவோ, காலம் பலாத்காரமாக அவரது மனதை மாற்றிக் காட்டியது. படுக்கையில் கிடந்ததால் நொந்து, மனம் வெதும்பி, தான் செய்த பாவங்களையெல்லாம் எண்ணி அழுத அவர் இப்போது தன் மனைவி தன்னை இப்படிக் கவனித்துக் கொள்கிறாளே என்று மனைவிமீது பச்சாதாபம் கொண்டு மன்னிப்புக் கேட்கும் அளவுக்கு நிலைமை மாறியது. எனினும், அவள் எதிர்பார்த்த நிம்மதி எப்போதும் அவளுக்குக் கிட்டவில்லை.

அவளது வேலைகளும் பொறுப்புகளும் அதிகரித்தன. ஆணுக்கு ஆணாகவும் அவள் மாறவேண்டியிருந்தது. எல்லாவற்றையும் சமாளித்துக்கொண்டு வாழக்கற்றுக் கொண்டாள். ஒருநாள் தனது தம்பியைப் பார்க்கவந்த அவளது மதினிக்காரி, “ஏதோ காஞ்சி காஞ்சி கெடந்தவளுக்கு ராஜவாழ்க்கை கெடச்சிருச்சேன்டு பாத்தேன். இப்ப தான் தெரியுது ஒன் தலையெழுத்து எப்புடின்டு...” என்று குத்தலாகப் பேசியதைக் கேட்டு அவளது கணவர் மிக வருந்தி அவளிடம் மன்னிப்புக் கேட்டார்.

## 6

மரியம் பீபி வீடு வந்தபோது அவளது இளைய தம்பி அங்கே வந்திருந்தான். பொழுது இருட்டிக்கொண்டு வந்திருந்ததால் கோழி களும், ஆடுகளும் அடைவதற்காக பட்டிக்கு அருகில் வந்து சுற்றிச் சுற்றி கரகரத்துக் கொண்டிருந்தன. கொஞ்சம் தாமதித்துப் பார்த்தபிறகு அவனே அவற்றை அடைத்துக் கொண்டிருந்தான். அவனைக் கண்ட துமே அவள் முகமலர்ந்து, “தம்பீ, எப்படா வந்த....?” என்று கேட்டாள்.

“கொஞ்சத்துக்கு முந்திதான் வந்தேன்..”

“கொஞ்சம் இரி. நா கை கால் கழுவிட்டு வந்துர்றேன்...”

“எனக்கு தேத்தண்ணியெல்லாம் வேணா தாத்தா...இப்பதான் நா ஊத்தி மச்சானுக்கும் குடுத்தேன்” அவள் “உஸ்” என்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு, சிறிது காற்று வாங்குவதற்காக பின்வாசல் கதவில் சாய்ந்து, ஒரு பலகைக் கட்டை எடுத்துப் போட்டுக் கீழே அமர்ந்தாள். அதற்குள் அவள் மகள் வெளியில் போவதற்கு ஓடிவந்து அவள் காலில் விழ, “போடி அங்கால...” என்று வெளியில் அவளைத் தள்ளிவிட்டு புறுபுறுத்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தம்பியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அது ஏனோ பொலிவிழந்து, களையிழந்து கிடப்பதாக அவளுக்குப் பட்டது. “என்னவாயிருக்கும்?” என்று யோசித்துக் கொண்டே அவனைப் பார்த்து, “மதினி சுகமா?” என்று கேட்டாள். “ஐயோ, அத ஏன் தாத்தா கேக்குற...?” என்று இழுத்தான். “பெரிய அக்கப்போரா இருக்கு தாத்தா...”

“ஏன்...? என்னடா...?” அவள் பதறினாள்.

“இவக்கும், அவக்கும் ஒத்து வருதேயில்ல....நாங்க ரெண்டு பேருமே என்னா செய்றதுன்டு தெரியாம முழிச்சிகிட்டிருக்கோம்...” என்று அவன் கூற, அப்போது சக்கர நாற்காலியைத் தள்ளிக்கொண்டு அவள் கணவரும் அங்கு வந்து சேர்ந்தார். அவள் எழுந்து வாசல் விளக்கு களை ஒளிரவிட்டு வந்தாள். வெளியே இருட்டிக்கொண்ட வந்ததால் மகள் வெளியே சென்று முற்றத்து மாமரத்தில் மாட்டைக் கட்டிவிட்டு, வெளிக்கிணற்றில் கைகள், முகம் அலம்பிக்கொண்டு உள்ளே வந்தாள்.

அவன் அவரைக் கண்டு சிறிது தயங்கினாலும், அந்தப் பிரச்சினையின் உக்கிரம் தாளாதவனாக மீண்டும் பேசத் தொடங்கினான். “நா சொல்ற எதையுமே அவ கேக்குறா இல்ல. பெரிய மதினி அவவோட சேந்து போகத்தான் பாக்குறாங்க. ஆனா இவ பிடிவாதம் புடிக்கிறா. ராவு பகலானா சீவி சிங்காரிக்க மட்டும் தான் அவவுக்கு தெரியும். மாப்புள்ளயக் கவனிக்கணுமே, காலைல சாப்பாடு குடுத்து அனுப்புவமே எதுவும் இல்ல....”

அவளது தம்பிமார்கள் இருவரும் பக்கத்து ஊரில் மணிப்பெட்டி வியாபாரம் செய்து வந்தார்கள். பக்கத்துக் கடைகள். சற்று தள்ளிய தூரக் கிராமத்தில் இருவரும் பெண் எடுத்திருந்தார்கள். ஒரே வீட்டில் வாழ்ந்தார்கள். இருவருமே ஒற்றுமையாகக் கட்டிய வீடு. மனைவிமாரும் ஒரே குடும்பத்தின் ஒன்றுவிட்ட சகோதரிகள். எனவே, இரு தம்பிமாரும் பிரச்சினையைப் பெரிதாக்கிக் கொள்ளப் பயந்தார்கள்.

“தம்பீ, எல்லாம் சரியாயிரும், ஒரு புள்ளயப் பெத்துட்டா...”

“இல்ல தாத்தா, கொஞ்சம் படிச்சவளா...வசதியானவளா இருக்கிறாவேன்டு எரக்கமா பாத்தா, அவ அதுக்கெல்லாம் அடங்க மாட்டா போலத்தான் இரிக்கி....”

“சரி...சரி.. கல்யாணம் நடந்து இப்ப ஒரு வருஷம்தானே ஆவுது...? எல்லாம் சரியாப் போகும். பெரிய மதினிட்ட சொல்லு... கொஞ்சம் வுட்டுப் புடிக்கச் சொல்லி....”

அவன் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டுப் பின்னர் பேசினான்.

“இன்னக்கி அவட கரகரப்பு தாங்காம நல்லா போட்டேன் ரெண்டு முதுகுல...அதோட அடங்கிட்டா...”அவன் குரலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமிதம் தொனித்தது.

"சீச்சீ...அதெல்லாம் வேணாம்டா...அவளே ஒரு மெலிஞ்ச குச்சி...ஏதாவுது செஞ்சிராத..."

"இங்க பாருங்க பதுரு மச்சான்....அவவ கூட்டிட்டு ரெண்டு நாள் இங்க வந்து வுடுங்க...மரியம்பியோட சேந்து இரிக்கட்டும். நாங்க மெதுவா புத்தி சொல்லி அனுப்புறோம்..." அவள் கணவர் கூறினார்.

"அதெல்லாம் சரிப்பட்டு வராது...."அவன் உடனே மறுத்தான். அவளும் ஆமோதித்தாள்.

"அவக்கு எங்கட யாரையுமே புடிக்குது இல்ல... தனிக் குடித்தனம் பத்தித்தான் ஒரே பேசுறா..."

"அப்ப அதுக்கான வழியப் பாருடா..." அவள் முத்தாய்ப்பு வைத்தாள். பிறகு நீண்ட நேரமாகிவிட்டது என்பதை உணர்ந்து, "இரி...சாயம் கொண்டு வாறேன்.." என்று எழுந்தாள்.

அவனும் சற்று சாந்தமாக முன்புறம் எழுந்து சென்றான். முன் ஹோலில் மரியம் மகள் உட்கார்ந்து சப்தமாகப் படித்துக் கொண்டிருந் தாள். அவன் அருகில் அமர்ந்து திரும்பவும் தனது பிரச்சினை குறித்து யோசிக்கத் தொடங்கினான்.

அவனைப் பொறுத்தவரை இந்தக் குறுகிய காலத்துக்குள்ளா கவே புது மனைவியோடு அவனுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் பூதாகரமாகத் தெரிந்தன. எந்தவிதத்திலும், வெளியிலிருந்து எவரும் தீர்ப்பு சொல்ல முடியாதபடி உள்வீட்டுப் பிரச்சினை மிகச் சிக்கலாக இருக்கிறது என்பதாக உணர்ந்தான். தனிவீடு என்பதும் ஒரு பெரிய தீர்வாக அவனுக்குப் படவில்லை.

அவன் சிந்தனையில் மூழ்கியிருப்பதைக் கண்டு அவனைச் சீண்டுவதற்காக அவள் நிமிர்ந்து பார்த்தாள். மற்ற நாட்கள் என்றால், "என்னா படிப்பு படிக்கிற நீ...பீ.ஏ.யா...? எம்.ஏ.யா...?" என்று கேட்பானே...

அன்புடன் "மாமா" என்றழைத்துச் சொன்னாள், "ஜாபிர் மாமா வந்துட்டுப் போனாரே..."

அப்போதுதான் பிரக்ஞை வந்தவனாக அவன் அவளை விழித்துப் பார்க்க, அவள் மீண்டும் சொன்னாள், "ஜாபிர் மாமா வந்துட்டுப் போனாரே.."

அவன்"ஆங்..." என்று திடுக்கிட்டு விழித்தான். பின் சட்டென்று எழுந்து உள்ளே போனான்.

"தாத்தா...ஜாபிர் வந்தானாமே..."

அவள் "ஓ...சொல்ல மறந்துட்டேன்..." என்றபடி அவனிடம் தேநீரைக் கொடுத்தாள். "பத்து நாள் லீவுல வந்தாராம்...திரும்பவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரேன்டார்…"

"எப்புடியிருக்கான்…?" என்று ஆவலுடன் வினவியவன், "எங்கட வூட்டுப் பக்கம் வருவானோ தெரியா…" என்று தனக்குள் கூறிக் கொண்டான். "அங்க ஸிட்டிஸன்ஸிப் கெடச்சிரிச்சாமா…?" என்று விசாரித்தான். அவள் "தெரியாது" என்று கூறினாள்.

அப்போது மகள் உள்ளே வந்து, "உம்மா…ஹிதாயாமி வந்திரிக்காங்க…" என்றாள். "ஹிதாயா ஆச்சி" என்ற உறவுமுறை அவர்களுடைய இளைய தோற்றம் காரணமாக "ஹ்தாயா மாமி" என்றாகி, பின்னர் "ஹிதாயாமி" என்று மருவியிருந்தது.

அதற்குள் அவளாகவே உள்ளே வந்து "மரியம்பீ.." என்றழைத்தவள், அவனைக் கண்டதும், "ஆ…பதுரு தம்பி…எப்ப வந்தீங்க…?" என்று விசாரித்தாள். "இப்பதான் வந்தேன் மாமி…" என்றான் அவன்.

"அதில்ல மரியம்பீ…ஸ்கோல்ல நாளக்கி ஏதோ கூட்டமாமே… என்னான்டு தெரியுமா…?"என்று கேட்டாள்.

"தெரியாதே மாமி…யாரு சொன்னா…?" என்று கேட்டபடி, "ஏ சமி… உனக்குத் தெரியுமா…?" என்று கேட்டாள்.

"டெங்கு ஒழிப்புக் கூட்டம்…பெற்றோரை வரச் சொல்லுங் கன்டு இன்னக்கி கூட்டத்துல சொன்னாங்கம்மா…"மகள் விபரித்தாள்.

"நாட்டுல எல்லாம் நோய் பரவுதே… அதுக்கான கூட்டமா யிருக்கும்…." மரியத்தின் கணவர் விளக்கிச் சொன்னார்.

"என்ட மகன் இன்னக்கி ஸ்கோல் போகல்ல…என்னான்டு தெரியாம முழிச்சிட்டிருக்கான். கட்டாயம் போகணும்மான்டு மொணங்கிட்டிருந்தான். அதான் என்னான்டு கேக்க வந்தேன்…" மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள்.

"அடி புள்ள மரியம்பீ…ஜாபிர் வந்தானாமே…" மீண்டும் தொடர்ந்தாள்.

"ஓ மாமி… வந்துட்டு அவசரமா போயிட்டார்..திரும்பவும் வாரேன்டார்…"

"அதுதானே பாத்தேன்…பத்து வருஷத்துக்குப் பொறவு வந்தவன் அந்அநியாயமா சொந்தங்கள பாக்காம, ஏன்டு கேக்காம போறானேன்டு…" என்று முடித்து மீண்டும் சொன்னாள். "அவன் வந்துட்டான்டு தெரிஞ்சவுடனே இவரு நாட்டுக்குப் போயி ஒரு பொட்டி நெறைய கோழி கொண்டாந்து போட்டிருக்கார் புள்ள…நல்ல கோழி…நெறைய முட்ட வுடுது…ஒனக்கு வேணுமா..?"

"ஓமாமி…எனக்கு வேணும்…வெய்ங்க…" என்று மரியம் கூறியதும், பதுருவும், "எனக்கும் வெய்ங்க மாமி" என்றான்.

"சரி..அப்ப நா வர்றேன்…" என்று அவள் கிளம்பியதும், பதுரு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இன்னம் கொஞ்சத்துல எடுத்துட்டுப் போக வருவேன் “என்றான்.

“ஓ...நீதான் மாமாட கண் ஒபரேஷனுக்கே அவர பாக்க வரல்லியே...” என்று முகத்தை இடித்துக் கூறிவிட்டு அப்பால் நகர, “ஐயய்யோ... கோவிக்காதீங்க மாமி...நானே ஆயிரம் பிரச்சினையில இரிக்கேன்... ஒன்டயும் மனசுல வெச்சிக் கொள்ளாதீங்க...நா இப்ப வாறனே... நீங்க போங்களேன்...” என்று தாஜா பண்ணி அவளை அனுப்பி வைத்தான்.

தனது இளமனைவி அடிக்கடி தன்னுடன் முரண்படுவது குறித்து அவன் மனதுக்குள் மிகுந்த சோர்வு கொண்டிருந்தான். அவளோடு என்னதான் அவனுக்குக் கோபம் வந்து அவளை முறித்துப் போடுமள விற்கு அது மீறிப்போனாலும்கூட, அவள்மீது இந்தக் குறுகிய காலத்துக் குள்ளாகவே தான் கொண்டுவிட்ட அன்பு மிக ஆழமானதாகவும், அதிகமானதாகவும் பதிந்துவிட்டதாக அவனுக்குப் பட்டது. தான் எப்போது கைநிறைய பணத்துடன் போனாலும் தன்னை அவள் உபசரிப்பதையும், வியாபாரம் நஷ்டம் என்று கூறும் பொழுதுகளில் அவள் முகத்தை நீட்டி வைத்துக் கொள்வதையும் அறிந்து அவன் மிக வேதனைப்பட்டான். சிறுவயது முதலே சகோதரர்கள் இருவரதும் அரவணைப்பில் வளர்ந்தான். இப்போதும் அவர்களை விட்டுப் பிரிவது அசாத்தியம் என்றே அவனுக்குப் பட்டது. எதற்கும் அமைதியாகப் போகலாம் என்று இறுதியாக மனம் சொன்னாலும், எதையும் பணத்தைக் கொண்டே அளவிடுகின்ற அவளது குணம் பெரும் நிராசையையும், பயத்தையும் அவனுள் மீண்டும் ஏற்படுத்திற்று.

ஏதோ வேலையாக முன்புறம் வந்த மரியம்பீபி அவனது சிந்தனை தோய்ந்த முகத்தைப் பரிவுடன் பார்த்தாள். பிறகு சொன்னாள்.

“தம்பி. நீ இந்த ராத்திரியில திரும்பி ஊருக்குப் போக வேணாம். இங்க நிண்டுட்டு வெள்ளனயில பால் சுபஹோட எழும்பி போக ஏலும்தானே... பேசாம நில்லு. அவ என்னா செய்றான்டு பாப்போம்...”

அவன் எந்த அசைவையும் காட்டாததால் சிறிது நேரம் அங்கு தாமதித்துவிட்டு உள்ளே சென்று மளமளவென்று சமைக்கத் தொடங்கினாள்.

வெளியே இருள் போர்வையைக் கலைத்துத் தூய நிலா உலாவந்து கொண்டிருந்தது. அதன் வெண்கிரணங்கள் முற்றத்தில் வீழ்ந்து தென்னை மரக் கீற்றுகளை கடும் இருள் நிழலாக்கிக் கொண்டி ருந்தன. முற்றத்தின் இருமருங்கிலும் இருந்து மலர்களின் நறுமணம் குப்பென்று மூக்கைத் துளைத்தது. அது என்னவகையான மணம் என்று அவனால் அனுமானிக்க முடியவில்லை. காற்று மெல்ல மெல்ல குளிராக மாறித் தவழ்ந்து வந்தது. அவன் தனித்திருக்கப் பிடிக்காமல் ஷமியைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைக்கு அழைத்தான்.

அது பரீட்சைக்குப் பின்னரான காலம் ஆதலால் அவள் பெரிதாகப் படித்துக் கொண்டிராமல் மூடிவைத்துவிட்டு எழுந்தாள். அவனோடு விளையாடத் தொடங்கினாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு வெளியெ வந்த மரியம்பீபி, "தம்பி. மச்சானுக்கு சாப்பாடு குடுத்தாச்சி..நீ..?" என்று கேட்டாள்.

"பசியில்ல தாத்தா..."

"அப்ப வா. ஹிதாயா மாமி வூட்டுப் பக்கம் போயிட்டு வருவோம். நீ அடும மாமாவ பாக்க போகவும் இல்லதானே..." என்று அழைத்தாள். ஷமியும் புறப்படவும் கதவை மூடிவிட்டு மூவரும் முற்றத்தில் இறங்கினர்.

## 7

சுல்தான் பெரும் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

காலை விடியும்போதே ஒருவித மந்தத்துடன் விடிந்தது. இருள் பிரிந்து வெளிச்சம் பரவி வருவதற்குப் பதிலாக மாலைப் பொழுதைப் போல வானம் வெளிறிய மஞ்சள் பூசியிருந்தது. அதுமட்டுமல்ல, ஒருவித ஊமைச்சோர்வு எங்கும் ஆட்சிசெய்து கொண்டிருந்தது. பார்க்க ஏதோ போலிருந்தது. இப்போது எல்லாமே மந்தமாகத்தானே ஆகிவிட்டது என்று அவர் நினைத்துக் கொண்டார்.

தோட்டத்தில் மரங்கள் சரியாக வளர்வதில்லை; வளர்ந்த மரம் ஒழுங்காகக் காய்ப்பதில்லை; காய்த்த கனிகள் எல்லாம் கைக்குக் கிடைப்பதில்லை; விற்ற பணமும் கையில் நிற்பதில்லை; எல்லாவற்றுக்கும் மேலே தண்ணீர்ப் பஞ்சம் வேறு. இருபது அடிக்கும் அப்பால் உள்ள தண்ணீர். மோட்டர் இன்றி கைக்கு வராது. இயற்கை இப்பொதெல்லாம் தனது கையை இறுக மூடிக் கொள்கின்றது. நிலமும் முகத்தை இறுக்கி வைத்துக் கொள்கிறது. மனிதன் மட்டும் ஏதோ அபிவிருத்தி , அபிவிருத்தி என்று பொய்யாக மார் தட்டிக்கொள்கிறான். ஆனால், ஆதி மனிதனுக்குக் கிடைத்த நிம்மதிகூட நவீன மனிதனுக்குக் கிடைப்பதாயில்லை என்று அவர் யோசித்துக் கொண்டிருந்தார்.

நேரம் ஒன்பது மணியாகியிருந்தது.

விடிந்து இவ்வளவு நேரமாகியும் மனைவியைக் காணவில்லையே என்று அவர் சுற்றுமுற்றும் பார்த்தார். உள்ளேயிருந்து மகள் மெஷினில் தைக்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

"யாஸ்மின்.. ஜொக்கக் கழுவிப்போட்டு தண்ணி கொஞ்சம் கொண்டு வாம்மா..." என்ற சொல்ல வாயெடுத்தவர், மகள் அவசர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரமாகத் தூக்கம் விழித்துத் தைத்து தனக்கு வரும் ஓடர்களைக் கவர் பண்ணுவதை உணர்ந்து கொண்டவராக, "உம்மா எங்கம்மா...?" என்று கேட்டார்.

"வெறகு மடுவத்த துப்பரவாக்குறாங்க வாப்பா...."

அவர் பின்புறமாக இருந்த விறகு மடுவத்தை நோக்கி விரைந்தார். சிலநாட்களில் பிறக்கப் போகின்ற சித்திரைப் புதுவருடத்தை வரவேற்ப தற்காக அனைவரும் தயாராவதை அவர் நினைத்துக் கொண்டார். அவ்வாறு விரைந்து செல்லும்போதே "அவ ஏன் இப்புடி கெடந்து மாயிறா...?" என்று முணுமுணுத்துக் கொண்டார்.

சின்னதாக வெட்டப்பட்ட விறகுகளும், சுள்ளிக் கம்புகளும், மட்டைகளும், சிரட்டைகளும் ஒவ்வொரு புறமாக ஒழுங்காகக் குவிக்கப் பட்டு அடுக்கப்பட்ட சிறிய ஓலை மடுவம் அது. வரிச்சிக் கம்புகளில் மண்வைத்துக் கட்டப்பட்டது. அவரும் மனைவியுமே கட்டியது. அதன் முன்புறத்தில் ஒரு பெரிய கல் அடுப்பு இருந்தது. வெளியே ஓரமாகவும் தேவைப்படின் அடுப்பாக பாவித்துக் கொள்வதற்காக மூன்று கற்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன. மனைவி சாம்பல் கலந்த அடுப்பு மண்ணையும் சுற்றப்புறத்தையும் நீர் தெளித்துக் கூட்டிக் கொண்டிருந் தாள். அவரைக் கண்டதும் விளக்குமாறைச் சாத்திவைத்துவிட்டு, அவிழ்ந்து தொங்கிய தனது நரைத்த கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டு, "நாளக்கி மாவு வறுக்கத் தொடங்கணுமே...இன்னக்கி அரிசி, தேங்கா எல்லாம் வாங்கிட்டு வந்துருங்க..." என்றாள்.

அவள் தனது தொழிலைத் தொடங்கு முன்பு அவ்விடத்தைக் கூட்டித் துப்புரவாக்கி நீர் தெளித்த பின்பு இறைவனைப் பிரார்த்தித்த படியே அடுப்பைக் கூட்டுவாள். ஒரு வீட்டில் அடுப்பெரிவது என்பது அந்த வீட்டின் மகிழ்ச்சியான தருணங்களில் ஒன்று என்பதாக அவளது ஐதீகம். எனவே, தலையில் முக்காடிட்டு பிரார்த்தித்தபடியே அவள் அவ்வேலையைத் தொடங்குவது வழக்கம். நேற்று மாலை அவள் வீட்டுக்கு வந்த கனகம்மா பெருநாள் பட்சணங்கள் சிலவற்றை செய்து தரும்படி வேண்டுகோள் விடுத்தாள். அவற்றுள் முறுக்கு மட்டுமே இலகு வானது என்று யகீனா தேர்ந்தெடுத்திருந்தாள். இன்னும் சில ஓடர்கள் ஓட்டுமா வறுத்துத் தருமாறு கேட்டு வந்தன. எல்லாவற்றுக்கும் மேலே மாதாந்தம் கொடுக்கவேண்டிய அரிசிமா பத்துகிலோவுக்கான ஓடரும் கையில் இருந்தது.

அவர் நேரத்தை வீணாக்காது நடையைக் கட்டினார். வீட்டில் சேர்த்திருந்த தேங்காய்கள் போக, மீதித் தேங்காய்களை எங்கே வாங்கு வது, யாரிடம் குறைந்த விலைக்குக் கேட்பது என்று யோசித்தவாறே அவர் நகரத் தொடங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரே இருந்த வேலியில் கும்பிடு பூச்சிகள் ஒன்றிரண்டு வரிசையாக எழுந்து நின்றன. வேலியோரத்தில் நிஜமாகவே இரு கைகளையும் ஒன்று சேர்த்து கும்பிடுவது போன்ற அதன் உருவத் தோற்றத்தை அவர் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றார். அதன் தோற்றத்திற்கேற்ற பெயரா அல்லது பெயருக்கேற்ற தோற்றமா என்று தெரியாத அளவுக்கு இரண்டும் சரியாகவும், பின்னிப் பிணைந்தும் இருக்கின்ற அழகை ரசித்தபடி, இந்தப் பெயரை முதலில் வைத்தவர் யாராக இருக்கும் என்ற சிந்தனை அவருள் வியாபகமாகப் பெருகியது.

சூரியன் தனது கடுமையைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கூட்டிக் கொண்டிருந்தான். வேலியோரத்தைக் கடக்க முற்பட்டபோது வீதியில் மூக்கையா வருவது தெரிந்தது. இப்போதெல்லாம் மூக்கையா அடிக்கடி இந்தப் பக்கம் வந்து போகிறான். அவன் டவுனில் சிறியதொரு மரக்கறிக் கடை வைத்திருக்கிறான். சிறியதொரு லொறியும் அவனிடம் உண்டு. சிலநாட்களில் இரவுப் பொழுதுகளில் கடையை மூடிவிட்டு தம்புள்ளைக்குப் போய் மரக்கறிகளை வாங்கித் தனது வாகனத்தில் ஏற்றி வருவான். பக்கத்து வீட்டிலும் ஒரு சிறிய மரக்கறித் தட்டு தற்போது காணக் கிடக்கிறது. அதில் புத்தம் புதிய மரக்கறிகள் கிடைக்கின்றன. முன்பெல்லாம் ஊர்க் கடையில் விலையும் அதிகம், தரமும் குறைவு என்பதனால் மக்கள் டவுனை நாடுவது வழக்கம். இந்தப் பேச்சுக்கு மாற்றமாக இந்தக் கடையில் தரமான பொருட்கள் விற்பனையாவ துண்டு. வியாபாரமும் சுமாராக நடக்கும். மூக்கையாவின் தயவு காரண மாகவே இதெல்லாம் நடப்பதாக ஊர் மக்கள் பேசிக் கொள்வதுண்டு. ஆனால், அதையெல்லாம் சுல்தான் எப்போதும் கண்டு கொண்ட தில்லை. அவரைப் பொறுத்தவரை அவளும் வாழவேண்டிய பெண் தானே என்ற எண்ணம் மேலோங்கி நின்றாலும், இப்போது மூக்கையாவின் உதவி பற்றி அவருள் ஒரு கேள்வி எழுந்தது.

“என்ன மூக்கையா, விசேஷம்...?”

“நாளைக்கு வருடப்பிறப்பு வருகுது இல்லையா...?”

“அதுக்கென்னா...?”

“எனக்கு ரெண்டு கிலோ வறுத்த மா வேணும்..”

“அதுக்கென்னா...? செஞ்சி தாறோம்..”

“எலே மூக்கா.. ஒன்கிட்ட தேங்கா கெடைக்குமா?” என்று அவன் பாஷையிலேயே உரத்துக் கேட்டார்.

“கொஞ்சம் சேத்து வெச்சிருக்கேங்க...எண்ணிப் பாக்கணும்..”

அதன் பிறகும் அவன் வந்த வழியே திரும்பிப் போகாமல் முன்னால் நடந்து மரக்கறிக் கடைப்பக்கமாகச் சென்றான். உடனே அந்த வீட்டுப் பெண் சம்சுன் முற்றத்தை விட்டும் உள்ளே சென்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்சுனின் கணவர் கிட்னி நோயினால் பாதிக்கப்பட்டு படுக்கையோடு கிடப்பவர். ஐம்பது வயதுக்கு மேலே அவருக்கு கிட்னி நோய் கண்டிருந்தது. மெலிந்து எலும்பும் தோலுமாக இருந்தார். அவரது விலா எலும்புகளையும், அத்துடன் சேர்த்த அவரது வாணாளையும் கூட எண்ணிவிடலாம். எப்படியோ அந்தக் குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்காக அந்தப் பெண் சிறிய மரக்கறிக்கடை ஒன்று ஏலவே போட்டிருந்தாலும் அது தற்போது பலவிதங்களிலும் அபிவிருத்தி கண்டு வருவது கண்டு ஊர்சனம் மூக்கின்மேல் விரலை வைக்கின்றது. தவிரவும், ஐம்பதை நெருங்கிவிட்ட சம்சுனின் முகமும் முன்னைப் போலன்றி மிகவும் மலர்ந்து காணப்படுகின்றது. இதெல்லாம் இப்போதுதான் அவருக்கு அவ்வளவு நல்லதாகப் படாதது மாதிரி இருந்தது. என்ன செய்வதென்று தெரியாது விழித்துக்கொண்டு அப்பால் சென்றார்.

கடைக்குச் சென்று பொருட்களை வாங்கிக் கொண்டு வேகமாக நடந்து வந்தார். திடீரென தெருமுனையில் ஒரு ஆட்டோ வந்து நிற்பதும், சம்சுனின் மகள் சுற்றுமுற்றும் பார்த்தபடி ஏறிக் கொள்வதும் அவரது பார்வையில் பட்டன. அவருடைய உள்ளத்தில் திடீரென ஒரு விசனம் ஏற்பட்டது. காரணம், அவள் கையில் புத்தகக் கட்டுடன் காணப்பட்டமைதான். வகுப்புக்குப் போவது போன்ற பாவனையில் அது எங்கோ செல்கின்றது என்று அவருக்கு உடனே புரிந்தது. அவளுடைய தனிமையும், கள்ளப் பார்வையும் அவருக்கு ஏனோ பயம் ஊட்டின. அவள் அவரை எதிர் கொள்ள முடியாத தூரத்தில் நின்றுதான் ஆட்டோவில் ஏறினாள். அவளும் தன்னைக் காணவில்லை என்று அவருக்கு நிச்சயமாகத் தெரிந்தது. குழப்பத்துடன் வீடு நோக்கி நடந்தார்.

யோசித்துப் பார்க்கையில், தாய் ஒருவிதமாக நடக்கும்போது மகள் ஒருவிதமாக நடப்பது ஒன்றும் புதுமையான காரியமல்ல என்று அவருக்குப் பட்டது. மீண்டும் என்ன செய்வதென்று தெரியாத விழிப்புடன் அவர் நடையைக் கட்டினார்.

மனைவியிடம் பொருட்களைக் கொடுத்துவிட்டு இப்போதும் தையலிலேயே மூழ்கியிருந்த மகளைப் பார்த்து, "தாத்தா என்ன செய்றா...?" என்று கேட்டார். "தாத்தா ரொட்டி சுட்டு சம்பல் செஞ்சி கொண்டிருக்காங்க..." என்று மகள் சொன்னாள்.

அவருக்கு "அப்பாடா" என்றிருந்தது. பெரிய குமர்களை வீட்டுக்குள் பூட்டிவைப்பது எவ்வளவு பெரிய பொறுப்பான காரியம்? நெருப்பைக் கட்டிக்கொண்டிருப்பது மாதிரி என்று சும்மாவா சொன்னார்கள்?

யோசனையுடன் அங்குமிங்குமாக உலவத் தொடங்கினார். பெண்களும், மனைவியும் தத்தமது வேலைகளில் மும்முரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதாகவும், தான் மட்டும் சோம்பேறியாகப் போய்விட்டதாகவும் தோன்றவே திடீரென்று முற்றத்தில் இறங்கினார்.

"வாப்பா, எங்க போறீங்க..?" யாஸ்மின் குரல் கொடுக்க, தாத்தாக்காரியும் சாப்பாட்டை எடுத்துக்கொண்டு வந்து ஹோலில் ஓரத்தில் பாய் போட்டு வைத்தாள்.

"தோட்டத்துக்குப் பொறேம்மா..."

"சரி.சரி. வாங்க சாப்புடுவோம்.."

சாப்பிடும்பொது மெதுவே கேட்டார்.

"சம்சுன்ட மகள் என்னா படிக்குது...?"

"ஏதோ இங்லீஸ் கோர்ஸ், கம்ப்யூட்டர் கோர்ஸ்ன்ட்டு விதவிதமா சொல்லுது வாப்பா..."

"அதுக்கு எத்தன வயசு இருக்கும்..?"

""இருபத்து ரெண்டு வாப்பா....எனக்கு முந்தின பெட்ச்...." மூத்தவள் சொன்னாள்.

கல்யாண வயதுதான். ஊர்ப்பெரியவர் யாரிடமாவது இதுபற்றி கதைக்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

## 8

பொதுச் சுகாதார அத்தியட்சகர் பணிமனை சார்பாக அந்தக் கூட்டம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. பாடசாலை ஆசிரியர் குழாம், அதிபர், மற்றும் பள்ளித் தலைவர்கள் மேடையில் அமர்ந்திருந்தனர். எல்லோரும் நாட்டில் உக்கிரமாகப் பரவிவருகின்ற டெங்கு நோயைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தனர். சுற்றுப்புறத்தையும், வீட்டையும், சூழலையும் சுத்தமாக வைத்துக்கொள்வது பற்றிய பல அறிவுரைகள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன. கூட்டத்தின் பின்புறமாக பெண்கள் பகுதியில் மாஜிதாவும், யகீனாவும் அருகருகே அமர்ந்து இருந்தனர். இருவர் மனதிலும் ஒவ்வொரு விதமான எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

"என்ன தாத்தா, மெலிஞ்சிபோய் இருக்கீங்க...?" மாஜிதா அன்புடன் விசாரித்தாள். அவள் அடிக்கடி வெளியூர் என்றும், உல்லாசப் பயணம் என்றும் உலகைச் சுற்றி வருவதால் ஊர்ச் சொந்தங்களை அவ்வளவாகக் காணக் கிடைப்பதில்லை.

"வேறொன்டுமில்ல... வேலதானே எப்பவும்... அதுதான்...இந்த சித்திரைக்கி குடுக்கவேண்டிய ஓடர் எல்லாம் கெடக்கு...இங்க உக்காந்து கொண்டிருந்தா சரியா..?" அவள் இருக்கையில் நெளிந்தாள்.

"அதுதானே...வூட்டுல எவ்ளோ வேல இரிக்கே...இங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னதையே திருப்பித் திருப்பி சொல்றாங்களே..." அவளும் அலுத்துக் கொண்டாள்.

"மெதுவா வெளிய போவோம் வாங்க..." இருவரும் தயங்கித் தயங்கி வெளியேறினார்கள்.

"வூட்டுல கொமரு ரெண்டும் தனிய கெடக்கு. வாங்க மாஜி தாத்தா எங்கட வூட்டுக்குப் போவோம்.."

"சல்தான் மச்சான் இல்லியா..?"

"இருந்தாருதான்...தோட்டத்துக்குப் போயிருப்பாரே..." அவர்கள் பாடசாலை கேட்டை பின்புறமாக அடைந்து, எதிரேயிருந்த மண் வீதியில் எதிர்த் திசைகளில் பிரிந்து செல்ல வேண்டியவர்கள். இப்போது சேர்ந்து நடந்தார்கள்.

ஒரே குடும்பத்து ஆண்களுக்கு வாழ்க்கைப்பட்ட இரண்டு பெண்களுக்கும் கிடைத்திருக்கும் வாழ்வின் தராதரத்தை எண்ணி வியந்தபடியே யகீனா நடையைக் கட்டினாள்.

பாடசாலையிலிருந்து சுமார் இரண்டு மீற்றர் தூரத்திலிருந்தது அவளது வீடு. திருமணம் முடிந்த நாளிலிருந்து வீட்டோடு அமைந்த வாழ்க்கை. ஒரே புகை மயம். ஆனாலும், குடும்ப அமைதி கெடாத பாங்கு. எல்லாவற்றிலும் தான் நிறைவாகவே இருப்பதாக அவள் நினைத்துக் கொள்வாள். மாஜிதா எந்தக் கவலையும் இல்லாது ஹஜ், உம்றா, ட்ரிப் என்று வெளிநாடு பல கண்டவள். குழந்தை ஒன்று இல்லாத குறைதான். மற்றபடி நிறைவாக இருந்தாள். குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய பல கடமைகளை அவள் மாணவர்களுக்கும், விடுதிகளுக்கும் செய்து வந்தாள். தம்பதி சமேதராகச் சென்று பாலும், பழமும், மருந்தும், உடுப்புகளும் மாதா மாதம் எங்காவது சென்று வழங்கிவிட்டு வருவாள். நிறைய நிறுவனங்களோடு தொடர்பு வைத்திருந்தாள்.

அவள் மாஜிதாவுடன் அங்கு சென்றபோது சுல்தான் அங்கு மிங்குமாக உலாவிக்கொண்டிருந்தார். மாஜிதாவைக் கண்டதும் புன்னகைத்து, "வாங்க மதினி.." என்றழைத்தார்.

எல்லோரும் டெங்கு நோய் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவரது பெண்களும் உற்சாகமாக உரையாடலில் கலந்து கொண்டார் கள். இடையில், டெங்கு நோய் பரவும் வகையில் சூழலை வைத்திருப்ப வருக்கு அரசாங்கம் தண்டப்பணத்தை அதிகமாக அறவிடப்போகின்றது என்ற தகவலை சுல்தான் கூறினார். செய்தி கேட்பதும், பத்திரிகை படிப்பதும் அவரது நிரந்தர பழக்கங்கள்.

அவரைப் பொறுத்தவரை குப்பை என்பது அவருக்கு ஒரு பிரச்சினையே அல்ல. அதிகமாகச் சேருகின்ற சமையலறைக் கழிவுகளை அவர் வேலியோரமாகக் கூட்டி ஒதுக்கி வைத்துவிடுவார். அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிலில் காய்ந்து உலர்ந்து போகும். சிறிய துணித் துண்டுகளைக்கூட அவரது மனைவியும், மகளும் வீசமாட்டார்கள். கால் துடைப்பம் செய்து விடுவார்கள். ஷொப்பிங் பேக்குகளை மாவு போடுவதற்கு மீளப் பயன் படுத்துவார்கள். பேப்பர்களை எரித்து விடுவார்கள். பிளாஸ்டிக் போத்தல்களில் முறுக்கும், கோப்பித் தூளும் அடைத்து விற்பனை செய்வார்கள். இதைப்பற்றி அவர்கள் பேசிக்கொண்டிருந்துவிட்டு, இடையில் ஜாபிரின் வருகை சம்பந்தமாகவும் பேச்சு வந்தது. "ஜாபிர் மச்சான்" திரும்ப வருவதாக செய்தி அடிபடுவதாக இரு மனைவியரும் பேசிக் கொண்டார்கள். அவரும் பெண்களும் எந்தச் சலனமும் காட்டவில்லை.

இந்தக் கூட்டம் நடந்து சரியாக இரண்டு மாதங்களுக்குப் பிறகு திடீரென ஒருநாள் பொதுச் சுகாதார அத்தியட்சகர் பணிமனைக் குழுவினர் விஜயம் செய்தபோது, மக்கள் வெகுண்டு தத்தம் சுற்றுப் புறத்தையும், வீட்டையும் சுத்தம் செய்வதையும், குப்பைகளை எரிப்பதையும் கண்ணுற்ற அவர் மனதுக்குள் சிரித்துக் கொண்டார். ஊர்ப் பெரியவர்கள் எல்லோரும் தத்தமது வீடுகளில் கவனம் காட்டிய அளவுக்கு பிறர் சூழலையும், சௌகரியத்தையும் எப்பொதுமே கவனித்தவர்கள் அல்லர். அவர்கள் மாய்ந்து மாய்ந்து தத்தம் வீடுகளைக் கூட்டுவதையும், அருகிலிருக்கும் பிறர் தோட்டங்களில் குப்பைகளை அள்ளுவதையும், வீதிகளைச் சுத்தம் செய்வதையும் பார்த்த அவர், சில வேலைகளை மனசாட்சியால் செய்ய முடியாது போனாலும் பணத்தைக் கொண்டு அளந்து பார்க்கலாம் என்று எண்ணிக்கொண்டார்.

## 9

மாலிக் ஹம்ஸா ட்ரேடர்ஸ் பிரதான வீதியின் மிக முக்கியமான ஸ்தானத்தில், அதாவது பள்ளிவாசலுக்கு எதிரில் அமைந்திருந்தது. அந்த ஸ்தானம் முக்கியத்துவம் பெறுவது பல்வேறு காரணங்களால். அவற்றுள் இன்னொன்றுதான் அது, பக்கவாட்டில் திரும்புகின்ற கிராமத்து வீதியின் முனையிலேயே இருந்தமை. ஆக, இரண்டு வீதிகளாலும் அணுக முடியுமான தூரத்தில் கடை. அதற்குப் பின்புறமாகவே மாஜிதா க்ரைண்டிங் மில். இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பை பேணிக் கொள்பவர் அவர். இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பொருட்கள் நேரடியாக இங்கு வருவதுண்டு.

வீட்டுக்குப் போன கடைப் பையனை இன்னும் காணவில்லை. பசிக் கலக்கத்தில் அவருக்கு வாந்தி வருவது போலிருந்தது. ஒன்று, போனவன் வரும்போது சாப்பாடு கொண்டு வரவேண்டும். அல்லது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சீக்கிரமே வந்து அவரை அனுப்பிவைக்க வேண்டும்.

கடையில் இன்னும் வியாபாரம் களைகட்டவில்லை. ஒன்றும் பிடிக்காமல் வானொலியைத் திருகினார். ஏதோ மணிச் செய்திகளாம். குழறிக் குழறி வாசிக்கிறாள் ஒரு பெண். “புத்தாண்டு விழா” என்றுகூடச் சொல்லத் தெரியவில்லை. “புத்தாண்டு” என்று கூறி நிறுத்திவிட்டு, அப்புறம் “விழா” என்று சொன்னாள். அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. “எனக்கே இது பிழைன்டு தெரியுது. எட்டாவது வரைதானே படிச்சேன்... இந்தப் பெரிய்ய படிப்பாளிகள் ஏன் இப்புடி? தனக்கு தெரியாததை மத்தவங்க கண்டுபிடிச்சிருவாங்கன்ற பயமும் இப்ப பெரிய எடத்துல உள்ளவங்களுக்கு இல்லாமப் போச்சி....இத எத்தன பேரு கேட்டிருப்பாங்களோ..?” என்று எண்ணிக்கொண்டே அதைப் படீரென்று நிறுத்தினார்.

“என்னங்கிறேன் மாவன்னா...செய்தி கேக்கிறியாக்கும்..” என்று கேட்டபடி அந்த முதியவர் வந்து சேர்ந்தார்.

“வாங்க மையன்னா...” என்று வரவேற்றார் மாவன்னா.

“நீ என்னலே ரேடியோ கேட்டுகிட்டிருக்க...யேவாரம் ஒண்ணும் இல்லியோ...?”

“இருக்குங்குறேன்...இனித்தாங்கிறேன் தொடங்கும்..” அவரைப்போலவே பதில் சொன்னார் மாவன்னா.

“புதுசா ஊர்லேயிருந்து என்னங்கிறேன் வந்திருக்கு..?”

“நல்ல பொன்னி சம்பா...கிலோ எம்பது ரூவா...”

“நல்ல சாமான்ல போட்டு வை...வந்து எடுத்துக்குர்றேன்..” சொல்லிவிட்டு இறங்கிப் போனார்.

அவரது நடுத்தரமான உயரமும், பொன்னிற மேனியும் எப்போதும் இவரைக் கவர்வன. அவர் தள்ளாடித் தள்ளாடி கால்களை தத்தக்க, பித்தக்க என்று அகலப் பதியவைத்து நடந்து செல்வதைப் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

இவருக்கு மையன்னா என்ற பெயர் ஏன் ஏற்பட்டது? இன்றுவரை யாருக்கும் தெரியாது. முன்பொருகால் யாரோ இவருக்கு “எருமை” என்று பட்டப் பெயர் வைத்தார்களாம். அதிலுள்ள “மை” நின்று விட்டது என்று அவர் காது படாது ஊர்மக்கள் பேசுவார்கள். ஆயினும் அது பொருத்தமான கூற்றாக இருக்காது என்ற அவருக்குப் பட்டது. இவ்வளவு அழகான, அறிவுபூர்வமான ஒரு மனிதருக்கு யாராவது எருமை என்று பெயர் வைத்திருப்பார்களா? அந்தக் காலத்திலேயே தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியேறி, படித்து எட்டுவரை முடித்து, “சிட்டிசன்” என்று பதிந்து, அடையாள அட்டையுடன் வாழும் மனிதர். நிறைந்த ஞானம் உடையவர். பள்ளிவாசல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகியாக இருந்த காலத்தில் உலகின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் பள்ளிவாசல் நிர்மாணப் பணிகளுக்கு உதவிகேட்டு ஆங்கிலத்தில் கடிதம் எழுதியவர். ஏறத்தாழ இருபது, முப்பது வருடங்களுக்கு முன்னுள்ள அந்த லெட்டர் ஹெட்டின் நகலை சமீபத்தில் ஒருநாள் கொண்டு வந்து காட்டினார். பறக்கும் வண்டுகள்போல மினுமினுக்கும் ஊற்றுப்பேனா எழுத்துக்ளைப் படித்து "மா" மயங்கி நின்றுவிட்டார். அப் பேனாவினால் எழுதிய கருநிற சாய் எழுத்துக்களும், கூட்டெழுத்துகளும் தன்னைக் கொள்ளை கொண்ட அழகை எல்லோரிடமும் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனார். ஒருவேளை, பேனையும், கையுமாகவே திரிந்ததால் இந்தப் பெயர் வந்திருக்குமோ?

அடுத்த ரவுன்ட்டில் "மை" திரும்பி வந்தார். அவரது முகத்தில் சிறிது பதட்டம் தெரிந்தது.

"மாவன்னா, ஒன்கிட்ட ஒரு சாமான் தந்தனே...அது பத்திரமாயிருக்கா...?"

"இருக்கு...இருக்குங்க.."

"அத யார் கையிலயும் குடுத்துராத...அவ்வளோவுதான் என்னப் புடிச்சி உள்ள போட்டுருவான்.... ஊருக்குத் திருப்பி அனுப்பிருவான்.." நூறாவது முறையாகச் சொன்னார். அது என்று குறிப்பிட்டது அவரது அடையாள அட்டையை. அவரது மனதில் தான் எப்போதுமே "கள்ளத்தோணி" என்ற குறுகுறுப்பு இருந்துகொண்டே இருக்கின்றது. அதனால் தான் திருப்பி அனுப்பப்பட்டுவிடுவேன் என்ற பயம் அவரைக் குடைகின்றது என்றெண்ணி "மா" சிரித்தார்.

"ஓங்கிறேன்...கேலியாப் போச்சோ.. எம் பையத் தாங்க..." பணத்தைக் கொடுத்துக் கொண்டே மோவாயைத் தோளில் இடித்துக் கொண்டார்.

"இல்லங்கிறேன்...ஐடியன்கார்ட் இருந்தா ஏன்கிறேன் ஓங்களப் புடிப்பான்..? நீரு சிலோன்தானே.."

"நீ சும்மா போப்பா...அத மட்டும் யாருக்கும் காட்டிராத... இங்க வூடு வாசலானப்புறம் திரும்ப ஊருக்குப் போன்னு சொல்லிட்டான்டா நா என்னங்கிறேன் செய்வேன்...?" என்று குழம்பிக்கொண்டே வெளியேறினார் "மை". சிரித்துக்கொண்டார் "மா".

## 10

மத்தியான சாப்பாட்டின் பின்னர் கட்டிலில் சாய்ந்து கண்களை மூடிப் படுத்துக் கிடந்தார் "மா". காலையில் தாமதமாகச் சாப்பிட்ட எரிச்சலும் வயிற்றிலே தேங்கி ஒரே கேஸ் மயம். வயிறு கல்லாட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அஸர் தொழுகைக்கான பாங்கோசை கேட்கும்வரை அப்படியே மோனத் தவமிருந்துவிட்டு அப்புறம் பள்ளிவாசலுக்குச் சென்றால், இரவு ஒன்பது மணிக்கு மேல்தான் வீடு திரும்புவார்.

குசினிப் பக்கமாக ஏதோ மெல்லிய சலசலப்பு கேட்கிறாற் போலிருந்தது. காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டார். மாஜிதாதான் பேசினாள்.

"எதுக்கும் நா சொல்லிப் பாக்குறேன். அவர் கேட்பாரோ..? மாட்டாரோ...?"

"ஐயோ... கொஞ்சம் சொல்லுங்களேன்...."

"நா சொல்லி எதுவும் எடுபடாது....ஒனக்குத் தெரியாதா..?"

"தெரியும்..இன்னம் கொஞ்சம் தெண்டிச்சிப் பாருங்களேன்.."

"சரி..சரி.."

அந்தப் பேச்சு முடிவதற்கிடையில் அவர் இனியும் கேட்டுக் கொண்டிருக்க முடியாது என்ற நிலையில் உள்ளே சென்று எட்டிப் பார்த்தார். சமையலறைக் கட்டருகே மாஜிதா மட்டும்தான் நின்று கொண்டிருந்தாள். "யாரோட கதச்சிட்டிருந்தீங்க மாஜிதா...?"

அவள் திருதிருவென விழிக்க வெளியெ பின் வாசலால் சென்று எட்டிப் பார்த்தபோது, மூன்று வீடுகளுக்கு அப்பால் உள்ள அவளது தோழி ஜரீனாவைக் கண்டார். அவரைக் கண்டதும் அவள் ஏதும் சொல்லாமல் நழுவி, முன்புற கேட் வழியாக வெளியேறினாள்.

"என்ன ரகசியப் பேச்சு..? வேலய முடிச்சிட்டு உள்ள வந்து பேசுறதுதானே...?" ஒருவித கோபம் தொனித்தது அவர் குரலில்.

"இல்ல... அவ வந்து ஒங்கள்ட்ட ஒரு ஒதவி கேக்க வந்தா..."

"என்னா ஒதவி...?"

"அவட மாப்புள்ளைக்கு ஒரு பைக் வாங்க ஏதோ லோன் எடுக்கணுமாம்... ஒங்கள சைன் பண்ணட்டாம்..." அவள் திக்கித் திக்கி சொல்லி முடித்தாள். அவர் முகத்தில் சிந்தனை ரேகை படர்ந்தது.

"சரி...அவன கடக்கி வரச் சொல்லுங்க..." மேலே ஏதும் பேசாமல் கடையை நோக்கி நடந்தார்.

மஃரிபுக்குப் பின்னர் வியாபார மும்முரம் முடிந்து ஓய்வாக அமர்ந்திருந்த பொழுதில் அவன் எதிரே வந்து நின்றான்.

"என்ன மர்ஸூக்...பைக் வாங்கப் போறிங்களாமே.."

"ஓ மொதலாளி... லோன எடுத்து பைக் வாங்கினா நாட்டுக்குள்ள ஓடி சம்பாதிக்கலாம்... அதுக்குத்தான் ஒங்கட சைன் ஒன்டு வேணும்.."

"இப்ப கையில எவ்ளோ வெச்சிருக்கீங்க.."

"ஒரு இருவத்தஞ்சி..."

"அத வெச்சிகிட்டு பைக்குக்கு ஆசப்படுறது சரியா..?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் திகைத்துப் பார்த்தான்.

"இங்க பாருங்க...அதக் கொண்டுவந்து எனக்கிட்ட தாங்க...நா பத்திரமா கடையில போட்டு வெக்கிறேன்...ஒங்களுக்கு தேவைன்ட்ற போது வந்து எடுத்துக் கொள்ளலாம்..இல்லாட்டி பேங்க்லயும் போடலாம்...இன்னம் கொஞ்சம் மேல போனா அத போட்ட நா யாவாரம் செஞ்சி ஒங்களுக்கும் லாபத்துல பங்கு தர ஏலும். இதெல்லாம் நீங்க பக்கத்து வூட்டுக்காரங்கன்ட்றதாலதான். ஒங்கட கையில இருக்கிற சல்லிய பாதுகாக்கிற வழியத்தான் சொல்றேன்...ஆனா, வட்டியோட உள்ள லோன்ல நீங்க கைவைக்கப் போனா மண்ணுதான். நா இந்த கட கட்டினது வெளிநாட்டுல இருக்கக்குள்ளதான். ஏன்ட மச்சான்மார் முன்னுக்கு நின்டு செஞ்சாங்க... வந்த பொறகும் அவங்க பார்ட்னரா நின்டு கடை யாவாரம் செஞ்சாங்க. அதுக்குப் பொறகு நாங்க முன்னேறினது, வாகனம் வாங்கினது, மில் கட்டினது எதுவுமே லோன் வாங்கி இல்ல... நீ கண்டிருப்ப...நா எப்பவாச்சும் பேங்க் பக்கம் போயிருக்கனா...?"

அவன் இல்லையென்று தலையசைத்தான்.

"அத தெரிஞ்சிகிட்டும் வந்து கேக்குறிங்களே....லோன் எடுக்கக்குள்ள அது பெரிய சல்லியா தெரியும்..ஆனா, அது ஒடனே கரைஞ்சிரும்..அதுக்குப் பின்னால வட்டி கட்டக்குள்ள அது ஒன்னயே புழுங்கி ஏப்பம் வுட்டுரும்... ஆயிரம் ரூவாவக்கூட கட்ட ஏலாமப் போகும்... டக்குன்டு எதாவது சிக்கல் வரும்...வட்டி கட்டறது பாதியில நிக்கும்...நீங்க நல்லா யோசிங்க...சும்மா ஏன் வட்டியில வுழணும்..?"

அவன் மௌனமாக நின்றான்.

"நீங்க இப்ப ஓடுறமாதிரியே சைக்கிள்ல ஓடி சிக்கனமா வாழ்ந்தா இன்னம் கொஞ்சம் சல்லி சேக்கலாம்...அது சேந்துட்டா அதுக்குப் பொறகு பைக்கப் பத்தி யோசிக்கலாம்..."

அவன் அதை முழுமையாக விளங்கிக் கொண்டதைப்போல தலையசைத்தாலும், அவனது முகம் சற்றுக் கறுத்துப் போனதை யுணர்ந்து அவர் பேச்சை நிறுத்தினார். அவன் விடைபெற்றுச் சென்றான். அவன் வேறு யாரிடமும் போய் கையேந்தி நிற்பானோ? மனதில் கவலை சூழ்ந்தது.

## 11

அடுமை தனது வீட்டின் முன்ஹோலில் அமர்ந்து தனக்குத் தெரிந்த விதமாக யாஸீனை ஓதிக்கொண்டிருந்தார். அவருக்கு அவ்வள வாக ஓத வராது. சிறு வயதில் ஓதியது பிறகு வழக்கத்தில் இல்லாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்துவிட்டிருந்தது. தற்போது அவரது மனைவியின் பரக்கத்தால்- அப்படித்தான் சொல்லிக் கொள்வார், கொஞ்சங் கொஞ்சமாகத் தான் மறந்துவிட்டிருந்த அரபி மொழியை மீள ஓதும் பழக்கத்தைக் கைக் கொண்டு, அதில் ஓரளவு வெற்றியும் பெற்று வருகிறார். அதிகாலையில், சூரியோதயத்திற்கு முன்பே எழுந்து, மனைவியையும் எழுப்பிவிட்டு, இருவரும் தஹஜ்ஜத் தொழுத பின்னர் ஓதிக்கொண்டிருப்பார்கள். இடையில் ஒரு கோப்பி குடித்துக் கொள்வார்கள். அவரைப் பொறுத்தவரை காலையில் யாஸீன் ஓதிவிட்டு பொழுதைத் தொடங்கினால் யாவும் பரக்கத் தான்.

காலை ஏழு மணி கடந்துவிடவே மகன் பாடசாலைக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டான். அவருக்கு சுடச்சுட தேநீர் கொண்டு வந்து நீட்டினாள் மனைவி. காதையும் லேசாகக் கடித்தாள்.

"இஞ்ச பாருங்களேன்...உம்மாட நாப்பதாம் கத்தம் நாளன்னிக்கு வருது...தெரியும்தானே..."

அவர் நிமிர்ந்த அவளைப் பார்த்தார்.

"இதுவரைக்கும் ஒங்கட நோயக் காரணங்காட்டி கத்தம் ஓதுற செலவக் கொறச்சிட்டோம்...நாளன்னைக்கு கடைசி..."

"அதுக்கு என்ன செய்றது...? கையில மடியில ஒண்ணும் இல்லயே..."

"அப்புடின்டாலும் கபுறு தோண்டினவங்களுக்கு ஏதாவது குடுக்கணுமே..."

சரி...இப்ப அறவே ஒண்ணும் இல்லியே..ஏன்ட கையில சல்லி கெடைக்கும்போது நா ஏதாவது பாத்து ஸதகாவா குடுத்துர்றேன்.."

"அதுதான் நானும் சொல்றேன்...ஒரு பத்து பேரோட நிப்பாட்டுவோம்...அஸரத்தும் மோதீன் ஸாப்பும் வரட்டும்...நா தனிய ஆக்கி முடிச்சிருவேன்...நீங்க ஆக்களுக்கு சொல்லிட்டு சாமான்கள வாங்கித் தாங்க.."

"என்னா செய்யச் சொல்றீங்க...? உம்மா இருக்கக் காட்டியும் நல்லா பாத்தோம்...நோய்க்கும் செலவழிச்சோம்... எனக்கும் நோய் வந்துருச்சே... இப்ப என்ன செய்றது? அவங்களுக்காக துஆ கேப்போம்..."

"அதுதான் நானும் சொல்றேன்... அந்தக் கொறய வெக்காம முடிச்சிருவோம்... மாவன்னா மச்சான்கிட்ட கேட்டா தர மாட்டாரா...?"

"ஐயய்யோ..." என்று துள்ளி எழுந்தார் அடுமை.

"அவன்கிட்ட மட்டும் போகச் சொல்லாதீங்க ஹிதாயா..." அலறினார். "அவன்ட பயானக் கேக்கேலாது...அவனுக்கு நேரம் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாம பயான் பண்ண மட்டும்தான் தெரியும்..."

"அப்புடிச் சொன்னா சரியா..? ஒங்கட நானாதானே... கேட்டுப் பாத்தா என்னா...?"

மிக நீண்ட நேரமாக அவர் மௌனங் காத்தார். மாமியாருக்குக் கத்தம் ஓதுவது குறித்து அவருக்கும் விருப்பம் இருந்தது. ஆயினும் பணம் இல்லாமல் என்ன செய்வது? ஈற்றில் ஒருவாறாக, "நா அவன்கிட்ட போக மாட்டேன்... மதினிகிட்ட கேட்டுப் பாக்குறேன்..."என்று கூறித் தயங்கித் தயங்கி வெளியேறினார்.

***

கத்தம் தடபுடலாக நடந்தது. பத்துப் பதினைந்து பேருக்கு சாப்பாடு. தேங்காய்ச் சோறும், கறியும், கிழங்கு வதக்கலும் தனியே சமைத்துப் பறிமாறினாள் ஹிதாயா. ஓதல் ஓசைகளால் அந்த வீடும், ஊதுபத்தி வாசனையால் சுற்றுப் புறமும் நிறைந்து புனித மணம் கமழ்ந்தது. படுவேகமாக, இரண்டு மணித்தியாலங்களில், சைக்கிள் ரேஸ் ஓடுவது போன்ற விரைவுடன், குர்ஆன் பாராயணம் நடந்து முடிய, மணக்க மணக்க சோறு பறிமாறப்பட்டது. வீட்டு மூலையில் சோம்பிக் கிடக்கும் அவர் மகன்கூட நெட்டி முறித்துக்கொண்டு அங்குமிங்கும் ஓடி யாடி, வந்தவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தான். எல்லோரும் தமது வயிறுகளைத் தடவியபடி, ஏப்பம் விட்டு வெளியே சென்றனர். மாலை மயங்கிக் கொண்டிருந்தது.

## 12

ஜாபிர் காலையில் எழுந்தபோதே ஒருவித சோர்வை உணர்ந்தான். காலாற உலாவி வந்தால் தேவலாம் என்று தோன்றிற்று. வெளியே சென்றுவர எண்ணி செருப்பை மாட்டிக் கொண்டான். கைகள் கார்ச் சாவியைத் தேடிப் பரபரத்தன. ஆயினும், மெதுவாக நடந்து வரலாம் என்று எண்ணினான். அவனது புகுந்த ஊரின் விசேடம் என்னவென்றால், அவ்வூர் முன்னாலேயே வட்ட வடிவ மைதானமாக மயானம் அமைந்திருந்தது. அதைச் சுற்றிலும் பச்சைநிறப் பெயின்ட் அடிக்கப்பட்டு, அதன்மீது வெள்ளை நிறத்தில் மரணத்தை நினை வுறுத்தும் குர்ஆன் வசனங்கள் எழுதப்பட்டிருந்தன. மையத்துப் பிட்டனி எப்போதும் பளிச்சென்று துப்புரவாக இருப்பதுடன், பச்சைப் பசேல் என்ற புல்வெளி எங்கும் பரந்து காணப்படும். இவ்வூர் மக்கள் எங்கிருந்தாலும், தம் வீட்டு முன்னால் வந்து நின்றால், அதில் தெரிவது தமது முன்னோர்களின், மூதாதையர்களின் புதைகுழிகளாகும். அதிலும், பெண்களுக்கு மறுக்கப்பட்ட காட்சிகளில் ஒன்றான தமது மனிதர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண ஊர்வலத்தை, இறுதிக் கிரியைகளைத் தம் வீட்டிலிருந்தே காணும் சௌகரியம் கிடைத்திருந்தது. ஆயினும்கூட, இது ஒருவிதத்தில் அனைவரதும் மரியாதைக்குரிய இடமாகவே இருந்து வந்தது. அதைச் சுற்றி அரட்டையடித்துக் கொண்டிருக்கும் இளைஞர் கூட்டத்தையோ, மரநிழலில் அமர்ந்து பொய்க் கதைகளைப் பரப்பிக்கொண்டிருக்கும் மாணவர் கூட்டத்தையோ அங்கு காணமுடியாது. அதற்கு எதிர்ப்புறமாக, வீதியோரத்தில், வீட்டு மதில்களுக்கு வெளிப்புறமாக, "இங்கே குப்பை போடவேண்டாம்" என்ற போர்டுக்குக் கீழே குப்பை நிறைந்து வழிந்து கொண்டிருக்கும். வாரம் ஒருமுறை, அல்லது இருமுறை வந்து செல்லும் நகரசபை வாகனம் அதை அள்ளிச் செல்லும்.

அவன் திருக்குர்ஆன் வாசகங்களை ஒவ்வொன்றாக வாசித்துக் கொண்டு நிதானமாக நடந்து கொண்டிருந்தான். வாழ்க்கையின் வேக ஓட்டத்தைத் திடுமெனத் தணிப்பதுபோல் அங்கே காட்சியளிக்கும் நம் முன்னோர்களின் தற்போதைய வாசஸ்தலங்களும், அந்த இடத்தின் தூய்மையான அழகும், மனிதனின் கண்ணுக்கும், மனதுக்கும் எவ்வளவு நிதானம் தருகின்றன?

திடீரென அவனது தோளை ஒரு கரம் தொட்டது. ஓர் அழகிய அரும்பு மீசை வாலிபன் நின்றிருந்தான். "உங்களிடம் ஒரு அனுமதி வேண்டும்..." என்று ஆங்கிலத்தில் வேண்டிக் கொண்டான். அவன் தலையசைத்து அனுமதி தரவே மீண்டும் தொடர்ந்தான். "மாலையில் நாங்கள் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருக்கிறோம். அதில் நீங்கள் வந்து ஏதாவது பேசவேண்டும்.."

ஜாபிர் லேசான புன்னகையுடன் புருவங்களை நெரித்துக் கேட்டான். "என்ன கூட்டம்? எது சம்பந்தமாகப் பேச வேண்டும்?"

அவ்விளைஞன் தமிழில் தொடர்ந்தான். " நாங்க ஒரு இயக்கம் நடத்துறோம்...அதன் பேர்..படித்த வாலிபர் சங்கம்..."

"இப்ப என்ன செய்றீங்க..?"

"தொழில் ஒன்டு கெடைக்கும் வரைக்கும், படிச்சிக் கொண்டிருக்கிற எங்கட மாணவர்களுக்கு வழிகாட்டி ஒதவி செய்றோம்..."

ஜாபிர் இப்போது முகமலர்ந்து அவனுடன் கைகுலுக்கிச் சொன்னான். "கட்டாயம் வருவேன்....என்ன தலைப்பு?"

"படிப்பதற்கு சில ஆலோசனைகள்"

***

மாலையில் அவன் போனபோது ஆண் மாணவர்கள் மட்டுமே நிறைந்திருந்த அந்தக் கூட்டம் ஒரு வீட்டின் முன் முற்றத்தில் டென்ட் அடித்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஏறத்தாழ முப்பது பேர் வந்திருந்தனர். அவன் அவர்களிடம் மிக சந்தோஷமாகப் பேசிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தான். ஆயினும் அவனது குரல் உள்ளே கேட்குமாறு மைக் பொருத்தப்பட்டிருந்தது. எனவே, உள்ளே அமர்ந்திருந்த பெண்களும், மாணவிகளும்கூட அவனது பேச்சைக் கேட்கும்படியாக இருந்தது. ஆரம்பத்தில் அவன் அது ஆண்களுக்கு மட்டுமானது என்று எண்ணிக் கொண்டாலும் பிறகு பெண்களும் பின்னால் அமர்ந்திருப்பதை உணர்ந்து அதற்கு ஏற்றாற்போல சில கருத்துகளைப் பகிர்ந்து கொண்டான். ஆயினும். உலகளாவிய ரீதியில் ஆண்களின் கல்வியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக இன்று மனித சமூகத்தில் ஏற்பட்டுள்ள பொதுவான பிரச்சினைகளை அவன் எடுத்துக் காட்டியபோது பலரும் விழிகளை அகலத் திறந்து அவனைப் பார்த்துக் கொண்டிருந்தனர். படிப்பதற்குத் தான் எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பற்றி அவன் கூறியபோது அதைக் கற்பனைகூட பண்ணமுடியாத பல மாணவர்கள் கண்ணீர் விட்டு விம்மினார்கள். தான் வயிற்றுப் பசி காரணமாக பக்கத்து மேசையில் அமர்ந்திருந்த சக மாணவன் ஒருவனின் கையிலிருந்த கேக் துண்டொன்றைப் பறித்துச் சாப்பிட்டதற்காக, விடுதி மாணவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து தன்னைத் தாக்கியதாகவும், ஆசிரியர்களும் கோபத்துடன் அவனை எதிர்த்து சவால் விட்டதாகவும் , அதற்கெல்லாம் காரணம், அம்மாணவன் ஒரு ஆசிரியையின் மகனாக இருந்தமையாகும் என்றும் அவன் பழைய ஞாபகங்களை மீட்டியபோது அவனையறியா மலேயே அவனுக்குக் கண்ணீர் சுரந்தது. “இவ்வளவையும் மீறி நான் படிச்சேன். அது கல்விமேல இயல்பா எனக்கிருந்த ஆர்வத்தால. கல்வி தான் எங்கள வறுமையில இருந்து காப்பாத்தும், ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவரும் என்டு நா பூரணமா நம்பினேன். நீங்களும் மனசுல நம்பிக்கையோட படிங்க. அதுக்காக என்ன கஷ்டம் வந்தாலும் தாங்கிக் கொண்டு தலையக் குனிஞ்சி படிங்க. எங்கள்ட்ட எல்லாம் இருக்கு,,, கல்வியும் இருந்தா கௌரவமா இருக்கும் என்ட எண்ணத்துல படிக்காதீங்க. உருகி உருகி அது வழியில போனாத்தான் அது எங்கள திரும்பிப் பாக்கும். இல்லாட்டி இடையில கைவிட்டுரும்...”

அவன் பல விடயங்களை முன்வைத்து அவர்களுடன் கலந்துரை யாடினான். ஒவ்வொரு ஊர்ப் பாடசாலையும் அதனதன் அளவில் முழு வளர்ச்சியையும் அடைய வேண்டும் என்றும், அதை அபிவிருத்தி செய்தால்தான் வெளியூர்ப் பாடசாலை விடுதிகளில் போய்த் தங்கிப் படிக்கின்ற மாணவர்களின் அவலநிலை மாறும் என்றும் கூறினான். ஈற்றில், மயானம் எதிரில் குப்பை போடுவதை நிறுத்த படித்த மாணவர்கள் ஏதாவது செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடைபெற்றான்.

அவனது உள்ளம் மிக நீண்ட நாட்களுக்குப் பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியால், ஆறுதலால் நிரம்பியிருந்தது. தான் மாணவர்களிடத்தே உரையாற்றியபோது அவ்வளவு துன்பத்திலும் தன்னை இயக்கி வைத்த நெஞ்சங்களின் தூண்டுதல்களையும் அவன் பகிர்ந்து கொண்டான். “எந்த நிலையிலயும் படிப்ப விட்டராத..” என்று புத்திமதி கூறி அவளிடமிருந்து வந்த கடிதங்கள் அவன் நினைவில் தோன்றின. “காதல் கிளிகள் பறந்த காலம் கண்ணில் தெரியும். நெஞ்சம் உருகும்..” என்று அவன் வாய்விட்டுப் பாடிக்கொண்டிருக்கும்போது மகள் வந்து “யார்கிட்ட வாப்பா தமிழ் பாட்டு படிச்சீங்க..?“ என்ற தப்பும் தவறுமாகத் தமிழில் கேட்டு அடிக்கடி தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கவே அவளைக் கூட்டிக்கொண்டு வாசலுக்கு வந்தான். அப்பொது ஒரு முச்சக்கர வண்டி அவன் முன்னால் வந்து நின்றது. அதனுள்ளிருந்து அவனது தங்கை இறங்கி வந்தாள். அவன் முகமலர்ந்து வரவேற்றான்.

அவளைக் கூட்டிவந்து முன்ஹோலில் அமரவைத்து உபசரித்தான். அவள் தனது மதினியின் குழந்தையைக் கையோடு கூட்டி வந்திருந்தாள். அவனது மனைவி குளிர்பானம் கொண்டுவந்து கொடுத்து அவளை உபசரித்தாள்.

“தனியாவா வந்த..? மச்சான் எங்க..?”

“என்னக் கூட்டிட்டுப் போக பஸ்ஸுல வருவாரு...இதுட துணையே போதுமே எனக்கு...” என்று அக்குழந்தையுடன் கொஞ்சினாள். அவன் சிறுவயதில் வரைந்து வைத்திருந்த ஓவியங்கள் சிலவற்றை அச்சிறுமியின் கையில் பார்த்தபோது மிகுந்த ஆச்சரியமுற்றான். பழைய ஞாபகங்களில் மூழ்கிப்போனான்...கல்வியோடு சேர்த்து ஏதாவது ஒரு கலையையும் கற்றுக் கொள்ளுங்கள் என்று சற்று முன்னர் தான் மாணவர்களுக்கு அறிவுரை கூறியதை எண்ணிக் கொண்டான்.

“இதெல்லாம் எங்க இருந்தது...?”

ஆச்சரியத்தடன் கேட்டான்.

“எல்லாம் எனக்கிட்ட பத்திரமா இருந்திச்சி...இவவுக்கு காட்டினேன்...நீ வரைஞ்சிருக்க மாட்டேன்டு சொல்லி சண்டை புடிக்கிறா...அதுதான் ஒனக்கிட்டயே கேக்கறதுண்டு சொல்லி எடுத்துட்டு வந்திருக்கா...”என்று தங்கை விளங்கப்படுத்தினாள்.

அவன் அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தபோது, அவனது மனைவி அங்கே வந்து தான் பத்திரப்படுத்தி வைத்திருந்த சில ஓவியங்களை எடுத்து வந்தாள். அவன் அவளை மணமுடித்த ஆரம்ப காலத்தில் வரைந்தவை அவை. அவற்றின் நடுவே மரியம்பீபியின் அழகிய சித்திரமும் இருந்தது. அவன் அதை வாங்கிக் கையில் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மனைவியிடம் திருப்பிக் கொடுத்தான். அவனது முகத்தையே உற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிக்கொண்டிருந்த தங்கை, மரியம்பீபியின் வாழ்க்கையைப் பற்றி அவனிடம் முறையிட்டாள். அவன் தன் மனைவியிடம் சாப்பாடு ஏற்பாடு செய்யமாறு கூறி அவளை உள்ளே அனுப்பிவிட்டு அவளிடம் விபரம் கேட்டான். அவளது பழைய அழகெல்லாம் வடிந்து இப்போது ஒட்டி உலர்ந்து காணப்படுவதாக தங்கை கூறிக் கவலைபப்ட்டபோது அவன் இதயத்தில் ரத்தக் கண்ணீர் வடிந்தது.

## 13

சுல்தான் தனது தோட்டத்திற்கு நீண்ட ஒற்றையடிப்பாதை வழியே நடந்து கொண்டிருந்தார். "ட்விக் ட்விக்" என்ற பறவையின் நாதமும், "கூ"என்ற குயிலின் கீதமுமாக "க்ருக் க்ருக்"என்ற பறவையின் குரலும், "க்கோ...க்கோ"என்ற இன்னிசைக் கீதமுமாக, ஓசையாக பல கதம்ப ஒலிகள் கேட்டுக் கொண்டிருந்தன.

தோட்டத்தில் வாழைப்பழம், மாம்பழம், விளாம்பழம், தேங்காய் இவற்றைக் கவனித்து அவற்றை ஒழுங்காகப் பறித்து, இயற்கைச் சுவையோடு விற்பதில் அவர் கைதேர்ந்தவர். அவ்வாறே அவரது மனைவி அரிசி மா, கோப்பித்தூள் ஆகியவற்றை வறுத்துப் பொடியாக்கி பைக்கட் செய்து விற்று வரும்போதும் தொழில் நேர்மை யைப் பேணி வந்தாள். ஓய்வு நேரங்களில் சிறு கால்துடைப்பான்கள் தைப்பதும் அவள் வழக்கம். அதிலும் அவளது கையும், வேலையும் சுத்தமானவையாகப் பிரபலம் பெற்றிருந்தன. திருமணத்திற்குத் தயாராகி வளைய வருகின்ற தனது இரண்டு குமரிப் பெண்களையும் நல்ல இடத்தில் கரம் பிடித்துக் கொடுத்துவிட வேண்டும் என்று இருவரும் வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி, மனதையும் கட்டி உழைத்து வந்தாலும், பிறரிடத்தில் எதுவும் பேசாது மௌனங் காத்தனர். தம் கொள்கைகளுக்கெல்லாம் அது முரணானது என்று எண்ணினர். எல்லாவற்றுக்கும் மேலாக அடிக்கடி ஏதாவது நஷ்டம் ஏற்பட்டு அவர்களது கையைக் கடித்து விடும் என்றாலும்கூட அவர்களைச் சூழ்ந்து ஒரு மௌனம் எப்போதும் ஆட்சி செய்து கொண்டிருக்கும். அது பழமைவாதமா அல்லது அவர்கள் உலகத்தைப் புறக்கணித்த விதமா என்று யாருக்கும் எதுவும் தெரியாது போகும்.

குரங்குகளின் அட்டகாசம், அணில்களின் தொல்லை இவற்றி லிருந்து தோட்டத்தைக் காப்பாற்றுவதும், அடிக்கடி தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதும் பல வேளைகளில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்திருந்தன. அதற்கும் அவர் அடிக்கடி வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொள்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தே மயில் ஒன்று தோகை விரித்து ஆடுவதைக் கண்டதும் அவ்விடத்திலேயே நின்று அதை நிமிர்ந்து பார்த்தார். அது தன் பாட்டுக்குத் தோகையை விரித்தாடி நின்று குரல் எழுப்பியது. "என்ன அசிங்கமான குரல்...! கொஞ்சங்கூட பொருத்தமே இல்லாம...." என்று நினைத்துக் கொாண்டார்.

வானம் தெளிவான நீல நிறமாகி, மேகங்கள் மெல்லிய வெண்மையாய்த் தோன்றின. மரங்கள் புத்தாடை பூண்டு இளந்தளிர் களைத் தலையில் சூடியிருந்தன. வேலியோரங்களில் உயரமாகவும், கம்பீரமாகவும் நிமிர்ந்து நின்ற தேக்கு மரங்கள் தமது பெரிய இலைகளை மிகச் சிக்கனமாக அசைத்து தென்றலை வருடிக்கொண்டிருந்தன. நாளையுடன் புதுவருடம் பிறந்துவிடும். இதுவரை ஓரளவு சிறப்பாக நடந்துகொண்டிருந்த வியாபாரம் இனி படுத்துவிடும் என்ற சிறிய கவலை அவருள் நிரம்பியது. ஆனாலும், அடுத்த கட்டமாக மரமுந்திரிகை கைகொடுக்கும் என்று அவர் ஆறுதல் கொண்டார்.

பின்னால் சரசர சப்தம் கேட்கவே திரும்பினார். மனைவி தோட்ட வாசலில், வீதி முனையில் நின்றுகொண்டிருந்தாள். "கொஞ்சம் வாங்க..." என்று கூவினாள்.

அவர் மண்வெட்டியை நிலத்தில் ஊன்றி நடந்தவாறே கேட்டார். "ஏன்...?"

"ஜாபிர் மச்சான் இன்னக்கி வாறாராம். ஏதாச்சும் கொண்டு வாங்களேன்..."

"யாரு சொன்னா..?"

"மரியம்பீட மகள் வந்து சொல்லிட்டுப் போகுது..."

வீட்டிலே சாய்த்து வைத்திருக்கும் சீனி வாழைப்பழம் இப்போது பழுத்திருக்கும் என்று எண்ணியபடியே நடையைக் கட்டினார். கீழே விழுந்திருந்த விளாம்பழங்களை மனைவி பொறுக்கி எடுத்துக் கொண்டாள்.

தம்பி மகன் வருகிறான் என்று கேள்விப்பட்டவுடனே அவர் வாழைக்குலையைக் கொண்டுபோய் மூலையிலே சாய்த்து சாக்கு போட்டு மூடி வைத்துவிட்டார். மனைவியும், முறுக்கு செய்திருக்கிறாள். அது போதும் என்று எண்ணிக்கொண்டார். அவர்கள் விரும்பினால் இளநீர்க் குலையொன்றை வாகனத்தில் போட்டு விடலாம்.

இருவரும் வீட்டுக்கு வந்தபோது மகள்மார் வீடு முற்றம் கூட்டிப் பெருக்கி, நீர் தெளித்து பூச்சாடிகளை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந் தார்கள்.

இந்தக் கொஞ்ச நாட்களாக அவருள்ளம் குமைந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சீமெந்துப் பூச்சு பூசாமலே நிற்கும் வீட்டை அவர் ஒரு கணம் நோட்டமிட்டார். இதைக் கணவனும் மனைவியும் சிறுகச் சிறுக சேமித்து ஒவ்வொரு அறையாகக் கட்டி முடித்தார்கள். எனினும், குசினி இன்னும் தகரத்தால் தான். வீடு முழுதும் சீமெந்து பூசும் வேலை, சுண்ணாம்பு, பெயின்ட்... எவ்வளவு வேலை பாக்கி இருக்கு... ஒரே...ஒரு தடவ கேட்டுப் பார்த்தா என்ன?

அவர் திரும்பிப் பார்த்தார். மனைவியும் அவரை அர்த்தபுஷ்டி யுடன் பார்ப்பது தெரிந்தது. தலையை உடனே உலுக்கிக் கொண்டார். "கூடாது. எனக்கு இப்ப ஐம்பத்தாறு வயசு தானே.. பெலன் உள்ள வரைக்கும் ஏதாவது செய்வோம். பிள்ளைகளுக்கும் ஏதாவது தொழில் கிடைக்கும் தானே."

அவர் தனக்குத் தானே ஆறுதல் கூறிக்கொண்டார். அவரது மகள்மார் இருவரும் முன்பள்ளி ஆசிரியர்களாக பக்கத்து பாலர் பாட சாலையில் தற்போதுதான் வேலைக்குச் சேர்ந்திருந்தார்கள். "அதுகள் ஐயாயிரமாவது கொண்டுவந்தாலும் அதுகூட பெருசுதானே"

அவர் உறுதியாகத் தனக்குள் கூறிக் கொண்டார்.

வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்கவே அவரது சிந்தனைகள் அறுபட்டன. குழந்தைகளின் குதூகல ஒலிகேட்டு அவர் முன்புறமாக விரைந்து வந்தார். இரு குழந்தைகளுமே காரை விட்டுக் கீழே இறங்கியதும் தமது வெறும் கால்களை முற்றத்துக் குருமணலில் தேய்த்து அதன் ஸ்பரிஷத்தை அனுபவித்தார்கள். அவர்கள் இருவரும் இலங்கை வந்த புதிதில் அவர்கள் பிறந்து வளர்ந்த சூழல் இங்கு முற்றிலும் அந்நியமாக இருப்பதைக் கண்டு சிறிது விசனித்தாலும் பின்னர் பழக்கப் பட்டு அதனை ரசிக்க ஆரம்பித்திருந்தார்கள். பெரிய பெண்ணோ தோளில் ஹேன்ட்பேக்கும், கையில் ஐபேட்டுமாக ஏழுவயதுக் குமரி போல நடைபயின்று வந்தாள். அவளது தோரணையைக் கண்டு அனை வரும் சிரித்தார்கள். கைக்குழந்தை அவரது மகள்மீது தாவி அமர்ந்து கொண்டது. அங்கே தனிமையும், வெறுமையும், வேற்று மொழிகளும் ஆட்சி செய்த மண்ணைவிட்டும் தம் மண்ணைச் சேர்ந்தடைந்து விட்டதை அவர்களது உள்ளம் உணர்ந்துகொண்டாற் போலிருந்தது.

"எப்படி பெரியப்பா...?"

அவன் நலம் விசாரித்தபடியே உள்ளே நுழைந்தான். அவன் மனைவியோ முற்றத்தில் பூத்து நின்ற மருதாணி மரத்தின் இலைகளைக் கிள்ளி, அதன் வாசனையை நுகர்ந்து, உடனே அவற்றைப் பறித்து பேக்கிற்குள் திணித்துக் கொண்டிருந்தாள்.

அவர் பக்கத்துக் கடையில் அவசரமாக வாங்கிவந்த பிஸ்கட்டையும், அடுப்பிலே நீர் கொதிக்கவைத்துத் தயாரிக்கப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமணம் கமழும் தேநீரையும் அவர்கள் சுவைத்துக் குடித்தார்கள்.

## 14

அவன் இலங்கை வருகிறான் என்ற செய்தி கிடைத்த உடனே அவர் தனது வீடுவாசலைத் துப்புரவு செய்யத் தொடங்கியிருந்தார். வீடு புதிய வண்ணப் பூச்சில் மின்னியது. வீட்டுத் தளபாடங்கள் ஒளிபெற்றுத் திகழ்ந்தன. திரும்பிய திசையெல்லாம் மனைவியின் அலங்காரச் சித்திரங்கள் காட்சியளித்தன. வீட்டுக்குள்ளே ரோஜா மணத்தில் எயார் ஃப்ரெஷ்னர் மிதந்தது.

ஏராளமான தின்பண்டங்கள் குவிந்து கிடந்தன. அவன் எவற்றை விரும்புவான் என்றெல்லாம் அவர் கவனிக்கவில்லை. கைக்குக் கிடைத்ததையெல்லாம் அள்ளி வந்திருந்தார். குழந்தைகளின் கைகளில் கொடுப்பதற்கென்று இரு பைகளில் விளையாட்டுப் பொருட்களை நிறைத்துக்கொண்டு வந்திருந்தார். முடிந்தால் அவனிடம் அனுமதி பெற்று மீண்டும் ஒருநாள் விருந்துக்கு அழைக்கவேண்டும் என்றும், தனது மனைவியின் கைச்சமையலை ஒருக்கால் அவன் ருசிபார்க்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார். அத்துடன் அவனைக் குடும்பத்துடன் காரிலே சவாரி செய்ய அழைத்துச் செல்ல வேண்டும் என்றும் அவர் அவாவினார்.

ஒரே ஒரு அல்வாத் துண்டை எடுத்து மிக நாசூக்காகக் கடித்த அவனிடம் அவர் ஆயிரம் சேதிகள் கேட்கக் காத்திருந்தார்.

"எதுக்கு பெரியப்பா இதெல்லாம்..? இப்பதான் யாஸ்மின் வீட்டுல சாப்பிட்டனே.."

"சும்மா சாப்புடு. காக்கா வீட்டு சாப்பாடுதானே எல்லாம் தின்டிருப்ப...? இதெல்லாம் ஸ்பெஷல் ஸ்வீட். நெய்யால செஞ்சது... கொழும்புல வாங்கினது... டீயக் குடி... ஆறிப்போகும்... நீங்களும் குடிங்க..."

அனைவரையும் உபசரித்தார். குழந்தைகள் உள்ளே செல்லவே அவன் மனைவி எழுந்து உள்ளே போனாள்.

"எப்படி மகன்... அங்க பள்ளிவாசல் எல்லாம் பக்கத்துல இருக்கா..?"

"ஓ அதுக்கென்னா? ஒரு கொறையும் இல்ல..."

"ஜனங்க எப்புடி?"

"சரியான கூதல் பெரியப்பா...இங்க மாதிரி சுதந்திரமா எல்லாம் நடமாட ஏலா. வெளிய போறதுண்டாலும் பெரிய முஸ்தீபோட போகணும்... கைய மூடி, கால மூடி, தலைய மூடிதான் கௌம்பணும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வூட்டுக்குள்ள ஹீட்டர் இல்லாம அறவே ஏலா.."

"ஜனங்க எப்புடி மகன்?"

"நல்லவங்க போலதான் இருப்பாங்க...நாகரிகமா நடந்து கொள்வாங்க...உள்ளுக்கு அப்புடி இல்ல..."

அவர் வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

குழந்தைகள் ஹோலில் வந்தமர்ந்து தமக்கென வாங்கி வைத்திருந்த விளையாட்டுப் பொருட்களை இழுத்துப் பரப்பி ஒவ்வொன்றாக ஆராய்ந்து கொண்டிருந்தன.

"அதெல்லாம் வைங்க...கீழப் போட்டு ஒடைச்சிராதீங்க..." அவள் தமிழில் கதைப்பதை அக்குழந்தைகள் சிறிது கிரகித்து தமிழ் பேசின.

"இது நாங்க... நானுக்கு"

அனைவரும் ஹோவென்று சிரித்தார்கள். "நீங்க போக முந்தியே தமிழ் படிச்சிருவீங்கபோல..." மாமா சிரித்தார்.

"தமிழை ஒரு வழியாக்கிருவாங்க போல..."அவன் திருத்தினான்.

நேரம் கடந்து கொண்டிருந்தது. அவனது கைத்தொலைபேசி இடையில் குறுக்கிட்டது. அவன் வெளியே சென்று பேசிவிட்டு வந்து சொன்னான்.

"பெரியப்பா.... நாங்க கெளம்புறோம்...."

அவரது மனைவி "வேல மானங்கள்" போட்டுத் தயாரித்து வந்த தேநீரைக் குடிக்க அவர்களால் முடியாது ஏலவே குடித்திருந்த தேநீர் வயிற்றை நிறைத்திருந்தது. அவளது புதிய ஆடை அணிகலன்களும்கூட அந்த வெளிநாட்டுப் பெண்ணின் எளிமையான உடையின் முன்னே தோற்றுப் போயின. குழந்தைகள் தரையில் அமர்ந்து விளையாடத் தொடங்கின.

"நீ என்ன மகன் செய்ய நெனச்சிருக்க...?" அவர் விடவில்லை.

"நா இன்னம் கொஞ்ச நாள்ல சிலோனுக்கு வந்துருவேன் பெரியப்பா. புள்ளைகள அங்க அடச்சி வெச்சி வளக்குறதும், ஸ்கூலுக்கு அனுப்புறதும் சரியான கஷ்டமாயிருக்கு...."

அவன் அலுத்துக் கொள்வது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. பொதுவாக வெளிநாடு சென்று திரும்பி வந்தவர்களின் அலட்டல்களை அவர் வேறுவிதமாகவே கேட்டிருக்கிறார். அது தேவலோகம் என்பது போல சிலர் கூறுவார்கள். இவன் பொய் சொல்கிறானோ என்று யோசித்தார்.

"உனக்கு சம்பளம்?"

"மாசம் அஞ்சி கெடெக்கும். எக்ஸ்ட்ரா வேல செஞ்சா பத்தா மாத்தலாம்.."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பொய் சொல்லவில்லை என்று அவர் புரிந்து கொண்டார். உண்மையிலேயே வெளிநாடு என்பது பணத்தை அள்ளிக் கொட்டி வீசுகின்ற ஒரு சுவர்க்கபுரியாகத் தென்பட்டாலும், ஒரு மனிதன் அதற்குக் கொடுக்கும் விலை மிக உயர்வானது என்பது உண்மையிலேயே கடின உழைப்பால் முன்னுக்கு வந்த அவருக்குப் புரிந்தது. அவரும் ஏற்கனவே ஓரிரண்டு தடவைகள் வெளிநாடு சென்று உழைத்து வந்தவர்தான். வாழ்க்கையின் அர்த்தங்களை ஒவ்வொரு மனிதனும் படிப்படியாகவும், மெதுவாகவும் புரிந்து கொள்வதைப் போலவே வெளி நாட்டு வாழ்க்கையையும் மனிதன் படிப்படியாகவே புரிந்து கொள் கிறான். வேகமும், கடின உழைப்பும் அங்கே கைகொடுக்கின்றன. ஆயினும் அவை மட்டுமே வாழ்க்கைக்குப் போதுமானவை அல்ல என்பதையும், மென்மை, இளமை, இதம் யாவும் தனது வாழ்வில் வெளிநாட்டால் பறித்தெடுக்கப்பட்ட வரலாறையும் அவர் நினைத்துப் பார்த்தார். இந்த நாட்டின் வருமானத்தில் வெளிநாட்டு வருமானம் மிக அதிகமாக இடம் வகிக்கின்ற போதிலும் அதன் வடுக்களை எமது நாடு சுமந்து கொண்டே இருக்கிறது என்பதைத் தினமும் பத்திரிகை படித்தும், செய்திகள் கேட்டும், பலரோடு கலந்துரையாடியும் புரிந்து கொண்டு, அவர் தான் பெற்ற அனுபவங்ளை மீட்டிப் பார்த்தார்.

“மகிழ்ச்சியாக மக்கள் வாழும் நாடு... அதப்பத்தி சொல்லேன்...”

“பொய். அதெல்லாம் ஒரு வேஷம். தனியா ஒரு நிறுவனம் செஞ்ச அளவீடு அது. ஹெல்த், தனி வருமானம் இத மட்டும் பாத்து செஞ்சது..

மனுஷஉரிமைன்ட்டு அவங்க போடற வேஷம் கூட பொய்தான். அவங்க நெறையப் பேர் மனநோயாளிகள். அங்க யோசிக்கத் தெரியாத மக்கள் இருக்க மாட்டாங்க. நல்லாத்தான் இருப்பான்.”

அவன் விபரித்துக் கூறினான்.

வெளிநாட்டு வேலைக்குச் சென்று, உறவுகளின் ஆழத்தைத் தொலைத்துவிட்டு பின்னர் நோயோடு திரும்புகின்ற பலரை அவருக்குத் தெரியும். மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

என்றபோதிலும் அவருக்கு அவனது அவசரம் ஏமாற்றமாக இருந்தது.

## 15

பகல் உணவு தடபுடலாகத் தயாராகிக் கொண்டிருந்தது. அவன் மனைவி குழந்தைகளை அதட்டிக் கொண்டு அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தாள். அவன் காரை எடுத்துக் கொண்டு நண்பர்கள் வீட்டுப் பக்கமாக போயிருந்தான். இந்த ரவுண்டை இப்போது முடித்துவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையில் மரியம் பீபி வீட்டுக்குப் போய் அவர்களிடம் விடைபெற்றுச் செல்ல அவன் எண்ணியிருந்தான். ஒரு நாளில் இந்தப் படலம் முடிந்தாக வேண்டும். மீதமிருக்கும் சில நாட்களில் பொருட்கள் வாங்கவும், ஒரு சில மருத்துவ செக் அப்களை முடிக்கவும் வேண்டும். அங்கே எதற்கெடுத்தாலும் பாரிய விலை கொடுக்க வேண்டியிருக்கிறதே என்ற சலிப்போடு இவற்றை எண்ணிக் கொண்டு அவன் போய்த் திரும்பி வந்தான்.

முற்பகல் மாவன்னா பெரியப்பா வீட்டிலிருந்து கிளம்புமுன்னே அடுமை சாச்சா போனில் அழைத்து, பகல் சாப்பாடு அங்கே தயாராகி வருவதாகவும், சீக்கிரமாக வரும்படியும் அழைப்பு விடுத்திருந்தார்.

சைக்கிளில் பெட்டியைக் கட்டிக் கொண்டு வியாபாரம் செய்கின்ற அவர் வெளியூரில் போய் கிராமங்களில் பொருட்களை தேடிச் சேகரித்து அவற்றை ஊரில் உள்ள கடைகளுக்குக் கொடுத்து சீவனம் நடத்தி வந்தார். தற்போது சிலகாலமாக நோயில் விழுந்திருந்தார். ஒரே ஆண்பிள்ளை என்பதால் பெரிய கவலை ஒன்றும் அவருக்கில்லாவிட்டாலும் மருத்துவச் செலவுகள் இடையிடையே தலைதூக்கி நின்றன. சுவாசக் கோளாறு காரணமாகக் கடும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். இடையிடையே சிறு சிறு அறுவை சிகிச்சைகளும் நடைபெற்று ஓய்வடைந்திருந்தன. எதற்கும் இவன் மூலமாக ஏதும் உதவிகள் கிடைக்கலாம் என்று எதிர்பார்த்தார் ஒரு பதினைந்து கிடைத்தாலும்...

"வியாபாரம் எல்லாம் எப்படி?" அவர் விசாரித்தார்.

"மழையும் இல்ல ஒண்ணும் இல்லடா. ஜனங்களுக்கும் சரியான பஞ்சம். யாவாரம் எதுவுமே கையில எடுபடுது இல்ல..." அவர் புலம்பினார்.

"உங்களைப் போலவே நாங்களும் அங்க பிச்சைக்கார வாழ்க்கை தான் வாழுறோம். ஆனா கௌரவப் பிச்சை..." அவன் மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

அப்போது மகன் உள்ளேவர "கொஞ்சம் சுடுதண்ணி கொண்டு வா..." என்று இருமலோடு அவனை அனுப்பி வைத்தார்.

"இவன் தலையெடுத்துட்டா எனக்குக் கவலையில்ல ..." அவர் கூறியதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

எதிர்காலம் பற்றிய எந்த எதிர்பார்ப்பும் இல்லாத வாழ்க்கையின் அர்த்தமின்மையை அவனும் நன்கறிவான். நான்கூட குறுகிய காலத்தில் பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதானே அங்கே கஷ்டப்படுகிறேன் என்று எண்ணிக் கொண்டான்.

அவர் மனைவி உணவை வைப்பதற்காக ஹோலிலுள்ள ஸ்டூல், கதிரைகளைத் தூக்கி அப்பால் போட்டாள். பாயை விரித்தாள். "இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடு மகன்...ஒனக்குன்டுதான் சாச்சா நாட்டுக்கோழி கொண்டுவந்து கட்டி வெச்சாங்க...” அவள் கூறினாள். “நாட்டு முட்டையில கருப்பட்டி வட்டிலாப்பமும் செஞ்சிருக்கா ஒங்க சாச்சி...”அவரும் சேர்ந்து சொன்னார். தான் கொண்டு வந்திருந்த சொக்லேட் பைக்கட்டையும், விலையுயர்ந்த பாலுணவுப் பைக்கட்டையும் அவரது மனைவியின் கையில் திணித்தான். அனைவரும் அமர்ந்து கொள்ள குழந்தைகள் சஹனில் அமர்ந்து சாப்பிட வேண்டும் என்று அடம்பிடித்தனர். எனவே, அவன் மனைவியும் குழந்தைகளும் சஹனில் அமர்ந்து சாப்பிட்டு முடித்தனர். சுவையான சாப்பாடுதான். என்றாலும் சீக்கிரமே எழுந்தனர்.

“என்னடா இப்பவே எழும்பிட்ட...?”

போதும் சாச்சா... பசியில்ல..”

“ஓ! நீ கண்ட எடத்துலயும் சாப்பிட்டு வந்துட்டியோ...?”

“இல்ல சாச்சா. டீ நெறைய குடிச்சதால வயிறு நெறஞ்சி போச்சி” அவன் கூறினான்.

“நோம்பு வருதே..அங்க நோம்பெல்லாம் எப்புடி?”

“இருபது மணித்தியாலத்துக்குக் கிட்ட ஆகும்...” அவனது மனைவி உணவு பரிமாரியபடியே வாய் பிளந்து கூறினாள்.

“அப்பாடி...!”

“கிட்டத்தட்ட நாங்க புடிக்கிற மாதிரி இன்னம் அரை மடங்கு நேரம் இருக்கணும்...”

அவன் விபரித்தான்.

இடையிடையே அவரது உள்ளம் குறுகுறுத்தது. அவனிடம் ஏதாவது உதவி கேட்போமா என்று எண்ணியது. எனினும், கேட்பதற்குத் தயக்கமாக இருந்தது. அவன் மறுத்து விட்டால்...? அவனுக்கும் சங்கடமாக இருக்கும். எங்களுக்கும் வெட்கமாக ஆகிவிடும்.

நினைவு தெரிந்த காலந் தொட்டு அவன் தனது தாயின் உதவியுடனேயே படித்து முடித்ததையும், ஓய்வு நேரங்களில் டைலர் கடைக்குச் சென்று தைத்துக் கொடுத்தும், கைவேலை செய்தும் பணம்தேடிக் கொண்டதையும் அவர் அறிவார். நோன்பு விடுமுறைக்கு விடுதியிலிருந்து வந்து பெருநாள் செலவுகளுக்காக ஒருமுறை அவன் வீடு வீடாக இடியப்பம் தூக்கித் திரிந்ததையும் அவர் மறக்கவில்லை. “எவ்வளவு கஷ்டப்பட்டு படிச்சான்...! அதனாலதான் நல்லாயிருக் கான்...

“அல்லாஹ் என்னையும் ஏன்ட வாழ்வையும் இன்னம் உறுதியாக்கி வை...” அவர் பிரார்த்தித்தார்.

அவனது எந்தக் கட்டத்திலும் தான் ஒரு சிறு உதவியாவது செய்திராதபோது அவனிடம் எப்படிக் கை நீட்டிக் கேட்பது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்குக் கூச்சமாக இருந்தது.

அவன் மிகவும் மிருதுவாகவும் சாந்தமாகவும் அவரது நோய் பற்றி விசாரித்தான். தூசு தும்பல்களில் அலைய வேண்டாம் என்றும், மகனை நன்கு படிக்க வைக்கமாறும் அறிவுரை கூறினான். அப்படிப் படித்தால் எதிர் காலத்தில் அவனைத் தன்னோடு அழைத்துக் கொள்ள முடியுமென்றும் கூறினான்.

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் ஒவ்வொரு பிரச்சினை இருந்தபோதிலும் யாவும் ஏதோ ஒரு முடிச்சிலேயே சிக்கியிருக்கின்றன என்றும், அந்த முடிச்சை விடுவிப்பதே அவரவருக்குரிய கடமையாகும் என்றும் அவன் பலமுறை எண்ணிக் கொள்வதுண்டு. வெளிநாட்டுக் குளிரும் பனியும், அதன் விளைவாக ஏற்படும் புண்களும் அவனும் அனுபவித்து உணர்ந்தவை. அது செல்வந்த நாடாயினும் அங்கு யாவரும் உழைப்பின் மேன்மையைப் போற்றுவதையும், அறிவுபூர்வமாகச் சிந்திப்பதையும், எளிமையாக வாழ்ந்து முடிப்பதையும் அவன் கண்டறிந்தவன். பணம் கொட்டிக் கிடக்க சுகபோகங்களை அனுபவிக்கும் பாலைவன நாடுகளின் வெப்பத்திற்கு நிகரான மேற்குலகின் குளிர்க் கொடுமை மனிதனை அதிகமாகத் தற்கொலைக்குத் தூண்டி, இயல்பான வாழ்வின் ஆதார சுருதியாகிய இன்பங்களையெல்லாம் பறித்தெடுத்து விடுவதையும் அவன் ஒப்பிட்டு ஆராய்ந்து அறிந்தவன். அந்த மனிதர்கள் ஒன்றும் செல்வந்த மனம் கொண்டவர்கள் அல்லர். அங்கு குடித்தொகை கொஞ்சமாக இருப்பதால் அரசாங்கம் அவர்களுக்கு சகல வசதிகளையும் செய்து கொடுக்கிறது. அனைவரும் தேக உழைப்புக்கும் முக்கியத்துவம் கொடுப்பதால் அங்கு ஆடம்பர மோகமும் இல்லை; அடிமைப் பண்புகளும் இல்லை என்பது பற்றியெல்லாம் அவன் ஏலவே சிந்தித்து வைத்திருந்தான். உழைப்புதான் மிக இனியது என்றும், உயர்வானது என்றும், தானமும் தர்மமும், பிச்சைகளும் சோம்பேறிகளை வளர்க்கின்றன என்றும் அவன் உணர்ந்திருந்தான்.

## 16

மரியம்பீ வீட்டுக்குச் சென்றபோது மாலை இலேசாகக் கவிந்து கொண்டிருந்தது. புதுவடக் கொண்டாட்டங்களைத் தெரிவிக்குமாப் போன்று பட்டாசுச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. சிலவேளைகளில் கைக்குழந்தை வீறிட்டு அழுதது எனினும், மற்ற குழந்தைகள் கைகொட்டிச் சிரித்தன.

பிள்ளைகளுக்காக அந்த சிறிய பஜாரினைச் சுற்றி வந்தார்கள். மாலிக் ஹம்ஸா கடையையும் பிள்ளைகளுக்குக் காட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்வதும், குடும்பத்தோடு சுமந்து செல்வதுமாக பெரிய ஆரவாரமாக இருந்தனர். மலிவுக் கடைகளின் முன்பாகவும், ஜவுளிக் கடைகள் முன்பாகவும் மக்கள் முண்டியடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டே அவன் அடுத்தபுறமாக வீட்டை அடைந்தான். உள்ளே அவர்கள் யாவரும் அவனை வரவேற்பதற்காகத் தயாராக இருப்பதைக் கண்டான். அவரும் வாசலருகே சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தார். எல்லோரும் பளிச்சென்று புதிய உடைகளில் காணப்பட்டனர்.

"வாங்க...வாங்க.."

குழந்தைகள் அவரைக் கண்டு ஒருகணம் மிரண்டு பின்னர் சுதாகரித்துக் கொண்டன. அவர் மீண்டும் அழைக்க அவை அவரிடம் தயங்காது ஓடிச் சென்றன.

அவன் அவளைத் தன் மனைவிக்கு அறிமுகப் படுத்தினான். "எங்கட மாமிட மகள்.." இருவரும் முகம் மலர கட்டியணைத்துக் கொண்டனர். அவன் மனைவி இப்போதுதான் அவளை மூன்றாவது தடவையாகப் பார்க்கிறாள். திருமணத்தின்போதும், பிறகு ஒருமுறையும் வந்து போனதும்தான். மற்றபடி, பத்து வருட பந்தத்தில் தனது கணவனின் உறவுகளையெல்லாம் அவள் தெரிந்துகொண்டிருந்தாள். அவ்வளவுதான்.

எங்கோ ஒரு பறவை "குக்கு குக்கூ" என்று கூவியது. அவன் ஞாபகங்கள் சட்டென்று பின்னால் பறந்தன. ஏனென்று தெரியாமலேயே அந்தப் பறவையின் நாதம் அவனுக்கு மிகவும் பிடிக்கும். வசந்த காலத்தில் ஒலிக்கும் குயிலின் குரலாகவும் அது இல்லை. குயிலின் குரலில் இருக்கும் சோகம் இதில் இல்லை. எப்போதும் விட்டு விடுதலையாகி, உயரே செல்லும் ஆனந்தம் தொனிக்கும் குறுகிய கீதம். அது கேட்பவர் உள்ளங்களையும் தொற்றிக் கொள்ளும். இன்ப அலைகளை எழுப்பும். பல சொல்லத் தெரியாத புதிய உணர்வுகளை எழுப்பும். ஒருவேளை அது வானம்பாடி என்ற பறவையோ? எவ்வளவு நீண்ட நாட்களுக்குப் பிறகு அந்தக் குரலைக் கேட்கிறான்....! அவன் லயித்து நின்றான்.

"நாங்க சுருக்கா போகணும்.." மனைவிதான் பேசினாள்.

"ஐய...என்னா அவசரம்..போலாம்..." அவள் குறும்பாகச் சிரித்தாள். அவளது மகள் அவனது பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு அப்பால் செல்வதைக் கண்டு அவன் மனைவி "அப்பா..." என்று ஆறுதல் பெருமூச்சு விட்டாள்.

"உசுர வாங்குதுகள்.." அவள் முணுமுணுத்துக் கொள்வதைக் கேட்டு அவள் கையிலிருந்த குழந்தையை மரியம்பீ வாங்கிக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட எதுவும் வேண்டாம் என்று அவர்கள் பிடிவாதமாக மறுத்தனர். அடிக்கடி தாயிடமிருந்து தொலைபேசி அழைப்பு வருவதாகவும், இன்னும் சிறிது நேரத்தில் அங்கு யாரோ வரவிருப்பதாகத் தாய் கூறுவதாகவும் அவன் மனைவி கூறினாள்.

எல்லோரும் அமர்ந்து பலதும் பத்தும் பேசினர். இடையில் அவன் தனது தங்கையைத் தொலைபேசியில் அழைத்துத் தான் ஊருக்கு வந்திருப்பதாகக் கூறினான்.

"அதுசரி... செலவுக்கெல்லாம் என்ன செய்றீங்க...?" மனதில் கொக்கி போட்டு இழுத்துக் கொண்டிருந்த கேள்வியைக் கேட்டான்.

"இவர்ட வயல் காணியெல்லாம் இரிக்கே...அத குத்தகைக்கு வுட்டிருக்கிறோம்..."

"அந்த வருமானம் மட்டும் போதுமா?"

அவன் அவளுக்குக் கொடுப்பதற்கென்று ஒரு பெருந்தொகைப் பணக்கட்டைக் கொண்டு வந்திருந்தான். மனைவியும் முழுக் குடும்பத் திற்கும் புத்தாடைகள் எடுத்து வந்திருந்தாள்.

"எல்லாம் தாராளமா போதும்..."

"வேற ஒதவிக்கு யாரு இருக்கா...?"

"இவர்ட தம்பிமார் இருக்காங்கதானே...! அரசாங்கமும் இந்த வருஷத்துல இருந்து ஒவ்வொரு விவசாயக் குடும்பத்துக்கும் பத்தாயிரம் ரூவா மானியம் தாறதா சொல்லுது. எழுதிப் போட்டிருக்கோம்..."

உதவி தேவைப்படும் ஒருவருக்குச் செய்வதே பெரும் உதவி என்றும், பின்னர் ஒருகாலத்தில் உதவலாம் என்று முன்கூட்டியே வழங்கும் பொருளைவிட இப்போது கொடுப்பதே மேலானது என்றும் அவனுக்குப் பட்டது.

"வெங்காயம், மரக்கறி எல்லாம் தோட்டத்துல போட்டிருக் கோம்.." அவள் சொல்லிக்கொண்டிருந்தாள்.

"மகள் நல்லா படிக்கிறாவா...?" அவன் கேட்டான். அவனது தங்கையும் அவளது திறமைகளைப்பற்றிக் கூறியிருக்கிறாள். தவிரவும், அந்தச் சிறுமியின் துருதுருத்த விழிகளில் படிப்புக் களை தென்படுவதாக அவனும் கண்டு கொண்டிருந்தான். எப்படியாகிலும் அந்தப் பெண் நல்ல நிலைக்கு வரும் என்பது அவன் கணிப்பு.

"எப்பவும் ஃபெர்ஸ்ட் வருவா.."

அவளை அழைத்து "நீ என்னவா ஆகப் போற...?" என்று விசாரித்தான்.

அவள் வெட்கத்துடன் தலைகுனிந்து "டொக்டர்" என்றாள்.

"எல்லாரும் சொல்றதுதான்..." அவன் வாய்விட்டுச் சிரித்தான். அவள் வெட்கத்துடன் கைக்குழந்தையை எடுத்துக்கொண்டு வெளியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிப்போனாள்.

மரியம்பீ புதிய கைக்குத்தரிசி, வெங்காயம், மரக்கறி எல்லாம் ஒரு பையில் கட்டிக் கொடுத்தாள். புதிய முருங்கைக்காய்களைப் பறித்து வந்து நீட்டினாள். எல்லாவற்றையும் மறுக்காது வாங்கிக்கொண்ட அவன் மனைவி தான் கொணர்ந்திருந்த புதிய ஆடைகளைக் கொடுத்த போது "என்னாத்துக்கு இதெல்லாம்..." என்று கேட்டபடி வாங்கிச் சென்றாள்.

கொல்லையில் கோழிகள் மேய்ந்து கொண்டிருந்தன. பட்டிக்குள் ஆடு "மே" என்றது. அவற்றை அவள் சென்று பார்த்துவிட்டு வந்தாள். துயரங்கள் வாட்டிக்கொண்டிருந்தாலும் அவளது முகம் பரந்து விரிந்திருப்பதாக அவனுக்குப் பட்டது.

"இத எடுத்துக்கோங்க..." அவளிடம் சென்று கவரை நீட்டினான்.

"என்னாது...?" அவள் வியப்புடன் தொட்டுப் பார்த்தாள். அக்கணமே தீயை மிதித்தவள் போலானாள்.

"எதுக்கு இது? எனக்கு வேணாம்..." அவள் குரல் காரமாக ஒலித்தது. அப்போதுதான் அங்கு வந்த அவள் மகளும் ஏதோ மயிர்க் கொட்டியைக் கண்டதுபோல அசூயையுடன் பார்த்தாள்.

"எதுக்கு மகன்...? வேணாம் வாப்பா...தேவப்பட்டா கட்டாயம் கேப்போம்..." அவர் மிக மென்மையாகக் கூறி அதனை ஒதுக்கினார்.

"சும்மா எடுத்துக்கோங்க...இது உதவியில்ல...அன்பளிப்பு..." அவன் தடுமாறினான்.

"இல்ல இல்ல...உங்கட அன்பளிப்ப நாங்க எடுத்துட்டோம்... இது மேலதிகம்..." அவள்தான் மிக அவசரமாகக் கூறினாள்.

அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவள் கண்களில் மின்னிக்கொண்டிருந்த நீர்த் துளிகள் அவன் இதயத்தைத் துளைத்து உள்ளே விழுந்தன. இதயச் சுனையாக ஊறத் தொடங்கின.

அந்தக் கிராமத்தின் அழிக்கமுடியாத உயிர்மூச்சு அவளுக் குள்ளே கலந்து வெளிப்படுவதாக அவனுக்குத் தோன்றிற்று.

- நிறைவு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறுக்கல்

## அத்தியாயம் – 1

அந்த மாலை நேரத்தின் மெல்லிய புழுதியைக் கீறிக்கொண்டு தென்றல் சற்று கடுமையாக வீசிக் கொண்டிருந்தது. வீதியோரத்துத் தாவரங்கள் இப்போதுதான் இலேசாக தூசு மண்ட ஆரம்பித்திருந்தன. இடையிடையே பெய்து வருகின்ற மழை அந்த முயற்சியில் இடையூறு விளைவித்துக் கொண்டிருந்தது. மார்ச் மாத வானம் தெளிவாகக் காணப்பட்டது. வெயில் சற்றுக் கொடுமையாகவே இருந்தபோதிலும், இப்போது அடிக்கடி மாறிவருகின்ற சீதோஷ்ண நிலை அனைவர் உள்ளங்களிலும் பெரிய வியப்பை ஏற்படுத்தியிருந்தது.

வீட்டு வேலைகள் ஏராளம் குவிந்து கிடந்தன. வீடு கூட்டி, சட்டிபானை கழுவி, துணி துவைத்து, நேற்று கழுவிய துணிகளை அழுத்தி அப்பாடா என்று நிமிர்வதற்குள் பன்னிரண்டு மணியாகிவிடும். அப்புறம் பகல் சாப்பாடு. அது முடிய சமையலறையைத் துப்புரவு செய்ய மாலை மூன்று மணி கடந்துவிடும். அப்புறம் கழுவிய உடை மடித்து, நாளைய உடுப்பை அயர்ன் பண்ணி, முற்றம் கூட்டி மீள்வதற்குள் இரவு சாப்பாடு நேரமும் வந்துவிடும். அப்புறம் பத்து மணிவரை ஓயாத சுழற்சி. நாளை விடிகாலைப் பொழுதை எண்ணிக்கொண்டே உறங்கச் செல்வது. வாழ்க்கை ஓடிக்கொண்டேயிருக்கிறது…

எதைச் செய்வதென்ற குழப்பத்துடன் அவள் மலங்க மலங்க உட்கார்ந்திருந்தாள். காலையிலிருந்தே அடிக்கடி மசமசவென்றிருந்தது அவளுக்கு. வயிற்றுக்குள் ஏதோ பிசைவது போன்ற ஒரு உணர்வு. எதிரே பூத்துக் குலுங்கி நிற்கும் மாமரத்தையும், அதற்கு அப்பால் காய்த்து நிற்கின்ற கொய்யா மரங்களையும் அவள கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இன்னும் சில மாதங்களில் இந்தப் பூக்கள் பிஞ்சாகிக் காயாகிக் கனிந்துவிடும். அவற்றிலிருந்து நல்ல வருவாய் பெறமுடியும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் உள்ளம் சிந்தித்தது. சின்னஞ்சிறிய குடிசையொன்றில் அவள் எந்த எதிர்பார்ப்புமின்றி வாழ்வதுபோல வேறு எந்தப் பெண்ணாவது வாழ்வாளா என்று அவள் தன்னையே கேட்டுக் கொண்டாள். அவள் இதற்கு முன்பும் எப்போதும் பணம் புரளும் வாழ்க்கை வாழ்ந்ததில்லை. பெற்றோர் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி சேர்த்து வைத்து, சீதனம் கொடுத்துத்தான் அவளையும், தங்கையையும் மணமுடித்துக் கொடுத்தார்கள். தங்கை தனது கணவருடன் தொலைதூரத்தில் வாழ்கிறாள். தலைநகரம் என்றால் தொலைதூரம்தானே..?

வயதுபோன தாயாரும் தந்தையும் பக்கத்துக் கிராமத்தில் இன்னும் அதேபோல திடகாத்திரத்துடன் வேலைசெய்து சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அவளது தந்தை ஒரு தச்சன். இயலாத நேரத்திலும் கூட அவர் ஓய்ந்து நின்றது கிடையாது. வேலை கிடைக்கா விடில் விறகு வெட்டிப் பிழைத்தாவது தனது குடும்பத்தின் வயிற்றுப் பாட்டைக் கவனித்து விடுவார்.

அவனுடன் வாழ்க்கைப்பட்டு இந்தக் குடிசைக்கு வந்த புதிதில் அவளுக்கு மலைப்பாகத்தான் இருந்தது. இருள் சூழ்ந்த சின்னஞ்சிறிய குடிசை. அதைச்சுற்றி சிறிய நிலப்பரப்பொன்று தரிசாகக் கிடந்தது. அவள் என்ன செய்வதென்று திகைத்து நின்றிருந்தாள். மினுக் மினுக் கென்று எரியும் கைவிளக்கை எடுத்துக்கொண்டு இரவில் அவசரத்துக்கு கொல்லைப்புறத்திற்குச் செல்வதென்றால் அவளுக்குப் பேய்ப் பயம். வீட்டிலிருந்து சுமார் இருபத்தைந்தடி தூரத்தில் இருக்கும் கழிப் பறையை நோக்கி இரவில் சென்று வருவதற்குள் அவளது இதயம் கழன்று நின்றுவிடும்.

வீடு முழுக்க இருள் கப்பிக் கிடந்தது. ஒரு செவ்வகத்தை இரு சுவர்களால் பிரித்ததுபோன்று அந்த வீடு. எங்கும் தட்டுமுட்டுச் சாமான்கள் இறைந்து கிடந்தன. அவற்றை ஒழுங்குபடுத்தி அதை ஒரு வீடாக மாற்றியமைக்க ஒரு மாதத்திற்குமேல் சென்றது. பக்கத்தில் சாணிகொண்டு தேய்த்து மெழுகி, ஓலைக்கூரை வேய்ந்து அவளது பெற்றோர் தேவையற்ற பொருட்களை அதற்குள் போட்டு அடைத்தனர். உடைந்த கதிரைகளும், கட்டில் கால்களும், பலகைத் துண்டுகளும் சூழ்ந்து கிடந்த அவ்வீடு அதற்குப் பிறகு புதுப்பொலிவு பெற்றது. வீட்டுக்கு சாந்தும் சுண்ணமும் அடித்து முடித்தபோது ஏதோ பெரிய மாளிகை ஒன்று அவள் கையில் கிடைத்ததுபோல அவள் மகிழ்ச்சி கொண்டாள். இப்போதும் கப்பியில் நீர் இறைத்துக் குளிப்பது அவளைப் பொறுத்தவரை பெரிய காரியமாகவே இருந்தது. ஓலைகளால் வேயப்பட்ட மறைப்புக்குள் நின்று துணி துவைத்து, பாதி பெரலை நிறைத்துக் குளித்து முடிப்பதற்குள் அவளுக்குப் போதும் என்றாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதுண்டு. கிணறும் பாதாளம்வரை ஆழமாக இருந்தது. வாளியோ அவளால் தூக்க முடியாத அளவிற்குப் பெரிது. அதில் அள்ளிக் குளிக்கின்ற ஒவ்வொரு முறையும் அவள் பெரிய யுத்த களத்தில் இருப்பது போன்ற போராட்டமாக இருக்கும். அவ்வளவு வெறுப்பு...! அப்போது அவள் பெற்றோர் சொன்ன ஆலோசனைப்படிதான் அவள் வீட்டைச் சூழவும் சில பழ மரங்களை நட்டு வைத்தாள். அந்த மரங்களால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஒரு தண்ணீர் மோட்டர் வாங்கிப் போடுவது அவளது எதிர்கால இலட்சியமாக இருந்தது.

உடன் காய்க்கும் மா, பலா, வாழை என்று அந்தத் தோட்டத்தில் நிலவிய குளிர்ச்சியான சூழலை அவள் எப்போதும் அனுபவிப்பது வழக்கம். அந்தத் தோட்டத்தால் அவளுக்குக் கிடைத்த வருமானமாக ஒரு பத்தாயிரம் ரூபா அவளது தாயிடம் சேமிப்பாக இருந்தது.

திடீரென வானில் கருமேகங்கள் சூழ ஆரம்பித்தன. பளீரென வெள்ளித் துண்டமாய் வானும், அதன் மேலே முக்கித் தக்கிச் செல்கின்ற கருமேகக் கூட்டங்களுமாக ஒரு கணத்தில் சூழல் மாறிப்போனதை அறிந்து அவள் வாசற்படியைவிட்டு இறங்கி வந்தாள்.

வெளியே கொடியில் துணிகள் உலர்ந்து கொண்டிருந்தன. வீட்டு முற்றத்தில் விறகு வெட்டிக் காயப் போட்டிருந்தாள். அவற்றின் பக்கத்தில் வீடு கட்டுவதற்கென்று முன்னெப்போதோ சேர்த்து வைத்திருந்த கருங்கற் குவியலில் பழம் சாக்குகள் உலர்ந்து கொண்டிருந்தன. அவள் மழை வருவதற்குள் அவற்றை எடுப்பதற்காக ஓடிச்சென்றாள். கால்கள் துவண்டாற் போலிருந்தன.

மூச்சிறைக்க துணிகளையும், விறகுகளையும் ஒதுக்கி முடித்த போது மழை சோவெனப் பொழிய ஆரம்பித்தது. சாக்குகளை எடுத்து வருவதற்குள் அவள் முழுதும் நனைந்து விட்டிருந்தாள். ஒரு சில நிமிடங்களில் மழை பெரு வெள்ளமாக மாறிவிடும் போலிருந்தது. அவளது முற்றத்தின் நேர் முற்றத்தில் சிறிது பள்ளமான இடத்தில் ஒரு சிற்றோடைபோல் மழைநீர் முட்டி மோதிக்கொண்டு ஒரு திசை நோக்கி சென்றுகொண்டிருந்தது.

பக்கத்தில் இருந்த ஜம்பு மரத்திலிருந்து பூக்களும் பிஞ்சுகளும் உதிர்ந்து, மண்ணில் மிதிபட்டு நீரில் அடிபட்டுச் செல்வதைப் பார்த்தவண்ணம் அவள் தனது தாவணித் தலைப்பால் தலையைத் துவட்டிக் கொண்டாள்.

பசி வயிற்றைக் கிள்ளுவது போலிருந்தது. கதவைத் தாழிட்டு விட்டு உள்ளே சென்று, சட்டி பானைகளைத் திறந்து தனது உணவைப் போட்டுக் கொண்டாள். வாசலில் கபீரின் லொறி வந்து நிற்கும் ஓசை கேட்டது. ஓடிச்சென்று கதவைத் திறந்தாள். மனதுக்குள் மகிழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பத் தொடங்கிற்று.

என்னதான் தனியாகவே வாழ்ந்த பழக்கப்பட்டுவிட்டாலும், தனியாக சாப்பிடுவது என்பது பெரிய ரோதனை என்று அவளுக்கு எப்போதும் தோன்றுவதுண்டு. மாதத்தில் பல நாட்கள் அவள் தனிமையிலேயே சாப்பிட்டுத் தூங்கி எழுவது வழக்கம். சில நேரங்களில் மட்டுமே அவன் அவளுடன் இருப்பான். நகரத்தில் உள்ள பெரிய கடை யொன்றில் அவன் சாரதி வேலை செய்து வந்தான். கடைக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வருவதற்கும், வாங்கிய பொருட்களை விநியோகம் செய்வதற்கும் வாரத்தில் நான்கு நாட்கள் லொறி ஊருக்கு வெளியேதான் திரியும். சில நாட்களில் மட்டுமே அவன் கடையில் இருப்பான். அப்போதும் அங்குள்ள சிறு சிறு வேலைகளைச் செய்து கொடுத்தால்தான் அவனுக்குச் சம்பளம்.

அவனை மணமுடித்து இந்தக் குடிசைக்கு வந்து சுமார் நான்கு வருடங்கள் ஆகின்றன. அந்த ஊரில் நல்ல பெயர் பெற்றிருந்த அவளது குடும்பம், அவனது ஊரில் சற்றுக் கீழ்மட்டமான அவனது குடும்பத் துடன் சம்பந்தம் செய்து கொண்டபோது ஊரார் கொஞ்சம் கசமுசா என்று பேசத்தான் செய்தனர். அவை எவற்றையும் கருத்திற் கொள்வதற்கு அவளது தந்தையின் இயலாமையும், அவளது வயது இருபத்தெட்டைத் தாண்டியிருந்த நிலையும் தடை செய்தன; தங்கை வேறு பருவத்தின் கடைவாசலில் நின்றிருந்தாள். வேறு வழியின்றி அவள் கழுத்தை நீட்ட வேண்டியேற்பட்டது.

மணமுடித்து இந்தக் குடிசைக்குள் வந்தபோது அவள், அதற்குள் சூழ்ந்திருந்த கருமை கண்டு வெலவெலத்துப் போனாள். அவளது பெற்றோர் மிகுந்த ஆறுதலாக இருந்து அவளது மனதைத் தேற்றினர். வாழ்வதற்கு ஏற்ற இடமாக அடிப்படை வசதிகளுடன் அந்தக் குடிசையைச் செய்து தந்தனர்.

அவனது பருத்த சரீரமும், சுருட்டை முடியும், சிவந்த கண்ணும் ஆரம்பத்தில் அவளைப் பீதிகொண்டு நடுங்க வைத்தன. பின்னர், அவள் மனந்தேறி அவன்தான் தனது கணவன் என்று உளப்பூர்வமாக எண்ணி, பணிவிடைகள் செய்யத் தொடங்கினாள். அவன் அவளை மணமுடித்த புதிதில் தன்னிடம் இருந்த சில ஒழுங்கற்ற நடத்தைகளைத் திருத்திக் கொண்டு அவளை மனங்குளிர வைத்தான். இரவில் தாமதித்த வீடு வருவது, நண்பர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றுவது, தேவையற்ற பொருட் களை வாங்கிக் குவிப்பது என்று ஏகப்பட்ட தேவையற்ற குணங்கள் அவனிடம் ஒட்டிக் கொண்டிருந்தன. அதைப்பற்றியெல்லாம் பேசி அவனைத் திருத்துவதற்கு அவளுக்குத் தைரியம் வரவில்லை. ஆனால், அவளது மாமியார் இடையிடையே வந்து தலையிட்டு அவளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையீட்டைக் கேட்டு, அவனுடன் சண்டை பிடித்து, அவனுக்கு அறிவுரையும் கூறி அவனை ஒரு ஆகுமான மனிதனாக ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றுத் தந்தாள்.

அவளது வீடு பக்கத்துத் தெருவில் இருந்தது. தனது இரு மகள்மாருடன் தனது பூர்வீக வீட்டில் வசித்து வந்தாள். மகள் ஒருத்தி மணமுடித்து தன் கணவனுடன் அந்த வீட்டில் வாழ்ந்து கொண்டிருந் தாள். அவளுக்குக் குழந்தைகள் இல்லை. பல காலமாக அவள் சிகிச்சையென்றும், அது இது என்றும் ஓடிக்கொண்டிருந்தாள். அடுத்த மகள் தனது திருமண செலவுக்காக பணமும், சொத்தும் சேர்ப்பதற்காக வெளிநாடு சென்றிருந்தாள். அவளது கணக்கு வழக்குகளைப் பார்ப்பதும், வங்கிக்குச் சென்று வருவதுமாக கிழவி பெரிய பொறுப்புடன் இருந்த தால், தனது மகன் வாங்கிக் கட்டிப் போட்டிருக்கின்ற அந்தக் குடிசையில் மாமியார் என்ற ரீதியில் அவளால் தலையீடு செய்ய முடியவில்லை. மட்டுமல்ல, அதற்கான மனமும் நேரமும் கூட அவளுக்கு இல்லை.

மெல்லிய உடம்பும், லேசான கருமை மின்னும் மேனியும், மோவாய் நீண்டு எப்போதும் புன்னகைப்பதுபோன்ற தோற்றம் காட்டும் மெல்லிய இதழ்களுமாக மருமகள் வந்தபோது அவளுக்கு மிகவும் பிடித்து விட்டது. எனவே, அவனை எப்போதும் தாஜா பண்ணி அவளது மனதுக்கு உற்ற மனிதனாக மாற்றவேண்டுமென்று அவள் பிரயத்தனப் பட்டாள். ஏனெனில், மகனைத் திருமணத்தின் பேரிலாவது திருத்திவிட வேண்டுமென்று அவள் எண்ணிக்கொண்டிருந்தாள். அதற்கு ஏற்றாற் போல, அவளது மருமகளின் தங்கை இவளது திருமணத்துடனேயே சீக்கிரம் கல்யாணமாகி கொழும்புக்குப் போய் விட்டமையும், வேறு பிக்கல் பிடுங்கல் ஏதுமின்றி அந்தக் குடும்பம் சீராக நடைபோட்டு வருவதையும் அவள் அறிவாள். எல்லாவற்றுக்கும் மேலாக, தனது மகனைக் கண்டு தனது மருமகள் உள்ளூர பயந்து நடுங்குவதையும் அவள் உணர்ந்து கொண்டிருந்தாள்.

வீட்டுக்குள் வந்து, கையில் கொண்டுவந்த பையை மேசையில் வைத்துவிட்டு அவன் கிணற்றடிப் பக்கமாகச் சென்றான். அவனது முகத்தைப் பார்க்கையில் அவன் மிகவும் களைத்து வந்திருப்பதுபோல் அவளுக்குத் தோன்றிற்று. எனவே, அவன் குளித்து வருவதற்குள் கிணற்றடி தகரத் தடுப்பில் டவலையும், கீழே சோப்பையும் வைத்து விட்டு வந்தாள்.

மீண்டும் அவள் உள்ளே வந்து, குசினி சுவரோரமாக சிறிய பாயை விரித்து சாப்பாட்டை எடுத்து வைப்பதற்குள் அவன் சோப்பின் நறு மணம் கமழ டவலுடன் உள்ளே நுழைந்தான். அவன் உடைமாற்றி வரும்வரையில் அவள் அவனுக்குத் தட்டிலே உணவைப் பரிமாறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தாள். ரொம்பவும் பசிப்பதுபோல இருந்தாலும் அவளால் அதிகம் சாப்பிட முடியவில்லை. அவள் தட்டில் இட்டு உணவைப் பிசைந்து கொண்டிருந்ததை அவதானித்த அவன், "ஏன் ஒருமாதிரியா இருக்க..?" என்று அன்புடன் விசாரித்தான். "என்னவோ தெரியா... ஒருமாதிரியா வருது... காலைல இருந்து அப்புடித்தான்..." என்றாள்.

அதுல மாங்கா இருக்கு. நல்ல கறுத்த கொழம்பான். திண்டுப் பாரு..." தான் கொண்டு வந்த பையை சுட்டிக்காட்டினான். அவள் மௌனமாக சாப்பிட்டு முடித்துத் தட்டை எடுத்துக் கொண்டு எழுந்தாள்.

பக்கத்தில் இருந்த டவலில் கையைத் துடைத்துக் கொண்டு அவனும் எழுந்தான். அது அவனது பழக்கம். முகம் துடைக்கும் டவலிலேயே கையையும் துடைத்து விடுவான். மறுநாள் எந்தக் கிலேசமும் இன்றி அதை எடுத்து மீண்டும் குளித்த தலையை துடைத்துக் கொள்வான்.

அந்த அருவருப்பான பழக்கம் தன்னுள் ஏற்படுத்திய முகச்சுளிப்பை அவன் கண்டு விடக் கூடாதென்று எண்ணியவனாக அவள் அவசரமாக எச்சிற் பீங்கானை எடுத்துக் கொண்டு கொல்லைப் புறம் சென்றாள். அவன் கை துடைப்பதற்கு வேறொரு துணியை எடுத்து வைக்காத தன் மடத்தனத்தை அவள் மனதுக்குள் நொந்து கொண்டாள். "நா இப்ப அவசரமா கொழும்புக்கு போகணும். வழியில உம்மாக்கிட்ட சொல்லிட்டுப் போறேன்... போய் மருந்து எடுத்துட்டு வா..." என்றபடி அவன் வெளியேறிப் போனான்.

அவன் போவதை வாசலில் நின்று பார்த்துக் கொண்டிருந்து விட்டு அவள் உள்ளே சென்றாள். எவ்வளவு பெரிய லொறி! எவ்வளவு லாவக மாகத் திருப்புகிறான்...! அவளுள் பெருமிதமும் வியப்பும் பூத்தன. அதற் கேற்ற நல்ல உடற்கட்டும் தனது கணவனுக்கு வாய்த்திருக்கின்றமை குறித்து அவள் இப்போது முதல் தடவையாக மகிழ்ச்சி கொண்டாள்.

கதவைத் தாளிட்டுவிட்டு அவள் குசினிக்குள் சென்றபோது, கழுவுவதற்காக நிறைந்திருந்த சட்டி பானைகளும், எச்சிற் பாத்திரங்களும் அவளுள் பெரிய ஆயாசத்தை ஏற்படுத்தின. சற்றுமுன் பெய்த மழையில் சேறாகாவிட்டாலும், நிலம் சிறிது நனைந்திருந்தது. அதில் சதுர வடிவாக சீமெந்து பூசப்பட்ட ஒரு தடத்திலேயே அவள் தண்ணீர் அள்ளி எடுத்து வந்து சட்டிபானைகளைக் கழுவுவது வழக்கம். விரைவில் கிணற்றுக்கு மோட்டர் போட்டுவிட வேண்டுமென்றும், உலோக கழிவுத் தொட்டி ஒன்று கடையில் வாங்கி பின்புறமாகவாவது வைத்துக் கொள்ள வேண்டு மென்றும் அவள் தனக்குள் எண்ணிக் கொண்டாள்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவி எவ்வளவோ கூப்பிட்டும் அவள் மருந்தெடுக்கப் போக வில்லை. தனக்கு எல்லாம் சரியாகி விட்டது என்று சொல்லிவிட்டாள். கிழவி யாரோ ஒரு நாடி வைத்தியரைத் தேடி அவளது வீட்டுக்கே கூட்டி வந்திருந்தாள். அவர் அவளது கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு அவள் மூன்றுமாத கர்ப்பமாக இருப்பதாக ஊகம் தெரிவித்தார். கிழவி சந்தோஷத்தில் மூழ்கிப் போனாள். எனினும், அவளை வற்புறுத்திக் கூட்டிச் சென்று நகரத்திலுள்ள ஒரு பெண் வைத்தியரிடம் காட்டி, அத்தகவலை ஊர்ஜிதப்படுத்தி, விட்டமின்களும் மாத்திரைகளும் எழுதி எடுத்துக்கொண்டு, தனது மகனுக்கு அந்தச் சந்தோஷமான செய்தியைத் தெரிவிக்குமுன்னம் தனது சம்பந்தக் குடிக்கு அவ்விடயத்தை மகிழ்ச்சி யுடன் தெரிவித்தாள். மருமகள் தீன் தண்ணீரின்றி இருக்கிறாள் என்றும், நல்ல உணவுகளைச் சமைத்து வரும்படியும் கூறினாள்.

அவள் நினைத்தது இரண்டு நாட்களில் நடந்தது. கொழும்பி லுள்ள தங்கையுடன் சேர்த்து அவளது குடும்பம் வந்திருந்தது. எல்லோரையும் கண்ட சந்தோஷத்தில் அவள் தனது பலவீனம், இயலாமை என்பவற்றையெல்லாம் மறந்து சிறிது சந்தோமாக வலம் வந்தாள்.

உம்மா அதிகாலையில் விழித்தெழுந்து, வாசம் கமழ தேங்காய் சோறும் கறியும் எடுத்து வந்திருந்தாள். தங்கை தன் கையால் வட்டி லப்பம் அவித்து எடுத்து வந்திருந்தாள். காலை பத்து மணிக்கெல்லாம் வந்துவிட்டார்கள். வாப்பா அவர்களை விட்டதும் வேலைக்குப் போய் விட்டார்.

வாழ்க்கையில் தனக்கென்று எதையுமே எதிர்பார்த்து அறியாத அவள், மாமியார் தன் வீட்டுக்குச் செய்தி தெரிவித்த நாளிலிருந்து தன் பெற்றோரை மட்டும் எதிர்பார்த்த வண்ணமிருந்தாள். அவளது உள்ளத்தில் குடியிருந்த ஏக்கங்களும், ஆசைகளும் நிராசைகளும்கூட அவர்களாலேயே தீர்க்கப்படும் என்று அவள் நம்பினாள்.

வந்தவுடன் தங்கை முற்றத்தையும் கொல்லைப்புறத்தையும் கூட்டித் துப்புரவாக்கத் தொடங்கினாள். கொழும்பில் சேரிப்புறம் போன்ற ஒரு பகுதியில் ஒண்டுக் குடித்தனமாக ஒருவர் முகத்தை ஒருவர் காண, ஒருவரது ரகசியங்கள் இன்னொருவருக்கு விளங்க, நாற்றம் வீசும் சாக்கடை முன்னால் ஓட, எந்தக் கிலேசமும் இன்றி அதன் அருகே கதிரைகளைப் போட்டு உல்லாசமாகக் கதைத்தபடி மாலைப்பொழுதை அனுபவிக்கும் எத்தனையோ அடிமட்டத்துப் பெண்களில் தானும் ஒருத்தியாகத் தனது கணவனுடன் வாழ்ந்து வருபவள் அவள். பொதுக் குழாயில் தண்ணீர் பிடித்துக் குளிப்பதுகூட நாற்புறமும் தெரியும். ஒரே ஒர அறையும், பின்கட்டும், கூடமும் கொண்ட சிறிய வீடு. கூரைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகரத்தின்மீது அது இற்றுவிழும் என்றோ, பறந்துவிடும் என்றோ முட்டுக் கொடுக்கப்பட்ட கம்புத் துண்டங்களும், டயர்களும். இப்படியாக வாழ்ந்து வரும் அவள், தனிக் குடிசையில் ராசாத்தியாக வலம் வருகின்ற தனது சகோதரியின் தனிமையையும் வாழ்க்கையையும் மிக விரும்பினாள்.

உம்மா வீட்டிலுள்ள பொருட்களையெல்லாம் தூசு தட்டி வீட்டைக் கூட்டியபின்னர் கிணற்றடிப் பக்கமாகச் சென்றாள். முப்பது அடி தூரத்தில் தண்ணீர் நிற்கின்ற கிணற்றில் பிள்ளை வயிற்றுடன் தனது மூத்த மகள் எப்படித் தண்ணீர் அள்ளிப் புலங்குவாள் என்ற கவலை அவளைத் தொற்றிக் கொண்டிருந்தது.

அவர்களுக்கென தேநீர் தயாரித்து எடுத்து வந்த அவள், முன் கூடத்தில் சாணியால் மெழுகிய மண்தரையில் பாயை விரித்து, மாம்பழங்கள் சிலவற்றையும் உப்பையும் எடுத்துக்கொண்டு வந்து நீட்டினாள். கீழே அமர்ந்து மாங்காயைச் சுவைத்த அவளது தங்கை, "ம்...இவ்ளோ நல்ல ருசியா இரிக்கே...! எங்க வாங்கினது...?" என்று விசாரித்தாள்.

"எனக்குத் தெரியா... மச்சான்தான் கொண்டு வந்தது..." அவள் பதிலளித்தாள்.

"அது சரீ.. .மச்சான் ஒன்னய இப்புடி தனிய வுட்டுட்டு வுட்டுட்டு போறாரே... இனி அது நல்லா இருக்காதே...?"

"என்ன செய்ய..? அவர்ட தொழில் அது... எனக்காக அத நிப்பாட்ட ஏலுமா...?"

"அதுதான் சொல்றேன்...இவ்ளோ காலமும் ஆம்புளத் தொல்ல... அக்கம் பக்கம் மனுசர்ட தொல்ல இல்லாம நிம்மதியா காலம் கழிச்சிட்ட... இனி அது சரிவராது..."

"ஏன்..?" என்றபடியே அவள் தங்கையைப் பார்த்தாள்.

"ஓம்மா புள்ள பாத்தும்மா... இத நீ கட்டாயமா செய்யணும்... மருமகன்கிட்ட சொல்லி அந்தக் கடையில எதாவது கூலி வேல செய்யிற மாதிரி செஞ்சிட்டா ராவானா மனுசன் வூட்டுக்கு வந்துருவாரு... ஒனக்கு திடீர்னு ஒண்ணு ஆயிட்டா....?"

அவள் சிரித்துவிட்டுச் சொன்னாள்.

"அப்புடி ஒண்ணும் நடக்காதும்மா.. ராத்திரியோட வூட்டுக்கு வாறது எனக்கும் விருப்பம்தான். ஆனா, அவர் அப்புடி இப்புடி ஆயிருவார்னு நா நெனக்கல்ல. அவரு அப்புடி இல்ல.. மிச்சம் விருப்பத்தோட அவர்ட தொழில செஞ்சிட்டு வாறாரு... அவுர வுட்டா வேற நல்ல ட்ரைவர் அந்தக் கடைக்கும் கெடைக்க மாட்டிச்சே... நா எப்புடி சொல்றது...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அப்புடி சொல்லாத... எந்த ஆம்பளயையும் அவன் அப்புடி இல்லன்டு நெனச்சிராத... எப்பவும் ஒரு கண் வெச்சிக்கொள்ளு... எதுக்கும் ஒருக்கா சொல்லிப்பாரு..”

அவள் தலையில் பெரிய பாறாங்கல் ஏறினாற் போலிருந்தது. அவள் அவனோடு எதையும் மனம் ஒன்றித்து வேண்டி நின்றதுமில்லை. அவனை வற்புறுத்தியதுமில்லை. அவன் விரும்புகின்ற எல்லாவற்றையும் செய்து கொடுத்துவிட்டு தன்னந்தனியே இருட்டை வெறித்தபடி வாழவும் அவள் பழகியிருந்தாள். எனினும், தனது வீட்டாரது வேண்டு கோளை அவனிடம் சமர்ப்பித்துப் பார்க்கலாம் என்று எண்ணிக் கொண்டாள்.

மாலை மங்கி இரவாகும்போது அவளது வீட்டார் விடை பெற்றுச் சென்றுவிட்டார்கள். அவள் இரவென்றும் பாராது பகலெல் லாம் எரித்த வெயிலின் வெம்மை தாளாது கிணற்றடிக்குச் சென்று தண்ணீரை இழுத்து உடம்புக்கு விட்டுக்கொண்டாள்.

மரஞ்செடி கொடிகள் மார்கழியில் குடித்த நீரையெல்லாம் கக்கச்செய்வதுபோல எரித்த கதிரவனின் வெம்மை முழு ஊரையும் பாடாய்ப் படுத்தினாலும், அந்தக் குடிசைக்குள் வெக்கை கொஞ்சம் குறைவுதான். ஓலையால் வேயப்பட்டிருந்ததாலும், சுற்றிவர மரங்களும் தோட்டமும் காணப்பட்டதாலும் இத்தனைக் காலமும் அவள் அவ்வள வாக எதையும் உணராதிருந்தாள். ஆனால், இப்போது அதிகம் வியர்த்து வியர்த்துக் கொட்டி முழுமேனியும் நனைந்துபோய் விட்டது. வியர்வை கூடும்போது சிலவேளை மயக்கம் வரும்போலிருந்தது.

குளித்து முடித்து வீட்டுக்குள் வந்து உடை மாற்றிக்கொண்டு வந்தபோது மழை சடசடவென கொட்டத் தொடங்கிற்று. வெளியே வந்து முற்றத்தில் துளிகள் திமிதம் இட்டு விழுந்துகொண்டிருப்பதைப் பார்த்தாள். ஒவ்வொன்றும் தனித்தனித் துளியாக வந்து விழுந்தாலும், யாவும் மண்ணோடு சேர்ந்து ஒரே வடிவம் பெற்றுத் திகழ்வதை வெறுமனே பார்க்கும்போது அவளுள் ஒரு கேள்வி எழுந்தது. இந்த நீர்த்துளிகள் எதை எண்ணிக்கொண்டு பூமிக்கு வந்திருக்கும்? இப்போது நிலத்தில் சிதறி உருவமே அற்றுப் போகும்போது அவை என்ன நினைத்திருக்கும்? கவலையா? மகிழ்ச்சியா?

நேரம் செல்லச்செல்ல மழை வலுவாகப் பெய்ய ஆரம்பித்தது. இந்த மழைக்குத்தான் இவ்வளவு புழுக்கமோ என்ற அவள் எண்ணிக் கொண்டாள். நேரம் முன்னிரவைத் தாண்டியிருந்தது. சிறிது நேரத்தில் தான் ரசித்துக் கொண்டிருந்த காட்சி தன்னுள் சலிப்பை ஏற்படுத்தவே, அவள் இப்போது முதல்தடவையாக சிறிது பயத்தை உணரத் தொடங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே வந்து வீட்டைச் சுற்றிலும் விளக்குகளை எரிய விட்டுவிட்டு முன்கதவை இறுக மூடிவிட்டு கூடத்தில் வந்து அமர்ந்து கொண்டாள். இந்த வீட்டுக் மின்சாரம் எடுப்பதற்காகத் தனது பெற்றோர் பட்ட கஷ்டங்களை எண்ணிக் கொண்டாள். உடனே ஏனைய விளக்குகளை அணைத்துவிட்டு மீண்டும் வந்து அங்கிருந்த பிளாஸ்டிக் கதிரையில் உட்கார்ந்து கொண்டாள். கால்களை உயர்த்திவைத் முழங்கால்களை கட்டிக் கொண்டு சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள். கூரையிலிருந்து விழும் மழைத்துளியின் ஓசை இமிழ் ஓசையாகவே அவளுக்குக் கேட்டது. இரவுச் சாப்பாட்டுக்குக் கவலையில்லை. உம்மா கொண்டுவந்த உணவு இன்னும் மீதமிருக்கிறது என்பதை எண்ணும் போது அவளது களைத்த உடம்புக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது.

வீட்டுக் கூரையிலிருந்து தொப்பென்று தேரையொன்று விழுந்து அவளுக்குப் பக்கத்துச் சுவரில் சப்பென்று பாய்ந்து ஒட்டிக்கொண்டது. திருமணமாகி வந்த புதிதில் அந்த வீட்டில் சுற்றிப் பாய்கின்ற தேரை களைக் கண்டு அவள் பயந்து ஓலமிட்டு அவன் முதுகின் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கிறாள். இப்போதெல்லாம் அது பழக்கப்பட்டு விட்டது. தவிரவும் அவளது அலறலுக்கு யார்தான் ஓடிவரப் போகிறார்கள்? ஆரம்பமுதலே யாரோடும் ஒன்றித்துப் பேசி பழக்கப் படாத அவள் இப்போதும் அப்படியே வாழவேண்டிய நிலை ஏற்பட்ட போது எந்த முறைப்பாடும் இன்றி அதை ஏற்றுக்கொண்டாள். கொண்ட கணவனுடன் சல்லாபித்து, கோபித்து, ஊடலும் கூடலும் கொண்டு அவனுக்கு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் தொல்லை கொடுக்கின்ற இக்கால நவீன இளம் மனைவியரைப்போல அவள் வாழப் பிரியப்படவில்லை. சிலவேளைகளில் அவள் சிறிது உரிமையுடன் பேசிச் சிரிக்க முற்பட்டாலோ அவன் அதை சட்டை செய்யாது சென்று விடுவான். எனவே, அப்படியெல்லாம் நடந்துகொண்டு மனதைப் புண்படுத்திக்கொண்டு சிந்தித்துக் கொண்டிருப்பதைவிட இப்படியே இருந்துவிடுவது நல்லது என்று அவளுக்குப் படுவதுண்டு. பலவேளை களில் தான் தனியாகவே வாழப் பிறந்தவள் என்ற நினைப்பு அவளுள் விசுவரூபமாக எழுவதுண்டு. கரி சட்டிப் பானைகளைக் கழுவும்போது கையோடு சேர்ந்து ஒட்டிக்கொள்ளும் கரி பின்னர் தண்ணீரால் கழுவும் போது கழன்று ஓடிவிடுவதில்லையா? அதுபோல தன்னைச் சூழவுள்ள எல்லாமே கொஞ்ச நேரத்தில் கழன்று போய்விடும், அது தனது ராசி என்று அவள் எப்போதும் ஒரு புன்சிரிப்போடு எண்ணிக் கொள்வதுண்டு.

வாசலில் அவனது லொறி வந்து நிற்கும் ஓசை கேட்டது. "டும்" என்ற பெரிய சத்தம். நீண்ட நேரம் ஒலித்து பின்னர் "சுஸ்" என்ற சத்தத்துடன் ஓய்ந்தது. ஆளைத் தூக்கி அடிக்கும் உயரத்திற்கும் பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லொறியை அவள் ஓடிவந்து கதவைத் திறந்து ஆசையுடன் பார்த்தாள். அந்த லொறியை எவ்வளவு நேரமானாலும் பார்த்துக் கொண்டிருக்கலாம் என்று அவளுக்குத் தோன்றுவதுண்டு.

அவன் சாவியைச் சுழற்றியபடி வேகமாக வந்து வீட்டுக்குள் நுழைந்தான். வியர்வையின் மணம் அவளை ஊடறுத்துச் செல்ல, அப்பட்டமாக வந்த குமட்டலை சமாளித்துக்கொண்டு அப்பால் போனாள் அவள். அவன் ஒரு சிரிப்புடன் அருகில் வந்து ஒரு பார்சலை நீட்டினான். அதிலிருந்து வந்த துரியன் பழத்தின் மணம் குடலைப் புரட்ட வைத்தது. அவன் அதை விரும்பிச் சாப்பிடுவான். அவள் அதை மூக்கின் அருகில் கூட கொண்டு சென்றதில்லை. அவள் அதை மேசையில் போட்டுவிட்டு அப்பால் ஓடிச்செல்வதைக் கண்டதும் தான் தவறு செய்துவிட்டதை உணர்ந்துகொண்டதுபோல தலையில் அடித்துக் கொண்டான். "ஐயோ... தெரியாம கொண்டு வந்துட்டனே..." என்று உரத்துக் கூறிக் கொண்டான்.

அவள் அதைப் பொருட்படுத்தாவிட்டாலும் குமட்டல் அதிகரித்துக்கொண்டே வந்தது. பகல் சாப்பாட்டை சூடாக்கி பாயில் வைத்துவிட்டு அவள் ஓடிச்சென்று கூடத்தில் அமர்ந்து கொண்டாள்.

"நாதான் தெரியாம செஞ்சிட்டேன்டு சொல்றனே... இப்ப என்ன நடந்துச்சி..? ஏன் சாப்புடாம ஓடணும்..?"

"அதுக்கில்ல.. எனக்குப் பசிக்கல்ல.."

அவன் மௌனமாக சாப்பிட்டு எழுந்தான். அதுவரை காத்திருந்த அவள் சமையலறையை ஒழித்துவிட்டு ஒரேயடியாகக் கட்டிலில் வந்து வீழ்ந்தாள்.

***

அவள் இப்போது பிரசவ நேரத்தை எதிர்பார்த்திருந்தாள். தனது குடும்பத்தார் வேண்டிக்கொண்டபடி அவள் அவனது தொழில் பற்றிக் கதைப்பதற்கு வாய் திறக்காமலே காலத்தைக் கழித்துவிட்டாள். ஏதோ ஒன்று தடுத்தது. தவிரவும், அவன் எப்போதாவது தனது தனிமையைப் பற்றி விளங்கிக் கொள்வான். அப்போது உள்ளத்தில் போதும் என்று அவள் நினைத்துக் கொள்வாள்.

தனியே அல்லலுறும் போதெல்லாம் தான் தனியாகவே வாழப் பிறந்தவள் என்றும் தனக்குத் துணையாக கணவனோ வேறு சொந்தங் களோ இல்லாத அனாதை என்றும் தன்னுள் கூறிக்கொண்டு தன்னைத் தானே தேற்றிக் கொள்வாள். கணவன் அருகில் இருந்தும் இல்லாதது போல அவள் உணரவில்லை. கணவனே தனக்கு வாய்க்கவில்லை என்பதுபோல எண்ணிக் கொள்வாள். அப்போது அவளுடைய உள்ளத்தில் புது உற்சாகம் பிறக்கும். மனதில் தைரியம் பிறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற வாரம் ஸ்கேன் செய்யச் சென்ற போது வயிற்றின் உள்ள குழந்தை மிகவும் நிறைகூடியதாக உள்ளதாக அறிக்கை காட்டிற்று. அறுவை சிகிச்சை மூலமே பிரசவம் நடக்கும் என்றும் கூறப்பட்டது. அதை எதிர்பார்த்து அதற்குரிய பொருட்களைச் சேர்ப்பதில் அவள் ஈடுபட்டிருந்தாள். அவளது பெற்றோரும் குடும்பத்தாரும் அது குறித்து அச்சப்பட்டாலும் அவள் எதையும் காட்டிக் கொள்ளாமல் வளைய வந்தாள்.

அன்றிரவு அவன் மிகவும் அன்போடு அவளோடு பேசிக் கொண்டிருந்தான். அவளை சமைக்க வேண்டாம் என்று சொல்லி கடையில் நல்ல சாப்பாடு வாங்கிக் கொடுத்தான். அவள் வயிற்றைத் தூக்கிக்கொண்டு சாய்ந்து படுக்க முடியாமல் திணறியபோது இரு புறமும் தலையணைகளை அடுக்கி அவளை நிமிர்ந்து படுக்க வைத்தான். தனது நண்பர்கள் பலரும் அறுவை சிகிச்சை குறித்து பயப்படுவதாகவும், தனக்கும் அதை நினைத்தால் பயமாக உள்ளதாகவும் திரும்பத் திரும்ப கூறிக்கொணடிருந்தான்.

அவள் அவனது சுருண்ட கேசத்தைக் கோதியவாறு புன்னகை புரிந்தாள். தனக்கு அப்படி எந்தப் பயமும் தனக்கு இல்லையென்றும், தான் குழந்தையை நினைத்தே யோசனையில் ஆழ்ந்திருப்பதாகவும் அவள் சொன்னாள்.

"புள்ள ஒழுங்கா பொறந்துறணும்... அதுதான் ஏன்ட யோசன... பத்து ஏழைகளுக்கு சாப்பாடு தாறதா நேந்து வெச்சிருக்கேன்...."

"அல்லாட காவல். புள்ளக்கி ஒண்ணும் நடக்காது... நீ தைரியமா படு.."

அவளும் சிறிது களைப்படைந்திருந்ததால் உடனே கண்ணயரத் தொடங்கினாள். குழந்தை எந்தப் பிரச்சினையும் இன்றிப் பிறந்துவிட வேண்டும் எனற பயத்தில் இப்போதெல்லாம் அவளால் வழமைபோல பேசக்கூட முடியவில்லை. ஆணா, பெண்ணா என்ற கேள்விகள் இரண்டுக்கும் அவள் சமமான எதிர்பார்ப்பே கொடுத்து வந்தாள். எனினும், பெண் குழந்தைக்கு அதிகம் ஆசைப்பட்டாள். ஆணாயிருந்தாலும் பரவாயில்லை. அலியாகப் பிறந்துவிடக்கூடாது என்று உள்ளத்தில் மிகவும் வேண்டிக் கொண்டிருந்தாள்.

***

தன்னருகில் ஒரு பெரிய பொம்மையைக் கிடத்தினாற்போல தன்னையே கண்மலர்ந்து பார்த்துக் கொண்டிருந்த தன் மகவை சந்தோசத்துடன் முகத்தைத் திருப்பிப் பார்த்தாள். அது தனது பிஞ்சுக் கையினால் அவளது இடையைத் தொட்டுத் தடவிக் கொண்டிருந்தது. அதன் பொன்னிறம் அவளைக் கிறுகிறுக்க வைத்தது. மெல்ல முகத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பி தாதியைப் பார்த்து "என்ன குழந்தை..?" என்று கேட்டாள்.

"ஆண் குழந்தை... கிட்டத்தட்ட பத்த கிலோவுக்கு மேலே... அரக்கனைப்போல..."

"யோத பெட்டியா" என்று அவள் சுருக்கென்று சொன்ன பதில் இதயத்தைத் தைத்தது. முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள். சிறிது நேரத்தின்பின் குழந்தையின் புறம் திரும்பி அதன் வலது காதில் அதானும், இடது காதில் இகாமத்தும் ஓதினாள். கவனமாக எடுத்து வைத்திருந்த பேரீச்சம் பழத்தைத் தன் பற்களால் கடித்த மென்மையாக்கி அதன் வாயில் தொட்டு வைத்தாள்.

"என்ன செய்கிறாய்...?" என்று கேட்டபடி தாதி அருகில் வந்தாள்.

"குழந்தைக்குப் பசிக்கும்...எடுத்து பாலூட்டு..."

அவள் கதிரையில் பெரும் சிரமத்துடன் அமர்ந்து அதற்குப் பாலூட்டத் தொடங்கு முன்னம் அதன் விரல்கள் யாவும் சரியான எண்ணிக்கையில் அமைந்துள்ளனவா என்று எண்ணிப் பார்த்துக் கொண்டாள். மிகச் சிரமத்துடன் பாலூட்டினாலும் குழந்தையின் ஸ்பரிம் சிலிர்க்க வைத்தது. அது தன் நெஞ்சில் வாய் வைத்து உறிஞ்சுவது ஆனந்தமாகவும், அதேவேளை கூச்சமாகவும் இருந்தது.

தனக்கேயுரிய தாய்மையின் இயல்புகளில் களித்து மலர்ந்து நிற்பது பெண்மையல்லவா? எல்லாக் கஸ்டங்களும் தாய்மைக்கு முன்னால் தூசுதானே...? அது எவ்வளவு பெரிய பேறு...! அதை அடை யாதவர்களுக்கல்லவா அதன் பிரமாண்டம் புரியும்..? எல்லோரும் ஏங்கித் தவிக்கும் மாபெரும் அனுபவம்..! அது எதையும் கஸ்டம் என்று உணர்வதில்லை. பிறருக்கும் உணர்த்துவதில்லை.

பன்னிரண்டு மணிக்கு அவன் வந்து நின்றான். குழந்தையைப் பார்த்து முகமலர்ந்து சிரித்தான். அதன் கன்னத்தில் முத்தமிட்டான். அவளது தங்கை, மாமியார், பெற்றோர் எல்லோரும் அதன்பின் ஒவ்வொருவராக வந்து தாயையும் சேயையும் பார்த்து உளங்கனிந்து இன்மொழிகள் கூறினர்.

***

நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. குழந்தையின் எடை சற்றும் குறையாமல் கூடிக்கொண்டே வந்தது. தன் அழகிய பொன் முகத்தைக் காட்டி அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

அவன் இப்போதெல்லாம் நேரகாலத்துடன் வரப் பழகியிருந் தான். அவனது லொறி மாலை ஆறுமணிக்கெல்லாம் அந்தக் குடிசை வாசலில் வந்து நின்றுவிடும். தான் சொல்லாமலே அவன் இவ்வாறு நடந்து கொள்வது குறித்து அவள் பெருமிதம் கொண்டாள். அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைக்குத் தேவையான சகல பொருட்களையும் சுமந்து வந்தான்.

குடும்ப மருத்துவ சேவகி அக்குடிசைக்கு அடிக்கடி விஜயம் செய்தபடி இருந்தாள். நான்கு மாதங்கள் ஆன ஒரு குழந்தைக்குத் தேவையான உணவுகள் மற்றும் அதன் செயற்பாடுகள், சிறிது காலத்திற்கு கடைப்பிடிக்க வேண்டிய கர்ப்பத் தடைமுறைகள் பற்றி எல்லாம் அவள் ஒரு கை ஏட்டை வழங்கி பல அறிவுறுத்தல்களையும் விடுத்துச் சென்றாள். அதன்படி குழந்தை குப்புறப் புரளும் நாளை அவள் எதிர் பார்த்திருந்தாள். குழந்தை இன்னும் கொஞ்சம் நீண்டு உயர்ந்து, சீக்கிரம் வளர்ந்து விடாதா என்று அவளுள்ளம் அவாவுற்றிருந்தது. தனது குழந்தையின் பாதங்களை உள்ளங் கையில் எடுத்து வைத்து அடிக்கடி அளந்து பார்த்துக் கொண்டாள். அது பிறந்தபோது பாதம் அவளது உள்ளங்கையின் அளவே இருந்தது. இப்போது சிறிது நீண்டிருக்கிறதா என்று அவள் அடிக்கடி அளந்து பார்த்துக் கொண்டாள்.

குழந்தை இப்போது முகம் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்திருந்தது. ஆனாலும் அதன் கால்கள் வேறு திசையில் திரும்பி இருந்தன. அது குப்புறப் படுப்பதற்கான எந்த அறிகுறியையும் அது காட்ட வில்லை.

அவள் மருத்துவ சேவகியிடம் தனது கவலையைத் தெரிவித் தாள். அவள் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. "சிலவேளை குழந்தை கொழுத்து இருப்பதால் செயற்பாடுகள் தாமதமாகலாம்..." என்று அவள் ஆறுதல் சொல்லிவிட்டுப் போனாள்.

சிறிது காலம் பொறுத்திருந்த பின்னர் கணவனிடம் தனது மனக் கிலேசத்தை வெளியிட்டாள். அவனும் அதுபற்றிக் கொஞ்சம் சிந்தித் திருக்க வேண்டும். உடனே அவளை அழைத்துக்கொண்டு பிரபலமான ஒரு குழந்தை வைத்தியரிடம் சென்றான். குழந்தையை நன்கு பரிசோதித்த அவர் மருத்துவ சேவகி சொன்ன பதிலையே தானும் சொன்னார். இருவரும் ஆறுதலடைந்து வீடு திரும்பினர்.

ஆனால், ஒரு வருடம் கழிந்த பிறகும் குழந்தை எழுந்து நடக்கத் தொடங்கவில்லை. எனினும், அதன் நிறை சற்றுக் குறைந்தது. கால்கள் இன்னும் பஞ்சுத் திரள் போலவே காட்சியளித்தன. தேரைபோல கால் களை ஒருபக்கம் சாய்த்து இழுத்தவாறு அது தவழத் தொடங்கியது. அப்பாடா என்ற பெருமூச்சு அவர்களிடமிருந்து வெளிப்பட்டது. அவ்வளவுதான். அதற்குப் பிறகு எந்த அசைவும் இல்லை.

அவள் திக்பிரமை அடைந்தவள் போன்று காணப்பட்டாள். கொஞ்ச நஞ்சமாக அவளிடமிருந்து வந்த மூச்சும் இப்போது நின்று விட்டது. அப்போதைக்கப்போது ஏதாவது பேசிக்கொண்டிருந்தவள் எலலாம் அடங்கியவள்போன்று ஆகிவிட்டாள். ஆனால், அவளது மனதின் ஒரு மூலையில் "எனக்கு நல்லதே நடக்கும்" என்ற நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிக் கொண்டிருந்தது.

வீட்டுக்கு வந்து செல்கின்றவர்கள் யாருமே அவள் மனம் உடைந்து விடாமல் கவனமாகப் பேசினார்கள். குழந்தையின் கைகால்களுக்கு எண்ணெய் பூசி இழுத்துவிட்டு வெயிலில் கிடத்திவிடச் சொன்னார்கள். அவள் எல்லாவற்றையும் செய்து பார்த்தாள்.

குழந்தையால் உடம்பைத் தூக்கி அசைக்க முடியவில்லை. கைகால்கள் லேசாக வளைந்து கோணலாயின. முகமும் ஒருபக்கமாக வளைந்தாற் போலிருந்தது. இப்போது அதற்கு இரண்டு வயது. மற்ற குழந்தைகள் ஓடிப்பிடித்துத் துள்ளிவிழும் வயதில் அதனை சக்கர நாற்காலியில் வைத்துத் தள்ள மட்டுமே முடிந்தது.

அவனுடைய கறுத்த முகம் இன்னும் கறுத்து விகாரமாகப் போய் விட்டது. குழந்தை தனது கண் முன்னால் இருப்பதுகூட அவனுக்குப் பிடிக்கவில்லை. அது கைகளை நீட்டி அரைகுறை பாஷையில் “ஆ..ஆ...” என்று அவனை அழைக்கும்போது அவன் அவளைக் கூப்பிட்டு, “இத அங்கால கொண்டு போ...” என்று உரக்கக் கத்துவான். தன் கால்களால் உன்னி, மேலே செல்வதற்குக் கூடத் திராணியற்று புன்னகை வழிந்து பொங்கும் முகத்தோடு தன்னைப் பார்க்கும் “அது” தன் குழந்தையில்லை என்றே அவனுக்குத் தோன்றியது.

மீண்டும் அவளை இன்னொரு வைத்தியரிடம் அழைத்துச் சென்றான். அவர் இன்னொருவரைச் சந்திக்கும்படி கூறினார். அவர் குழந்தையின் கைகால்களை நீட்டி அசைத்து பக்கவாட்டில் விரித்து உடற்பயிற்சி செய்யும் விதத்தைக் கற்றுத் தந்தார். அவற்றையும் ஒன்றுவிடாது செய்தாள்.

அதற்குப் பிறகு குழந்தையின் உடம்பின் கடினத்தன்மை சற்றுக் குறைந்தது. கைகால்களை சிறிது அசைக்கவும், நீட்டவும் முடிந்தது. எனினும், பெரிய பலனேதும் கிட்டவில்லை. அவன் அடிக்கடி எரிந்து விழுந்து கொண்டு இருந்தான். குழந்தை பற்றிய எந்தப் பேச்சையும் எடுக்க விரும்பாதவன் போன்று நடந்து கொண்டான். அவள் அவனுக்குத் தெரியாமலே ஒன்றிரண்டு வைத்தியர்களிடம் சென்று குழந்தையைக் காட்டி வந்தாள்.

அவர்களுக்கிடையே திரை விழுந்தாற் போலிருந்தது. அவளது முகத்தைப் பார்ப்பதுகூட அவனுக்கு என்னவோ போலிருந்தது. இரவும் தனிமையும் பாடாய்ப் படுத்தினாலும் அவளை நெருங்கக்கூட பெரிதும் பயப்பட்டான். இதைப்போல இன்னொரு குழந்தை பிறந்துவிட்டால்...?

அவளுக்கு அப்படி எந்த எண்ணமும் இருக்கவில்லை. எனினும், இன்னொரு குழந்தையைப்பற்றி எண்ணுகின்ற மனவலிமையையும், உடல் வலிமையையும் அவள் இழந்து விட்டிருந்தாள். உடம்பு குழந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் துன்ப துயரங்களால் நொந்து கிடந்தது. ஒருநாள் அவனை உற்சாகப்படுத்தி ஒரு மகப்பேற்று வைத்தியரிடம் கூட்டிச் சென்றாள். அவர் பரிசோதித்துப் பார்த்துவிட்டுப் புன்னகையுடன் அவர்களைப் பார்த்துக் கூறினார்.

“நீங்க பயப்படுற மாதிரி எதுவும் இல்ல...இந்தக் குழந்தைக்கு தற்செயலாத்தான் இப்படி நடந்திருக்கு... இதனுடைய எலும்பு, போன்மரோ எல்லாம் போதுமானதா இல்ல... அதுதான் இதுக்குக் காரணமாயிருக்கலாம். ஆனா, இன்னொரு குழந்தை இப்படிப் பிறக்குறதுக்கு சான்ஸ் இல்ல. அப்படி ஒரு பயமே தேவையில்ல.... சிலவேளை இதைவிட எல்லா விதத்திலயும் பலசாலியான நல்ல ஒரு பிள்ளை உங்களுக்குக் கிடைக்கும்... அதனால பயப்புடாம அடுத்த புள்ளய உண்டாகுங்க... எல்லாம் சரியாகும்... ஓல் தி பெஸ்ட்...”

நீண்ட காலமாக வரண்டு போயிருந்த அவளுடைய நெஞ்சில் அவரது வார்த்தைகள் பாலைவனத்தில் விழுந்த மழையைப்போல புதிய உற்சாகம் தந்தன. மெல்லிய புன்னகை தவழ தயக்கத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் வெறுமனே தரையை வெறித்துக் கொண்டிருந்தான். அவனுக்கும் அவ்வார்த்தைகள் அமுதம் போலிருந்தாலும் அதை நினைத்துப் பார்க்கக்கூட பயந்தவன் போன்று காணப்பட்டான்.

இருவரும் வீட்டுக்கு வந்தபோது குழந்தை சக்கர நாற்காலியிலேயே உறங்கிக் கிடந்தது. அது நீண்ட நேரமாக அவ்வாறே கிடந்தது என்றும், அதைத் தூக்குவதற்குப் பயந்துகொண்டு தான் உட்கார்ந்திருந்ததாகவும் தாய் கூறினாள்.

அவள் உள்ளே போய் பாதியாக வெட்டப்பட்ட ஒரு பிளாஸ்டிக் போத்தலை எடுத்து வந்தாள். அதை சரியாக நீட்டினால் குழந்தை அதற்குள் சிறுநீர் கழிக்கும். அதை எடுத்துப்போய் வெளியே கொட்டிய பின் மீண்டும் கழுவிப் பயன்படுத்துவாள். அதை எடுத்து வந்து சிறுநீர் கழிக்கச் செய்தபோது குழந்தை கண்விழித்துப் பார்த்துச் சிரித்தது. அதற்கு இப்போது மூன்று வயது. எவ்வளவு சிரமப்பட்டாலும் கதிரையில் சிறுநீர் கழிக்காதிருக்க அது பழகியிருந்தது. தாய் வரும்வரை உபாதையைத் தாங்கிக் கொண்டிருந்த அது, இப்போது களிப்புடன் எல்லோரையும் பார்த்து முகமலர்ந்து சிரித்தது.

அழகான மாநிறமான முகம். எப்போதும் சிரித்துக் கொண்டிருக்கும் கண்கள். எனினும், முகம் பக்கவாட்டில் சிறிது சாய்ந்து வளைந்திருந்தது. பார்ப்பவர்களைக் கொள்ளை கொள்ளும் அழகு அதன் முகத்தில் குடிகொண்டிருந்தது.

***

அன்று இரவு மட்டுமே அவள் அவனைத் தன்னருகில் கண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் காலையில் வேலைக்குப் போகிறேன் என்று லொறியை எடுத்துக்கொண்டு போனவன்தான். அதன்பிறகு கணவன் என்ற ஞாபகத்தில் மட்டுமே வந்து போனான்.

மாலைப் பொழுதின் மயக்கத்திலே கனவு கண்ட பேதைப் பெண்ணின் நிலைபோல அவளது கல்யாண வாழ்க்கை என்கின்ற பிரமை சில வருடங்களிலேயே கலைந்து போனது.

திரும்பத் திரும்ப யோசித்துப் பார்த்தாலும் தனது தவறு என்னவென்று அவளுக்குப் புலப்படவில்லை. சிலவேளைகளில் தான் அழகில் ரொம்பக் குறைந்தவள் என்றோ, குடித்தனத்திற்கு அவனைக் கவர்ந்து இழுக்கின்ற கவர்ச்சியும் ஈடுபாடும் அற்றவள் என்றோ அவளுக்குத் தோன்றும்.

ஊனமுற்ற இந்தக் குழந்தையின்மீது இருக்கின்ற வெறுப்பா அவனை இந்த வீட்டிலேயே இருக்கவிடாமல் வெளியேற்றியது என்று சிலவேளைகளில் அவள் யோசிப்பாள். அப்படி இருக்கலாம் என்பதே அதிகபட்ச சரியான காரணமாக அவளுள் ஊன்றி நின்றது. அப்படியிருந் தாலும் அது தனது குழந்தைதானே என்று ஏன் அவனால் எண்ண முடிய வில்லை என்று அவள் தன்னைத்தானே கேட்டுக் கொள்வாள். அப்போதெல்லாம் ஒரு நைந்த சிரிப்பு அவளிடமிருந்து வெளிப்படும். ஆணும் பெண்ணும் சேர்ந்தே துய்த்த இன்பத்தின் விளைவு எப்படி யிருப்பினும் அது அனுபவிக்கப்பட்டது உண்மைதானே..? அந்த உண்மையை ஏற்றுக் கொள்கின்ற மனோபாவம் பெண்ணைவிட ஆணுக்குத்தானே அதிகம் இருக்க வேண்டும்..? தாய்மை என்றும், தொப்புள் கொடி உறவென்றும் அது பெண்ணை மட்டுமே கட்டுப் படுத்தக் காரணமென்ன என்று வினாவெழுப்பி, அதற்கான விடைகாண முற்படுவாள். அவன் ஆண். எதையும் செய்யும் தகைமை அற்றவன் என்பதுமட்டும்தானா அதற்கான விடை? தந்தை பாசம், மனுஷநேசம் என்பதும் ஆண் என்ற தகைமையின் முன்னால் தூசுதானா?

ஆரம்ப காலங்களில் அத்தகைய எண்ணங்களால் அவள் அலைக் கழிக்கப்பட்டாலும் இப்போது அவள் சமனிலை அடைந்த ஒரு நீர்த் தடாகம்போல அமைதியாக இருந்தாள். அந்தத் தடாகம் யாருக்கும் தெரியாமல் மறைவாக இருந்தது. ஏறக்குறைய பதினாறு வருடங்களாக அந்தத் தடாகத்தை சீண்டிப் பார்க்கவோ, அதில் கல்லெறியவோ யாரும் அருகில் வரவில்லை.

ஆம். மகனுக்கு இருபது வயது. நான்கு வருட தாம்பத்திய வாழ்வின் அழியாத ஒரே ஒரு உருவமாக அவன் மட்டுமே பிரமாண்ட மாக நின்றான். அவன் வாங்கி கட்டிப்போட்டிருந்த குடிசை கொஞ்ச நாட்களில் அவளிடமிருந்து பறிக்கப் பட்டது. மாமியார் வந்து மகனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்தில் உரிமை பூண்டு நிற்கவே, அவள் உடைமை அல்லாத அதனை உடனடியாகத் துறந்து தன் தாய் வீட்டுக்கு வந்தாள்.

தாயும் தந்தையும் எந்தவித முகக்கோணலும், மனக்கோணலும் இன்றி அவளைக் கவனித்துக் கொண்டனர். தங்கைக்குக் கொடுப்ப தற்கென்று வைத்திருந்த அந்த வீட்டை அக்காவுக்கே கொடுக்கும்படி அவள் கூறிவிட்டபடியால் அந்த வீட்டை அவளுடைய பெயரில் பெற்றோர் எழுதி வைத்தனர்.

தனக்கு முன்னர் கழிந்துபோன ஒரு தலைமுறையின் பிரதிநிதி களாகிய தனது தாயும், தந்தையும் இந்த மகனை ஒரு ஆட்சேபணையும் இன்றி ஏற்றுக் கொள்கின்றபோது, அந்தக் குழந்தைக்கு உண்மையாகவே உரிமை பூண்டவனாகிய அவன் தந்தை ஏன், எவ்வாறு அதை மறுத்துச் சென்றான் என்ற கேள்வி அவளுள் தொக்கி நின்று கொண்டேயிருந்தது.

இருந்தாற்போல அவளது மாமியாரும் குழந்தையைப் பார்ப்பதற் கென்று வந்து போவாள். வெளிநாட்டிலிருக்கின்ற மகள் ஏதாவது பொருட்கள் அனுப்பிவைத்தால், முக்கியமாக குழந்தையின் பம்பர்ஸ் முதலிய பொருட்கள் கிடைத்தால் அவற்றை எடுத்துக்கொண்டு ஓடோடி வந்து தந்துவிடுவாள். அவனைக் கட்டியணைத்து, முத்தமிட்டு கண்ணீர் வடித்துவிட்டுச் செல்வாள். தனது ஒரே குலக்கொழுந்து இப்படி நொடித்துப்போய் சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருப்பதைக் கண்டதுமே கண்ணீர் உகுப்பது அவள் வழக்கம். ஏதாவது ஒரு தின்பண்டம் சமைத்தாலும் அதை மூடி எடுத்துக்கொண்டு வந்து தந்துவிட்டுப் போவாள்.

தனது மகனின் காணி என்று அதைத் தான் இப்போது தவிர்க்கமுடியாமல் பெற்றுக் கொண்டாலும், தனக்குப் பிறகு அது பேரனுக்குத்தான் என்று அடிக்கடி கூறிக்கொள்வாள். தனது மகள்மார் இருவருக்கும் மணமாகி விட்டதால் அடிக்கடி சண்டை பிடித்துக் கொள்கிறார்கள் என்றும், அவர்களது சண்டையை விலக்கத் தனக்குச் சக்தி இல்லையென்றும், அதனால் பிரிந்து வந்துவிட்டதாகவும் கூறிக்கொள்வாள்.

தந்தையார் தள்ளாடும் வயதிலும் தோட்டத்தைக் கொத்திப் புரட்டி பயிர்களை நட்டிருந்ததால் அந்த மூன்று ஜீவன்களும் வயிற்றைக் கழுவிக் கொண்டிருந்தன. தாயும் வீட்டுவேலைகள் போக மீதி நேரமெல்லாம் தோட்டத்தில் அவருடனேயே அவருக்கு ஈடாக வேலை செய்து வந்தாள். அவள் சமையலைப் பார்த்துக்கொண்டு மகனைக் கவனித்துக் கொள்வாள்.

அன்று அவனை மலங்கழிக்க வைப்பதற்காக கழிப்பறைக்குள் உட்கார வைத்துவிட்டு வெளியே காத்துக்கொண்டு நின்றாள். அடுப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ தீயும் வாசம் வர, அவனை மறந்து சட்டென சமையலறைக்குள் ஓடிவிட்டாள். காலையிலிருந்தே அவனுக்குக் குமட்டல் வந்து கொண்டிருந்தது. மலங்கழிக்க வேண்டுமா என்று அவள் கேட்டபோது அவன் தலையை ஆட்டி மறுத்துவிட்டான். ஆனாலும், அவனை வற்புறுத்தி கொண்டு விட்டிருந்தாள். அவனது ஞாபகம் வந்து கழிப்பறைக்குள் எட்டிப் பார்த்தபோது அவன் சுயநினைவிழந்து விழுந்து கிடந்தான். ஒருகால் குழிக்குள் நீட்டிக்கொண்டிருக்க, இன்னொரு கால் மடங்கிக் கிடந்தது. வாயிலிருந்து நுரை தள்ளிக் கொண்டிருந்தது.

அவள் செய்வதறியாது திகைத்து நின்றாள். ஏற்கனவே, தனது மெல்லிய உடம்பு அவனது கனத்த உடம்பைத் தாங்கியும், தூக்கியும் பலவீனப்பட்டிருந்தபோது, இந்தக் கணத்தில் எப்படி இயங்குவதென்று அவளுக்குப் புரியவில்லை. கூக்குரலிட்டு அழுதாள். நல்லவேளையாக அப்போது அவளது தந்தை தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந் தார். அவரும் தாயும் ஓடோடி வந்து அவனைத் தாங்கி தூக்கி யெடுத்தனர். அவனது உடம்பெங்கும் மலம் பரவியிருந்தது. அவனைச் சுத்தப்படுத்தி எடுப்பதற்குள் போதுமென்றாகிவிட்டது. மெல்லிய விசும்பலுடன் அவனது உடம்பை இளஞ்சூட்டு நீரால் கழுவி, உடைமாற்றி சக்கர நாற்காலியில் அமர்த்தி விட்டாள்.

அவன் இன்னும் சுயநினைவு பெறவில்லை. தலையில் பலமாக அடிபட்டிருக்கலாம் என்று அவளது உள்மனது சொல்லிற்று. “யா அல்லாஹ்... எனக்கு இன்னும் கஸ்டத்த தந்துராத..” என்று பிரார்த்தித்துக் கொண்டே தாயின் முகத்தைப் பார்த்தாள். அவளும் பயந்துதான் போயிருந்தாள். உடனே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லலாம் என்று முடிவெடுத்து, தாயும் மகளும் அவனை ஏற்றிக் கொண்டு ஆட்டோவில் விரைந்தனர். தந்தை பின்னால் சைக்கிளில் வந்தார். அங்கே தலை அடிபட்டிருந்தது ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இரண்டொரு நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டும் என்றும் கூறப்பட்டது.

தாயின் முகத்தைப் பார்த்தாள். நின்றே ஆகவேண்டும் என்ற நிலையில், நின்றே தீருவேன் என்ற உறுதி அவளுள் நிலைத்திருந்தது. எனினும், மகள் இதுவரை எங்கும் தனியாக நின்றதில்லை, அவள் தனியாக எதையும் செய்து கொள்ள மாட்டாள் என்றே தாய் எண்ணி யிருந்தாள். ஆனால், மகளின் முகத்தில் தாய்மையின் பொலிவும் வேட்கையும் பிரகாசித்தன. அந்தப் பலவீனமான சிறுபெண்ணின் வடிவத்தில் உலகத் தாய்மையே ஓர் உருக்கொண்டு நின்றதுபோல அவள் நின்றிருந்தாள். தாய் மௌனமாக அங்கிருந்து வெளியேறினாள்.

பலவிதமான சிகிச்சைகள் வழங்கப்பட்டாலும் அவன் கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்துப் பார்க்கவில்லை. அவனைவிட்டு அப்புறமோ இப்புறமோ நகரமுடியாமல் அவள் தவித்தபடி நின்றிருந்தாள். நீண்ட நேரமாக கழிப்பறைக்குச் செல்லவில்லை ஆதலால் உபாதை தாங்கமுடியாது பக்கத்துக் கட்டில்காரியிடம் சொல்லிவிட்டு அப்பால் நகர்ந்தாள்.

வேகமாகப் போய்விட்டுத் திரும்பி வரும்போது அவள் மனதில் கழிப்பறை அவனுக்கேற்றபடி உயர் இருக்கையுடன் அமைக்கப்பட்டிருந் தால் வீட்டில் இந்த விபரீதம் ஏற்பட்டிருக்காது என்று எண்ணிக் கொண்டாள். வெகு சீக்கிரமே அதற்கொரு ஏற்பாடு செய்துவிட வேண்டும் என்று எண்ணிக்கொண்டவள், அதற்கான உதவியைக் கொழும்பில் இருக்கின்ற தனது தங்கையிடம் கேட்டுப் பார்க்கலாம் என்று முடிவெடுத்துக்கொண்டாள்.

மகன் லேசாகக் கண்திறந்து பார்த்தான் "அல்ஹம்து லில்லாஹ்..." என்று முணுமுணுத்தபடி தாதியைக் கூட்டிவர ஓடினாள். தாதி வந்தபோது அவன் கண்விழித்து மலங்க மலங்க பார்த்துக் கொண்டிருந்தான். தாதி அவனைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு அப்பால் சென்றாள்.

வார்டின் அரைச் சுவர்களுக்கப்பால் இரவு வானமும், நட்சத்திரங்களும் தெரிந்தன. எதிர்ப்புறமாக இருந்த புல்வெளியும், அதில் அமைக்கப்பட்டிருந்த நீல அல்லித் தடாகமும் நட்சத்திர ஒளியில் பளபளத்துக் கொண்டிருந்தன. தடாகத்தின் நடுவில் இருந்த கம்பத்தின் உச்சியில் வெள்ளைச் சுண்ணம் பூசப்பட்ட கொக்கின் உருவம் தெரிந்தது.

வானில் மின்னிக்கொண்டிருந்த ஒற்றை நட்சத்திரம் அவளது மனதில் இனம்புரியாத சோகத்தை மீட்டியது. அந்த நட்சத்திரம் தன் உருவமா அல்லது தன்னை விட்டுப்போன கணவனின் உருவமா என்று அவள் தனக்குள் கேட்டுக்கொண்டாள். இருபது வருடங்கள் நெருங்கி விட்ட நிலையில், தன்னை விட்டும் எல்லா வகையிலும் நீங்கிவிட்ட தனது கணவன் இன்னும் தன்னைப்போலவே தனித்திருப்பான் என்று தான் மடத்தனமாக எண்ணிக்கொள்வதன் விசித்திரத்தை எண்ணி அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

போனதுதான் போனார், ஒரு கடிதமாவது எழுதி வைத்து விட்டுப் போயிருக்கலாகாதா என்று பல தடவைகளில் அவள் ஏங்கியது போலவே இப்போதும் ஏக்கம் கொண்டாள். அப்படி ஒரு கடிதம் எழுதப்பட்டிருந்தால் அவரது உள்ளக் கிடக்கையை அறிந்து கொண்டி ருக்கலாம் அல்லது ஒரு ஆறுதலுக்காகவாவது அதை வாசித்துக் கொண்டிருக்கலாம் என்று அவளுக்குப் பட்டது.

எப்படியோ, அவன் தன்னோடிருந்த காலங்களைவிட தன்னை விட்டுப் போய்விட்ட காலங்களில்தான் தான் அதிகமாக அவனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிக் கவலைப் படுவதாக அவளுக்குத் தோன்றிற்று. அவன் இன்றோ நாளையோ வந்து சேர்ந்து விடுவான் என்ற நம்பிக்கையில் அவனைப் பற்றி அதிகம் கவலைப்படாமலே கழித்துவிட்ட ஆரம்பகால தாம்பத்திய வாழ்க்கையை அவள் எண்ணிப்பார்த்தாள். பலவேளைகளில் அவன் தனக்கு இல்லை என்று தன்னளவில் முன்பு சாந்தப்படுத்திக் கொண்டதுபோல இப்போது நிஜமாகவே அவன் இல்லாமல் போய்விட்டதையும், ஆனாலும் முன்னைப்போல அன்றி இந்தத் தனிமை தன்னை வாட்டி வதைக்கும் கொடுமையையும் உணர்ந்து அவள் ஆழமான பெருமூச்சொன்றை விட்டாள்.

தனக்குப்பின்னால் தனது மகனுக்கு யார் என்ற கேள்வியின் விளைவாகவே அவள் அப்படியொரு கொடுமையை அனுபவித்து வந்தாள். ஆரம்பகாலங்களில் எதையும் காட்டிக்கொள்ளாது ஒரு வைராக்கியத்துடன் தான் வாழத் தொடங்கிவிட்டாலும், இப்போது உடல் தளர்ந்து வருகின்ற இந்நிலையில் அந்தக் கேள்வி அவளுள் விஸ்வரூபமாக எழுந்து நின்றது.

அன்றொருநாள் உள்வீட்டில் ஏதோ வேலையாக இருந்தவள் மகனின் அலறலைக் கேட்டு ஓடிவந்தாள். பசி, தாகம், வருத்தம் எதுவாயினும் சொல்லத் தெரியாத, "ஆ..ஆ..." என்றே அலறத் தெரிந்த, யாராவது ஊட்டினால் மட்டுமே உண்ணக்கூடிய அந்த ஜீவனை- நன்மை தீமை எதுவுமே தெரியாத அந்த ஜீவனை- அலறவைத்தது எது? அவள் ஓடிவந்து பார்த்தபோது...

பக்கத்துத் தோட்டத்திலே இருக்கின்ற சிறுவன்-அவனுக்குப் பதினான்கு வயது இருக்கும்- இவனை விஷமம் செய்வதற்காக இவனது வாய்க்குள்ளும் கைக்குள்ளும் எண்ணெய் தோய்த்த கழிவுப் பேப்பரைக் கொண்டுவந்து திணித்துவிட்டு ஓடிச் செல்வதை அவள் கண்டாள். உள்ளம் பதறி ஓடிச்சென்று அவற்றைப்பறித்து வீசி அவனது வாயைத் தனது தாவணித் தலைப்பால் துடைத்து விட்டாள். அவன் தனது தலையைச் சுட்டிக்காட்டி அவன் அடித்துவிட்டுச் சென்றதைக் கூறி முறைப்பட்டபோது அவள் விழிகள் கண்ணீரில் மூழ்கின.

தனது எதிர்காலம் மலைபோலக் கேள்விக்குறியாக இருக்கின்ற இத்தருணத்தில் தான் பெற்றோருக்கும் சுமையாக ஆகிவிட்டதை எண்ணி அவள் உள்ளம் நொந்து அழுது கொண்டிருந்தது.

***

"நாளைக்குக் காலையில் நீங்கள் வீட்டுக்குப் போகலாம்.." அவனைப் பார்வையிட்ட வைத்தியர் கூற அவள் நன்றியுடன் அவரைப் பார்த்தாள்.

"ஏதும் காயம்... வருத்தம் இல்லையே டொக்டர்.." அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயங்கித் தயங்கிக் கேட்டாள்.

அவர் சிரித்து அவளது முதுகில் தட்டிச் சொன்னார், "ஒரு பிரச்சினையும் இல்லை... லேசா தலையில அடிபட்டிருந்தது... இனி பயப்படத் தேவையில்லை.."

"சரி டொக்டர்..." அவள் தனது பொருட்களைச் சேர்த்து கூடையில் அடுக்கத் தொடங்கினாள். அவளது தலையைத் தடவிவிட்ட அவர், "இவர் மட்டுமா உங்களுக்குப் பிள்ளை..? வேறு பிள்ளைகள் இல்லையா..? வாப்பா எங்க...? என்ன செய்றார்..?" என்று விசாரித்தார்.

அவள் வருத்தம் தோய்ந்த புன்னகையுடன் சொன்னாள், "இவன் பிறந்தவுடனே அவர் விட்டுட்டுப் போயிட்டார்.."

அந்தப் பெண்வைத்தியர் ஒருகணம் அதிர்ந்து போனது அவரது புருவச் சுளிப்பிலிருந்து தெரிந்தது. சிறிதுநேர மௌனத்தின் பின்னர் சொன்னார்.

"இந்த மாதிரிப் பிள்ளைகளுக்கு ஒரு இலவச சிகிச்சை முகாம் நடத்துறோம்... நீங்க கட்டாயம் அதில் கலந்து கொள்ள வேண்டும்... நீங்களும் அங்க தங்கிக் கொள்ளலாம்... எல்லாம் ப்ரீயாவே கிடைக்கும்.. இந்தாங்க நம்பர்..." விசிட்டிங் கார்டை நீட்டினார்.

அவள் நன்றி தோய்ந்த விழிகளுடன் பார்த்துக் கொண்டிருக்கும் போது மீண்டும் கூறினார்.

"இவர ஏ.ஜீ.ஏ. ஒபீசுக்கு கூட்டிட்டுப் போங்க. அங்க சமூக சேவைகள் அமைச்சின் ஒரு பிரிவு இருக்கு... இந்த மாதிரி பிள்ளைகளுக்கு மாசாமாசம் ஒரு தொகை நிதி குடுக்குறாங்க... அதுவும் இவருக்கு கிடைக்கும்... பன்னிரண்டு மணிக்குப் பிறகு மேல இருக்கிற என் ரூமுக்கு வாங்க.. நா ஒரு கடிதம் தாறேன்.. அத எடுத்துட்டு போங்க.."

அவள் கண்களில் நீர் பெருகி வழிந்தது.

அவள் வீட்டுக்கு வந்துவிட்டாள். தாய் விளைவித்த தோட்டத்தின் நடுவில் இருந்த கிணற்றடியில் உள்ள கல்லில் அமர்ந்திருக்கிறாள். இரவு நேரத்திலும் பயிர்கள் பசுமையாக மின்னுகின்றன. நேற்று அவள் கண்ட அதே நட்சத்திரம் இப்போதும் தெரிகின்றது. இன்று அது தன்னுள் இனம்புரியாத ஆனந்த உணர்வை ஊட்டுவதாக அவளுக்குத் தோன்றுகின்றது.

## அத்தியாயம் – 2

தனது இடது கையில் முழங்கைக்கு சற்று மேலே இரத்தம் கன்றித் தோய்ந்திருந்த அந்தக் காயத்தை அவள் தடவிப் பார்த்துக் கொண்டாள். நேற்று சிவப்பாக இருந்து இப்போது ஊதா நிறத்தில் கனிந்திருந்தது. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொன்றுமில்லை. அவளது ஒரே ஒரு தவப்புதல்வன் தான் அவளை அடித்துக் கடித்துவிட்டான்.

நேற்று வழக்கத்தைவிட சற்று உக்கிரமாக நடந்து அந்தச் சண்டையில் அவளது முதுகிலும் நெஞ்சிலும் பல குத்துகள் விட்டு, கூந்தலைப்பற்றியிழுத்து வீசி அவளது கையில் அகப்பட்ட இடத்தில் கடித்ததால் வந்ததே அந்தக் காயம்... அந்தக் கன்றல்...

அவன் - அவளது சீமந்த புத்திரன். வயது பதினெட்டு ஆகிறது. வயதுக்கேற்ற மூளை வளர்ச்சி இல்லாததே அவனது பெரிய குறை. மற்றபடி கைகால்கள் நன்றாகவே இருந்தன. தாய் தந்தையைவிடவும் உயரம் கூடியவனாகவும், நல்ல பலசாலியாகவும் இருந்தான். ஆண் என்ற வகையில் சகல இலட்சணங்களும் பொருந்தியவன். ஆனால்...எந்த நேரத்தில் வலிப்பு வந்து விழுவான் என்று சொல்ல முடியாது.

பத்து மாதங்கள் கருவில் சுமந்து, கருவிலே திருவோடு அவன் உதிக்கவேண்டும் என்பதற்காக அவள் அருந்திய குங்குமப்பூப் பாலும், ஓதிய குர்ஆன் வசனங்களும், செய்த பிரார்த்தனைகளும் சொல்லுதற் கரியன.

பிறக்கும்வரை எந்த ஊசாட்டமும் தெரியவில்லை. பிறந்தபோது மூச்சுவிட முடியாமல் குழந்தை திணறியது. கறுப்புத் திரவம் சூழ்ந்த பொன்னிற உடம்பில் வைத்தியர்கள் முன்னும் பின்னுமாகத் தட்டி அழ வைத்தபோது அவள் இதயம் கலங்கிப் போனது. ஏறக்குறைய புனர் ஜென்மம் அது. மெகோனியம் எஸ்பிரேஷன் என்று பேசிக் கொண்டார் கள். அன்று முதன்முதலாக அது தனது கை பற்றிச் சிலிர்த்தபோது அவள் தாய் என்ற புளகாங்கிதம் கொண்டு இறுமாந்து நின்றாள். அரும் பெரும் தவத்தால், தனது நோன்புகளின் பலனால் அது காப்பாற்றப்பட்டு விட்டதாக செருக்குற்று நின்றாள். ஆனால், அந்தக் குழந்தையே தனக்குப் பின்னாளில் மிகப் பெரிய பிரச்சினையாகவும், தீர்க்க முடியாத தொல்லையாகவும் வரும் என்பதை அவள் அப்போது உணர்ந்திருக்க வில்லை.

ஒரு பெண் மணமுடித்துவிட்டால் அடுத்த மாதமே அவள் கர்ப்பமுற வேண்டும் என்று எதிர்பார்க்கின்ற பலர் எம்மில் இன்னும் இருக்கிறார்கள். “என்ன? ஏதும் விஷேசங்கள் இல்லையா...?” என்று தூண்டித் துருவும் மாத சிரோமணிகள் இருக்கிறார்கள். அவளும் அந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை பகர்ந்து, தன்னுள் தானே இன்புற்று, வேண்டாத பொழுதெல்லாம் வேண்டி, பத்தாம் மாதத்தில் பிரசவத் திற்குத் தயாரானாள். மருத்துவமனைக்குள் பெரும் பயத்தோடு நுழைந்த அவள் பல ஏச்சுகளுக்கும் பேச்சுகளுக்கும் ஆளாகி, துன்புறுத்தல்களைத் தாங்கி அந்த ஜீவ மரணப் போராட்டத்தில் வெற்றி பெற்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் தனது கஸ்டம் எல்லாம் முடிந்தது என்று எண்ணிய படி வீடு வந்தாள். ஆனால், அது இரட்சணியனைப் பார்த்த அன்னை சத்தியபாமாவின் துயரமாக இறுதியில் மாறிற்று. “நீ குழந்தையைப் பிரசவிக்கும்போது இரட்சணியனைப் பார்த்ததால்தான் ஒரு அசுரனைப் பெற்றெடுத்தாய்…” என்று ஸ்ரீகிருஷ்ணன் சிரித்துக் கொண்டே கூறு கிறார். ஆனாலும், அவளால் தீமை அழிந்துவிட்டதென்று மகிழமுடிய வில்லை. “மகனே..” என்று அரற்றி அழத்தான் முடிகிறது. அவள் மடியில் உயிர் துறக்கும் நரகாசுரனை உலகம் எப்போதும் நினைவு கூர்ந்த வண்ணமேயுள்ளது. கர்ணனை இழந்த குந்தியின் துயரமும், கௌரவரை இழந்த காந்தாரியின் துயரமும், அபிமன்யுவை இழந்த சுபத்திரையின் துயரமும் ஒன்றுகலக்கின்றன. அன்னையரின் துயரத்தால் மகா பாரதமே தள்ளாடுகின்றது. எல்லாத் துயரங்களும் பொறுக்கக் கூடியனவே. ஆனாலும், பெற்றெடுத்த மகவைத் தன் கையினாலேயே கொல்லும் அன்னை சத்தியபாமாவின் துயரத்திற்கு எதை ஈடாகக் கூறமுடியும்?

கையில் சுமந்து, கருத்தில் நிறைத்து, கண்களில் வைத்துப் பாதுகாத்து வளர்க்கும் தாய்மார் பின்னாள்களில் தமக்கு வரப்போகும் துயரம் இன்னதென்று அறிந்து கொள்வதில்லை. ஈன்றாள் பசி கண்டாலும் திருடக்கூடாது என்று திருக்குறள் சொல்கின்றது. அந்தள விற்கு உன்னத உறவாக தாய்-சேய் உறவு விளங்குகின்றது. குழந்தையைக் கொண்டாடும் தாய்மார்களும், ஏனைய குழந்தைகளைவிட தன் குழந்தையே பெரிதென்று கொண்டாடும் தாய்மார்களும் எவ்விதம் தாய்க்குலத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றார்களோ, அவ்விதமே குழந்தைகளால் துன்புறுத்தப்படும் தாய்மார்களும், குழந்தைகளே இல்லாது தவிக்கும் தாய்மார்களும் தாய்க்குலத்தின் ஒரு பகுதிதான்.

அவள் குழந்தையும் நல்லபடியாகத்தான் வளர்ந்தது. அதற்கு ஐந்து வயதாக இருக்கும்போது ஒருநாள் அவள் குழந்தையைக் கூட்டிக் கொண்டு பக்கத்துக் கிணற்றடிக்குச் சென்றாள். கடும் கோடையால் நிலம் தகிக்கும் காலம். வீட்டுக் குழாய் வரண்டிருந்தது. பக்கத்து வீட்டில் உள்ள பாதாளக் கிணற்றில் முகங் கழுவிவிட்டு, தண்ணீர் ஒருவாளி அள்ளி வரலாம் என்று சென்றாள். குழந்தையைக் கழுவித் துடைத்து விட்ட பின்னர் தானும் முகங் கழுவி ஒரு வாளி தண்ணீர் அள்ளிக் கொண்டாள். அது கிணற்றை எட்டிப் பார்க்க வேண்டுமென அடம் பிடித்தது. பல முறை சொல்லியும் கேட்கவில்லை. வந்த கோபத்தில் குழந்தையைத் தூக்கி எட்டிக் காட்டினாள். குழந்தையின் முகம் ஒரு மாதிரியாக மாறிற்று. சப்தமும் அடங்கி, உடல் விறைப்பும் தளர்ந்தது.

அன்றிரவு அவனுக்கு மயக்கம் வந்தது. சிறிது இடைவெளியில் மூன்று முறை வலிப்பு ஏற்பட்டது. அவள் கிணற்றைக் காட்டியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரும் பிழையென்று பெரியம்மா குறுகுறுக்கத் தொடங்க, அவள் இன்னும் குற்ற உணர்வில் மூழ்கிப் போனாள்.

அடுத்த நாள் அவனைக் கூட்டிக்கொண்டு ஒரு வைத்தியரிடம் சென்றாள். அவனது மருத்துவ அறிக்கைகளை நன்கு படித்து அவர், அவனுக்குப் பிறப்பின்போதே வலிப்பு வந்துவிட்டதென்ற உண்மையைக் கூறினார். அது ஒரு விதத்தில் அவளுக்கு ஆறுதலளித்தது. எனினும், ஏதோ ஒரு காரணத்தினால் அவனுக்கு மீண்டும் நோய் வர தான் காரணமாகிவிட்டேன் என்று உணர்ந்து ஆழ்ந்த வருத்தம் கொண்டாள். பின்னர் நரம்பியல் நோய் வைத்தியரைச் சந்திக்கும்படி அவர் கடிதம் தர, அவரைச் சந்தித்து அந்நாள் முதலாக மாத்திரைகள் கொடுத்து வருகிறாள்.

சிறுவயதில் எதைக் கண்டாலும் அவன் பயந்து அலறி அடித்துக் கொண்டு ஓடிவருவான். வீட்டில் க்ரைண்டர் போடமுடியாது. மோட்டார் சைக்கிளின் சத்தமும் அவனுக்கு ஆகாது. அவள் அவனைத் தூக்கி அணைத்துக் கொள்வாள். சிலநாட்களில் நல்லபடியாக இருப்பான். அவனை அழைத்துக்கொண்டு அருகிலுள்ள பாலர் பாடசாலைக்குச் செல்வாள். முதன் முதலில் அங்கு ஒட்டிக் கொண்டாலுமே, போகப்போக மிரண்டு போனான். யாருடனும் ஒட்ட மாட்டான். ஒரு பின் வரிசைக் குழந்தையாகவாவது அவன் இருக்க மாட்டானா என்று அவள் ஏங்குவாள். ஆனால், அவன் எல்லாரையும்விட பின்னடைவாக இருந்தான்.

அவள் தூரத்து உறவினர் ஒருவரை மணமுடித்திருந்ததால் அதன்விளைவே இதுவாக இருக்கலாம் என்று அவளுடன் கதைத்த பலரும் அபிப்பிராயப் பட்டனர். வேறு சிலர் எப்போதாவது தாய் பயந்து அலறியிருக்கலாம் என்று கூறினர். கர்ப்ப காலத்தில் ஜெர்மன் சின்ன முத்து வந்ததா என்று விசாரித்தனர். குழந்தை அறுவை சிகிச்சை மூலம் பிறந்திருந்தால் நல்லது என்று சிலர் தெரிவித்தனர். எதற்குமே புலப்படாத காரணம் ஒன்று அதற்குள் தொக்கி நிற்பதை எல்லோரும் உணர்ந்தனர்.

அவள் ஏற்கனவே ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு விவாகரத்து பெற்றவள். சந்தேகப் பேர்வழியான அவள் கணவன் தொட்டதற்கெல்லாம் அவள்மீது கோபப்பட்டான். நிமிர்ந்த தோற்றமும், பனைத்த உடம்பும் கொண்ட அவள், அவனுக்கு ஒரு கரும்புள்ளியாகத் தென்பட்டாள். ஒரு பத்து வயதுச் சிறுவனுடன் கதைப்பதைக் கண்டாலுமே அவளை அடித்து, உதைத்து, துன்புறுத்துவான். அவனுக்குப் பயந்து பக்கத்து வீடுகளில் ஒளிந்துகொண்டும், அடுப்படிப் பரணுக்குள் மறைந்து கொண்டும் அவள் கழித்த பொழுதுகள் பல.

நாளாக, அவனுடன் வாழவே முடியாது என்ற நிலைக்கு அவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளானாள். முதன் முதலாக அவளுக்குத் தரித்த கர்ப்பமும் அவனது அடி, உதை காரணமாகக் கலைந்து போகவே வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்று வந்தவளை, பெற்றோரே கூடிப் பேசித் தீர்மானித்து தலாக் பெற்றுக் கொடுத்தனர்.

அதன்பின் சில வருடங்கள் தாய்வீட்டில் நிம்மதியாக இருந்தாள். அவளது அழகைக் கண்டு ஆசைப்பட்டு பலரும் பெண் கேட்டு வந்தனர். அவள் அஞ்சி நடுங்கினாள். அப்போதிருந்து மன உளைச்சலில் தாயும் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

அவளது தூரத்து உறவுக்காரர் ஒருவர் அவளது நிலை கண்டிரங்கி தனது மனக்கிடக்கையைப் பலநாட்களாக மறைத்து வைத்த பின்னர் தனது சகோதரி மூலமாகப் பெண் கேட்டு அனுப்பியிருந்தார். அவள் தலாக் பெற்று ஏழு வருடங்கள் கடந்துவிட்டன. இனியும் இளமையைத் துறக்கலாகாது என்ற நல்லெண்ணத்தில், ஏறக்குறைய அவளது முப்பது வயதில் அவளுக்கு மறுமணம் நடந்தது. கணவன் நல்லபடியாக அவளைக் கவனித்துக் கொண்டான். தனியார் வங்கி ஒன்றில் உதவி முகாமையாளராகப் பணியாற்றிய அவனும் முப்பது வயதைத் தொட்டிருந்தான்.

இரண்டு வருடங்களில் கர்ப்பமுற்றாள். அவன் வீடு, வாகனம் எல்லாம் வாங்கியிருந்தான். தனது மனைவியை அலுங்காமல் குலுங்காமல் அழைத்துப் போக வேண்டும் என்பது அவன் எண்ணம். திருமணமாகும்போது அவளது கல்வியறிவு எந்தளவிற்கு இருக்குமோ என்று அவன் ஐயம் கொண்டிருந்தாலும், தனக்கு இணையான சிந்தனை யும், நாகரிகமும் கொண்டவள் என்பதை உணர்ந்து கொண்டதும் அவன் மட்டில்லா மகிழ்ச்சியடைந்தான். அவள் பத்தாம் தரம்வரை படித்திருந்தாள்.

குழந்தை நோயுடன் பிறந்ததை அறிந்தபோது, அந்நிலைமையை எதிர்கொள்ள அவள் காட்டிய மனவுறுதியை அவன் வெகுவாகச் சிலாகித்தான். திருமணத்தினால் பல இன்னலுகளுக்கு உள்ளான அவளுக்கு சந்தோஷம் உண்டாக வேண்டும் என்பதற்காகவே, மரணத்தின் விளிம்பைத் தொட்டு மீண்ட தனது குழந்தை உயிருடன் இருக்க வேண்டும் என்று பிரார்த்தித்தான்.

மகன் ஓடியாடி விளையாடும் பருவத்தில் அவளும் அவனுடன் விளையாடி இன்புறுவதை அவன் பாராததுபோல் பார்த்து ரசித்துக் கொள்வான். சிறு தடுமலைக்கூட தாங்கிக் கொள்ளாது அவன் பாடு படுத்துவதைக் கண்டு அவளைப் போலவே அவனும் மன உளைச்சலுக்கு உள்ளானான்.

வலிப்பு குணமாக நீண்ட காலமெடுக்கலாம் என்று வைத்தியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியிருந்தார். எனவே, அவரது அறிவுரைப்படி வேளை தவறாது அவனுக்கு மருந்து கொடுக்கப்பட்டது. வேறு ஒரு காய்ச்சலைக்கூட அவனால் தாங்க முடியாது. இரண்டு மருந்துகள் சேரும்போது பெரும் ரகளை பண்ணுவான். அப்போது அவன் பின்னால் திரிந்து அவள் மிகவும் களைத்துப் போவாள். அதைப் பார்த்து அவன் பரிதாபப் படுவான்.

பலவேளைகளில் அவனது துருதுருப்பே பெரிய பிரச்சினையாக இருந்தது. அவனது நண்பர்களின் ஆலோசனைக்கிணங்க ஒருமுறை மகனை கொழும்பிலுள்ள ஒரு பிரபலமான நரம்பியல் மருத்துவரிடம் கூட்டிச் சென்றான். அவர் ஈ.சி.ஜி. எடுத்துப் பார்த்து அவனுக்கு எபிலெப்ஸி இருப்பதை உறுதிப்படுத்திவிட்டு அவனிடம் கூறினார்.

“வலிப்பும் மூளைக்கோளாறும் பக்கத்து பக்கத்து நோய்கள். ஃபிட் உள்ள பிள்ளை ஒன்று இப்படித்தான் இருக்கும். அது பயங்கரமான நோயில்ல. அது வந்தா கீழ விழுந்துறாம பாத்துக் கொள்ளணும். தலை அடிபடக் கூடாது. ஒருமுறை வந்தா தலைய அது பாதிக்காவிட்டாலும் திரும்பத் திரும்ப வந்தா அது மூளைய பாதிக்கும். மருந்துகள கவனமா குடுங்க..”

அவனும் அவளும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவள் தயக்கத்துடன் கேட்டாள். “டொக்டர். இவர்ட நிறை எப்பவுமே ஒரே மாதிரியாத்தான் இருக்கு... ஏன் அது கூடல்ல..? பிள்ளை வளர்ச்சி க்ராஃப் படி அது கூடணும்தானே...?”

உடனே தலையசைத்து ஆமோதித்துவிட்டு அவர் சொன்னார்.

“அதுவும் இந்த நோய் காரணமாத்தான். எப்பவும் குழந்தை வளர்ச்சியில வெயிட்டும் முக்கிய பங்கு செலுத்துது. இவருடைய தலை சின்னதா இருக்கிறதால சாதாரண வேலைகளையும் செய்ய கஷ்டப் படுவார் இல்லையா...?”

அவள் ஆம் என்பதுபோலத் தலையாட்டினாள்.

ஆனா, இவர்ட கண் காது எல்லாம் நல்ல க்ளியரா இருக்கு. சின்ன பிரச்சினை ஒண்ணுதான் இருக்கும்போலத் தெரியுது. இவர்ட மண்டையோடு சின்னதா இருக்கிறதால மூளை வளராமலும் இருக்கும்... அதுக்குக்கூட இப்ப சர்ஜரி இருக்கு..”

மீண்டும் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

“நாங்க பிறகு அதப்பத்தி யோசிச்சி சொல்றோம் டொக்டர்...”

“ஓகே... ஓகே... வை டோன்ட் யூ ட்ரை ஃபோ எனதர் பேபி..?”

அக்கேள்வி நீண்ட சரமென உட்புகுந்து அவளது இதயத்தைத் தாக்கிற்று. அவள் சடாரென நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்துவிட்டு தலையைக் குனிந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் குழந்தை உங்களப்போல, என்னப்போல ஒருநாளும் வளராது. கணக்கு மாதிரி விஷயங்கள் அறவே தெரியாமப் போகும்..”

“ஏதாவது ஹேன்டிகேப்ட் ஸ்கூல்ல சேர்த்தா..?” அவன் மனது ஒப்பாமல்தான் கேட்டான்,

“நோ..சாதாரண குழந்தைகளோடத்தான் இவர பழக விடணும். நல்ல பழக்கங்கள சொல்லிக் குடுக்கணும். கீழ் மட்ட ஆக்கள் வேணாம்.... அவங்களப்போல இவன் நடக்கப் பார்ப்பான்...”

அவர் சொன்னது நூறு வீதம் உண்மையாயிற்று. அவன் யாராவது ஒரு பையனுடன் சேர்ந்து விளையாடினால், அவனது மோசமான செய்கை ஒன்றை அச்சொட்டாகப் பின்பற்றி அப்படியே செய்யப் பார்ப்பான். பாதையோரத்தில் நின்று சிறுநீர் கழித்தான். தூஷணம் அதிகம் பேசினான். எந்தக் கூச்ச நாச்சமும் அவனிடம் இருக்கவில்லை. அவள் எவ்வளவோ முயன்றும் அதைத்திருத்த முடிய வில்லை, வாயில் மிளகாயைத் தேய்த்து விட்ட போதிலும்....

அவர்கள் குடியிருந்த வீதியில் அவனை எல்லோரும் ஒருசேர வெறுத்தார்கள். தங்களது தெருவுக்கே தூஷண வார்த்தைகளைப் பழக்குவது இவன்தான் என்று ரகசியமாகப் பேசிக்கொள்வார்கள். அவன் கையில் எவ்வளவு உயர்ந்த பொருளை வைத்திருந்தாலும் அதைத் திருடிக் கொள்வார்கள், அது அவனுக்கு எதற்கு என்று அவர்களாகவே தீர்மானித்துக் கொண்டதுபோல. அவனை விரட்டினர் அடித்தும், ஏசியும், சிலவேளைகளில் ஐஸ் தண்ணீரை அவன்மீது கொட்டியும்.

“இப்புடி ஒரு புள்ளய பெத்தெடுக்க உம்மா வாப்பா என்ன பாவம் செஞ்சாங்களோ..?” என்று அவள் காதுபட சிலர் பேசினர். வேறு சிலர் “இவன் கர்ப்பத்தில் இருக்கும்போது அதை அழிப்பதற்காக ஏதோ மருந்து குடித்ததால்தான் இப்படி வந்தது” என்று முடிவு கூறினர். இன்னும் சிலர் “எல்லாத்துலயும் ஒரு மனுஷனுக்கு அல்லாஹ் சந்தோஷத்த குடுக்க மாட்டான். இவங்க ரெண்டு பேருக்கும் ஒரு கொறை யும் இல்லாட்டியும் புள்ளயப் பாரு..” என்று பேசிக் கொள்வார்கள். வேறு சிலர் அவர்கள் முன்னால் அவனுக்கு இரக்கம் காட்டியும், அவர்கள் இல்லாத இடத்தில் அவனை வைதும் விரட்டி விடுவர்.

வேறு சிலர் அவர்கள் ஏதும் சொல்லாமலேயே தேவாலயங்களில் வேண்டுதல் செய்து திரும்பி வந்து கூறுவர், “இவன் முற்பிறப்புல செஞ்ச பாவம் இவன சுத்துதாம்...”என்று. அல்லது “இவன உங்க குடும்பத்துல யாரோ ஒருத்தர்ட ஆவி சுத்துது” என்று.

இப்படி ஏராளம். நாடாதபோதும் தேடிவரும் கதைகளும், பிரச்சினைகளும். அவர்கள் கனவில்கூட எண்ணாதவற்றையெல்லாம் உண்மையென நிரூபித்தனர் பலர். மிகச் சிலர் “இதுபோல எனக்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை இருந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை பண்ணி, அவர்களது துன்ப துயரங்களை உண்மையாகவே உணர்ந்து அனுதாபப் பட்டனர்.

அவன் தனது உணர்வுகளை வெளிக்காட்டாதிருக்க முயன்றான். அவளால் அப்படி இருக்க முடியவில்லை. இரவில் நிச்சலனமாகத் தூங்கும் தன் மகவைப் பார்த்ததும் கண் கலங்கிப் போவாள். அழகான தோற்றமும், வெளிப்பார்வைக்கு எதுவும் புலப்படாத தன்மையும் காண காண்பவர் உள்ளம் உருகிப் போகாமல், இப்படி வம்பு தும்பு பேசி பெற்றவர்களைத் துடிக்க வைக்கிறார்களே என்று சொல்லிச் சொல்லி கவலைப்பட்டுக் கொண்டிருப்பாள். அவனுக்காகப் பிரார்த்திப்பாள். தனது பிரார்த்தனை பலிக்கும் நாளில் தான் எப்படி கம்பீர நடை நடப்பேன் என்று கற்பனை செய்வாள்.

அன்று காலையில் அவன் எழுந்து அன்னை ஆற்றித் தந்த தேநீரை அருந்திவிட்டு வெளியே நின்று கொண்டிருந்தான். அவள் அவனை நோட்டமிட்டபடியே பாத்திரம் கழுவிக் கொண்டிருந்தாள். அவன் திடீரென நிலை தடுமாறி வீசுப்பட்டுச் சென்று அருகிலுள்ள கொய்யா மரத்தைப் பற்றிக்கொள்வதற்கு பெரிதும் முயல்வதைக் கண்டு வீறிட்டு அலறியவளாக ஓடிச் சென்றாள். அதற்குள் அவன் விழுந்து விட்டான். நெற்றிப் பொட்டில் உராய்ந்து இரண்டங்குல நீளத்திற்குக் காயம். இரத்தம் வழிந்து கொண்டிருந்தபோதும் அவனைத் திருப்ப முடிய வில்லை. கடுமையான வலிப்பு காரணமாக ஆழ்ந்த நித்திரையில் இருந்தான். உடம்பு மிக விறைப்பாக இருந்தது.

அலுவலகம் செல்லத் தயாராகிக் கொண்டிருந்த அவனும் ஓடோடி வந்தான். அவள் அவன் முகத்தைப் பார்த்த பார்வையில் இனியும் இந்தத் துயரம் முடியப் போவதில்லை என்ற பிரத்தியட்சம் தெரிந்தது. ஏனெனில், கொழும்பு வைத்தியர் தந்திருந்த மருந்தின் காரண மாக கடந்த இரண்டு மாதங்களாக அவனது நிலை சிறிது சீர்பட்டி ருந்தது. ஒருதடவைகூட அவனுக்கு நோய் ஏற்படவில்லை. நேற்றுத்தான் அந்த டாக்டரை மறுபடியும் சந்தித்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்து மீண்டிருந்தனர். இப்போது அவன் வீசுப்பட்டு விழுந்ததற்கு வேறு எந்தக் காரணங்களுமில்லை. கடைசியாக அவர் மாற்றி எழுதித் தந்த மருந்துதான் என்பது தெரிந்தது.

உடனே அவரைச் சந்திப்பதற்காக மீண்டும் கொழும்பு புறப்பட்டனர். நான்கு, ஐந்து மணி நேரப் பயணத்தின் முடிவில் கொழும்பை அடைந்தனர்.

அவனது காயத்தைக் கண்டு அவர் அதிர்ந்து போனார். முகம் மிகுந்த பச்சாதாபத்தைக் காட்டிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஃபிட் காரணமா அவன் கீழ விழுறது கவலையானதுதான். ஆனா, அதைவிடக் கவலையாயிருக்கு மருந்து டோஸெஜ் கூடினதால அவன் விழுந்துட்டான் என்ட்றது..." என்று திரும்பத் திரும்ப கூறிக்கொண்டு பழைய மருந்தையே எழுதித் தந்தார். அவனது விடயம் சிக்கலானது என்ற உண்மை அவருக்கும் அப்போதுதான் புரிந்தது.

அடுத்த க்ளினக்கிற்கு அவர்கள் தயாரானபோது அவர் வெளி நாடு சென்றுவிட்டார் என்ற தகவல் கிடைத்தது. அவர்கள் வசதிக்காக பக்கத்து நகரத்திலுள்ள க்ளினிக்கைத் தேர்ந்தெடுத்தனர். ஒரு விதத்தில் கொழும்பு வைத்தியர் போனது நல்லதென்றே பட்டது. போக்குவரத்துச் செலவு தாள முடியாததாக இருந்தது.

அடுத்த கர்ப்பம் பற்றிய பயம் இருவரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. நான்கு வருடங்கள் கழிந்து விட்டன. இனியும் தாமதிக்க முடியாது என்று பட்டது. ஒரு தடவை பக்கத்திலுள்ள சாதாரண வைத்தியரிடம் அது பற்றிக் கேட்டபோது அவர் சில மாத்திரைகளைக் கையில் தந்து அனுப்பினார். அவள் அவநம்பிக்கை யுடனே அதைப் பெற்றுக் கொண்டாள். ஏனெனில், மற்ற பெண்களின் வாழ்க்கையில் மிக இயல்பாக நடக்கின்ற விஷயங்கள் எல்லாம் தனது வாழ்க்கையில் மிகுந்த சிக்கலாகவே ஆகிவிடுகின்றன என்றதொரு எண்ணம் அவளிடம் இருந்தது. திருமணம், தாய்மைப்பேறு, குழந்தை எல்லாமே... எப்படியோ அடுத்த பிள்ளை தரித்தாலும் அது தனக்கு இன்னொரு பிரச்சினையாகவே இருக்கும் என்பதுபோல ஒரு கருத்து அவளது மனதின் ஒரு மூலையில் ஒளிந்திருந்தது.

ஆனால், அடுத்தடுத்த பிள்ளைகள் இரண்டும் மிக இயல்பாகப் பிறந்தன. அவை இப்போது பத்து வயதிலும், ஐந்து வயதிலும் நின்றன. எனினும், அந்தப் பிள்ளைகளுக்கு ஒரு நோய் வந்தால் மிகவும் பதறிப் போவாள். தன் வாழ்வில் முடிச்சுபோன்று உருண்டு சுழன்று வருகின்ற சிக்கல் பந்து எங்கே தன்னை விடாமல் துரத்தி அந்தக் குழந்தைகளையும் பறித்தெடுத்து விடுமோ என்ற பயமே அதற்குக் காரணமாகும்.

மூத்தவனுக்கு இப்போது பதினைந்து வயது. கணவன் வேலைக்குச் சென்ற பின்னால் உணர்கின்ற தனிமை, வேலைப்பளு இவற்றுக்கெல்லாம் அருமருந்தாக அவளது பெண் குழந்தைகள் திகழ்ந்தன. அவன் எங்கேயாவது விளையாடப் போய் விழுந்து விட்டான் என்ற தகவல் கிடைத்தாலும் சரி, அவன் வெளியேயிருந்து பிரச்சினை களை அள்ளி வந்தாலும் சரி, அவை ஓடிச்சென்று அவனைக் கவனித்தன; பெரிய மனுஷிகள்போன்று சமாதானம் பேசின; அனுபவமிக்க வைத்தியர்களைப்போல அவனது காயங்களுக்கு மருந்திட்டுக் கட்டின. பெரியவர்களின் துணையோடு அவனை எல்லா இடங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றின.

சாதாரண பிள்ளைகளுக்கேயுரிய விளையாட்டுப் புத்தியால் அவை ஏதாவது தவறு செய்தால் அவளுக்குப் படு கோபம் வரும். கடுமையாகக் கண்டிப்பாள். அவளது வேலைகள், பெரியவளின் புலமைப் பரிசில் பரீட்சை, சிறியவளின் தொல்லைகள்... இவற்றுடன் மகனின் நிலை விஸ்வரூபமெடுத்து நின்றது. குழந்தைகள் படிப்பதற்கென்று உட்கார்ந்துவிட்டால் போதும். அவற்றைக் குழப்பியடித்து, அவற்றின் பொருட்களையெல்லாம் கிழித்து வீசி ரகளை செய்வான். அப்பொதெல்லாம் அவனது கண்களில் மின்னுகின்ற பொறாமை, கொடூரம் என்பவற்றைக் கண்டு, அவள் அன்புடன் அவனை அரவணைத்து அருகமர்த்திக் கொள்ள முயல்வாள். அவனோ படிக்கும் மேஜையின் மீது ஏறி படுத்துக் கொள்வான்; பேனையை முறித்துப் போடுவான். என்ன செய்வதென்று தெரியாமல் விழி பிதுங்கி நிற்பாள். பாடசாலைப் பெற்றோர் கூட்டங்களில் பிள்ளைகளின் கல்விக்குப் பெற்றோர் ஆற்றவேண்டிய கடமைகள் பற்றிக் கேட்டவுடன் அதைப் பற்றியே அதிகம் யோசித்து மன உளைச்சலுக்கு உள்ளாவாள்.

அவனுக்கு விதவிதமான புத்தகங்களை வாங்கிவந்து கொடுப்பாள். அவற்றை வைத்துக்கொண்டு சில நாட்கள் அழகாக உட்கார்ந்திருப்பான். இந்தா மகன் திருந்திவிட்டான் என்று அவளுள்ளம் நர்த்தனமிடும். அடுத்த நாளே அவற்றை வீசிவிட்டு சுத்தியலையும், ஆணியையும் எடுத்துக் கொள்வான். படிக்க அமர்ந்துவிட்டால் போதும். சுவரில் அவன் ஆணியடிக்கும் ஓசையோ, மேஜையில் அடிக்கும் ஓசையோ கேட்கத் தொடங்கி விடும். “யா அல்லாஹ்....இவன்ட தொல்லய இனியும் என்னால தாங்க முடியல்ல. இவன உனக்கிட்டயே நீ எடுத்துரு..” என்று சிலவேளைகளில் பிரார்த்திப்பாள். அந்த பிரார்த்தனைகள் இறைவனைச் சென்றடைய முன்னமே மனம் வருந்தி மன்னிப்புக் கேட்பாள்....; “யா அல்லாஹ்.. என்னை மன்னிச்சிரு... இவன நல்ல புள்ளயாக்கி எனக்கிட்ட தா..” என்று மறுபிரார்த்தனை புரிவாள்.

அன்று விளையாடப் போனவன் கீழே விழுந்து கிடப்பதாக யாரோ வந்து சொல்ல குழந்தைகள் இரண்டும் மின்னல் வேகத்தில் வெளியே இறங்கி ஓடின. அவளும் பின்தொடர்ந்தாள். அருகிலுள்ள ஒரு பொட்டல் வெளியில் முட்புதர்களின்மீது அவன் விழுந்து கிடந்தான். வலது கை பக்கத்திலுள்ள பாறாங்கல்லின் கீழே மாட்டியிருந்தது. கையை விழுக் விழுக் என்று அடித்துக் கொள்ளும்போது அது கல்லில் உராய்ந்து ஐந்து விரல்களிலும் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அவள் அவனது கையை இழுத்தெடுத்து தனது தாவணியால் கையைச் சுற்றி ஒரு கட்டுப் போட்டாள். அவன் வலிப்பு நீங்கி, ஆடு மாடுகள் போல மூச்சுவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்த உறங்குநிலைக்குச் சென்றுவிட்டான். இனி அவன் எழும்வரை காத்திருக்க வேண்டும். கைகால்களை நீட்டித் தளர்த்தி விட்டாள்; செருப்பைக் குழந்தைகள் கழற்றி எடுத்தன. கையில் விடாமல் வைத்திருந்த கிரிக்கெட் மட்டையையும் அப்பால் எடுத்து வைத்தன.

அவனைச் சூழவும் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் வந்து நின்று கொண்டார்கள். அவர்கள் விளையாடுவதைப் பார்க்கவே அவன் தனது பெட்டை எடுத்துக்கொண்டு வந்திருந்தான். அவனுக்கு நண்பர்கள் என்று யாருமில்லை. அவனை அவர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை. அவன் அவர்களது சட்ட திட்டங்களுக்கு அடிபணி யாதது ஒரு காரணம். அடுத்த காரணம், அவன் அவர்களது பொருட் களைத் தனது பொருட்களாகக் கருதி அவற்றைத் தூக்கி வந்து விடுவான். அது தனக்கே தனக்குச் சொந்தமாக இருக்க வேண்டும் என்ற பேராசை யில் கட்டிலின் கீழே மறைத்து வைப்பான். ஆனால், அவனது கண்களில் கள்ளத்தனம் மின்னுவதைக் கண்ட அவள் அவற்றை உரியவர்களுக்குக் கொடுத்து விடுவாள். அதனாலும் பூகம்பம் எழுவதுண்டு.

நீண்ட துயிலின் பிறகு அவன் விழிக்க, அவனை மூவரும் நடப்பித்துக் கூட்டி வந்தார்கள். ஐந்து விரல்களுக்கும் மருந்திட்டுக் கட்டினார்கள். அவன் சுய நினைவு வந்து சிறிது நேரம் தள்ளாடி சமநிலை அடையும்வரை அருகிருந்தாள். தன் கையில் துணி கட்டியிருப்பதைக் கண்டதுமே அதைக் கழற்றியெடுத்து அவன் வீசியெறிந்தான்.

***

குடும்பத்தின்மீது கணவனின் கவனம் வரவர குறைந்து கொண்டு செல்வதை அவள் அவதானித்தாள். அலுவலகமே கதி என்று அவன் கிடப்பது ஏன் என்ற அவளுக்குப் புரியவில்லை. கேட்ட பொருட்களை யெல்லாம் வாங்கிக் கொடுப்பது மட்டுமே தனது கடமை என்று அவன் நினைத்துக் கொண்டிருப்பதாக அவளுக்குப் பட்டது. அவளும் இப்பொதெல்லாம் அது குறித்து அலட்டிக் கொள்வதில்லை. குழந்தை களின் படிப்பு, அவற்றுக்கான வகுப்புகள், இரவில் கற்றலுக்கு உதவி செய்தல், வீட்டைக் கவனித்தல், மகனுடைய வேலைகள் என்று வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. இருவருக்கும் இடையில் ஏதோ ஒரு விலகல் இருப்பதை அவள் உணர்ந்தாள். ஆனாலும் அதை மனமார நீக்க விரும்பி, அவனையணுகி ஏதும் பேசித் தெரிந்து கொள்ள வேண்டு மென்று அவள் எண்ணவில்லை. அதற்குரிய நேரமும், மன அமைதியும், உடல் வலிமையும் இன்றி அவள் இப்போதெல்லாம் வாடிப் போயிருந் தாள். ஏறக்குறைய முதுமையின் நடுப்பகுதி. ஆம். அவளுக்கு இப்போது ஐம்பது வயது.

மகன் இப்போது டீன் ஏஜின் இறுதிப் பகுதியில் நின்றிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது சில்மிஷங்கள் நாளுக்கு நாள் கூடிச்சென்றன. பெண் பிள்ளைகளின் அருகே சென்று அவர்களைப் பயம் காட்டுவது, எட்டித் தொடுவது, அடிப்பது என்று கண்ணெதிரே காண்போரிடம் வம்பு செய்து கொண்டிருந்தான். மகள்மாரின் நண்பிகள் யாரும் இந்த வீட்டுப் பக்கம் எட்டியும் பார்ப்பதில்லை. தப்பித் தவறி வந்துவிட்டால் இவன் செய்கின்ற அலட்டலில் அவை அலறியடித்துவிட்டு ஓடிவிடும்.

இனியும் அவனைத் தம்மோடு வைத்துக் கொள்வதில் உள்ள சிக்கலை அவள் உணரத் தலைப்பட்டாள். கணவனிடமும் அதை எடுத்துக் கூறினாள். அவனும் அதை ஏற்கனவே யோசித்து வைத்திருந்தவன் போல காரை எடுத்துக் கொண்டு வந்திருந்தான்.

குழந்தைகளை வீட்டில் தனியே விடப் பயந்து அவற்றையும் கூட்டிக்கொண்டு அந்த விஷேட கல்வித் தேவையுடைய மாணவர்கள் கற்கின்ற பாடசாலைக்குச் சென்றாள். ஏறத்தாழ நான்கு மணிநேர பயணம். பாடசாலை அதிபர் அவ்வளவாக முகம் கொடுத்துப் பேச வில்லை. வகுப்பாசிரியை சம்மதித்தால் ஏற்றுக் கொள்வதாகக் கூறினார்.

வகுப்பாசிரியை முகம் மலர வரவேற்றார். அவனைப்பற்றி அன்புடன் விசாரித்தார். அந்தக் கட்டடம் முழுவதையும் சுற்றி, முற்றத்தையும் சேர்த்து முட்கம்பி வேலி அடித்திருந்தார்கள். பார்ப்பதற்கு என்னவோ போலிருந்தது.

குழந்தைகள் அமைதியாகப் படித்துக் கொண்டும், சித்திரம் வரைந்து கொண்டும் இருந்தார்கள். அவனைக் கண்டவுடன் பெண் பிள்ளைகள் முகம் மலர ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். அவனது உயரமும், நிறமும், உடல்வாகும் அவர்களைக் கவர்ந்து விட்டன போலும். அவன் பின்னாலேயே சுற்றிவர முயன்றார்கள்.

அவனைப்போல பெரிய மாணவ மாணவிகள் மெழுகு வர்த்தியும், மணிமாலையும் செய்து கொண்டிருந்தார்கள். இன்னொரு புறம் தையல். மறுபுறம் மாணிக்கக் கல் பட்டை தீட்டுதல். பார்த்த மாத்திரத்திலேயே அவளுக்குப் பிடித்துப் போயிற்று. ஆயினும், அங்கிருந்த ஆசிரியைகள் வயதில் குறைந்தவர்களாகவும், ஒடிசலானவர் களாகவும் காணப்பட்டார்கள்.

அவனுக்கு அடிக்கடி நோய் வருவதால் தாய் பக்கத்திலிருந்து கவனித்துக் கொண்டால் அவனைச் சேர்த்துக் கொள்வதாக ஆசிரியை சொன்னார். அவளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

ஊரில் குழந்தைகள் நல்லவிதமாகப் படித்துக் கொண்டிருக்கும் போது அவற்றை விட்டுவிட்டு வந்து இங்கே நிற்பதா? அந்தப் பிள்ளைகளை இங்கேயுள்ள பாடசாலையொன்றில் சேர்ப்பதா? அல்லது கணவன், பிள்ளைகளை அங்கே விட்டுவிட்டுத் தான் மட்டும் இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதா? அநேக குழப்பங்களுடன் அவனைப் பார்த்தாள். அவனோ "நீ முடிவெடுத்தால் சரி" என்பதுபோல நின்றிருந்தான். அவனைத் தனியே விட்டுவிட்டு இங்கே வருவதும் பரிதாபகரமானது என்று அவளுக்குத் தோன்றிற்று.

அதற்குள் புத்திரனோ அங்கிருந்த பிள்ளைகளைச் சீண்டிப் பார்க்கத் தொடங்கி விட்டான். வாளியில் மாலைத் தேநீரை எடுத்து வந்த பெரிய மாணவர்களும் அவனைக் கண்டு மிரள ஆரம்பித்தார்கள். "அம்மோவ்.. எனக்கு அடிக்கிறான்.." என்று ஒரு சிங்கள ஆசிரியை வகுப்பாசிரியையிடம் முறையிட்டார்.

அவனை இங்கு வைத்து மேய்க்க யாராலும் முடியாது என்பது உடனே அவளுக்குப் புரிந்தது. அவனை அன்போடு அருகே அழைத்து, "நீ இங்க நிக்கிறியா மகன்..? நல்லாப் படிக்கலாம். விளையாடலாம். உம்மாவும் உன்னோட நிக்கிறேன்..." என்று மெல்லிய குரலில் கேட்டாள். அவன் ஒரேயடியாகத் தலையை அசைத்துத் தனது மறுப்பைத் தெரிவித்தான்.

***

தனக்கு எல்லாச் செல்வங்களையும் அளித்த ஆண்டவன் தன் மகன் மூலமாகத் தன்னைச் சோதிப்பதை அறிந்து, அவள் மௌனமாகக் கண்ணீர் வடிக்கத் தொடங்கினாள். தனது குடும்பம் எல்லோரும் விரும்பும்படியாக வாழ்ந்தாலும். தனது மகனைக் கண்டு நிறையப் பேர் ஏதேதோ கதைக்கிறார்கள் என்பதும் அவளுக்குத் தெரிந்திருந்தது. அவன் எவ்வளவுதான் குறையோடு பிறந்திருந்தாலும், அவனை ஏற்றுக்கொண்டு சிசுருஷை புரிகின்ற மனப் பக்குவம் தனக்கும், தனது குழந்தைகளுக்கும் இருப்பதாக அவள் மனமாற நம்பினாள்.

இன்றோ நாளையோ தனது வாழ்வு முடிந்து போனாலுமே இந்தக் குழந்தைகள் இரண்டும் அடித்துப் பிடித்துக் கொண்டாலும் அவனைக் காப்பாற்றிக் கரைசேர்க்கும் என்றும் அவள் நம்பினாள். எனினும், அவனது ரோதனைகள் குறையவில்லை. யாராவது ஏதாவது ஒரு விதத்தில் அவனைக் குழப்பி விட்டாலும் அவன் அந்த ஆற்றாமை யைத் தீர்க்கும் ஒரே நபராக அவளைப் பார்க்கத் தொடங்கினான். அவளை அடித்து உதைக்க ஆரம்பித்தான்.

அன்று அவன் விளையாடுவதற்காக வெளியில் புறப்பட்டான். கையில் தன்னிடமுள்ள அனைத்துப் பொருட்களையும் எடுத்துக் கொண்டான். பெட்டையும், பந்தையும், விக்கெட் மட்டைகளையம் சமநிலையில் பிடித்துக் கொண்டு செல்வதற்கு அவனுக்குத் தெரிய வில்லை. அவை ஒவ்வொன்றும் விழுவதும், அவன் பொறுக்கி எடுப்பதுமாக இருந்தது. மூத்தவள் அருகில் வந்து விக்கெட் கம்புகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கி சுவரோரமாக வைத்துவிட்டுச் சொன்னாள்.

"நானா.. இதக் கொண்டு போக வேணாம். புதுசுதானே.... நேத்துத்தானே வாங்கினது..? யாராச்சும் எடுத்துருவாங்க.."

"இல்ல.. நா கொண்டு போவேன்.."

அவள் அவனருகில் வந்து சொன்னாள். "ஒனக்கு தலை சுத்திட்டா யாராவது தூக்கிட்டுப் போயிருவாங்க... வெச்சிட்டுப் போ.."

அவன் எதையும் கேட்காமல் எல்லாவற்றையும் தூக்கிச் சென்றான். நாலு வீடுகளுக்கப்பால் உள்ள முச்சந்தியைக்கூட கடந்திருக்க மாட்டான். திரும்பி வந்தான்.

"இது கீழ வுழுதும்மா. வெச்சிட்டுப் போறேன்.." அவன் கையில் இரண்டு விக்கெட் கம்புகள் மட்டுமே இருப்பதை அவள் கண்டாள்.

"எங்க மத்தது...?"

கீழ வுழுந்துரிச்சி....எடுத்துட்டு வாறேன்.."

"ஓடிப் போ... யாராச்சும் எடுத்துருவாங்க.."

அவன் வெளியே ஓடிப்போய் அடுத்த நிமிடம் திரும்பி வந்தான். "காணல்லம்மா.."

உடனே இரண்டு பெண் குழந்தைகளும் வெளியே இறங்கிப் போய் அவற்றைத் தேடச் சென்றன. வெறுங்கையோடு திரும்பி வந்தன.

"நாசமாப் போனதுகள்.." அவள் நெஞ்சம் பொருமிக் கனத்தது. அவனது முதுகில் இரண்டு தட்டினாள். "இங்க உள்ளதெல்லாம் கள்ள ஜனம்ன்ட்டு ஒனக்குத் தெரியாதா? சொல்ல சொல்ல ஏன் எடுத்துட்டுப் போன..? நேத்துதானே எழுநூறு ரூவாக்கு வாங்கினது..?"

ஏற்கனவே பறிகொடுத்த கவலை. இப்போது தாயும் சேர்ந்து கத்த, அவன் கோபத்துடன் அவளருகில் வந்து முதுகில் ஒரு குத்து விட்டான்.

அவள் கத்திக்கொண்டே கேஸ் அடுப்பில் சமைத்துக் கொண்டிருந்தாள். நிலை தடுமாறி அவளது முகம் சட்டிக்குள் சென்று மீண்டது.

"போடா நாயே... நீயெல்லாம் இருந்து என்ன பிரயோசனம்..? எங்கயாவது தொலஞ்சி போ.."

"எனக்குத் தெரியா.. என்ட கம்ப தேடித்தா.." அவளது கூந்தலைக் கொத்தாகப் பற்றிக் காலால் ஒரு இடறல் விட்டான். அவள் கீழே விழுந்து விட்டாள். குழந்தைகள் அவளைச் சூழ்ந்துகொண்டு அழ ஆரம்பித்தன. அவன் பறந்தோடிச் சென்றுவிட்டான்.

மீண்டும் நல்ல பிள்ளையைப்போல இரவு வந்தான். அதுவரை மாமா வீட்டில் இருந்தானாம். அவளது பெற்ற மனம் உருகிப் போனது.

அன்று அவளது தம்பி வீட்டில் ஏதோ விசேஷம். இப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாக் குடும்பங்களும் ஒன்று சேரும் பொழுதுகளில் அவள் மிகுந்த சங்கடத்தை அனுபவிப்பாள். அவள் எந்த நிகழ்ச்சிக்கும் நேர காலத் துடன் ஆஜராக மாட்டாள். மகனைக் கூட்டிக்கொண்டு வெளியே செல்ல விரும்பாதது அதற்கு ஒரு முக்கிய காரணமாகும். ஆனால், அவன் மிகுந்த சந்தோஷத்துடன் எல்லோரையும் எதிர்கொள்வான். எல்லோரும் ஏதாவது ஒரு கதையை இழுத்துப் போட்டுக்கொண்டு பேச, அவன் மாறி மாறி அவர்களுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பான்.

அவள் உள் வீட்டில் ஏதோ வேலையாக இருந்தாள். அவனை நீண்ட நேரமாக எங்கும் காணவில்லை என்ற எண்ணம் அவளைக் குடைய, வெளியே வந்து பார்த்தாள். அவன் ஆட்டோவிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான். கை நிறைய சாமான்கள் நிறைந்த ஒரு பை. அடுத்த கையில் தேங்காய் எண்ணெய்க் கேனும், மண்ணெய்க் கேனும். தம்பியின் வீட்டுச் சாரதிதான் அவனை வெளியில் கூட்டிப் போயிருந் தான். வாங்கிய பொருட்களைப் பாதியாகப் பிரித்து அவன் கையில் கொடுத்து, தானும் சில பொருட்களைச் சுமந்து வந்தான். பெரிய மனிதத் தோரணையுடன் மகன் வாகனத்திலிருந்து இறங்குவதைக் கண்ட அவள் பூரித்துப் போனாள். என்ன அழகு..! என்ன உயரம்..! இவனும் எல்லோரையும்போல வாழப் பிறந்தவன்தானே..! இவன் மனதிலும் என்னென்ன எண்ணங்கள் இருக்குமோ..? எத்தனை ஆசைகள் அடங்கிக் கிடக்குமோ..?

கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தவள், பின்னர் சுய நினைவு வந்தவளாக அவனிடம் ஓடிச் சென்றாள்.

“தேங்கண்ணயையும், லாம்பெண்ணயையும் கலந்துராத.... இங்க தா..” வாங்கியெடுத்து உள்ளே செல்லும்போது அங்கு கூடியிருந்த வெளியூர்ப் பெண்ணொருத்தி அருகில் வந்து, “உசைமா..” என்று அவளைக் கூப்பிட்டு “மகனுக்கு இப்ப எத்தன வயசாவுது..?” என்று கேட்டாள்.

“இருவது..”

“என்ன மருந்து குடுக்குறீங்க..?”

“இங்லீஸ் மருந்துதான்..”

“கண்டியில ஒரு இடம் இருக்கே தெரியுமா...? இது மாதிரி புள்ளைகள கொண்டு போய் விடுறதுக்கு...”

இதுபோல பல பேர் பல தகவல்களைச் சொல்வது வழக்கம் என்பதால் அவள் அலுப்புடன் அவளைப் பார்த்தாள்.

“இப்ப பேப்பர்ல ரேடியோவுல எல்லாம் விளம்பரம் போடுறாங் களே... உண்மையத்தான் சொல்றேன்...”

“நா ஒண்ணும் பாக்கல்ல... எனக்குத் தெரியா...”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கட்டாயமா ஒருக்கா போய்ப் பாருங்க... எங்கட புள்ள ஒன்டு... இதுமாதிரிகூட இல்ல.. வீல் சியார்லதான் கூட்டிட்டுப் போனோம்... இப்ப நெறய முன்னேத்தம் இருக்கு... ஆறுமாசமா போறோம்..”

அவள் சிறிது வியப்புடன் கேட்டாள். “அப்புடியா..?”

“நீங்க இவரக் கூட்டிட்டு எவ்ளோ இடத்துக்குப் போயிருக்கீங்க தானே....ஒரு தடவ போய்ப் பாருங்களேன்...” அக்கம் பக்கத்துப் பெண்கள் இவர்கள் கதைப்பதைக் கேட்டு அருகில் வந்து விடுவார்கள் என்ற அவசரத்துடன்...”அந்த எட்ரஸைத் தாங்க..”என்று கேட்டு வாங்கிக் கொண்டாள். ஏனெனில், அவளது உறவுக்காரர்கள் பலரும், “இவனுக்கெங்க சரிவரப் போவுது...? சும்மா செலவழிச்சிட்டுத் திரியிறாங்க....” என்று குசுகுசுப்பது அவளுக்குத் தெரியும்.

***

அவனை வற்புறுத்தி இன்று அழைத்து வந்திருந்தாள். அவன் எதற்கெடுத்தாலும் மறுத்துப் பேசத் தொடங்கியிருந்தான். மகன் பற்றிய எந்த யோசனையையும் அலட்சியப்படுத்தினான். சிலவேளைகளில் அவனைப் பார்க்க அவளுக்குப் பரிதாபமாக இருக்கும். பலவேளைகளில் கோபம் வரும்.

குடும்ப வாழ்க்கையில் பெண் எப்போதும் தீர்க்கமாகவே யோசிக்கிறாள் என்பது பலருக்கும் தெரிந்திருந்தாலும், நாக் கூசாமலும், மனம் கூசாமலும் பெண்ணின்மீது பழியைப் போடுகின்ற இந்த ஆண்கள் எதில் சேர்த்தி என்பது அவளுக்கு விளங்கவில்லை. பெண்ணின் வகிபாகம் பற்றி ஆண்கள் மிக நன்றாக அறிந்திருந்தாலும், அதை உணர்வுபூர்வமாக வெளிக்காட்டப் பின்நிற்பது ஏன்? ஆணாதிக்க சிந்தனையின் ஒரு வடிவமா?

எப்பொழுதும் குடும்பத்தின் முன்னேற்றத்தைப் பற்றியே தான் நினைத்துக் கொண்டிருக்க, இவர் மழுங்கல் தனமாக நடந்து கொள் கிறாரே என்று அவள் பல வேளைகளில் ஆதங்கப்பட்டதுண்டு. தந்தை இப்படி விலகி விலகிச் செல்லும்போது ஒரு பெண்ணால் இருபது வயது இளைஞன் ஒருவனின் பாரத்தைத் தனித்துத் தாங்க முடியுமா என்று மலைப்பாக இருந்தது அவளுக்கு.

எப்படியோ, கண்டியிலிருந்து சில கிலோ மீட்டர்கள் தூரத்தி லிருந்த ‘முருகன் ட்ரஸ்ட்- விஷேட கல்விப் பாடசாலை’க்கு அவனைக் கூட்டி வந்திருந்தாள். மலையுச்சிக்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் அவர்களது ஆட்டோ முன்னேறிக் கொண்டிருந்தது. இருபுறமும் காடுகளைத் தவிர மனித ஊசாட்டம் தெரியவில்லை. மழை பெய்யா விட்டாலும் நிலம் குளிர்ந்து ஈரமாக இருந்தது. அதில் ஆட்டோவைத் தவிர வேறு எதுவும் போகாது என்று கேள்விப் பட்டிருந்ததால் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே வந்திருந்தார்கள். குழந்தைகளுக்கான உணவைச் சமைத்து வைத்து, குழந்தைகளை வீட்டில் விட்டு, உட்புறம் தாழிட்டுக் கொள்ளச் சொல்லிவிட்டு வந்திருந்தாள்.

பாடசாலை என்றதும் அவள் சிறிது விசனப்பட்டு அவனைப் பார்த்தாள். இதற்குமுன் சொன்னவர்கள் அதுபற்றி ஏதும் சொல்லியிருக்க வில்லை. "இந்தக் காட்டுக்குள் ஸ்கூலாவது.. .மண்ணாவது..." அவன் கோபத்தின் உச்சியில் நின்றிருந்தான். தனது முக்கியமான வேலைகளைப் பாழாக்கிவிட்டுத் தன்னை அவள் இங்கே அழைத்து வந்திருப்பது குறித்த தனது கோபம் மேலும் வெளிப்பட்டு விடக்கூடாது என்றும், அதனால் வீண் பிரச்சினைகள் ஏற்பட்டுவிடக் கூடாதென்றும் எண்ணி அவன் மிகுந்த கவனத்துடன் வாயை மூடிக்கொண்டிருந்தான்.

எதிரில் ஒரு ஹோட்டல் இருந்தது. அதைக்கண்டு அவள் மேலும் விசனமுற்றாள். "இந்தக் காட்டுக்குள் ஹோட்டலாவது...?" என்று அவள் மனமும் சுருங்கத் தொடங்கியிருந்தது. அங்கும் ஒரு மனிதக் குஞ்சாவது தென்படவில்லை. எப்போது பூகம்பம் வெடிக்குமோ என்று பயந்தபடி இருந்தாள். எதிரில் வந்த ஆட்டோ ஒன்றைக் கண்டதும் நெஞ்சில் பால் வார்த்தாற் போலிருந்தது. "இங்க ஹொஸ்பிட்டல் ஒன்டு இருக்கா..?" அவள் கேட்க, "இன்னும் கொஞ்சம் மேல போங்க.." என்று அந்தச் சாரதி பதில் சொன்னான். அவன் புறமாக மகிழ்ச்சியுடன் திரும்பினாள். அவன் எரிச்சலுடன் அப்பால் பார்த்துக் கொண்டிருந்தான். இந்த சிகிச்சையாவது நல்ல பலனளித்து நாம் கரையேற முடியுமானால் எவ்வளவு நல்லது என்ற பிரார்த்தனையுடன் அவள் முன்னோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மேலே செல்லச் செல்ல வரிசையாக நடப்பட்ட தேயிலைச் செடிகள் தெரிந்தன. பின்னால் குதிரை லாயம் ஒன்று தெரிந்தது. அதற்குள் உயரமான குதிரை ஒன்று நின்றுகொண்டு, கீழேயிருந்து வரும் வாகனங்களைப் பார்த்துக் கொண்டிருந்தது. "அங்க பாரு.. குதிரை.." என்று மகனுக்குச் சுட்டிக் காட்டினாள் அவள்.

"எங்கம்மா..?"

"அந்தா...அங்க.." அவனது முகத்தைத் தனது சுட்டு விரல்கள் காட்டும் திசையிலேயே திருப்பி சுட்டிக் காட்டினாள். எதிரே வரிசை யாகப் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டு எல்லையிடப்பட்ட அகலமான முற்றம் தெரிந்தது. அங்கே 'முருகன் ட்ரஸ்ட்' என்ற பெயருடன் ட்ரக் வாகனம் ஒன்று நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டதும் அவள் மீண்டும் மனமகிழ்ச்சியுற்றாள். "அதுதான் ஹொஸ்பிட்டல்.." புன்சிரிப்புடன் அவனுக்குக் காட்டினாள்.

வாசலில் ஒரு பெரியவர் நின்றிருந்தார். அவரிடம் அறிமுகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திக் கொண்டு உள்ளே சென்றார்கள்.

நாற்புறமும் கண்ணாடி பதிக்கப்பட்ட வரவேற்பறையில் அந்த நிறுவனத்தின் சாதனைகள் பற்றிய பத்திரிகைக் குறிப்புகள் ஒட்டப்பட்டிருந்தன. புகைப்படங்களும் தொலைபேசி இலக்கமும் இருந்தன. படங்களைக் கூர்ந்து பார்த்தபோது வாசலில் நின்ற பெரியவர் தான் அந்நிறுவனத்தின் தலைவர் என்பது புரிந்தது. படத்தில் வேட்டி சட்டை அணிந்திருந்தவர் இப்போது குட்டைக் காற்சட்டை பனியனுடன் நின்றிருந்தார்.

நெற்றியில் திலகமிட்ட தமிழ்ப் பெண்ணொருத்தி கைகூப்பி வரவேற்றாள். அவள் கைத்தறிச் சேலை அணிந்திருந்தாள். இருவரும் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு அவளிடம் அந்நிறுவனம் பற்றி விசாரித்தார்கள்.

அது வெளிநாட்டுத் தொண்டு நிறுவனம் ஒன்றின் கிளையாம். அங்கு வரும் நோயாளர்களை வெளிநாட்டுக்கு அனுப்பி இலவசமாக சிகிச்சை செய்யும் முறையும் உண்டாம். தலைவரின் மகன் குறையுடன் பிறந்ததால், அவனது நினைவாக அந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட தென்றும், அத்தகைய பிள்ளைகளைப் பெற்றெடுத்த பெற்றோருக்கு ஆறுதலளிக்குமுகமாகவே அது தொடங்கப்பட்டதென்றும் அவள் கூறினாள்.

“ஏன் இத ஸ்கூல்ன்ட்டு சொல்றாங்க..?”

“நீங்க பாக்கலையா..? இங்க ஸ்கூலும் இருக்கு...”

“யார் படிப்பிக்கிறாங்க..?”

“இங்க வாற பேரண்ட்ஸ்ல டீச்சர்ஸும் இருக்காங்க... அவங்க விரும்பி இங்க வேல செய்றாங்க..”

பெரிய நீளமான மண்டபத்தில் கீழே சிகிச்சை மண்டபமும், மேலே நோயாளர் தங்குவதற்கான அறைகளும் காணப்பட்டன. எதிரே நீச்சல் தடாகம் தெரிந்தது. எல்லாக் கட்டடங்களும் புதுமெருகுடன் திகழ்ந்தன.

அங்கு காத்து நின்ற நோயாளர்களைக் கண்டதும் அவள் மிகுந்த அதிர்ச்சியுற்றாள். முதுகு, கைகால்கள் வளைந்தவர்கள் ஒருபுறம்... சக்கர நாற்காலியில் காலம் கழிப்பவர்கள் ஒருபுறம்.... தாயாரின் கைளுக் குள்ளேயே சங்கமமாகிக் கிடந்த குழந்தைகள் இன்னொரு புறம்.. கால்கள் வழக்கமின்றி இழுவி இழுவிச் செல்லும் குழந்தைகளின் வயதைக் கேட்டால் பெற்றோர் பதினெட்டு.. பத்தொன்பது... என்று சொன்னார்கள். அவள் கண்களில் நீர் திரள வாயடைத்து நின்றாள். மெல்ல திரும்பி அவனைப் பார்த்தாள். அவன் எதையுமே பார்க்காதவன் போன்று முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மகன் இவர்கள் எல்லோரையும்விட நூறுமடங்கு சிறந்தவன் என்று அவளது உள்மனது கூவிற்று. அங்கிருந்தவர்களும் பார்வையால் அதை உணர்த்தினார்கள். "இவர்கள் ஏன் இங்கு வந்தார்கள்?" என்று அதிசயத்தடன் பார்த்தார்கள். சிலர் வாய்விட்டு அதைக் கேட்கவும் செய்தார்கள்.

டாக்டர் சாந்தமான முகத்துடன் இருந்தார். எல்லாக் கேஸ்களையும் ஒன்றுபோலவே எடுத்துக் கொள்வாார் போலும் என்று அவளுக்குத் தோன்றிற்று.

"டொக்டர்.. இவருக்கு ஃபிட் இருக்கு... அதைவிடவும் ரொம்ப குழப்படி பண்ணுறார்.."

அவனது மருத்துவ அறிக்கைகளைக் கவனமாகப் பார்வையிட்ட பின்னர் நிமிர்ந்து பார்த்தார். அவள் சொன்னாள்.

"தொடர்ந்து ஃபிட் வரும்போது ரொம்ப வீக்கா போயிருவான்... சில நாட்கள்ல ஃபிட்ஸ் இல்லாம இருக்கும்... அப்ப குழப்பம் தாங்க முடியாம இருக்கும்..."

"ஓமோம்...இவருக்கு ரொம்ப கவனமாத்தான் ட்ரீட்மென்ட் குடுக்க வேணும்."

"இவனுக்கு கொஞ்சங்கூட வெக்க உணர்ச்சி, அது இது ஒண்ணுமே இல்ல டொக்டர்.."

"எல்லாம் இந்த எண்ணெய்க்கு சரியா வரும்... தொடர்ந்து ரெண்டு கெழம சிகிச்சை நடக்கும்... பிறகு ரெண்டுநாள் லீவு... அப்ப இவனக் குளிப்பாட்டலாம்... எண்ணெய் பூசும்போது குளிக்கக் கூடாது..."

அவர் மிக இலகுவாகச் சொல்லி முடித்தார். அவள் மிகுந்த மனப் பாரத்தடன் வெளியே வந்தாள்.

இந்த சிகிச்சையைத் தொடர்வதா? ஏற்கனவே உள்ள நிலையை விட நோய் குறைந்தால் நல்லது.... அதைவிட மோசமானால்...?

அங்கு வந்திருந்த பெற்றோர்கள் எல்லோருமே இந்த சிகிச்சை முறை வெற்றியளிக்கின்றது என்று சொன்னார்கள். பத்து வருடம் நடக்காத குழந்தையொன்று நடந்தது என்றார்கள். தொடர்ந்து இரு வாரங்கள் என்பது மலைப்பாக இருந்தது. இறைவன்மீது பாரத்தைப் போட்டவிட்டுத் தொடங்கலாம் என்று எண்ணிக் கொண்டாள். அவனும் அதுபற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தான். ஆயினும் பிடிகொடுத்துப் பேசினான் இல்லை.

தனது பெண்குழந்தைகளை விட்டுவிட்டு வருவதை எண்ணி மனங்கசிந்தாள் அவள். தான் மட்டுமாவது இங்கு வந்து சிகிச்சையைத் தொடங்கலாம் என்று எண்ணிக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***

விடிகாலையில் எழுந்து சமையலையும், ஏனைய வேலைகளை யும் முடித்துவிட்டு வாடகை ஆட்டோ ஒன்றில் காலை எட்டு மணிக்கெல்லாம் இங்கு வந்துவிடுவாள் அவள். மகனைச் சமாதானப் படுத்தி வாகனத்தில் ஏற்றவதுதான் பெரும் பாடாயிற்று. நடுக்கும் குளிரும், இருள் விலகாப் பொழுதும், பனிவிலகாத் தெருக்களுமாக அவள் ஆட்டோவுக்கள் தூங்கி விழ ஆரம்பிக்கும்போது அவனது தொணதொணப்பு தொடங்கிவிடும்.

"எங்கம்மா போறோம்..?"

"மாமி வூட்டுக்கு.."

மாமிக்கு என்னா..?"

"சொகமில்லையாம்.... பாத்துட்டு வருவோம்.."

திரும்பத் திரும்ப ஒரே கேள்வியைக் கேட்டுக் கொண்டிருப்பான். "எங்கம்மா வூடு..?" என்று அரிப்பான். ஓடும் வாகனத்திலிருந்து இறங்க முயற்சிப்பான்... எல்வாவற்றையும் சமாளித்து அவள் முதல் ஆளாக அங்கு போய் நிற்பாள்.

நெற்றிக்கு மேலே விழுமாறு உயரத்தில் கட்டப்பட்டிருந்த ஒரு மண்பானையிலிருந்து ஒழுகும் எண்ணெயைத் தேய்த்து நெற்றியை மஸாஜ் செய்கிறார்கள். பின்னால் காலுக்கும் மஸாஜ் நடக்கும். இறுதி யில் மூலிகை ஆவி பிடித்து வழியனுப்புவார்கள். ஏறக்குறைய இரண்டு மணித்தியாலங்கள்.

முதல்நாள் அமைதியாக எல்லாவற்றையும் செய்தான். அடுத்த நாட்களில் சிறிது மிரட்சி கொண்டான்.

சில நோயாளர்களுக்கு முழு உடம்புக்கும் மஸாஜ் நடக்கும். பல மணித்தியாலங்களாகும். நிறைய பணியாட்களும், அவ்வாறே கட்டில்களும் இருந்தபடியால் ஒரே நேரத்தில் பல வேலைகள் நடை பெறும். அங்கு பாவிக்கப்படும் சித்தார்த்த எண்ணெய் மிக விலை கூடிய தென்று சொல்லிக் கொண்டார்கள். எண்ணெயை பொன்னைப் போன்று பாதுகாத்தார்கள். ஒருவருக்குரிய எண்ணெய் இன்னொருவருக்குக் கலந்து விடாமல் போத்தலில் இட்டு லேபல் பண்ணி வைத்தார்கள்.

தினமும் அவனது ரோதனை கடினமானதாக இருக்கும் எனினும், அவனை சமாதானப் படுத்தி அழைத்து வந்தவிடுவாள். அவளது நாளின் பெரும் பகுதி இவ்வாறே கழிந்ததாயினும், அவள் மகிழச்சியுடன் ஏற்றுக் கொண்டாள். சிலவேளைகளில் அவளை அடித்துக் கடித்து விடுவான். பல வேளைகளில் முரண்டு பிடிப்பான். மறுகணம் சமாதானமாகியும் விடுவான். பலவேளைகளில இந்தக் கொடுமை தாளாது தனக்கு உடனே ஒரு மரணம் வந்து வாய்த்து விடாதா என்று அவள் ஏங்கி நிற்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வரும்போது அமைதியாக அவள் மடியில் தூங்கி விடுவான். விழித்திருக்கும் பொழுதுகளில் பெரும் பகுதியை அவன் அவளுடனேயே கழித்ததால், அவனைப்பற்றி வருகின்ற முறைப்பாடுகளும் குறைந்து போயிற்று. எனவே, இவ்விடயத்தில் ஏதோ ஒரு நன்மை இருப்பதாக அவளுக்குத் தோன்றிற்று.

இத்தகைய உன்னதமான பணியொன்றை இலவசமாகச் செய்கின்ற அந்த மாமனிதரை அவள் உள்ளம் வாழ்த்திற்று. இந்நிறுவனம் தோன்றுவதற்குக் காரணமான, விழிப்புலனற்ற அந்த முருகன் என்ற இருபது வயதுக் குழந்தையின்மீது கருணை சுரந்தது. பல வேளைகளில் அங்கிருந்து அழுத கண்ணோடுதான் வீடு திரும்புவாள். அந்நிறுவனத்தில் தானும் ஒரு அங்கமாகி விடவேண்டும் என்று அவளுள்ளம் துடித்தது. தனது பெண் குழந்தைகளை எண்ணி மனதைக் கட்டுப் படுத்திக் கொண்டாள். அன்புமயமான அந்நிறுவனத்தில் இருக்கும்போது தான் தனது கணவனுடன் கொண்ட மனஸ்தாபங்கள் எவ்வளவு பொய்யானவை என்று அவளுக்குத் தோன்றும்.

அவன் நாளாவட்டத்தில் அவர்களில் ஒன்றித்துப் போனான். வாசலில் போய் நின்றதுமே எல்லோரையும் போய்ப் பார்த்து தனது வருகையைத் தெரிவித்து விடுவான். பணியாட்களின் முதுகில் தட்டி நமுட்டுச் சிரிப்பு சிரிப்பான். அனைத்துக் குழந்தைகளும் அவனைக் கண்டதும் முகமலர்ந்து நோக்கின. “நானா” என்று அன்போடு அழைத்தன. அவனது சில்மிஷங்களை வேடிக்கைப் பார்த்தன. சிகிச்சை முடிந்ததும் விஷேட கல்வி பயின்றன. அங்கு எல்லாக் குழந்தைகளும் சமமாகவே கணிக்கப்பட்டன; பார்க்கப்பட்டன. மற்றவர்கள் அருகில் நெருங்கவும் பயப்பட்ட அந்தக் குழந்தைகளை, ஏனைய மருத்துவர்கள் பலராலும் கைவிடப்பட்ட அந்தக் குழந்தைகளை அங்குள்ள பணியாட்கள் தொட்டுப் பேசினார்கள்; தட்டிக் கொடுத்து உற்சாகம் அளித்தார்கள். வசதி படைத்த பெற்றோர்கள் ஏதாவது நன்கொடை கொண்டு வந்து கொடுத்தார்கள். அவற்றையெல்லாம் எதிர்பாராது அங்கு அனைவருக்கும் போஷாக்குணவுகள் வழங்கப்பட்டன. பசுப்பால் மலிந்து கிடந்தது. தாயும் சேயும் உண்ணும்படி வற்புறுத்தப்பட்டார்கள்.

எல்லாவகை நோயாளர்களும் அங்கு சிகிச்சை பெற்றார்கள். கை கால் வளைந்த, கூன் முதுகு கொண்ட, நோயாளர்களை எந்தவிதமான வெறுப்பும், அசூயையும் இன்றி பாதங்களைப் பிடித்து அங்குள்ள பணியாட்கள் மஸாஜ் செய்தார்கள்.

எனினும், தாய்மார்களின் உள்ளத்தில் அந்தக் குரல் ஒலித்துக் கொண்டேயிருந்தது. எமக்குப் பின் இந்தக் குழந்தைகளின் எதிர்காலம் என்ன? தாம் இந்தப் பிள்ளைகளுடனேயே காலம் கழித்து விடலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால், தமது மற்ற குழந்தைகளின் நிலை என்ன?

அவள் அங்குமிங்கும் உலாவித் திரிந்து அங்குள்ள சிகிச்சை முறைகளைக் கற்றுக் கொண்டாள். பணியாட்களுடன் சேர்ந்து உணவு சமைப்பதற்கும், அவர்களுடன் இருந்து உண்பதற்கும், நல்ல தின்பண்டங்கள் கிடைத்தால் அவற்றை எடுத்துவந்து எல்லோருக்கும் பகிர்ந்து வழங்கவும் அவள் பழகியிருந்தாள்.

அங்கு சாதிபேதம் எதுவும் இல்லை. எல்லோரும் சிங்களமும், தமிழும் சரளமாகப் பேசினார்கள். மூவினத்தவர்களும் முக்கியமான பணிகளைக் கலந்து பேசிச் செய்தார்கள். ஒரு தேசத்தின் கலப்படமற்ற ஆன்மீகக் குரலையே அவள் அங்கு கேட்டாள். அதில் சங்கமமானாள். மகனின் தொல்லைகளைப் பொறுத்துக்கொண்டு, அவனுக்கும் நல்லது நடக்கும் என்று நம்பத் தொடங்கினாள். எல்லாப் பெற்றோர்களுடனும் சகஜமாகப் பழகினாள்.

## அத்தியாயம் –3

கை கால் வழக்கமற்று சக்கர நாற்காலியில் வந்த ஒரு குழந்தை அனைவர்மீதும் எச்சில் துப்புவதை அவள் கண்டாள். அவனது தாய் பக்கத்தில் நின்று அவனை மென்மையாகக் கடிந்துகொண்டு கைக் குட்டையால் அவனது வாயைத் துடைத்து விடுவதையும் அவதானித் தாள். இவ்வளவு நாளும் அவளைக் கண்டு முகமன் கூறிச் சென்றது மட்டும்தான். இன்று பேசிப் பார்க்கலாம் என்று அருகில் சென்றாள்.

அந்தத் தாய் பருத்த சரீரம் கொண்டிருந்தாலும் அவளைவிட மிக இளமையாகத் தோன்றினாள். குட்டைப் பாவாடை சட்டை அணிந்திருந்தாள். அவள் சிரித்துவிட்டு சிங்களத்தில் ஆரம்பித்தாள்.

“உங்களுக்கு வேறு குழந்தைகள் இருக்கா..?”

அருகில் சென்று விசாரித்தாள்.

“இன்னொன்று இருக்கு..”

“அது எப்படி...? வேலையெல்லாம் ஒழுங்கா செய்யுமா?“

“ஓ... நல்லாப் படிக்கும்.... எல்லா வேலையும் செய்யும்..”

“இவரோட இரக்கமா இருக்குமா..?”

அவ்விளம் தாய் உதட்டைப் பிதுக்கிக்கொண்டு பரிதாபமாக அவளைப் பார்த்தாள்.

“சில நேரங்கள்ல இரக்கமா இருந்தாலும் பலநேரங்கள்ல எரிஞ்சு விழுது. இவர வெறுக்குது.... இவர் நடந்து கொள்ற முறைகள் அதுக்குப் புடிக்கல்ல..”

“ஏன் ? என்ன செய்வாரு,.?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடெல்லாம் சோத்த அள்ளி வீசுவாரு... மகளக் கண்டதுமே எச்சில் துப்புவாரு... அடிப்பாரு..." ஒருகணநேரம் மௌனமாக இருந்து அவ்விடயத்தை சீரணித்துக் கொண்ட பின்னர் கேட்டாள்.

"நீங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணினது எப்படி..? சொந்தத்திலயா..?"

"அப்படி எதுவுமில்ல. நா பாஸ்போட் ஒபீஸ்ல கொழும்புல வேல செஞ்சிட்டிருக்கும்போது இவர சந்திச்சேன்... விரும்பி கல்யாணம் செஞ்சிகொண்டோம்... ரெண்டு பேருக்கும் வேற வேற ஊர்... வேற வேற தொழில்.."

அவள் ஹீனமாக அந்தக் குழந்தையைப் பார்த்தாள். அது மேலும் கீழும் கண்களை உருட்டி விழித்துக் கொண்டிருந்தது.

"அப்ப எப்படி இப்படி ஆச்சு..?"

அதுதான் தெரியல்ல.. இது இப்படி ஆன பிறகு ரெண்டாவது புள்ளயும் கெடச்சி மூணு வயசுவரை ஒண்ணும் பேச முடியாம இருந்திச்சி... நாங்க பயந்து போனோம்... இனி குழந்தை வேணாம் ன்ட்டு முடிவெடுத்தோம்.."

"இப்ப தொழிலுக்குப் போறதில்லயா..?"

"இல்ல... இவர விட்டுட்டு எங்க போறது..?"

அந்தச் சிறுவனின் முன்னங்கையில் சற்று வெளித்தள்ளியபடி இருந்த ஒரு வடுவைக் காட்டி அவள் கேட்டாள். "இதென்ன காயம்..?"

"அதையேன் கேக்குறீங்க...? இவனுடைய தொல்லை தாங்காம என் கையில இருந்த ஒரு கத்தியால அவன்ட கையில கீறிட்டேன்... அதுக்குப் போய் இவன் பண்ணின ரகளை இருக்கே... அப்பப்பா...! அதைவிட வாறவங்க, போறவங்க எல்லாம் என்னய கேள்வி கேட்டவிதம் இருக்கே....! ஐயோ.... அத நெனச்சா..."

"பெரிய காயமா வந்துச்சா..?"

"கொஞ்சம் பெருசுதான்.. ஆறுறதுக்கு பதினஞ்சி நாள்கிட்ட ஆச்சி... அம்மான்டு ஒருத்தி இருந்தா அவ பூமாதேவியா இருக்கணும்ன்டு தான் எல்லாரும் நெனக்கிறாங்க... அம்மாக்களுக்கும் ஆசாபாசம் இருக்கு.... கோபதாபம் இருக்குன்ட்றத மறந்துர்றாங்க.."

"உண்மைதான்...புள்ளைகள பாக்குறது மட்டுமா தாய் ஒருத்திட கடமை...? அதுகள அடிச்சி வளக்குறதும்தான்..."

"இந்த அக்கம் பக்கத்து மனுஷராலத்தான் ஒண்ணும் செய்ய ஏலாம இருக்கு.... தாய் எந்த நாளும் அடிவாங்கினாலும் அதப்பாத்து பேசாம இருப்பாங்க... ஐயோ பாவம்ன்டு பின்னால பேசுவாங்க.... ஆனா, பிள்ளைக்கு நாங்க கை வெச்சிட்டா, எங்கள துரத்தித் துரத்தி வருவாங்க... எல்லாரும் விமர்சனம் வேற சொல்லுவாங்க.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தன்னுள் அரித்துக் கொண்டிருக்கும் அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

“இந்தக் குழந்தைகள்ட எதிர்காலம்..?”

“ஐயோ.. என்னத்த சொல்றது....? நாங்க சாகுறதுக்குக்கூட நிம்மதி இல்லாமப் போச்சி.... இது கெடைக்க முதல்ல நாங்க நல்ல செல்வாக்கோட இருந்தோம். வீடு, வாசல், தோட்டம், வாகனம்.. எல்லாம் இருந்திச்சி.... இதுக்கு செலவழிச்சே எல்லாம் போயிருச்சி..”

“உங்க மார்க்கத்துல இதப்பத்தி என்ன சொல்லியிருக்கு?”

“எனக்குத் தெரியல்ல.... இங்க வந்து இந்தக் காட்சியெல்லாம் பாக்குறதுக்கு நாங்க ஏதோ பாவம் செஞ்சிருக்கணும்....”

“இவர் டொய்லட் போறதெல்லாம் எப்படி..?”

எப்பவும் பம்ப்ர்ஸ் போட்டுதான் வைக்கணும்... பெரிய ஆள்தானே...! இப்ப பதினஞ்சி வயசாகுது... அதுவும் தாக்குப் பிடிக்கிறதில்ல..”

அவள் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. அதைத் துடைப்ப தற்கும் மனமின்றி எங்கோ வெறித்துப் பார்த்தவண்ணமிருந்தாள்.

நினைத்துப் பார்க்கும்போது மகன் எப்படிப் போய்விட்டாலும், மற்ற இரண்டு குழந்தைகளும் நல்லபடியாகப் பிறந்தது தான் செய்த பாக்கியம் என்று அவளுக்குப் பட்டது. மனது இறைவனுக்கு நன்றி சொன்னது.

“அரசாங்கம் இதமாதிரி ஒரு நிறுவனத்த நடத்தினா நல்லா இருக்கும்... இல்லையா..? இதமாதிரி எத்தனையோ பிள்ளைகளுக்கு வழிகாட்டலாம் இல்லையா..?”

அவள் சிந்தனையுடன் கேட்டாள்.

அப்பெண் சட்டெனவிடை சொன்னாள்.

“அதெப்படி..? வாயும் கையும், கண்ணும் உள்ளவனுக்குத்தானே அரசாங்கம்..? இவங்களால அரசாங்கத்தக்கு என்ன பிரயோஜனம்..?”

“யாரும் கவனிக்காமப் போனா இந்தப் புள்ளைகள மேல கொண்டு வாறது எப்படி? எல்லாருமே ஒதுக்கினா இவங்க எங்க போவாங்க..? இவங்களுக்கு வழிகாட்ட வேண்டியது முழு சமுதாயத்திட யும் பொறுப்பு... ஆனா, அரசாங்கமும் இவங்கள கண்டு கொள்றதா இல்ல..”

“அப்படி சொல்லாம மாத்தி சொல்லலாம்... இந்த மாதிரி ஒரு வேலயும் அரசாங்கத்துல மனப் பூர்வமா நடக்குறது இல்லன்டு சொல்ல லாம்... இவங்களமாதிரி குறைஞ்ச சம்பளத்துல.... தியாகத்தோட வேல செய்யக்கூடிய நல்ல ஆக்கள் அங்கயும் அமையணும். ஆனா, பெற்றோர் கூட தங்கள் சொந்த பிள்ளைகளுக்குள்ள பாரபட்சம் காட்டுறாங்களே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்கு என்ன செய்றது,.?"

"ஒரு புள்ள இப்புடி ஆறதுக்கு முன்னாலயே அதக் கண்டு பிடிச்சி அதுட விபரீதங்கள குறைக்க முடியமானா எவ்வளவு நல்லது....!"

"விபரீதங்கள் குறையலாம்.... ஆனா, வர இருக்கிறது வாசல்ல நிக்காது. வந்துதான் தீரும்..."

அவள் மீண்டும் சிந்தனை தோய அவ்விளம் பெண்ணை வெறித்துப் பார்த்தாள். அவள் கேட்டாள் "கண்ணத் திறந்துகிட்டே குருடா வாழ்ற இன்னொரு பக்கத்தப் பாத்தீங்களா..?"

"எதச் சொல்றீங்க..?"

"அதுதான். எந்த ஊனமும் இல்லாம நல்லாப் பொறந்த பிள்ளைகள் இருக்கே.. அதுகளத்தான் சொல்றேன்..... அவங்களுக்கு தங்கள் வாழ்க்கையின் பெறுமதி தெரியுதே இல்லையே.. தெரிஞ்சா இப்படி காலத்த வீணாக்குவாங்களா..? மத்த எல்லாக் குழந்தைகளயும் தான் பாருங்களேன்....அதுகள் தங்களுக்கு முன்னால இப்படி ஒரு உலகம் இருக்கிறத பாக்கறதே இல்ல.. தாங்கள் எப்படி வாழணும்ண்டு யோசிக்கிறதும் இல்ல.."

"சில விஷயங்கள தலவிதின்டு ஏத்துக்கொள்ள முடியாம இருக்கு... இல்லையா?"

ஆமாம். எல்லார்ட வாழ்க்கையிலயும் ஏதோ ஒரு சோகம் இருக்கத்தான் செய்யுது.... நம்மால தீர்க்க முடியாத பிரச்சினைகயோட சேர்த்தே இறைவன் எங்கள அனுப்பியிருக்காரு.."

"திசை கெட்டு வாழுற சாதாரண குழந்தைகளுக்கும் இத மாதிரி ஒரு வழிகாட்டல் இருந்தா எவ்வளவு நல்லது?"

"எல்லாம் சாதாரண ஜனங்கள் கிட்ட இருந்து முதல்ல தொடங் கணும்... இங்க ஒரு முருகன் பொறந்து எல்லாருக்கும் வழிகாட்டின மாதரி..."

"எவ்வளவு பெரீய கோடீஸ்வரரர்....! அவருக்குப் பொறந்த புள்ளயப் பாத்தா..."

"எல்லாம் விதிதான்... நம்ம வீட்டுச் சோத்த தின்டுட்டு நல்ல படியா தூங்கி எழும்புறதுக்குக்கூட வழியில்லாம... நிம்மதியில்லாம தவிக்கிறோம் நாங்க..."

இருவரும் ஆரம்பித்த இடத்திலேயே கதை முடிந்ததை உணர்ந்து அதுபற்றி சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தனர். அவர்களைக் கடந்து ஒரு பேரிளம்பெண் போனாள், கையில் மகனைப் பிடித்துக் கொண்டு. அவன் சைகைமொழியால் தாயுடன் பேசுவதைக் கண்டு ஊமையாக இருக்கலாம் என்று நினைத்தாள் அவள். அவனுக்கும் அவள் மகனுடைய வயதுதான் இருக்கும். அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையோ சுட்டிக் காட்டினாள்.

"அங்க பாருங்க.."

"எங்க....? என்னத்த...?"

"அந்த உம்மாட காலப் பாருங்க.."

அந்த அன்னையின் பாதங்கள் பக்கவாட்டில் மடிந்து, தரைக்கு நிலைக்குத்தாகக் காணப்பட்டன. அவள் அந்தக் குறைபாட்டை சேலை யால் மறைத்துக் கொண்டு, அனாயாசமாக நடந்து கழிப்பறைக்குள் மகனைக் கூட்டிச் சென்றாள். இருவரும் அவளையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பக்கத்தில் வந்த நின்று தனது தோளில் தட்டிய அந்தத் தேஜஸான முகம் உடைய, பூங்கொடி போன்ற பெண்ணைக் கூர்ந்து பார்த்தாள் அவள். அந்தப் பெண் இங்கே ஏதோ பொறுப்பான பதவியில் இருக்கிறாள் என்பதும், அவளுக்கும் சக்கர நாற்காலியில் ஒரு வாலிப வயது மகன் இருக்கிறான் என்பதும் அவள் அறிந்த விடயங்கள். வைத்தியர் கேட்பதாகக் கூறி அவளது கையில் இருந்த கொப்பியை வாங்கிச் சென்றாள் அப்பெண். அவள் திரும்பி வரும்போது அவர்கள் இருவருடைய மகன்மாரும் விளையாடத் தொடங்கியிருந்தார்கள். தனது மகன் அந்தப் பையனை வைத்து சக்கர நாற்காலியில் தள்ளித் திரிவதை அவள் கண்டாள்.

"என்ன கலீல்...? இங்க எப்பிடி வந்தீங்க..?"

அவன் "ஆ...ஆ..." என்று அலறியபடி தனது வயிறைத் தொட்டுக் காட்டினான்.

"ஓ...பசிக்குதா...?"

அந்தப் பெண் தனது மகனைது வாகனத்தைத் தள்ளிக்கொண்டு அப்பால் சென்றாள்.

***

அவள் இங்கே வந்து ஒரு வருடம் ஆகின்றது. அன்றொருநாள் அரசாங்க மருத்துவனையில் அந்தப் பெண் வைத்தியர் தந்த விசிட்டிங் கார்டை எடுத்துக்கொண்டு, தனது பெற்றோருடன் இங்கே வந்திருந் தாள். அந்த இடமும் சூழலும் உடனே பிடித்துப்போகவே, தான் அங்கு தங்கி நிற்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதை உணர்ந்து கொண்டாள். பெற்றோரை அனுப்பிவிட்டு, அங்கிருந்த பெண் உத்தியோகத்தர்களிடமும், ஏராளமான தாய்மார்களிடமும் பேசிப் பார்த்ததில் அங்கு எந்தவிதமான பாதுகாப்புப் பிரச்சினையும் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டாள். தனக்கென ஓர் அறையைத் தேர்ந்தெடுத்து அதில் தனது பொருட்களைக் கொண்டு வைத்தாள்.

அவனுக்கு தலை, பாதம், உடம்பு என்ற பல வகையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஸாஜ்கள் தினமும் வழங்கப்பட்டன. பல மணித்தியாலங்கள் காத்திருந்து அவற்றை முடித்தபிறகு அவளுக்கு வேறு வேலைகள் இல்லை. வேலை முடிந்ததும் அங்கு சுற்றிப் பார்த்து அங்கு நடைபெறும் பணிகளை அவதானித்துக் கொண்டிருப்பாள்.

முதல் இருவாரங்களில் அவனது உடம்பிலிருந்த இறுக்கம் சற்றுத் தளர்ந்தது. கால்கள் சற்று கூச்சம் தெளிந்தன. அதன் முடிவில் அவனைக் குளிக்க வைப்பதற்காக பின்னால் இருந்த நீச்சல் தடாகத்திற்கு அழைத்துச் சென்றாள். அவனை அங்கே உட்காரவைத்து நீராட்டிய போது அவன் மிகவும் மகிழ்ச்சி கொண்டான். அவனது மகிழ்ச்சி அவளது உள்ளத்தையும் நிரப்பிக் கொண்டது. எப்போதும் மலர்ந்திருக்கும் ஒரு பூவைப்போல சதாவும் மலர்ந்திருக்கும் அவனது முகத்தில் இப்போது நிஜமாகவே மகிழ்ச்சியின் புன்னகை பூத்தது. அங்கு தங்கியிருந்த குழந்தைகள் அவனோடு மிக அந்நியோன்னியமாகப் பழகின. வேளா வேளைக்கு உணவும், முறையான சிகிச்சைகளும் வழங்கப்பட்டன. இவ்வளவு காலமும் தனியே வாழ்ந்து, சதாவும் மன நெருக்குதல்களுக்கு உள்ளான தனது மகன் மகிழ்ச்சியால் விம்மி நிற்பதைக் கண்டு அவளும் மனமகிழ்ச்சி கொண்டாள். அவளது லட்சியமெல்லாம் தனது மரணத்திற்கு முன்னர் தனது மகன் கால்களை ஊன்றித் தனியாக எழுந்திருக்க வேண்டும் என்பதே. அது நிறைவேறும் என்றும், அத்துடன் தனது துயரங்களெல்லாம் தீர்ந்து விடும் என்றும் அவள் நம்பினாள்.

சில வாரங்களின் பின்பு ஒருநாள் அவள் பாத மஸாஜ் செய்வதற்கான ஆள் ஒருவர் குறையவே அந்தப் பணியில் உதவியாளராக நின்றாள். அப்போது அவளைக் குறிப்பாகக் கண்ட அந்நிறுவனத்தின் தலைவர் அவளைப் பற்றி விசாரித்து அவள்மீது கருணைகொண்டு அவளை அங்கே ஒரு சிற்றூழியராகச் சேர்த்துக் கொண்டார். மாதம் ஐயாயிரம் ரூபா சம்பளமும் கொடுத்தார். சாப்பாடும் தந்து, மகனுக்குச் சிகிச்சையும் தந்து, தனக்கு வாழ்வாதாரமும் கிடைக்கிறதென்றால்...! அவளுக்குத் தலைக்கடித்து தண்ணீர் ஊற்றப் போதுமாக இருந்தது. தான் இவ்வளவு காலமும் யாருக்காகவோ மாடு மாதிரி உழைத்ததெல்லாம் எவ்வளவு வீண் என்று அவள் எண்ணிக் கொண்டாள்.

இப்போது அவளுடைய உள்ளத்தில் புதிய நம்பிக்கை ஊற்றெடுத்துக் கொண்டிருந்தது. தான் யாருக்கும் சுமையாக இல்லை என்ற எண்ணம் அவளுள் புதிய மகிழ்ச்சியை ஏற்படுத்திற்று. தனது மகன் என்றாவது ஒருநாள் தனது சொந்தக் காலில் எழுந்து நிற்பதைக் காண வேண்டும் என்ற இலட்சியம் அவளைப் புதிய முயற்சியாளியாக்கி யிருந்தது.

நிலத்தில் பட்டறியாததால் பஞ்சு போன்றிருந்த அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்கள் இப்போது சிறிது உறுதியடைந்து வந்தன. அந்த ஃபுட் மஸாஜை உளப்பூர்வமான அன்புடனும், தொழில் பக்தியுடனும், வேண்டுதலுடனும் செய்கின்ற சிங்களப் பெண்களைப் பார்த்து அவள் உள்ளங்கசிந்து நின்றாள். அவர்களில் பலர் தொண்டு செய்வதற்கென்றே வந்தவர்கள். சிலர் ஏதோ ஒரு உடற்குறைபாட்டுடன் வந்து தொழில் பெற்றவர்கள். வேறு சிலர் பிள்ளைகளைக் கூட்டி வந்து அவர்களது சிகிச்சைக்காகத் தங்கி நின்றவர்கள்.

அந்தப் பாதபூஜையையும், பின்னர் நடக்கின்ற எல்லா வேலைகளையும் பார்த்துப் பார்த்து அவளுக்கு அத்துபடியாகியிருந்தது. பாதங்கள் சற்று உறுதியானதும் அவனுக்குப் பொய்க்கால் போட்டு நடைப் பயிற்சி செய்யவேண்டும் என்று கூறப்பட்டது. அதற்கு முன்னர் அவனது எடையைக் குறைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

அவள் தனது சொந்த வாழ்க்கையின் துயரங்களைச் சிறிது சிறிதாக மறக்க முயன்று அதில் வெற்றியும் பெற்றிருந்தாள். தனது இறுதிக் காலம்வரை இங்கேயே இருந்துவிடவேண்டும் என்ற வைராக்கியமும் இப்போது வளர்ந்து வந்தது. அடிக்கடி தனது பெற்றோருடன் தொடர்பு கொள்வாள். அவர்கள் வந்து பார்த்துவிட்டுச் செல்வார்கள். அனைவருக்கும் ஏதாவது உணவுப் பண்டங்கள் கொண்டு வந்து தந்தவிட்டுப் போவார்கள்.

சாதாரண பொழுது போக்குபோல அங்கு சமையல் நடைபெற்றது. இனிய மெல்லிசையாக கரண்டிகள் உராயும் சத்தம் கேட்கும். அவள் அங்கு சென்று உதவிகள் செய்து கொடுப்பாள். சுத்தமாகக் கறந்த பாலைக் காய்ச்சி, வந்திருக்கும் அனைவருக்கும் கொடுப்பாள். பலரும் இயங்குவதால் எல்லாம் மின்னல் பொழுதில் முடிந்து இடமும் சுத்தமாகி விடும்.

அங்கு மரக்கறியும், மீனும் கொண்டுவரும் வாடிக்கையாளர்களோடு சிறிது பேசி பொழுதைக் கழிப்பாள். எண்ணெய் கொண்டு வருபவர்கள், வாகன சாரதிகள் என்று ஒரு பட்டாளமே அங்கு வந்து போகும். ஒரு பெரிய பண்ணைபோன்று அது இயங்குவதைக் காண களிப்பு மேலிடும். விஷேட தினங்களில் கோழிக் கறியுடன் உணவு பறிமாறப்படும். சிலபோதுகளில் சில தாய்மார் அவளைத் தமது வீட்டுக்கு அழைப்பார்கள். விடுமுறை நாட்களில் நிர்வாகத்தின் அனுமதியுடன் மகனை அழைத்துச் செல்வாள். அப்போது மட்டும் வீட்டில் சாப்பிடுவதைப்போல இறைச்சிக் கறி சாப்பிடக் கிடைக்கும்.

எப்பொழுதும் கலகலப்பாகவும், சிரித்த முகத்துடனும் பணியாற்றுகின்ற சேவகர்கள் அங்கு வரப்பிரசாதமாக விளங்கினார்கள். வடபகுதி யுத்தம் காரணமாக ஊனமுற்ற பெண்களும்கூட இங்கு வந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது எதிர்காலக் குடும்பம் இதுவென்றே கருதி தமது குறைபாடுகளை மறந்து வாழ்ந்தார்கள்.

எல்லோரும் அங்கு வருகின்ற குழந்தைகளைத் தமது குழந்தைகள் போன்றே பாவித்தார்கள். தம்மை முகமன் கூறி வரவேற்று, தொட்டுப் பேசி, தம்மையும் மனிதர்களாக மதிக்கும்போது குழந்தைகள் மிக மகிழ்ச்சியடைந்தன. தம் முன்னால் புதிய கதவுகள் திறந்து, புதிய வெளிச்சம் வருவதை அவை ஆச்சரியத்துடன் பார்த்தன. சிலவேளை களில் டீவி நிகழ்ச்சியென்றும், ரேடியோ பேட்டி என்றும் பெரும் அமளி நடக்கும். அப்போது எல்லோரும் தம்மை அழகாக அலங்கரித்துக் கொண்டு வந்து ஃபோட்டோக்களுக்கு போஸ் கொடுப்பார்கள்.

சிலபொழுதுகளில் சில குழந்தைகள் பெருங் கலகம் செய்யும். அழுது அரற்றி வெளியே ஓடும். அவற்றைத் துரத்திச் சென்று பிடித்து வந்து சிகிச்சை அளிப்பார்கள். வாலிப வயதுக் குழந்தைகள் அங்கு பணிபுரியும் பெண்களுடன் விஷமம் செய்யவும் முயலும். அப்போது அதை அடக்குவதற்கு ஆண் பணியாளர்கள் வருவார்கள்.

அவள் படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று சிரேஷ்ட கண் காணிப்பாளராகக் கடமையாற்றுகிறாள். சிலவேளைகளில் அடி மட்டத்து வேலைகளையும் செய்ய வேண்டி ஏற்படும்போது அதையும் முகஞ்சுளிக்காமல் செய்கிறாள். அவளது ஊதியம் இப்போது பதினைந் தாயிரம் ரூபா.

மருத்துவமனை நிறுவனரின் வீடு அங்கிருந்த சிறிது தூரத்தில் இருக்கிறது. அவரது பெரிய பிள்ளைகள் இரண்டும் அமெரிக்காவில் டாக்டர்களாகப் பணியாற்றுகிறார்களாம். அவர்களும் இயன்றளவு இந்தப் பணிக்கு உதவுகிறார்கள். இங்கே வழங்கும் சிகிச்சைகளை அவர்களும் ஒன்லைனில் பார்க்கிறார்களாம்.

தலைவர் யுத்தகாலத்தில் இடம்பெயர்ந்து பிரிட்டனில் வசித்தபோது அங்கு கோடிக்கணக்கில் சம்பாதித்தாராம். அப்போது தான் அவரது மூன்றாவது குழந்தை பிறந்தானாம். ஆரம்பத்தில் மிகவும் தளர்ந்துபோன அவர், பிறகு மனம் தேறி அவரது சகோதரி ஒருவரின் துணையோடு இந்த அறக்கட்டளையை நிறுவினாராம். சகோதரி ஒரு சித்த வைத்தியர் என்பதால், அவர் அம்முறையின் வெற்றிகள் பற்றி நன்கு எடுத்துச் சொன்னபோது தலைவர் விரும்பி விட்டாராம். இப்படித்தான் அது ஆரம்பிக்கப்பட்டது. எந்தக் குழந்தையும் தொடர்ந்து ஒரு வருடகாலம் சிகிச்சை பெறும்போது நிச்சயமாக வெற்றி கிடைக்கும் என்பது அந்நிறுவனத்தின் கோட்பாடு. விரைவில் அதன் கிளை ஒன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இத்தனைக்கும் காரண மான அந்த முருகன் ஒரு சக்கர நாற்காலிக் குழந்தை. தலையை உயர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர்த்திப் பார்ப்பதுகூட கஷ்டம் என்பதுபோல தலையைத் தொங்க விட்ட வண்ணமேயிருப்பான். வாலிப வயது. விழிப்புலனும் இல்லாதவன். அவனது புகைப்படம் அந்த மருத்துவமனையைச் சூழவும் அலங்கரித்துக் கொண்டிருந்தது. சிலநாட்களில் பிரிட்டனிலும், சில நாட்களில் இலங்கையிலும் அவனது காலம் கழியும்.

அன்று சர்வதேச விஷேட தேவையுடையோர் தினம். சில நாட்களாகவே அங்கு சர்வமதப் பிரார்த்தனைகள் இடம்பெற்று வருகின்றன. மண்டபம் அலங்கரிக்கப்பட்டு பலூான்களும், ரிப்பன்களும் தொங்கவிடப்பட்டுள்ளன. வாசலில் குத்துவிளக்கு ஏற்றப்பட்டுள்ளது. முற்றத்தில் மாவிலைத் தோரணங்கள் ஆடுகின்றன. காலையில் பிரித் ஓதப்பட்டு இப்போதுதான் கூட்டம் கலைந்து சென்றிருந்தது. எதிர்பாராது பெய்த மழையால் முற்றம் சிறிது சேதமாகி இருந்தது.

நமது சோகம் சர்வதேச மயமானது என்பதுபோல எல்லாப் பிள்ளைகளும் அத்தினத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடிய அழகை மனதுக்குள் மீட்டியவளாக அவள் மண்டபத்தைக் கூட்டித் துப்புரவு செய்து கொண்டிருந்தாள். அருகில் டாக்டர் திலீபன் வந்து நிற்பதைக் கண்டு நிமிர்ந்து பார்த்தாள். அவரது வேட்டி ஓரம் தரையில் பட்டு அழுக்காகியிருந்தது. மழைநாள் என்பதற்காக அவர் வேட்டியை மறப்ப தில்லை. அவர் கைபட்டால் நோய் குணமாகிவிடும் என்று அங்குள்ளவர்கள் பேசிக்கொள்வதுண்டு.

"நேற்று வந்த அந்தப் பொடியன்..."அவர் தடுமாறினார். அவருக்கு ஞாபக மறதி அதிகம். வயது நாற்பத்தைந்துக்குள் இருக்கும். அவர் நெற்றியைத் தேய்த்து விட்டுக் கொண்டார் என்றால் அவருக்கு மறந்துவிட்டது எனறு அர்த்தம்.

"அந்த எக்ஸிடன்ட் கேஸா..? அவன் பேரு சாலிங்க.."

"யெஸ் சாலிங்க... அவனுக்கு என்ன ட்ரீட்மென்ட எழுதி யிருக்கேன்..?"

"இருங்க டொக்டர். கொப்பிய எடுத்துட்டு வாறேன்...."

வைத்தியர் அறைக்கு ஓடோடிச் சென்றாள். அவர் பக்கத்தில் சக்கர நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்த அவளது மகனின் முகத்தைக் கைகளால் தட்டிப் பேசினார்.

"என்ன கலீல்....? எப்படி....?"

அவன் தனது உடம்பை வளைத்து நெளித்து வெட்கத்துடன் சிரித்தான். அவள் கொப்பியுடன் வந்து நின்றாள்.

"சீரோதார அரை மணித்தியாலம், கடிவஸ்து அரை மணித்தியாலம்.." அவள் சொன்னாள்.

"யெஸ். டெல் ஹிம் டு கம் ஏர்லி டுமோரோ. ஹீ நீட்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்ரீட்மென்ட் அன்டர் மை ஒப்சவேஷன்.."

"ஓகே டொக்டர்.."

மறுநாள் மதியம் பன்னிரண்டு மணியுடன் அவர் கடமை முடிந்து ஊருக்குச் செல்கிறார். நோயாளர்களுக்கான சிகிச்சைக் குறிப்புகளை எழுதிக் கொடுத்த பின்னர் அவர் மீண்டும் இரண்டு வாரங்களுக்குப் பிறகு வந்து அவர்களைப் பார்வையிடுவார்.

மாவனல்லையில் இருந்து வரும் சாலிங்க ஒரு கம்ப்யூட்டர் என்ஜினியர். விபத்தொன்றில் இடுப்பு பலமாக அடிபட்டதால் நடக்க முடியாமல் இருக்கிறான். தலையிலும் அடிபட்டிருப்பதால் அடிக்கடி ஞாபக மறதி ஏற்படுவதாகவும் முறையிடுகிறான். கடந்த முறை வந்த போது அவனைத் தூக்கிக்கொண்டுதான் வந்தார்கள். வயது இருபத் தெட்டு. அழகான இளைஞன்.

அவள் அவனது தொலைபேசி இலக்கத்தைச் சுழற்றி அவனுடன் தொடர்பு கொண்டு விஷயத்தைச் சொன்னாள்.

மறுநாள் நேரத்துடன் அவன் வந்திருந்தான். டாக்டர் அவனை நன்கு பரிசோதித்து அவனது காலையும், இடுப்பையும் புகைப்படம் எடுத்துக் கொண்டார். அவள் அவனை சீரோ போடுவதற்காக அழைத்துச் சென்றாள்.

நோயாளியுடன் கதைத்துக்கொண்டே அரை மணித்தி யாலத்தைக் கழிக்க வேண்டும் என்பது அங்குள்ள பொது விதி. குழந்தைகள் கத்துவார்கள்; எழுந்தோடுவார்கள்; குழப்பம் செய்வார்கள்.

"எப்படி இருக்கு...?"

"நல்ல கூ...லா இருக்கு.... கொஞ்சம் எண்ணெய்ய சூடாக்கினா நல்லம்... தலை ஐஸ்போல ஆகுது.."

இப்படி ஒவ்வொரு நோயாளியும் வாய்விட்டுக் கதைக்குமள விற்கு முன்னேற முடியமானால் எவ்வளவு நல்லது என்று அவள் எண்ணிக்கொண்டாள்.

பக்கத்துக் கட்டிலில் மோகனா ஒரு நோயாளிக்கு கடிவஸ்து போட்டுக்கொண்டிருந்தாள். உழுந்து மாவைத் தண்ணீர் விட்டுப் பிசைந்து உருண்டையாக்கி பாதிக்கப்பட்ட இடத்தைச் சுற்றி வைத்து அதற்குள் எண்ணெயை விட்டு அது ஆடாமல் அசையாமல் அரைமணித்தியாலம் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போது திலீபன் சாலிங்கவிடம் வந்தார்.

மோகனாவிடமிருந்து அலறல் கேட்டது. அந்த வாலிபன் மோகனாவின் கையைச் சட்டெனா இழுத்து முத்தமிட, அவள் பயந்து அலறியதே அந்தச் சத்தம். நோயாளி அசைந்ததால் எண்ணெய் கீழே கொட்டிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சாலிங்கவை திலீபனிடம் விட்டுவிட்டு மோகனாவிடம் விரைந்தாள்.

***

கிழவிக்குக் கொஞ்ச காலமாகவே உடம்பு ரொம்ப அசதியாகி விட்டது. மகன் இவ்வளவு காலமாக எங்கு போனான், எங்கிருக்கிறான் என்ற கவலை அவளை மிகவும் வாட்டிக் கொண்டிருந்தது.

ஒரு மாதத்திற்கு முன்பு அவனிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. இன்று மறுபடியும் வந்திருக்கிறது. இன்று மாலை வீட்டுக்கு வரப் போகிறானாம். முக்கிய செய்தி ஒன்று சொல்ல வேண்டுமாம்.

மருமகள் எங்கு போனாள், என்ன ஆனாள், பேரனுக்கு என்ன நடந்தது என்ற கவலையுடன், நீண்ட காலமாகத் தொடர்புகள் அற்றிருந்த தனது மகன் முதல் தடவையாகப் பேசியபோது அவர்களைப் பற்றி ஒரு வார்த்தையேனும் கேட்காதது அவளுக்குப் பெரும் விசனமளித்தது.

அவளது பெண்மக்கள் இப்போது மணமுடித்து, சம்சாரம் செய்து இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தாய்மார்களாக விளங்கு கிறார்கள். ஆனால், யாருக்கும் ஆண் வாரிசு இதுவரை கிடைக்கவில்லை. கிடைத்த பேரனின் நிலை ஒருபுறம் வாட்ட, அவன் எங்கு போனான் என்ற கவலை அதைவிட அவளை வாட்டிக்கொண்டிருந்தது. அந்தப் பொன்னிற முகத்தில் பொங்கி வழிகின்ற சிரிப்பைப் பார்த்தாலே போதுமே என்று அவள் முன்பு பல தடவைகள் எண்ணிக் கொண்டிருந் திருக்கிறாள். அவன் சக்கர நாற்காலியில் முடங்கிக் கிடந்தாலும் உலகத்தை ஆளப் பிறந்தவன் எனுமாப்போல ஒரு இறுமாப்பும், அன்பும் அவன்மீது அவள் கொண்டிருந்தாள். அவனை எங்கோ ஒரு மருத்துவ மனையில் சேர்ப்பித்து மருமகள் சிகிச்சை அளித்து வருகிறாள் என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். அவன் எங்காவது ஓரிடத்தில் மனநிம்மதி யுடன் வாழ்வது குறித்து அவளுக்கும் சந்தோஷமே. மேலும், அவள் ஏதோ தொழில் செய்கிறாள் என்றும் கடைசியாகச் சந்தித்தபோது அறிந்து கொண்டிருந்தாள். அவனைப்பற்றி சம்பந்தக் குடிகளிடம் விசாரித்துப் பார்த்துப் போய்வரவேண்டும் என்று அவள் எண்ணிக் கொண்டாள். தனது அந்திம காலத்தில் ஒரு தடவையாவது அந்த முகத்தைப் பார்த்துவிடவேண்டும் என்று அவள் உள்ளம் துடித்தது.

அந்தக் குடிசையைத் துப்புரவாக்கி வைத்துக்கொண்டு ஒரு மூலையில் முடங்கிக் கிடப்பது அவள் வழக்கம். நினைத்தால் மட்டும் சமையல் செய்வாள். இல்லாவிட்டால் மகள்மார் யாருக்காவது ஒரு ஃபோன் செய்து சாப்பாடு அனுப்பும்படி கூறுவாள். உடனே சாப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிடும். அவளது கச்சையணியாத மார்புச் சட்டைக்குள் எப்போதும் ஒரு கைத்தொலைபேசி துருத்திக் கொண்டிருக்கும். வெளிநாடு சென்று வந்த மகள் அவளுக்குக் கொடுத்த பரிசு அது. தனியாக வாழ்ந்து கொண்டிருக்கும் தாய்க்கு ஏதும் பிரச்சினை ஏற்பட்டுவிட்டால் உடனே அறிவிக்கும்படி கூறி அதைக் கொடுத்திருந்தாள்.

அந்தத் தொலைபேசி இலக்கத்திற்கு தனது மூத்த மகன் முதல்தடவையாக அழைப்பு எடுத்தபோது அவள் பெரிதும் ஆச்சரிய முற்றாள். ஏறக்குறைய இருபத்தைந்து வருடங்களாகத் தொடர்பு அற்றுப் போயிருந்தது. இந்த இலக்கம் எப்படிக் கிடைத்தது என்று கேட்டாள். அவன் சிலநாட்களுக்கு முன்னம் டவுனுக்கு வந்திருந்தானாம். அப்போது தங்கையின் கணவரைக் கண்டு பேசினானாம். அவர் இந்த இலக்கத்தைக் கொடுத்தாராம்.

அவன் பேசியதுமே கிழவி அழுதுவிட்டாள். "ஏன் இப்புடி செஞ்சிட்டுப் போன...?" என்று கதறி அழுதாள். அவன் அலட்டிக் கொள்ள வில்லை. தொலைதூர நகரம் ஒன்றில் கடை போட்டிருக்கிறா னாம். பெரிய அதிஷ்டம் வாய்த்திருக்கிறதாம். இப்போது நேரில் வந்து சொல்லப் போகிறானாம்.

கிழவி நேரகாலத்தோடு சமையல் செய்து மூடி வைத்திருந்தாள். மாலையில் அவன் வந்து சேர்ந்தாலுமே தனது கையால் சமைத்த உணவைக் கொடுக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தாள். வீடு வாசல் கூட்டி துப்புரவு செய்து வைத்துவிட்டு ஆவலோடு காத்திருந் தாள்.

அவளுக்கு இப்போது எழுபது வயதாகிறது. சற்றே தளர்ந்திருந் தாலும் நல்ல உஜாராக இருந்தாள். கால்களை சிறிது வளைத்து நடப்பாள் எனினும், வீட்டு வேலைகளை இலகுவாகச் செய்துவிடுவாள்.

நீண்ட நாட்களாகக் கூட்டித் துப்புரவு செய்யப்படாதிருந்த முற்றத்தைக் கூட்டுவதற்காக அவள் வெளியே வந்தாள். மருமகள் இருந்தபோது அவளது குடும்பமும் வந்து உதவி செய்ததால் வருவாய் தருகின்ற பெரியதொரு தோட்டமாக இருந்த அந்தக் காலத்தை மீட்டிப் பார்த்தாள். மகன் கையில் இப்போது கொஞ்சம் பணம் சேர்ந்திருந்தால் இந்தக் குடிசையைக் கொஞ்சம் பெருப்பித்து கல் வீடாகக் கட்டிவிட வேண்டும் என்று எண்ணிக்கொண்டாள். அப்படியே மகனைக் கொஞ்சம் தாஜா பண்ணி பேரனின் பெயருக்கு எழுதிவிடுவது. மகனுக்குத்தான் சம்பாத்தியம் இருக்கிறதே...! வேறு புதிய இடம் பார்த்துக் கொள்ளட்டும்.

அவன் எப்போதும் இருள் சூழ்ந்த நேரத்தில் வருவது ஏன் என்று அவளுள் கேள்வி எழுந்தது. அவள் எதிர்பார்த்தபடியே மகன் வந்திருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். முன்னரே கறுத்த, கனத்த தோற்றம். இப்போது இன்னும் கொழுத்தாற் போலிருந்தான். அவனது தோளுக்கு மிகக் கீழே கிழவி நின்றிருந்தாள். எதுவாயிருப்பினும் அவனோடு கோபித்துக் கொள்ளக் கூடாது. மெதுவாகப் பேசி விடயத்தை அறிந்து கொள்ள வேண்டும். அவனிடம் மனம் விட்டுப் பேசவேண்டும். ஏன் இந்த ஊரையே மறந்து, பெற்ற தாயை மறந்து ஓடிப் போனாய் என்று கேட்கவேண்டும்.

அவன் இரவுச் சாப்பாட்டின் பின்னர் முன் கூடத்தில் நிலத்தில் அமர்ந்திருந்தான். மிக நீண்ட நாட்களுக்குப் பிறகு தாயின் கைச்சமையலை ருசித்துச் சாப்பிட்டிருந்தான். கிழவி சாப்பாட்டை முடித்துவிட்டு வெற்றிலைத் தட்டத்துடன் அவனருகில் அமர்ந்து கொண்டாள். பாக்கு சீவி வெற்றிலையை மடித்து அவனுக்குக் கொடுத்துவிட்டு, தான் உரலில் வெற்றிலை இடிக்க ஆரம்பித்தாள்.

"என்ன மகன் செஞ்சிட்டிருக்க..? இப்பவாவுது சொல்லு..."

அவன் "ஹ்ம்" என்று தொண்டையைக் கனைத்துவிட்டு வெற்றிலை எச்சிலை "புளிச்" என்று வெளியே துப்பினான்.

"நா இப்ப பெரிய கடை போட்டிருக்கேம்மா... பென்சி அயிட்டம் வெச்சிருக்கேன்..."

"ஒனக்கு எங்கால அவ்ளோ சல்லி....?"

"கொஞ்சம் கொஞ்சமா சேத்ததுதான்... கடைய கூலிக்குத்தான் எடுத்திருக்கேன்..."

"ஏன் இப்புடி செஞ்சிட்டுப் போன....?"

"எனக்கு அந்தக் கடையில இருக்கப் புடிக்கல்ல.... லொறி வேலைல என்னய போட்டு புழிஞ்சி எடுத்துட்டாங்க.... வேற வேல மாத்தி தர ஏலாதுன்டாங்க... வேற ட்ரைவர் பாருங்கன்டு சொன்னா அதையும் கேக்கல்ல.... அவங்கட தொல்ல தாங்க ஏலாமத்தான் போயிட்டேன்..."

அவன் சொல்வது பாதிதான் உண்மை என்று அவளுக்குப் புரிந்தது.

"அப்ப ஏன் குடும்பத்த வுட்டுட்டு போன...? நீ இல்லாம அவ பட்ட பாடு தெரியுமா...?"

அவன் மௌனமாக இருந்துவிட்டுச் சொன்னான்.

"இப்ப அத வுடு...."

"சரி....சொல்லு...."

"நா ஒரு பொம்புளட கடைய கூலிக்கி எடுத்திருக்கேன்.... அவ மொத வெளிநாட்டுக்குப் போனவ.... கையில சல்லிய வெச்சிகிட்டு என்ன செய்றதுன்டு தெரியாம இருந்தா... நா ஐடியா சொல்லி ஒரு கடைய போட்டுக் குடுத்தேன்... கொஞ்ச நாள்ல அவவ நானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணமும் செஞ்சிட்டேன்..."

அவள் அதிர்ந்துபோய் வாயில் கைவைத்தபடி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். மகன் இப்படியொரு அநியாயம் செய்திருப்பான் என்று அவள் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

"அவக்கு பாதுகாப்புக்குன்டு யாரும் இல்ல... அதனால நானும் அங்கயே இருந்துட்டேன்.... நல்ல பொம்புள.... எங்கட ஜாதிதான்... அவட உம்மா வாப்பாதான் விரும்பி எனக்கு முடிச்சித் தந்தாங்க.."

எவ்வளவு பாரதூரமான பேச்சொன்றை அவன் மிக எளிதாகச் சொல்கிறான்..! அவள் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இப்ப எனக்கு ஒரு பொம்புள புள்ள இருக்கு.... அதுக்கு இருவது வயசாகுது.."

அவள் மேலும் வாயடைத்துப்போய் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"கல்யாணத்துக்கு ரெடியா நிக்குது.... மாப்புள்ளயும் பாத்தாச்சி.."

அவள் வெற்றிலை சப்புவதை நிறுத்திவிட்டு முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள், அவனை பார்க்கப் பிடிக்காதவள்போல.

"அந்தப் புள்ளைக்கி என்னய கண்டா ஏனோ புடிக்கல்ல.. ஒரே சண்டை போடுது... இப்ப உம்மாகாரியும் அதுட பக்கம்தான் நிக்கிறா.. மருமகன கண்டதும் என்னய மறந்துட்டா... நா வாணாம்ன்டு நெனக்கிறா..."

கிழவி வெறுப்புடன் எச்சிலைக் கூட்டி விழுங்கினாள். நிமிர்ந்து பார்த்தாள்.

"அதனால... அதுக்கு சுருக்கா கல்யாணத்த முடிச்சிக் குடுத்துட்டு நா அவளக் கூட்டிட்டு இந்தப் பக்கம் வந்துறப் போறேன்..."

கிழவி கோபத்துடன் அடித்தொண்டையில் கத்தினாள்.

"இத சொல்லவா இங்க வந்த...? வெளிய போடா மொதல்ல.."

ஆத்திரத்துடன் அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டாள். என்ன செய்வதென்று தெரியவில்லை. லேசாக மயக்கம் வருகிறாற் போலிருந்தது. உடம்பு நடுங்கியது.

காலை எழுந்து பார்த்தபோது குடிசையின் கதவு முன்புறமாக மூடப்பட்டு அதன் கொக்கியில் ஒரு மரக்குச்சி செருகப்பட்டிருந்தது. அவனைக் காணவில்லை.

அவளது உடம்பு நடுங்கியது. இனி ஒன்றும் செய்ய முடியாது என்று தோன்றிற்று. அவனுக்குத் துணையாக ஒரு அபலைப் பெண்ணைத் தேடிக் கட்டி வைத்தது தனது பாவங்களிலேயே மிகப்பெரியது என்று எண்ணி வருந்தினாள் அவள். நெஞ்சின் ஒரு ஓரத்தில் அவனுக்குப் பிடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வாழ்க்கையை அவன் தேடிக் கொண்டதில் தப்பேதுமில்லை என்றும் தோன்றிற்று. கடைசிக் காலத்தில் அவனைப் பார்த்துக் கொள்ளவும் யாரவது வேண்டும்தானே என்றும் ஒரு மெல்லிய உட்குரல் ஒலித்தது. மருமகள் எங்கேயிருக்கிறாளோ....? என்ன ஆனாளோ...?

***

அதற்குப் பிறகு நீண்ட நாட்களாக அவனிடமிருந்து தகவல் இல்லை. கிழவி தனது மகள்மாரிடம் சொல்ல, அவர்கள் சிறிது வாயைச் சப்பினாலும், மருமக்கள்மார் கடுமையாக எதிர்த்தார்கள். மூத்த மருமகன் அவனை அடிக்கடி சந்திப்பதாகவும், அவன் இப்போது மொடாக் குடியனாக மாறிவிட்டிருப்பது தனக்குத் தெரியும் என்றும் சொன்னார்.

கிழவிக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் சொல்வது சரியா, மருமகன் சொல்வது சரியா என்ற குழப்பத்தில் மூழ்கி, கொஞ்ச நாட்களாக இதே சிந்தனையில் நடைப்பிணமாகத் திரிந்தாள்.

ஒருநாள் அவனது குரல் மீண்டும் தொலைபேசியில் ஒலித்தது. ”உம்மா..” என்ற ஒரு சொல்லோடு அடங்கிப் போனது.

அது ஒரு முன்னிரவு நேரம். மகனுக்கு என்னவோ ஏதோ என்று கிழவி பரிதவித்துப் போனாள். விழுந்தடித்துக்கொண்டு மகள்மாரிடம் ஓடினாள். மருமகன்மார் இருவருமே எது பற்றியும் அலட்டிக் கொள்ள வில்லை. மூத்த மருமகனுக்கு அவனது ஊர் தெரியும் என்று முன்பு ஒருதடவை சொல்லியிருந்தார். கிழவி காலில் விழுந்து கெஞ்சினாள்.

“என்னய எப்புடியாவுது அங்க கூட்டிட்டுப் போங்களேன்... அவனுக்கு ஏதோ நடந்துருச்சி...”

அவள் நினைத்தது சரியாகத்தானிருந்தது. அவர்கள் வாடகை வேன் ஒன்றை எடுத்துக்கொண்டு அந்தக் கடைவாசலுக்குச் சென்றபோது நேரம் ஒன்பது மணியாகியிருந்தது.

கடைக்குப் பக்கத்தில் ஒரு கதவு மூலம் அவனது வீடு பிரிக்கப்பட்டிருந்தது. கடைக்கு வருபவர்கள் முன் தாழ்வாரத்தினூடா கவே வீட்டுக்குச் செல்லலாம். உள்ளே வீடும், கடையும் சுவரால் பிரிக்கப்பட்டிருந்தன.

வீட்டு வாசலில் அவன் விழுந்து கிடந்தான். அவனைச் சூழவும் பலர் நின்றிருந்தார்கள். அவர்கள் அவனை என்ன செய்வது என்று ஆலோசித்துக் கொண்டிருந்தார்களே தவிர, வேறு எதுவும் செய்ய முன்வரவில்லை. பக்கத்தில் அவனது மனைவி, பிள்ளை யாரும் இல்லை.

கிழவி அலறியடித்துக்கொண்டு மகன்மீது விழுந்தாள். அவன் மூர்ச்சையாகிக் கிடந்தான். சுற்றிலும் எண்ணெய் கொட்டியிருந்தது. தூரத்தில் எண்ணெய் போத்தல் ஒன்று விழுந்து கிடந்தது.

கூடி நின்றவர்கள் யாருமே எதுவும் பேசாதது பெரிய ஆச்சரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயிருந்தது. எனினும், தாமதிக்காது மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள்.

மூன்று நாட்களுக்குப் பின்னர் அவன் கண்விழித்தான். அதுவரை அவனைத்தேடி வேறு யாரும் வரவில்லை. மெல்ல அவனிடம் பேசி கிழவி எடுத்துக்கொண்ட விடயம் இதுதான்.

அன்று மாலை அவன் கடையை மூடிவிட்டு வரும்போது வாசலில் எண்ணெய் கொட்டியிருப்பதைக் காணாமல் கீழே விழுந்து விட்டானாம். அவன் எழுவதற்கு முயற்சிக்கும்போது அவனுடைய மகளும், மருமகனும் ஓடிவந்து பெரியதொரு இரும்புக் கம்பியால் அவனைத் தலையிலும், காலிலும் தாக்கினார்களாம்.

கிழவிக்கு அதிர்ச்சிக்கு மேலே அதிர்ச்சி. கற்சிலையாக நின்றிருந் தாள். மருமகன் திரும்பத் திரும்பக் கேட்டு விடயங்களைக் கிரகித்துக் கொண்டார்.

மகளுக்கு ஆரம்பமுதலே அவனைப் பிடிக்காது என்பதால் தனது எதிர்காலக் கணவனிடம் சொல்லி அவனைத் தாக்கினாளாம். அவள்தான் வாசலில் எண்ணெயைக் கொட்டிவைத்தாளாம். மனைவி மகளுக்குப் பயந்து கொண்டு மகளின் அனுதாபியாக நிற்கிறாளாம். அந்த முழு ஊருமே அந்தக் குடும்பத்தின் வாய்க்குப் பயந்ததாம். தான் அந்தக் கடையை மகளுக்குக் கொடுக்க விரும்பியிருந்ததாகவும், தாயின் பெயரில் இருப்பதால் வீடும்கூட தனக்கு வேண்டும் என்றும் மகள் கேட்டுக்கொண்டிருந்ததாகவும் அவன் சொன்னான். அவன் தனக்கும், மனைவிக்கும் வேண்டும் என்பதால் அதைக் கொடுக்க வீரும்ப வில்லையாம்.

“ஐயோ...” கிழவி பெருங்குரலெடுத்து அழுதாள். “நீ ஏன்டா அங்க போய் சேந்த..?” என்று ஒப்பாரி வைத்தாள். அவன் அடிக்கடி மயக்கமுற்று விழுந்து கொண்டிருந்தான். அவனது கண்முன்னே தான் பெற்ற அன்புச் செல்வம் கையில் இரும்புக் கம்பியை ஓங்கி நின்ற காட்சி வரும்போது அவனது கனத்த உடம்பு குலுங்கியது. கூடவே நின்ற மருமகனின் முகம்...! தான் கூக்குரலிட்டு அழைத்தபோதும் வீட்டுக்குள் சென்று மறைந்துகொண்ட மனைவியின் செயல் அவனை உறைய வைத்தது.

தான் எப்போதோ, எங்கேயோ செய்த தப்பு தன்னைச் சுற்றி வருவதை அவன் உணர்ந்து கொண்டான். அடிக்கடி மயக்கமுற்றான்.

கிழவி பொலிஸில் முறைப்பாடு செய்தாள். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பது பற்றி அவள் கவலைப் படவில்லை. தாய்மை பெருக்கெடுத்து ஓடியது. மகனைக் காப்பாற்றிக் கரைசேர்ப்பதே தலையாய கடமையாகக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்கள் ஆறியதும் வீட்டுக்குக் கூட்டிவந்து வேறு பல சிகிச்சைகள் செய்தாள். முழங்காலைச் சரி செய்வதென்றால் இருபதா யிரம் ரூபா வேண்டும் என்றார்கள். கிழவி விழிக்க ஆரம்பித்தாள். முழங்காலைச் சரி செய்வதற்கு நாட்டு வைத்தியம் பார்ப்பதென்று முடிவெடுத்தாள். ஆரம்பத்தில் அவனைக் கையேற்க மறுத்த எலும்பு முறிவு வைத்தியர், அவளது கெஞ்சல் தாளாது, அவளிடம் ஒரு கடிதத்தைப் பெற்றுக்கொண்டு சிகிச்சை செய்யத் தொடங்கினார். அவரிடமும் பெரிய முன்னேற்றம் காணவில்லை.

"அவன் குடிகாரன்தானே...அவனுக்கு இது வேணும்...."என்று நியாயம் கூறிய மகள்மார்மீது பெண் புலியெனப் பாய்ந்தாள் கிழவி. அவனும் தனது தவறை உணர்ந்தவனாக இப்போது மௌனியாக இருந்தான். அவனது சீமந்த புத்திரி தனது திருமணத்திற்குச் சாட்சியாக வந்து நிற்க முடியுமா என்று கேட்டுத் தூது அனுப்பியிருந்தாள். கிழவி ஏசி விரட்டினாள்.

"அது இவனுக்கு மகளும் இல்ல... இவன் அதுக்கு வாப்பாவும் இல்ல..."

மகள்மார், மருமகன்மார் செய்த உதவிகள் கொஞ்சங் கொஞ் சமாக நின்றன. அவர்களும் எவ்வளவென்றுதான் செய்வார்கள்..? வயிற்றுப்பாட்டைப் பார்ப்பதா? தான தருமம் செய்வதா?

அவளது பழைய சம்பந்தக் குடி அவனைப் பார்ப்பதற்கு ஒருநாள் வந்தாள். அவனைப் பார்த்து மிகுந்த பச்சாதாபப் பட்டாள். அவன் இப்படித் தன் மகளின் வாழ்க்கையைச் சீரழித்ததுடன், தன் வாழ்க்கையையும் சீரழித்துக் கொண்டானே என்றெண்ணி மனம் மறுகினாள் அந்தத் தாய்.

***

இன்று தனது தாயார் வருகிறார் என்று அவசரமாக வந்த அந்தத் தொலைபேசி அழைப்பு அவளைச் சிந்திக்க வைத்தது. அதற்கு மேலே ஒன்றும் அறிந்து கொள்ள முடியவில்லை. தொடர்பு துண்டிக்கப் பட்டது.

அடுத்து வந்த மிஸ்கோல் தாய் அண்மித்து விட்டதை உணர்த்திற்று. அவள் வாசலுக்கு விரைந்தாள். அவளது மகனும் வீல் சியாரில் வாசலுக்கு வந்து குதுாகலத்துடன் அவளருகே காத்துக் கொண்டிருந்தான்.

வழமையாக பஸ்ஸில் வருபவர்கள் இன்று வேனில் வருகிறார் களே என்று அவள் ஆச்சரியப்பட்டாள். தாயும் தந்தையும் முதலில் இறங்க, பின்னால் தனது மாமியார் இறங்குவதையும் கண்டாள்.

இறுதியாக அந்தச் சக்கர நாற்காலி கீழே இறக்கப்பட்டது...!

–நிறைவு–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48883.
03 MAR 2021
Public Library
Jaffna

## நூலாசிரியரின் பிற நூல்கள்

1. ஒரு தேவதைக்கனவு - சிறுகதைத்தொகுதி - 1977
2. இன்றைய வண்ணத்துப் பூச்சிகள் - கவிதைத்தொகுதி - 2004
3. ஒருகூடும் இரு முட்டைகளும் - குறுநாவல் - 2009
4. சூழ ஓடும் நதி ஜெயகாந்தன் படைப்புகள் பற்றிய ஆய்வுநூல் - 2010
5. மான சஞ்சாரம் - சுயசரிதை - 2011
6. இருட்தேர் - கவிதைத்தொகுதி - 2011
7. முடிவில் தொடங்கும் கதைகள் - சிறுகதைத்தொகுதி - 2012
8. அன்னையின் மகன் - நாவல்- 2014
9. ஊமையின் பாஷை - சிறுகதைத்தொகுதி - 2014
10. புதிய தரிசனம் - கட்டுரைத்தொகுதி - 2017

இரவல் வழங்கும் பகுதி
யாழ்ப்பாண பொதுசன...
281567



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலக்கிய உலகில் அமைதியாக ஆர்ப்பாட்டமில்லாது மிக அருமை யான படைப்புகளை படைத்து வந்தவர் கெகிறாவ ஸஹானா என்றால் அது மிகைப்பட்ட கூற்றன்று. முரண்பாடுகளை அறியா-தவர்; பழகுபவர்களுடன் இனிமையாக கதைக்கக் கூடியவர்; இன மத மொழி பேதமற்று மனிதாபிமானமாக அனைவரையும் மதித்து நடக்கும் இயல்புடையவர். விருதுகள் பட்டங்கள் என எதையும் எதிர்-பார்த்து செயலாற்றியவர் அல்லர். இவை பற்றி அவர் அலட்டிக் கொண்டதே கிடையாது. நல்ல இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டும். மக்களுக்கு தான் சொல்ல வேண்டிய கருத்துக்களை இடையறாது சொல்ல வேண்டும் என்ற மனப்பாங்குடன் இறுதி வரை செயற்பட்டு வந்தார். இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் தன்மை வாய்ந்தவர். மற்றையவர்கள் படைப்புகளை வாசித்து தட்டிக்கொடுக்கும் இயல்பு உடையவர். ஈழத்து இலக்கிய உலகில் ஸஹானா என்ற ஆளுமை பதித்துச் சென்ற இலக்கிய தடம் பல்ல-ாண்டு காலம் வாழும். ஸஹானா அம்மாவின் படைப்புகள் தமிழ் பேசும் சமூகத்தவர்கள் அனைவருக்கும் நன்மை பயக்கும் தன்மை வாய்ந்த காலத்தால் அழிவுறாத படைப்புகள் ஆகும்.

– க.பரணீதரன்

ISBN 978-955-0958-65-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org